வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவை

Federation of Tamil Sangams of North America (FeTNA)

(A Registered, Non-Profit, Tax exempt 501(C)(3) Organization)

வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவையும், சான் ஆண்டோனியோ தமிழ்ச் சங்கமும்

இணைந்து நடத்தும்

37ஆவது பேரவை விழா

நூற்றாண்டு விழா!
முத்தமிழறிஞர்
கலைஞர் மு.கருணாநிதி
100

நூற்றாண்டு விழா!
முதுபெரும் தமிழறிஞர்
பேராசிரியர் மா.நன்னன்

சமத்துவம் தமிழரின் தனித்துவம்

HENRY B. GONZÁLEZ CONVENTION CENTER, SAN ANTONIO, TEXAS

JULY 4, 5 & 6 - 2024

வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையின்
37 ஆவது தமிழ் விழா சிறக்க வாழ்த்துகள்!

ஜகதீசன், காஞ்சனா,
அனுசுயா, அழுதா, ஆனந்த்

வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையின் 37 ஆவது தமிழ் விழா சிறக்க வாழ்த்துகள்!

பாலா பிரபா மற்றும் குடும்பத்தினர்

மு.க. ஸ்டாலின்
தமிழ்நாடு முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை – 600 009.

23.06.2024

வாழ்த்துச் செய்தி

கடல் கடந்த நிலத்தில், அனைத்துத் துறைகளிலும் முத்திரை பதித்து, முதன்மை நிலையில் கோலோச்சினாலும், தேமதுரத் தாய்மொழியாம் தமிழ்மொழியை வேரெனச் சுமந்திருக்கும், வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கத்தினர் (FeTNA) அனைவருக்கும் வணக்கம்.

வெளிநாட்டோர் வணக்கம் செய்யும் திறமான புலமையினைக் கொண்ட நீங்கள், தமிழ் எங்கள் சமூகத்தின் விளைவுக்கு நீர் என்கிற விழுமியத்தில் திண்ணமுற நின்று, தமிழராய் ஒருங்கிணைந்து தமிழ்ச் சங்கத்தை நிறுவி, தொடர்ந்து தமிழ்மொழிக்கும் தமிழ்ச் சமூகத்திற்கும் செய்து வரும் பெரும் பணிகள் அனைத்தையும் நான் அறிவேன்.

தமிழுணர்வும் தமிழர் நலனும் உயிரென வாழ்ந்த நூற்றாண்டு நாயகர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பல்வேறு தமிழ்ச் சங்கங்களை தொடங்கி வைத்து, அவற்றினுடைய வளர்ச்சியில் பங்கு பெற்று, ஊக்கமும் உத்வேகமும் கொடுத்து உரமூட்டி வளர்த்தவர்; தமிழர் ஒற்றுமையை மேடைதோறும் ஓங்கி ஒலித்தவர். தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் அடியொற்றி நடக்கும் நம்முடைய திராவிட மாடல் அரசின் சார்பில், அமெரிக்கா மற்றும் கனடாவில் உள்ள 70–க்கும் மேற்பட்ட தமிழ்ச் சங்கங்களின் குடை அமைப்பான வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையையும், பேரவையுடன் இணைந்து பயணிக்கும் அனைத்துத் தமிழ்ச் சங்கங்கள் ஆற்றி வரும் அருந்தமிழ்ப் பணிக்கு இந்த நேரத்தில் பாராட்டுகளைத் தெரிவிப்பதோடு, புதிய எல்லைகளைத் தொடுவதற்கான வாழ்த்துகளையும் பகிர்ந்து கொள்கிறேன்.

திக்கெட்டும் திசைதோறும் பரவி இருக்கும் தமிழர்களை இணைப்பதற்காகவே, தாய்நிலமாம் தமிழ்நாட்டின் ஆட்சிப் பொறுப்பில் இருக்கும் நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரசு, அயலகத் தமிழர் நலத்துறையைச் சிறப்புற உருவாக்கி,

புலம்பெயர் தமிழர்களுக்கான நல வாரியம் அமைத்து, தொடர்ந்து இணைப்புப் பாலமாகப் பல்வேறு பணிகளை மேற்கொண்டு வருகிறோம்.

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்கிற வாழ்வியல் அறத்தை உலகிற்குக் கொடுத்து, அந்த விழுமியத்திற்கு எடுத்துக்காட்டாய் வாழ்ந்தவர்கள் நம்முடைய தமிழ் முன்னோர்கள். அவர்களுடைய நீட்சியாக சான் ஆண்டோனியோ மாநகரில் சூலை 4, 5, 6 நாட்களில் வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவை தன்னுடைய 37–ஆவது ஆண்டு விழாவை "சமத்துவம் தமிழரின் தனித்துவம்" என்கிற கருப்பொருளில் கொண்டாடவிருப்பது மிகுந்த சிறப்புக்குரியதாகும்.

ஒவ்வொரு ஆண்டும் தனக்கே உரிய சிறப்புடன் நடத்தப்படும் வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையின் ஆண்டு விழாவை, இந்த ஆண்டு கூர்த்த திட்டமிடல்களோடு ஒருங்கிணைத்து நடத்த இருக்கும் விழாவின் ஒருங்கிணைப்பாளர்கள் திரு. செல்வகிரி அருணகிரி மற்றும் திரு. கார்த்திகேயன் சுப்பா ஆகிய இருவருக்கும் வாழ்த்துகள்.

வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையின் தலைவர் முனைவர் திரு. பாலா சுவாமிநாதன் மற்றும் பேரவையின் செயலாளர் திரு. கிங்ஸ்லி சாமுவேல், அயலகத் தமிழர் நலவாரிய அமெரிக்க ஒருங்கிணைப்பாளர் திரு. கால்டுவெல் வேள்நம்பி ஆகியோரின் தொடர் பணிகளுக்கு எனது பாராட்டுகள். இன்னும் பல உயரங்களை, பரிணாமங்களை வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவை அடைந்திட நல்வாழ்த்துகள்.

தமிழறிஞர்களாகவும், பெரியாரின் பெருந்தொண்டர்களாகவும் அறியப்படும் இருவரின் ஆண்டு விழாவை மிகச் சிறப்பாக முன்னெடுக்க இருக்கிறது வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவை என்கிற செய்தி இன்பத் தேனாய் இனிக்கிறது. முத்தமிழறிஞர் கலைஞர் மற்றும் பேராசிரியர் மா.நன்னன் ஆகியோரின் நூற்றாண்டு வாழ்வு என்பதும், அவர்களின் தமிழ்ப்பணி என்பதும் அடுத்த தலைமுறைக்கு கலங்கரை விளக்கம். அதனால்தான் நம்முடைய திராவிடம் மாடல் அரசு பேராசிரியர் மா.நன்னன் அவர்களின் படைப்புகளை நாட்டுடைமையாக்கியது. இவர்கள் இருவரின் தொண்டறத்தைக் கொண்டாடுவது நம் கடமை.

இந்த ஆண்டு உலகத் தமிழ்ப்பீட விருதும், அத்துடன் இணைந்து $15,000 வெள்ளியையும் பெற இருக்கிற, அருந்தமிழ்ப் பாவலர், கவிஞர் அறிவுமதி அவர்களுக்கு என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய தமிழர்களின் தொன்மையைக் கொண்டாடுகிற அதே நேரத்தில், அதனுடைய தொடர்ச்சியையும் முன்னெடுத்து வருகிறது நமது அரசு. சங்ககாலந்தொட்டு தமிழர்களுடைய வணிகம் உலகளாவிய வணிகமாக இருந்துள்ளது. அதனுடைய தொடர்ச்சியாக யாழ்ப்பாணத்தில் ஜனவரி 19–ஆம் நாள் வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையின் தொழில் முனைவோர் மாநாடு, 50 ஆண்டுகளைக் கொண்டாடும் யாழ் பல்கலைக்கழகத்தில், செவ்வனே நடந்ததும் மகிழ்ச்சியளிக்கிறது.

தொடர் தமிழ்ப் பணி ஆற்றி வரும், வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையின் 37–ஆவது தமிழ் விழா சிறக்க, எனது சார்பிலும், நம்முடைய தமிழ்நாடு அரசின் சார்பிலும் மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

"வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழியவே!"

"சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத் துலங்குக வையகமே!"

உலகத் தமிழராய் ஒன்றிணைவோம்!

அன்புடன்,

(மு.க.ஸ்டாலின்)

ந. ரங்கசாமி
முதலமைச்சர்
புதுச்சேரி அரசு

பாண்டிச்சேரி

தேதி : 7.6.2024

வாழ்த்துச் செய்தி

வட அமெரிக்கா தமிழ்ச் சங்கப் பேரவையானது சான் ஆண்டோனியோ தமிழ்ச் சங்கத்துடன் இணைந்து பேரவையின் 37-வது தமிழ் விழாவை வரும் ஜூலை மாதம் 4,5 மற்றும் 6 ஆகிய மூன்று நாட்களுக்கு அமெரிக்காவில் உள்ள சான் ஆண்டோனியோ நகரில் நடத்த உள்ளதை அறிந்து பெருமகிழ்ச்சியடைகிறேன்.

நாடு, மொழி, இனம் கடந்து தமிழ் கலாச்சாரத்தின் பெருமையையும் பழமையையும் பாதுகாக்க வேண்டும் என்ற நோக்கத்திற்காக மூன்று நாட்கள் நடத்தப்படும் பெருமைக்குரிய இவ்விழா மாபெரும் வெற்றி பெரும் என்பது திண்ணம். இவ்விழாவையொட்டி நடத்தப்படும் மாநாட்டில் கலை, பண்பாடு, கலாச்சாரம் தொடர்பான அனைத்து நிகழ்ச்சிகளும் நடத்தப்படுவது சிறப்புக்குரியது.

புதுச்சேரிக்கு பெருமை சேர்க்கும் வகையில், இந்த ஆண்டு மாநாட்டு லட்சினையில் புதுச்சேரி வரலாற்று சின்னமான ஆயி மண்டபத்தை அடையாளமாக பதிய வைத்துள்ள மாநாட்டு நிர்வாகிகள் அனைவரையும் மனதார பாராட்டுகிறேன். அனைவரும் பயன்பெறும் வகையில் இம்மாதிரியான மாநாடுகள் தொடர்ந்து நடத்தப்பட வேண்டும்.

இவ்விழா சிறப்பாக அமையவும், விழாவையொட்டி வெளியிடப்பட உள்ள மாநாட்டு மலர் பொலிவு பெறவும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ந. ரங்கசாமி)

✆ அலு. : 2333399, 2335530, 2335328, 2335522 தொலை நகலி : 0413 - 2333135
இல்லம் : 2271232

STATE OF TEXAS
OFFICE OF THE GOVERNOR

Greetings:

As Governor of Texas, I am proud to welcome you to the 37th annual Tamil Convention, hosted by the Federation of Tamil Sangams of North America and the San Antonio Tamil Sangam.

Texas has long been home to large communities of Asian immigrants and Americans of Asian descent. These valued members of our communities have enriched the Lone Star State's cultural landscape and have contributed to fields as diverse as business, academia, medicine, and the arts. One of the world's longest-surviving ethnolinguistic groups, the Tamil people can trace their literature, language, and culture to the fourth century B.C. With significant influence on trade, architecture, and politics, the Tamil civilization has not only stood the test of time but has also made significant impacts on the modern world.

The Federation of Tamil Sangams of North America preserves Tamil culture by fostering relationships, educational opportunities, and cross-cultural dialogue. Accordingly, this convention celebrates these traditions while recognizing ingenuity and entrepreneurship in the next generation.

To those of you from out of town, I encourage you to explore San Antonio. From fine dining to the iconic Alamo, live entertainment, and an array of cultural attractions, this fine city has something for everyone.

First Lady Cecilia Abbott joins me in extending best wishes for an enjoyable and informative convention.

Sincerely,

Greg Abbott

Greg Abbott
Governor of Texas

க. லட்சுமிநாராயணன், B.Sc., B.L.
அமைச்சர் பொதுப்பணி,
சுற்றுலா மற்றும் உள்நாட்டு விமான போக்குவரத்து, மீன்வளம் மற்றும் மீனவர் நலம், சட்டம், தகவல் தொழில்நுட்பம் மற்றும் எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறைகள்
புதுச்சேரி அரசு

தொ.அலு. : 0413-2335279
2232254
வீடு : 0413-2338181
2220666
கைபேசி : 94432 38181
எண் 95, பெருமாள் கோயில் வீதி
புதுச்சேரி-605 001
மின்னஞ்சல்: lakshminarayananpdy@gmail.com

தேதி: 07.06.2024

வாழ்த்துரை

"சமத்துவம் தமிழரின் தனித்துவம்" — என்ற வாசக அடைமொழியுடன், வடஅமெரிக்கா தமிழ்ச் சங்கப் பேரவை மற்றும் வெள்ளி விழா கண்ட "சான் ஆண்டோனியோ" தமிழ்ச் சங்கம் இணைந்து வடஅமெரிக்கா தமிழ்ச் சங்க பேரவையின் 37-வது மாநாட்டை டெக்ஸாஸ் மாகாணத்தில் உள்ள சான் ஆண்டோனியோ நகரில் நடத்துவது அறிந்து மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த மாநாட்டின் வாயிலாக தமிழ், தமிழர்களின் பெருமைகள், கலை, பண்பாடு, கலாச்சாரம் போன்றவைகள் அனைத்தும் அமெரிக்கா மற்றும் கனடாவில் வசிக்கும் தமிழர்களுக்கு பயனுள்ள வகையில் சென்றடையும் என்பதில் ஐயமில்லை.

2000 ஆண்டுகளுக்கு முன்பு "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற கனியன் பூங்குன்றனாரின் கூற்றுபடி இன்று 155 நாடுகளுக்கு மேலான இடங்களில் சுமார் பத்து கோடி தமிழ் மக்கள் வாழ்கின்றனர் என்பது பழம் புலவர்களின் வார்த்தைகள் அமரத்துவமானது என்பதை அறிகிறோம்.

அமெரிக்கா நாட்டில் தமிழின் பெருமையை தொடர்ந்து 37 ஆண்டுகளாக பறைசாற்றி வரும் வடஅமெரிக்கா தமிழ்ச் சங்க பேரவை அமைப்பை பாராட்டுகிறேன். அவர்களின் சீரிய முயற்சிகளை போற்றுகிறேன்.

தமிழர்களின் தொன்மைகளை பறைசாற்றும் இம்மாதிரியான விழாக்கள் எதிர்கால சந்ததியினருக்கு பயன்படும் வகையில் வடஅமெரிக்கா தமிழ்ச் சங்க பேரவை செயல்பட்டு வருகிறது. செம்மொழி அந்தஸ்தைப் பெற்ற நம் தமிழின் தமிழரின் வாழ்வியல் பண்பாட்டு முறைகளை பேணி காப்பதும் மற்றவர்களும் இவைகளை அறிந்து போற்றவும் இம்மாநாடு பெரிதும் உதவும்.

மேலும், இந்த ஆண்டு பேரவையின் விழா லட்சினையில் புதுச்சேரி வரலாற்று சின்னமான ஆயி மண்டபத்தை அடையாளமாக பொருத்தியுள்ளதும் மற்றும் புதுச்சேரியை சேர்ந்த திரு செல்வகிரி அருணகிரி, முனைவர் ரவி குணவதி மைந்தன் ஆகியோரை பெறுப்பளாராக நியமித்துள்ளதும், புதுச்சேரி மாநில மக்களுக்கு பெருமை சேர்ப்பதாகும், அந்த வகையில் பேரவை நிர்வாகிகள் அனைவரையும் பாராட்டுகிறேன்.

இந்த தருணத்தில் விழாவுக்கு மெருகூட்டும் விதமாக பல்வேறு ஆய்வு கட்டுரைகள் உள்ளடக்கி தயாரிக்கப்படும் மாநாட்டு மலர் சீரிய முறையில் அமையட்டும்.

மாநாடும் — மலரும், சிறக்கட்டும்... வாழ்த்துக்கள்...!

இவண்,

(க. லட்சுமிநாராயணன்)
பொதுப்பணித்துறை அமைச்சர்

HOUSE OF COMMONS
CHAMBRE DES COMMUNES
CANADA

Gary Anandasangaree
Member of Parliament
Scarborough—Rouge Park

July 4, 2024

Greetings from The Honourable Gary Anandasangaree

Member of Parliament for Scarborough—Rouge Park, Toronto, Canada

I want to extend my best wishes to everyone attending the Federation of Tamil Sangams of North America's 37th Tamil Convention in San Antonio.

Since being founded in 1987, the federation has made great strides in promoting the Tamil language and empowering younger generations to connect with their roots and embrace their rich cultural heritage. This convention is a vital platform for Tamils from all walks of life to come together, celebrate their shared heritage, and exchange knowledge and ideas. Your collective efforts not only honour the remarkable history, culture, and achievements of the Tamil people but also pave the way for future generations to carry forward this proud legacy.

I express my sincere gratitude to the Executive Team, organizers, and volunteers for hosting such a meaningful and memorable event.

Yours very truly,

The Honourable Gary Anandasangaree
Member of Parliament
Scarborough—Rouge Park

Ottawa

Room 733, Confederation Building
Ottawa, Ontario, K1A 0A6
613-992-1351
Gary.Anand@parl.gc.ca

Constituency Office

3600 Ellesmere Road-Unit 3
Scarborough, Ontario, M1C 4Y8
416-283-1414
Gary.Anandasangaree.C1@parl.gc.ca

CITY OF SAN ANTONIO

RON NIRENBERG
MAYOR

July 4, 2024

Greetings!

The City of San Antonio is honored to host the Federation of Tamil Sangams of North America (FeTNA) for their 37th Annual Conference from July 4-6, 2024. Since its founding in 1987, FeTNA has been a vital force in preserving and promoting Tamil culture, language, and traditions across North America. FeTNA's dedication and efforts have enriched our city by fostering an open exchange of ideas between Tamil communities and San Antonians of all backgrounds. Our city proudly celebrates diversity, and I want to commend the members of FeTNA, along with Anuja SA, for their efforts to promote friendship and understanding across cultural lines. This convention also celebrates our Sister City relationship to Chennai, the capital city of Tamil Nadu, India, and reflects the mutual respect between our communities. Thank you, San Antonio Tamil Sangam, for organizing and hosting this year's conference.

While you are here, I hope you get to experience San Antonio's rich culture, incredible cuisine, and our residents' kind and gracious nature. San Antonio was founded at the crossroads of emerging cultures, and this is evident as you visit our local attractions like the San Antonio Missions, which are a designated UNESCO World Heritage site. I urge you to explore our world-renowned Zoo, our colorful Riverwalk, the historic Market Square, and our acclaimed museums as well.

On behalf of my colleagues on the City Council and the entire City organization, thank you for selecting San Antonio as your host. We wish you a very successful conference and are proud to welcome you to our great city!

Sincerely,

Ron Nirenberg

MAYOR

P.O. Box 839966 • San Antonio, TX 78283-3966 • Tel: 210-207-7107 • Fax 210-207-4168
MayorRonNirenberg@sanantonio.gov

सत्यमेव जयते

भारत का प्रधान कौंसल
ह्यूस्टन
CONSUL GENERAL OF INDIA
HOUSTON

20 ஜூன்,2024

வாழ்த்து மடல்

வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையும் சான் அன்டோனியோ (டெக்சாஸ் மாகாணம்) தமிழ்ச் தமிழ் சங்கமும் இணைந்து, ஜூலை 4-6, 2024 தேதிகளில், பேரவையின் 37 வது தமிழ் விழாவினை நடத்துவதை அறிந்து மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

"சென்றிடுவீர் எட்டுத்திக்கும், கலைச்செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்" என்ற பாரதியின் சொல்லுக்கு ஏற்ப, தமிழ் மக்கள், தாம் செல்லும் இடமெல்லாம், கலை, கல்வி, பொருளாதாரம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கி, தங்கள் வாழுமிடத்திற்கும், தமிழகம் மற்றும் இந்தியத்திருநாட்டிருக்கும் பெருமை சேர்க்கிறார்கள். அதே போல தம்முடைய கலாச்சாரத்தையும், பண்பாட்டையும் பேணுவத்திலும் முன்னிற்கிறார்கள். அவ்வகையில் வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையின் பங்கு அளப்பரியது.

பேரவையின் இவ்வாண்டுத் தமிழ் விழா சென்னை பெருநகரொடு சகோதர உறவு கொண்டுள்ள சான் அன்டோனியோ நகரில் நடைபெறுவது மிகவும் சிறப்பு. மூன்று நாட்கள் நடைபெறும் இவ்விழாவில் உலகத் தமிழ் தொழில்முனைவோர் மாநாடு மற்றும் பல்வேறு கலை கலாச்சார நிகழ்வுகள் உள்ளடங்கியுள்ளன; பல்வேறு அறிஞர் பெருமக்களும் பங்கேற்கின்றனர் என்பதை அறிந்து மகிழ்கிறேன். இவ்விழா சிறப்படைய என்னுடைய மனமார்ந்த வாழ்த்துக்கள். விழா குழுவினருக்கும் என் பாராட்டுதல்கள்.

டி. சி. மஞ்சுநாத்
இந்திய கொன்சல் ஜெனரல்
ஹூஸ்டன்

4300 Scotland Street • Houston, Texas 77007
Tel: (713) 626-2148 and (713) 626-2149 • Fax: (713) 626-2450
E-mail: cg.houston@mea.gov.in • Website: www.cgihouston.gov.in

The Senate of The State of Texas

Senator José Menéndez

District 26

June 11, 2024

Federation of Tamil Sangams of North America (FeTNA)

Dear Members of FeTNA,

I am delighted to extend my warmest congratulations to the Federation of Tamil Sangams of North America (FeTNA) on the occasion of your 37th annual convention, being held in our wonderful city of San Antonio, Texas.

FeTNA has been a vital force in preserving and promoting Tamil culture, language, and traditions across North America for thirty-seven years. Your dedication to fostering cultural unity and understanding is truly commendable and significantly enriches the multicultural fabric of our society. Additionally, I extend my heartfelt thanks to the San Antonio Tamil Sangam for hosting this year's convention. Your hard work and hospitality ensure that this event will be a memorable and enriching experience for all attendees.

Congratulations, once again, to FeTNA on your 37th annual convention. I wish you all a successful event and look forward to continue working with the Tamil diaspora for the years to come.

Sincerely,

José Menéndez
State Senator, District 26

CAPITOL OFFICE
P.O. Box 12068
Austin, Texas 78711
(512) 463-0126
1-888-279-0648

E-MAIL: Jose.Menendez@senate.texas.gov
Chairman Senate Hispanic Caucus
Committees: Vice-Chairman Local Government
Administration • Business & Commerce
Education • Redistricting

DISTRICT OFFICE
4522 Fredericksburg Rd., Ste. A–22
San Antonio, Texas 787201
(210) 733-6604

JOAQUIN CASTRO
20TH DISTRICT, TEXAS

HOUSE PERMANENT SELECT
COMMITTEE ON INTELLIGENCE

COMMITTEE ON FOREIGN AFFAIRS

COMMITTEE ON EDUCATION
AND LABOR

Congress of the United States
House of Representatives
Washington, DC 20515–4320

WASHINGTON OFFICE:
2241 RAYBURN HOUSE OFFICE BUILDING
WASHINGTON, DC 20515
TEL: (202) 225–3236
FAX: (202) 225–1915

DISTRICT OFFICE:
727 E. CESAR E. CHAVEZ BOULEVARD
SUITE B–128
SAN ANTONIO, TX 78206
TEL: (210) 348–8216
FAX: (210) 979–0737

June 5, 2024

Dear Members of the Federation of Tamil Sangams of North America (FeTNA),

I am honored to extend my warmest congratulations to the Federation of Tamil Sangams of North America (FeTNA) on the occasion of your 37th annual convention, held this year in our beautiful city of San Antonio, Texas.

For almost four decades, FeTNA has been a beacon of Tamil culture, preserving and promoting the rich heritage, language, and traditions of the Tamil community across North America. Your dedication and hard work have not only strengthened the bonds within the Tamil diaspora but have also significantly enriched the cultural tapestry of our nation.

San Antonio is a city known for its rich cultural diversity and welcoming spirit. It is especially fitting that this year's convention is taking place in the city known for Diwali SA, San Antonio's vibrant celebration of the Festival of Lights. Diwali SA brings together people from all backgrounds to celebrate light, knowledge, and community, embodying the spirit of unity and cultural appreciation that FeTNA represents. San Antonio is also proud to have a sister city relationship with Chennai, the capital city of the state of Tamil Nadu.

I commend the leadership of the San Antonio Tamil Sangam for your tireless efforts in hosting and organizing this convention. Your commitment to cultural preservation and education ensures that Tamil heritage continues to thrive and inspire future generations.

Once again, congratulations on your 37th annual convention. I wish you all a successful and memorable event in San Antonio and look forward to the continued contributions of the Tamil community to our shared cultural and social landscape.

Sincerely,

Joaquin Castro

Joaquin Castro
Member of Congress

CITY OF SAN ANTONIO — TEXAS —

Council District 1

Dr. Sukh Kaur

To my friends at the Federation of Tamil Sangams of North America and supporters:

I am thrilled to be able to celebrate the Federation's 37th Annual FeTNA convention hosted by our very own San Antonio Tamil Sangam.

To the devoted board members, staff, volunteers, and supporters of the Federation of Tamil Sangams of North America, we extend our deepest gratitude. Your unwavering commitment and passion for sharing the rich Tamil culture have played a pivotal role in bringing our communities together. Through festivals, educational programs, and community events, you have created spaces where the beauty and diversity of Tamil culture can be celebrated and appreciated by all.

Thank you for everything you do to preserve and promote Tamil heritage. Your contributions are vital in creating a more inclusive and culturally aware society. As we look to the future, we are confident that your ongoing efforts will continue to inspire and empower future generations, ensuring that the legacy of Tamil culture remains vibrant and strong.

In Appreciation,

Sukh Kaur

பேரவைத் தலைவரிடமிருந்து

அழுதே தமிழே,
அழகிய மொழியே.

தமிழ் மொழியின் மீது உள்ள காதலால் இணைந்து, தமிழர்கள் மீதுள்ள அன்பால் தொடர்ந்து, தமிழினத்தின் உயர்ச்சி என்னும் குறிக்கோளினால் பொறுப்பேற்று, இன்று தமிழர்களின் குரலாக இருந்து வரும் வட அமெரிக்காவின் தொன்மை வாய்ந்த கூட்டமைப்பின் தலைவராக உங்களோடு உரையாடும் வாய்ப்பு பெற்றதற்கு நன்றி. சாதி, மதங்களைக் கடந்து, உழைப்பால் ஒன்று பட்டு நிற்கும் தன்னார்வலர்களே ஆலமரமாய் எழுந்து நிற்கும் பேரவையின் ஆணிவேர்கள். முதலில் உங்களுக்கு என் வணக்கம். பேரவையின் தமிழ் மொழி மற்றும் தமிழர் நலன் சார்ந்த குறிக்கோள்கள் தான் என்னையும் உங்களையும் பேரவையின் பால் ஈர்த்து தன்னார்வலத் தொண்டாற்ற அழைத்தன.

தமிழ்ச் சொந்தங்களே! டெக்சாசு மாகாணத்தின் சான் ஆண்டோனியோ மாநகரில் நடக்கும் 37ஆவது பேரவை விழாவில் உங்கள் அனைவரையும் சந்திப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி. விழாவிற்கு அயராது உழைத்த தன்னார்வலர்கள் அனைவர்க்கும் என் உளங்கனிந்த நன்றி. சமத்துவம் தமிழரின் தனித்துவம் என்னும் பொருள் பொதிந்த முழக்கத்துடன் விழா அமைந்திருப்பது சிறப்பு. நூற்றாண்டு விழா காணும் முத்தமிழறிஞர் கலைஞர் மு. கருணாநிதி மற்றும் மூத்த தமிழறிஞர் மா. நன்னன் ஆகிய இருவரையும் வாழ்த்தி வணங்குவது இவ்விழாவின் சிறப்புகளில் ஒன்று!

ஆண்டு விழா நடத்துவது பேரவையின் தனிச்சிறப்புகளில் ஒன்று மட்டுமே. ஆண்டு முழுவதும் பேரவை தமிழ் மொழி பரப்பவும், தமிழர் நலன் பேணவும், தமிழர்களிடை ஒற்றுமை ஓங்கவும், வட அமெரிக்கத் தமிழர்களுக்கும் பிற குழுக்களுக்கும் இடையே இணக்கத்தில் வலு சேர்க்கவும் பல குழுக்களை அமைத்து ஆண்டு முழுவதும் அயராது செயலாற்றி வருகிறது. பேரவை தமிழுக்கும் தமிழர்க்கும் தொண்டாற்றுவதோடு, தமிழர் பண்பாட்டையும் தமிழ் மொழியின் சிறப்புகளையும் வட அமெரிக்காவின் அனைத்து தரப்பினர்க்கும் எடுத்துச் செல்கிறது. மேலும், நம் தமிழ்ச் சங்கங்களில் ஆர்வமுடையோர் தங்கள் எழுத்து, கவிதை, மற்றும் பேச்சுத் திறன்களை வளர்த்துக்கொள்ள பயிற்சிப் பட்டறைகள் நடத்தவும் செய்கிறது. “மயிலே மயிலே” குழுவின் மூலமாக தங்களின் அனுபவங்களைத் தங்கு தடையில்லாமல் கதை வடிவில் பிறருடன் பகிர்வதற்கான தளம் அமைத்திருக்கிறோம். அருவி இதழில் கவிதை, கட்டுரை, மற்றும் இதழியல் திறன்களைப் பதிப்பிப்பதுடன், பேரவையின் மற்றும் சங்கங்களின் நிகழ்ச்சிகளைத் தொகுத்து அளித்து வருகிறோம். கொரோனா தொற்றுக்குப் பின் இரண்டு ஆண்டுகளுக்குப் பின் மீண்டும் பேரவையின் அருவி இதழை வெளிக்கொண்டு வந்தது பெரு மகிழ்ச்சி தருகிறது.

பேரவையின் 36-ஆவது ஆண்டு விழா சாக்ரமண்டோவில் சென்ற ஆண்டு கோலாகலமாக நடந்து முடிந்தது. “விழாவிற்கு வந்திருந்த ஒவ்வொருவருடைய மனதிலும் பேச்சிலும் செயலிலும் தமிழ் மொழியை, அதன் இலக்கியப் பெருமையை, பண்பாட்டு அடையாளங்களைப் பாதுகாப்பது, அடுத்த தலைமுறையினருக்குக் கடத்துவது மட்டுமே இலட்சியம் என்பது

தெளிவாகவே வெளிப்பட்டது," என்று சாகித்திய அகாதமி விருது வென்ற எழுத்தாளர் இமையம் பதிவிட்டதை இங்கு நினைவு கூறுகிறேன். அவருக்கு என் நன்றி. இவ்விழாவின் குழுக்களில் தானாக முன்வந்து உவப்புடன் பணியாற்றியவர்கள் பலர். நியூ யார்க்கிற்கும் சாக்ரமண்டோவிற்கும் மூன்று மணி நேரம் கால இடைவெளி இருந்தாலும், எப்போது வேண்டுமானாலும் அவர்களை அழைத்துப் பேசி விழா நிமித்தம் உரையாடும் உரிமையை அவர்கள் எனக்கு அளித்திருந்தார்கள். தமிழுக்காகத் திரைமறைவில் பலர் உழைப்பது நமக்குத் தெரிந்தது தான். தமிழ்ப் பற்று என்பது பல பரிமாணங்களில் ஒவ்வொருவரையும் தமிழுக்குத் தொண்டு செய்ய அழைத்து வந்துவிடும்! இப்போது சாக்ரமண்டோ விழா தன்னார்வலர்களில் பலரை என் நண்பர்கள் என்று உரக்கச் சொல்வதில் எனக்குப் பெருமை.

மலையகத் தமிழ் உறவுகள் பிரித்தானியர்களால் இந்தியாவிலிருந்து இலங்கைக்குத் தொழிலாளர்களாகக் கொண்டுவரப்பட்டு இரண்டு நூற்றாண்டுகள் நிறைவடைகிறது. இந்த ஆண்டுடன் இருநூறு ஆண்டுகளில் அவர்களின் வாழ்வாதாரத்தில் கணிசமான முன்னேற்றம் எதுவும் ஏற்படவில்லை. அவர்களின் தமிழ்ப் பள்ளிகளும் வசதிகள் இல்லாமல் காணப்படுவதால் தமிழ் மாணவர்கள் சிங்கள பாடசாலைகளில் சிங்கள மொழிக்கல்வியைத் தொடர்வதற்கு ஊக்குவிக்கப்படுகின்றார்கள். இந்த நிலையை மாற்றி இக்கட்டான சூழலில் வாழும் மலையகத் தமிழ் உறவுகளின் கல்விக்கு கரம் கொடுக்க நிதி திரட்டியபோது மனம் உவந்து அள்ளிக் கொடுத்த நல்ல உள்ளங்களுக்கு என் தகைசால் வணக்கம்.

தமிழ்நாடு அரசின் அயலகத்தமிழர் வாரியம் சென்னையில் நடத்திய மூன்றாவது அயலகத் தமிழர் மாநாட்டில் பத்துக்கும் மேற்பட்ட பேரவையின் உறுப்பினர் சங்கங்களிலிருந்து பலரும் கலந்துகொண்டோம். இந்த விழாவில் பேரவையின் மேனாள் தலைவர் பெரியாரின் சமத்துவக் கொள்கையின் தீப்பொறி மரு. சோம இளங்கோவன், பேரவையின் இலக்கியக் கூட்டங்களில் பயிற்சிப் பட்டறை நடத்திய சங்க இலக்கியத் தமிழச்சி திருமிகு வைதேகி எர்பர்ட்டு, நியூயார்க் இசுடோனி புருக் பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கையை நிறுவியதன் பொருட்டு நானும் என் மனைவியும் என்று பேரவையின் பயணிக்கும் நமக்கு கணியன் பூங்குன்றனார் விருதுகள் வழங்கப்பட்டது ஒரு தனிச் சிறப்பு.

தமிழீழத்தில் பேரவை ஓர் அமர்வை நடத்தவேண்டும் என்ற என் நீண்ட நாள் கனவு 2024 சனவரி 19-ஆம் நாள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நிறைவேறியது. இந்த வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த தொழில் முனைவோர் மாநாட்டினை நடத்த எனக்கு உறுதுணையாக நின்ற செயலாளர் கிங்சுலி சாமுவேல் மற்றும் செயற்குழுவினர்க்கு என் நன்றியை உரித்தாக்குகிறேன். இம்மாநாடு போரினாலும் அதற்கு பின்பும் இடுக்கண்ணில் உழன்று வரும் ஈழத்தமிழர்க்கு நம்பிக்கையையும், ஊக்கத்தினையும் தந்தது என்பது வந்திருந்தோர் அனைவரும் கண்ட உண்மை. தமிழ் மண்ணிற்காக தம் இன்னுயிரை அர்ப்பணித்த மாவீரர்களுக்கும், அங்கு அடக்குமுறைக்குள் வாழும் மக்களுக்கும் இம்மாநாடு நம்பிக்கை ஒளி வீசி உள்ளது என்று மாநாட்டில் கலந்துகொண்டவர்கள் கூறியது மனதை நெகிழச் செய்தது. நமது பேரவை தமிழர்க்காக எடுத்த இந்த சீறிய முயற்சி பற்றி முழுமையாக உணர்ந்துகொள்ள இம்மாநாடு பற்றி மேனாள் தலைவர் தில்லைக்குமரன் விரிவாக எழுதிய கட்டுரையைப் படிக்குமாறு வேண்டிக்கொள்கிறேன்.

தமிழீழத்தில் முள்ளிவாய்க்கால் தமிழினப்படுகொலை நடந்து 15 ஆண்டுகள் நிறைவுற்றதை உலகெங்கிலும் உள்ள தமிழர்கள் நினைவேந்தல் நடத்தி மரியாதை செலுத்தினர். சுகார்பரோ நகர மையத்தில் மே 18ஆம் நாள் நடந்த நிகழ்வில் நானும் நேரில் சென்று கலந்துகொண்டேன். அடுத்த தலைமுறையினரின் உணர்வுமிக்க பேச்சைக் கேட்டு நம்பிக்கையும் கொண்டேன். இதற்கு இரண்டு நாட்கள் முன்பு அமெரிக்க பிரதிநிதிகள் சபையில் வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானம் காங்கிரசு உறுப்பினர் மாண்புமிகு வைலி நிக்கல் (Wiley Nickel) மற்றும் மற்ற ஏழு காங்கிரசு உறுப்பினர்கள் சமர்ப்பித்தனர். H.RES 1230 என அழைக்கப்படும் இந்தத் தீர்மானம் ஈழத் தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கிறது மற்றும் நிரந்தர அரசியல் தீர்வைக் காண சுதந்திரத்திற்கான வாக்கெடுப்புக்கு அழைப்பு விடுக்கிறது. இந்தத் தீர்மானம் முன்மொழியப்பட்டதை விவாதிக்க தாமசு செப்பர்சன் நூலகத்தில் ஓர் அமர்வு ஒருங்கிணைக்கப்பட்டது. அங்கும் நேரில் சென்று அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்து நன்றி நவின்றேன்.

இத்தீர்மானம் தமிழர் பிரச்சினை தொடர்பான மிக விரிவான தீர்மானம், இது சிங்களவர்களும் தமிழ் மக்களும் தீவில் தனித்தனி இறையாண்மை கொண்ட, காலனித்துவத்திற்கு முந்தைய காலத்தை நினைவூட்டுகிறது. மற்றும் 1833 இல் ஆங்கிலேயர்களால் ஒற்றை ஒற்றையாட்சி நிர்வாகத்தின் கீழ் சிங்களம் மற்றும் தமிழ் பிரதேசங்களை ஒன்றிணைக்கப் பட்டதை வலியுறுத்துகிறது. கடந்தகால வன்முறைகள் மீண்டும் நிகழாமல் இருப்பதை உறுதிசெய்வதற்கும், தமிழர்களுக்கு நிரந்தரமான கண்ணியமான அரசியல் தீர்வைக் காண்பதற்குமான சர்வதேச ஆதரவைப் பெறுவதற்கு ஒவ்வொரு தமிழ்ச் சங்க உறுப்பினர்களும் அவரவர் காங்கிரசு உறுப்பினர்களைத் தொடர்பு கொண்டு H.RES 1230 தீர்மானத்திற்கு ஆதரவு கொடுக்க வலியுறுத்த வேண்டும் என்று அன்போடு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

ஈழத் தமிழர்களுக்கான சுதந்திரத்திற்கான வாக்கெடுப்புக்கு எனது மற்றும் வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப்பேரவையின் முழு ஆதரவு என்றும் உண்டு!

இந்நேரத்தில் ஒரு நல்ல செய்தியையும் உங்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். நமது வடஅமெரிக்கத் தமிழ்ச் சமுதாயத்தின் ஓர் ஊழியனாக இன்று உங்கள் முன் நிற்பதில் பெருமிதம் கொள்கிறேன்! 1993 இல் விஸ்கான்சினில் உள்ள கெனோஷாவில் ஆரம்ப நாட்களிலிருந்து நமது பயணத்தில் உறுதியான பங்கேற்பாளராக இருந்த ஒருவன் என்ற முறையில், நமது அமைப்பின் நிதிக் கட்டமைப்பை மற்றும் நீடித்த வலிமையை உறுதி செய்வதில் நான் என்னை அர்ப்பணித்துள்ளேன். தளராத முயற்சிகள் மூலம், இன்று பல்வேறு குறிப்பிடத்தக்க மைல்கற்களை அடைந்துள்ளோம். திரட்டப்பட்ட நிதியில் $1 மில்லியனைத் தாண்டியுள்ளோம், இது பேரவைக்கு முதல் முறையாகும். மேலும் முந்தைய அனைத்து நிலைகளையும் தாண்டிய வங்கி இருப்பை இன்று அடைந்துள்ளோம்.

ஆயினும்கூட, இந்த சாதனைகளுக்கு மத்தியில், அளவீடுகளைத் தாண்டிய ஒரு தருணத்தைப் பெருமையுடன் நான் காண்கிறேன். இது பேபி விசுருத்தின் கதை, அவரது அன்பான குடும்பத்துடன் - அவரது சித்தி திருமிகு அபிநயா மற்றும் பாட்டி திருமிகு சாவித்திரி முருகன் மீண்டும் இணைவதற்கான பாதையை உருவாக்கிக் கொடுத்தது - நமது சமூகத்தின் ஒற்றுமை மற்றும் அன்புக்கு ஒரு சான்றாக விளங்குகிறது.

விசுருத்தின் பெற்றோரின் இழப்பு மற்றும் பஞ்சாபி குடும்பம் அவரைத் தத்தெடுத்ததைத் தொடர்ந்து இதயத்தைத் துன்புறுத்தும் சூழ்நிலைகளை எதிர்கொண்டபோது, நமது கூட்டுத் தீர்மானம் சோதனைக்கு உள்ளானது. இருப்பினும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், தமிழ்நாடு அயலகத் தமிழர் நலன் (NRTW) வாரியத் தலைவர் கார்த்திகேய சிவசேனாபதி, பேரவையின் முன்னாள் தலைவரும் NRTW வாரியத்தின் அமெரிக்க உறுப்பினருமான கால்டுவெல் வேள்நம்பி, அமெரிக்கத் தூதரகம்-சென்னை, இந்தியத் துணைத் தூதரகம்-அட்லாண்டா போன்ற தலைவர்களின் அசைக்க முடியாத ஆதரவுடன் மிசிசிப்பியின் ரியாக்சன் டீம் உறுப்பினர்கள் திருமிகு. லாவண்யா மற்றும் திருமிகு. உரோகிணி, வளைகுடாத் தமிழ் மன்றத்தின் மேனாள் தலைவர் குமார் நல்லுசாமி, நியூசெர்சி பாலாஜி மற்றும் கவிதா ராமசாமி, பேரவையின் உதவும் இதயங்கள் குழு, சூர்யன் பொன்னுசாமி, கல்யாண் சிதம்பரம், தென் மத்திய தமிழ்ச்சங்கத்தின் நல்ல உள்ளங்கள் மற்றும் பலர், இதனை முடித்துக் காட்டுவதற்கு நம்பிக்கை தரும் கலங்கரை விளக்கமாகத் துணை நின்றனர்.

தனிப்பட்ட முறையில், கடந்த இரண்டு வருடங்களாக அபரிமிதமான பணிச்சுமையைத் தாங்கி, அசையாத அர்ப்பணிப்புடனும், விவரங்களில் நுட்பமான கவனத்துடனும் பணியாற்றிய செயலாளர் கிங்ஸ்லிக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவரது அயராத முயற்சிகள் மற்றும் நிர்வாகக் குழுவின் செயல் வீரர்களுக்கு நன்றி, பேரவையின் நிறுவனத் தேவைகளைத் தவிர்த்து, அன்றாடப் பணிகள் திறமையானவர்களின் கைகளிலிருந்த காரணத்தினால் தான், இது போன்ற ஆழமான உணர்வு நிறைந்த பிரச்சினைகளில் என்னால் கவனம் செலுத்த முடிந்தது.

விசுருத் தமிழ் நாட்டில் உள்ள தனது வேர்களுக்குச் சரியான முறையில் திரும்புவதற்கான பெருமுயற்சியில் நாம் அனைவரும் இணைந்து வெற்றி பெற்றோம். இந்த நிகழ்வு பேரவையின் செயலாளராகவும் தலைவராகவும் இருந்த எனது பதவிக்காலத்தின் உச்சமான ஒன்றாக உணர்கிறேன். இன்னும் பல ஆண்டுகளுக்குப் பிறகு, நான் பெருமையுடன் நினைவுகூரக்கூடிய ஒரு சம்பவமாக இது இருக்கும்--ஒரு சிறுவன் தன் தமிழ்க் குடும்பத்தில் மீண்டும் இணைவது. இந்த பயணம் நமது சமூகத்தின் நலனுக்கான நமது அர்ப்பணிப்பை மட்டுமல்ல, நமது ஒற்றுமை மற்றும் கூட்டு நோக்கத்திலிருந்து பெறப்பட்டுள்ள வலிமையையும் எடுத்துக்காட்டுகிறது.

ஒரு புதிய அத்தியாயத்தின் தொடக்கத்தில் நாம் நிற்கும்போது, நீங்கள் என் மீது வைத்திருக்கும் நம்பிக்கை, தொடர்ந்து நமது கூட்டு முன்னேற்றத்திற்குச் சேவை செய்யவும் பங்களிக்கவும் என்னை அனுமதிக்கிறது. நமது கடந்த காலத்தைப் போற்றவும், நமது நிகழ்காலத்தை வளமாக்கவும், வரவிருக்கும் தலைமுறைகளுக்கு வழி வகுக்கும் நாளைக் கட்டியெழுப்ப இன்னும் முன்னோக்கிச் சென்று இந்தப் பயணத்தை நாம் தொடர்வோம். இந்நேரத்தில் தோழர் திருமிகு விசய் மணிவேல் தலைமையில் புதிதாகப் பொறுப்பேற்க உள்ள செயற்குழுவினர் அனைவரையும் வாழ்த்துகிறேன். உங்கள் தமிழ்-தமிழர் நலன் சார்ந்த பயணத்தின் வெற்றிக்கு என் ஒத்துழைப்பு என்றென்றும் உண்டு.

அடுத்த 2025-ஆம் ஆண்டு பேரவை விழா கரோலினாத் தமிழ்ச்சங்கத்தில் நறுமணத்துடன் வீசட்டும்; அந்தத் தமிழ்மணம் இன்று முதல் உங்கள் நெஞ்சங்களில் நீங்காமல் இருக்கட்டும்.

உழைப்பே உயர்வு. அஃது ஏதும் தன்னலம் நோக்கா பணி என்றால் அதுவே தாயுள்ளம் ஆகிறது. தமிழுக்கு என்னும் போது உண்மையான தமிழர்களால் அடையாளப் படுத்தப்படுகிறது. பேரவையில் இணைந்து தன்னலமற்ற தமிழ்ப்பணி ஆற்றிய அனைத்துத் தன்னார்வலர்களுக்கும் “கரமலர் மொட்டித்து” மீண்டும் என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வாழ்க வளமுடன். நும் வாழ்வை ஆள்க அறமுடன்.

நட்புடன்

முனைவர் பாலா சுவாமிநாதன்

தலைவர், வடஅமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவை

விழா ஒருங்கிணைப்பாளர்

எங்கள் மொழி நல்ல மொழி
அன்னை சொல்லித் தந்த மொழி
தாலாட்டில் கேட்ட மொழி
பாட்டி கதை சொன்ன மொழி
இனிமை கூட்டும் இன்ப மொழி
அதுவே நம் தாய்மொழி,நம் உயிரினும்
மேலான செந்தமிழ் மொழி !

தமிழின உறவுகளுக்கு என் பணிவான வணக்கம்.

இலக்கியமும் இலக்கணமும் கொண்டு காலத்தை வென்று பல நூற்றாண்டுகளைக் கடந்து இன்றும் இனிமை குறையாமல் கற்போர் நெஞ்சத்தை நெகிழச் செய்யும் அருந்தமிழ் சிறப்பினைப் பெற்று,

"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்" என முண்டாசு கவி பாரதியாலும், "தமிழுக்கு அமுதென்று பேர், அந்த தமிழ் எங்கள் உயிருக்கு நேர்" என்று கவிஞர் பாரதிதாசனாலும் புகழாரம் சூட்டப்பட்ட நம் செம்மொழி தமிழுக்கு பெருமை சேர்க்கும் வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப்பேரவையும் டெக்சாஸ் மாகாணம் சான் ஆண்டோனியோ தமிழ்ச் சங்கமும் இணைந்து நடந்து 37 ஆவது தமிழ் விழாவின் மூலம் தமிழின்/ தமிழரின் பெருமையை பறைசாற்ற உலகளவில் குழுமியிருக்கும் தமிழ் நெஞ்சங்களுக்கு வணக்கம்.

வட அமெரிக்காவில் வாழும் பல்லாயிரக்கணக்கான தமிழ் நெஞ்சங்களை இணைக்கும் இப்பெருவிழாவினை ஒருங்கிணைக்கும் பணிக்கு என்னை செம்மைப்படுத்திய சான் ஆண்டோனியோ தமிழ்ச் சங்கத்திற்கும், என்னுடன் உறுதுணையாக தோளோடு தோளாகப் பணியாற்றும் அத்தனை நல்லிதயங்களுக்கும் நன்றி சொல்ல கடமைப் பட்டிருக்கிறேன்.

சீரிய சிந்தனை,சீரிய வெற்றி என்ற இலக்குடன் கோடை விழா,பாரதியார் விழா,தமிழர்த் திருநாள், திருக்குறள் போட்டி என பல சிறப்பம்சங்களுடன் வீறுநடைபோட்டு வரும் நமது சான் ஆண்டோனியோ தமிழ்ச் சங்கத்திடம் 37 ஆவது பேரவை விழா நடத்தும் பெரும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது நமக்கு வழங்கப்பட்ட சிறப்புத் தகுதியாகவே எண்ணி மகிழ்கிறேன். நமது சிறு நகரத்தில் இப்பெரும் பொறுப்பை ஏற்று 'ஊர் கூடித் தேர் இழுப்போம்' என இவ்விழாவினை செவ்வனே செய்து திறம்பட முடித்த அனைவருக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் இவ்விழா இனிதே சிறப்புடன் நடந்திட உதவிய கொடைவள்ளல்களுக்கும், சமூக ஆர்வலர்களுக்கும், எழுத்தாளர்களுக்கும், தன்னார்வலர்களுக்கும், ஊடகங்களுக்கும் தலைவணங்கி நன்றிகளை உரித்தாக்குகிறேன்.

'எங்கும் தமிழ்,எதிலும் தமிழ் என்று சங்கே முழங்கு, சங்கே முழங்கு !

எங்கள் வாழ்வும் வளமும் மங்காத தமிழ் என்று சங்கே முழங்கு !' என எத்திசையும் தமிழ் மணக்க இவ்விழாவை சிறப்பிக்க வந்தமைக்கு கைகூப்பி அனைவரையும் வணங்குகின்றேன்.

தமிழால் ஒன்று படுவோம். வாழ்க தமிழ் !

திருமிகு. செல்வகிரி அருணகிரி

விழா இணை ஒருங்கிணைப்பாளர்

வணக்கம்,

சமத்துவம் தமிழரின் தனித்துவம்!

வடஅமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையின் 37வது தமிழ் விழாவிற்கு அனைவரையும் வரவேற்பதில் பேருவகை கொள்கிறேன்.

'கனவு காணுங்கள்' என்பது அப்துல் கலாம் ஐயாவின் புகழ்மிக்க பொன்மொழி. பன்னிரண்டு ஆண்டுகளாக தமிழ்ச்சங்கப் பணிகளில் ஈடுப்பட்டு, பற்பல பேரவைத் தமிழ் விழாக்களில் கலந்து கொண்ட சான் ஆண்டோனியோ வாழ் தமிழனான எனக்கும் ஒரு மாபெரும் கனவு இருந்தது. அறுபத்து ஒன்பது உறுப்பினர் சங்கங்களைக் கொண்ட பேரவையின் தமிழ் விழாவினைச் சிறப்பாக எங்கள் ஊரில் நடத்திடும் கனவே அது! இதோ அக்கனவை நனவாக்கிட அணியமாக உள்ளது வெள்ளிவிழா கண்ட சான் ஆண்டோனியோ தமிழ்ச்சங்கம்! இதில் என் சிறு பங்களிப்பும் உள்ளது என்ற நினைப்பே மனதுக்கு மிக நிறைவாய் இருக்கின்றது.

இவ்விழாவின் ஒருங்கிணைப்பாளராக செயல்பட எனக்கு வாய்ப்பளித்த பேரவைக்கும், சான் ஆண்டோனியோ தமிழ்ச் சங்கத்திற்கும் நன்றி. இப்பணியில் எங்களுக்கு வழிகாட்டிகளாக விளங்கும் பேரவையின் ஆகச்சிறந்த ஆளுமைகள் அனைவருக்கும் நன்றிகள் பல. எந்த நிகழ்வையும் சீரிய முறையில் நடத்திட உதவுவது தன்னிகரில்லாத தன்னார்வலர்களின் உழைப்பே. அவ்வகையில் எங்களுங்கு பக்க பலமாக இருக்கும் தன்னார்வலர்கள் அனைவருக்கும் என் நன்றிகள் உரித்தாகுக. தங்கள் கொடை உள்ளத்தால் கடையெழு வள்ளல்களுக்கு தாங்கள் சற்றும் குறைவானவரில்லை என்று பேரவை விழாவிற்கு அள்ளித் தந்த அனைத்து கொடையாளர்களையும் நன்றியுடன் வணங்குகிறேன்.

சான் ஆண்டோனியோ தமிழ்ச்சங்கம், அளவில் சிறிய சங்கமாயினும் 'பெரிதினும் பெரிது கேள்' என்ற பாரதி சொன்ன சொல்லைத் தட்டாமல், ஐயாயிரத்திற்கும் மேற்ப்பட்ட தமிழ் உறவுகளுடன் தமிழர் மரபு, பண்பாடு, கலைகள், இலக்கியங்கள், வாழ்வியல் என தமிழர், தமிழ் நலம் சார்ந்த அனைத்தையும் கொண்டாடும் வகையில் நிகழ்வுகள் பலவற்றையும் எற்பாடு செய்துள்ளது.

அன்று பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் வையை நதிக்கரையில் செழித்து வளர்ந்த தமிழ் இன்று பல்லாயிரக் காதத் தொலைவு கடல் கடந்து சான் ஆண்டோனியோ நதிக்கரையில் கொண்டாடப்படுவது நாம் பெற்ற பேறு. விழாவிற்கு வருகை தரும் அனைவரையும் வணங்கி வரவேற்கிறேன்!

திருமிகு. கார்த்திகேயன் சுப்பா

விழா துணை ஒருங்கிணைப்பாளர்

அன்பார்ந்த தமிழ் உறவுகளே வணக்கம்.

வட அமெரிக்கத் தமிழ்சங்க பேரவையின் 37ஆவது தமிழ் விழாவிற்கு வருகை தந்திருக்கும் உங்கள் அனைவருக்கும் நன்றிகளும், வாழ்த்துகளும் உரித்தாகுக! பல்வேறு இடங்களிலிருந்து பயணப்பட்டு, பொருட்செலவு மற்றும் நேரச்செலவு பாராமல், பல்வேறு இன்னல்களைப் பொருட்படுத்தாமல், இங்கு நம் உறவுகளைக் கலக்கும் ஆர்வத்துடன், வருகைதந்திருப்பது சிறப்பானது. மிக்க மகிழ்ச்சி!

வரலாற்றுச் சிறப்பு மிக்க டெக்சாசு மாநிலத்தில் பேரவையின் 37ஆவது தமிழ் விழாவை ஒருங்கிணைத்து நடத்தும் வாய்ப்பை சான் அன்டோனியோ தமிழ்ச் சங்கத்திற்கு அளித்தமைக்கு பேரவைக்கு எமது உள்ளம் நிறைந்த நன்றிகள்.

ஒவ்வொரு ஆண்டும் வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையும் வெள்ளி விழா கண்ட சான் அன்டோனியோ தமிழ்ச் சங்கமும் இணைந்து "சமத்துவம் தமிழரின் தனித்துவம்" என்ற கருப்பொருளைச் சுமந்து இத்தமிழ் விழா கொண்டாடப்படுகிறது. அந்த வகையில் இவ்வாண்டு நூற்றாண்டு விழா காணும் முத்தமிழறிஞர் கலைஞர் மு.கருணாநிதி பேராசிரியர் மா.நன்னன் படைப்புகளை மையமாகக் கொண்டு இவ்விழா கொண்டாடப்படுகிறது.

'நானிலம் போற்றும் நல்லாருக்கு

நன்றி செல்வது நம் கடமை.'

அந்த வகையில் இன்றைய விழா சிறப்பாக நடந்திட மிகத்துல்லியமாகத் திட்டமிட்டு, செயல் படுத்திய பேரவை மற்றும் சான் அன்டோனியோ தமிழ் சங்கச் நிர்வாகக்குழு உறுப்பினர்களுக்கும், தன்னலம் கருதாமல் இரவு பகலாக உழைத்த அனைத்து தன்னார்வலர்களுக்கும் விழாக்குழுவினர்க்கும், நன்கொடையாளர்களுக்கும் ஊடகங்களுக்கும் அனைத்து கலைஞர்களுக்கும் வணிக நிறுவனங்களுக்கும் சான் அன்டோனியோ தமிழ்ச் சங்கத்தின் சார்பாக சிரந்தாழ்ந்த நன்றிகளை உரித்தாக்குகிறேன்.

என்ன தவம் செய்தேன் தமிழனாய் பிறப்பதற்கு!!

வாழ்க வளமுடன்,

திருமிகு. இராஜகுரு பரமசாமி

விழா துணை ஒருங்கிணைப்பாளர்

அனைவருக்கும் எனது வணக்கம்.

மக்களே! தயாராகி விட்டீர்களா? சான் ஆண்டோனியோவில் மாபெரும் தமிழ்விழா காண்பதற்குத் தயாராகி விட்டீர்களா? வாருங்கள்! சேர்ந்து கொண்டாடுவோம்.

"சென்றிடுவீர் எட்டுத் திக்கும் – கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்குச் சேர்ப்பீர்!"- பாரதி விரும்பியது போலவே கல்விச் செல்வத்திலிருந்து பல நூறு செல்வங்களை தம் நாட்டில் தம் மொழியில் கொணர்ந்து சேர்த்துக் கொண்டுதான் உள்ளனர் நம் தமிழர்கள்! நம் விழாக்களையும் சேர்த்துத்தான்.

புத்துணர்ச்சியுடன் நூற்றுக்கணக்கான தன்னார்வலர்களோடு வெற்றிப் பணிக்கு பல மாதங்கள் முன்பே எங்கள் குழு தயாராகி விட்டிருந்தனர். புதுப்புது திட்டங்கள், புதுப்புது முயற்சிகள் திட்டமிடப்பட்டன. அலசலும் ஆலோசனைகளுமாக பல குழுக்கள் உருவாக்கப்பட்டன. ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்பது போல பல கைகள் தானாக இணைந்தன.

இன்று நீங்கள் பார்த்து ரசித்த, உணர்ந்த பல தருணங்களுக்கைப் பலநாட்கள் நின்று பார்த்து உடனிருந்து நானும் கைகோர்த்தது என் வாழ்வில் மறக்கவே முடியாத ஒன்று!

பேரவை எமக்கு அளித்த இவ்வாய்ப்பை நாங்கள் மிகச்சிறப்புடன் செய்து வந்துள்ளோம் என்பதில் மகிழ்வும் பெருமையும் அடைகின்றோம். அதே உணர்வும் மகிழ்வும் தங்கள் அனைவருக்கும் ஏற்பட்டிருக்கும் என நம்புகின்றேன்.

தமிழ் வாழ்க! வளர்க தமிழ்!

நன்றி! வணக்கம்.

திருமிகு. வாசுதேவன் நடராஜன்

விழா துணை ஒருங்கிணைப்பாளர்

உலகெங்கிலுமிருக்கும் அன்புத் தமிழ்ச் சொந்தங்கள் அனைவருக்கும் உங்கள் சகோதரி ரமணி ரகுநாத்தின் அன்பான வணக்கம்!!!

வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையின் 37ஆவது ஆண்டு விழா, சிங்கார சென்னையின் சிஸ்டர் சிட்டி என்று அழைக்கப்படும் டெக்ஸாசு மாநிலத்தில், ஒரு மிகப் பெரிய சுற்றுலா நகரமான சான் அன்டோனியோவில் மிகப் பிரமாண்டமான நிகழ்வு நடைபெறவுள்ளது.

பெட்னா அமெரிக்கத் தமிழ்ச் சங்கங்களின் ஒரு குடை அமைப்பாகும். தமிழ் மொழி, பண்பாடு, தமிழ்க் கலாச்சாரம் சமூகம் ஆகியவற்றைப் பேணி, வளர்ப்பதே சமூகத்தின் முக்கிய நோக்கமாகும். இந்த விழா ஒவ்வொரு ஆண்டும் மூன்று நாட்களுக்கு நடக்கின்றது.

வெள்ளி விழா கண்ட சான் அன்டோனியோவும் வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையும் இணைந்து நடத்தும் பேரவையின் 37ஆவது தமிழ் விழா. சான் அன்டோனியோ தமிழ்ச் சங்கத்தில் உறுப்பினராகவும், மற்றும் பதினாறு ஆண்டுகளுக்கு மேலாக பொருளாளராகவும் பணியாற்றியுள்ளேன். இன்னும் என் சேவையைத் தமிழ்ச் சங்கத்துக்கு முழு மனதாகப் பணியாற்றுவேன்.

பேரவையின் 37ஆவது தமிழ் விழாவில் ஒருங்கிணைப்பாளராக பணியாற்றிக்கொண்டிருக்கிறேன். அமெரிக்காவில் அறுபதுக்கும் மேற்பட்ட தமிழ்ச்சங்கங்கள், பல்வேறு மாநிலங்களிலிருந்து நம் சான் அன்டோனியோவில், மக்கள் அலைக்கடலெனத் திரண்டு வரும் கண் கொள்ளாக் காட்சி அரங்கேறப்போகிறது. 37ஆவது தமிழ் விழாவில் குறள் தேனீ, தமிழ்த் தேனீ, இலக்கியக் குழு, வணக்கம் வட அமெரிக்கா, தமிழ் சூறும் தலைமுறை, சங்கங்களின் சங்கமம், இலக்கிய வினாடி வினா, தமிழும் திருக்குறளும், ஆற்றல் மிகு பெண்கள் குழு, அருவி மலர் குழு, போன்ற பல்வேறு போட்டிகளும், நிகழ்ச்சிகளும் நடத்திப் பரிசு கொடுக்கப்படுகிறது. மேலும், மரபுக் கலை நிகழ்ச்சிகள், பட்டி மன்றம், வெள்ளித்திரை நட்சத்திரங்களோடு ஒரு உரையாடல், போன்ற பல்வேறு சிறப்பான நிகழ்ச்சிகளும் நடைபெறுகிறது.

எனக்கு இதில் பணியாற்ற ஒரு வாய்ப்பளித்த செல்வ கிரி அருணகிரி அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், என்னுடன் பணியாற்றிய திரு.கார்த்திகேயன் சுப்பா, திரு.ராஜகுரு பரமசாமி, திரு.வாசுதேவன் நடராஜன் அவர்களுக்கு எனது வாழ்த்துகளையும் நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமிகு. ரமணி ரகுநாத்

பேரவை செயலாளரிடமிருந்து

ஆல்போல் தழைத்து அருகு போல் வேரோடி மூங்கில் போல் சூழ்ந்து முடிவின்றி வளர்ந்து வரும் பேரவையில் ஏறத்தாழ 60 தமிழ் அமைப்புகள் உறுப்பினராக உள்ளனர். மேலும் பல அமைப்புகள் உறுப்பினராக முன்வருகின்றனர். இந்த அனைத்து அமைப்புகளுக்கும் பேரவையின் மனமார்ந்த நன்றிகள். ஒற்றுமையே வலிமை; அவ்வலிமையை தமிழ் பல நூற்றாண்டுகளுக்கு நீடித்து நிலைக்க உரமாக்குவோம்.

வட அமெரிக்கா அளவில் தமிழ்மொழி மற்றும் தமிழர் நலனை முன்னிறுத்தி தமிழ் அடையாளத்தை நிறுவும் மாபெரும் விழா நமது வட அமெரிக்க தமிழ் சங்க பேரவை நடத்தும் தமிழ் விழா மட்டுமே. நமது 37ஆவது டெக்ஸஸ் மாகாணம் சான் அன்டோனியோ நகரில் நடைபெறுகிறது. 37-வது பேரவை தமிழ் விழா பல்வேறு வகைகளில் வரலாற்றுச் சிறப்புமிக்கது. இந்தப் பேரவை விழாவின் ஒரு பகுதியாக கடந்த ஜனவரி மாதம் பேரவை வரலாற்றில் முதல் முறையாக இலங்கையில் உள்ள யாழ்ப்பாணம் நகரில் பேரவையின் FiTEN தொழில் முனைவோர் விழா சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவில் உலகெங்கிலும் இருந்து பல்வேறு தொழில் முனைவோர் கலந்து கொண்டனர். இந்த விழாவின் மூலம் யாழ் நகரில் உள்ள சிறு மற்றும் குறு நிறுவனங்களுக்கு பெருவாரியான முதலீட்டு தொடர்பு மற்றும் வாய்ப்புகள் கிடைத்தன. யாழ் நகரில் உள்ள தமிழ் மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தவும் அவர்களை பொருளாதார முன்னேற்றம் அடையச் செய்யவும், அவர்களுக்கான தொழில் முனைவு சார்ந்த வாய்ப்புகளை ஏற்படுத்தவும் இந்த விழா பெரிதும் உதவியது.

மேலும் இந்த நிகழ்வின் சிறப்பு கூறாக தமிழ்நாட்டில் இருந்து வரும் இசை வல்லுநர் திரு. மணிகண்டன் அவர்கள் நமது சங்ககால தமிழ் இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ள பல்வேறு இசைக்கருவிகளை உருவாக்கி, அவற்றைப் பேரவை விழாவில் அனைவரும் காணும் வண்ணம் கண்காட்சியாக அமைத்து, அவற்றை இசைத்தும் நாம் அனைவரும் இசைக்கவும் கற்றுக் கொடுக்கிறார். இது நம் அனைவருக்கும் ஒரு சிறந்த அனுபவமாக இருக்கும். மேலும் கடந்த டிசம்பர் மாதம் சென்னையில் நடைபெற்ற தமிழிசை விழாவில் மேடை ஏற்றிய "மங்கை தீ" என்ற வரலாற்று நாடகம் உங்களுக்காக நமது பேரவை விழா மேடையில் நடைபெறுகிறது. விடுதலைப் போராட்ட நாயகிகள் வெட்டுடையாள், வேலு நாச்சியார் மற்றும் குயிலி ஆகியோரின் வரலாற்றை படம்பிடித்து காட்டும் இந்த நாடகமும் பேரவை விழாவின் தனிச்சிறப்பாகும்.

மேலும் இந்த ஆண்டின் விழாவிற்கு பெருமை சேர்க்க பாடகர் தி. லோ. மகராஜன், திரு பாலகிருஷ்ணன், திரு. பாலச்சந்திரன், எழுத்தாளர்கள் அழகிய பெரியவன், கவிஞர் வெண்ணிலா, கவிஞர் அறிவுமதி, கு. ஞானசம்பந்தன், பேச்சாளர் கவிதா ஜவஹர், விவாத நடுவர் ஆவுடையப்பன், மருத்துவர்கள் திரு. சொக்கலிங்கம் மற்றும் திரு. மணி அவர்கள், பறையிசை கலைஞர்கள் முனைவர் அருட்செல்வி, திரு. மணிமாறன், பேச்சாளர் முனைவர் கலியமூர்த்தி ஆகியோர் பங்கேற்கின்றனர். மேலும் பல்வேறு திரை இசை கலைஞர்கள், பாடகர்கள் இசை நிகழ்ச்சிகளை சிறப்பாக நடைபெறுகிறது. இதற்கு பின்னணியில் உழைக்கும் அனைத்து தன்னார்வலர்களுக்கும் மனமார்ந்த நன்றிகள். குறிப்பாக இந்த விழாவினை முன்னின்று நடத்தும் சான் ஆண்டோனியோ தமிழ்ச்சங்க முன்னவர்களான திரு. செல்வகிரி அருணகிரி, திரு. கார்த்திகேயன் சுப்பா, திரு. ராஜகுரு பரமசாமி, திரு. வாசுதேவன் நடராஜன், திரு. துரை நடராஜன், திரு. யுவராஜ் முனியன், திரு. குமார் வீரப்பன், திருமிகு ரமணி ரகுநாத், திரு. கௌதம் ராஜன், திருமிகு ஷீலா வெங்கடரமணன் உள்ளிட்ட அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகள்.

பேரவை தொடர்ந்து பல்வேறு சிறப்புக் குழுக்களின் வாயிலாக அருபெரும் தமிழ்ப் பணிகளையும் தமிழர் நலப்பணிகளையும் செய்துவருவது அனைவரும் அறிந்ததே. குறிப்பாக, கடந்த ஆண்டில் "தமிழ் இலக்கிய மொழிபெயர்ப்புக் குழு"வின் வழியாக முன்னோடி எழுத்தாளர்கள் தேர்வு செய்த 13 தமிழ்ச் சிறுகதைகள் ஆங்கிலத்தில் மொழிமாற்றம் செய்யப்பட்டு வெளிவர உள்ளது. தமிழ் எழுத்தாளர்களை ஊக்குவிக்கவும் சிறந்த தமிழ் எழுத்துகள் உலகளாவிய மக்களை சென்று சேரவும் மேற்கொள்ளப்பட்ட இந்த அரும்பணி சிறப்பாக உருப்பெற்று ஒரு நூலாக வெளிவருவதில் பேரவை பெருமை கொள்கிறது. இந்நூலை அமெரிக்கா மற்றும் கனடாவின் பல்வேறு நகரங்களில் உள்ள நூலகங்களுக்கு வழங்க வழிவகை செய்யப்படும். மேலும் இந்தநூல் எதிர்வரும் பேரவை விழாவில் உங்கள் அனைவருக்கும் வழங்கப்படும் என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறாம்.

பேரவையின் ஒடுக்கப்பட்ட மற்றும் பாதிக்கப்பட்ட மக்கள் நலக்குழுவின் வழியாக தமிழ்நாடு மற்றும் இலங்கையில் உள்ள பல்வேறு மக்களின் வாழ்வியல் தேவைகளுக்கு தொடர்ந்து நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது. அன்றாட வாழ்வின் தேவைகளுக்கே பொருளின்றி, பணியின்றி, உரிய கருவியின்றி, தேவையான கட்டடம் இன்றி கடினமான சூழலில் வாழும் பல்வேறு மக்களுக்கு பேரவை கடந்த ஆண்டுகளில் செய்துள்ள $60, ooo வெள்ளிகள் நிதிஉதவி அளப்பரியது. மேலும் மலையகத் தமிழர்களுக்கான நிதிதிரட்டல் நிகழ்விற்கு ஒத்துழைத்தது இக்குழு. இத்தகைய சிறப்பான பணிகளை மேற்கொள்ளும் பேரவையின் ஒடுக்கப்பட்ட மற்றும் பாதிக்கப்பட்ட மக்கள் நலக்குழுவிற்கு பேரவையின் மனமார்ந்த நன்றிகள்.

ஈழத்தமிழர் விழிப்புணர்வும் மேம்பாடும் என்ற குழுவின் வழியாக நமது தொப்புள்கொடி உறவுகளுக்கு தேவையான பல்வேறு நலப்பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குறிப்பாக தமிழ் ஈழத்தில் தமிழின அழிப்பு மற்றும் ஈழத்தமிழர்களின் தேவை குறித்த விழிப்புணர்வு நிகழ்வுகள் இக்குழுவால் ஒருங்கிணைக்கப்பட்டன. இக்குழுவிற்கு பேரவையின் மனமார்ந்த நன்றிகள். இவ்வாறு பேரவையின் பல்வேறு புதிய குழுக்கள் சிறப்பாக தமிழ் மற்றும் தமிழர் நலப்பணிகளில் ஈடுபட்டு வருகின்றன.

ஒரு தமிழ் ஆர்வலனாக பேரவையின் தன்னார்வலனாக கடந்த நான்கு ஆண்டுகள் பேரவை செயற்குழுவில் இருந்து பல்வேறு சிறப்பான தமிழ் சார்ந்த முன்னெடுப்புகளில் பங்கேற்க வாய்ப்பளித்த வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவைக்கு எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன். தமிழுக்கும் தமிழர் நலனுக்கும் ஆற்ற வேண்டிய பணிகள் எண்ணற்றது. ஊர் கூடி தேர் இழுக்க வேண்டும். தமிழர் அடையாளத்தை தொடர்ந்து வட அமெரிக்காவில் நிறுவ வேண்டும். ஊரார் நீருண்ணும் குளம் போல பேரவை அனைத்து வளங்களிலும் நிறைந்துள்ளது. எதிர்வரும் காலங்களில் தொடர்ந்து தமிழ் மற்றும் தமிழர் நலனை முன்னிறுத்தி தன்னார்வப் பணிகளை சிறப்பாக தொடருவோம். பேரவை விழா சிறப்பாக அமைய என் மனமார்ந்த வாழ்த்துகளை தெரிவித்து விடைபெறுகிறேன்.

திருமிகு கிங்ஸ்லி சாமுவேல்

செயலாளர், வடஅமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவை

செயற்குழு–பேரவை

முனைவர் பாலா சுவாமிநாதன்
தலைவர்

திருமிகு. விஜய் மணிவேல்
துணைத் தலைவர்

திருமிகு. கிங்ஸ்லி சாமுவேல்
செயலாளர்

திருமிகு. பாலமுரளி கோதண்டராமன்
பொருளாளர்

திருமிகு. சிவன் இளங்கோ
இணை செயலாளர்

திருமிகு. எழிலன் இராமராஜன்
உதவி பொருளாளர்

திருமிகு பமிலா வெங்கட்
செயற்குழு உறுப்பினர்

திருமிகு. அசோகன் தங்கராசு
இயக்குனர்

திருமிகு. ஜான்சிராணி பிரபாகரன்
இயக்குனர்

திருமிகு. ஜான் பிரிட்டோ
இயக்குனர்

திருமிகு. இரம்யா ரவீந்திரன்
இயக்குனர்

செல்வன். அமரன் கண்டியர்
(இளையோர்)
செயற்குழு உறுப்பினர்

செல்வி. யாமிகா இரமேஷ்
(இளையோர்)
செயற்குழு உறுப்பினர்

நான் சான் ஆண்டோனியோ தமிழ்ச் சங்கம் பேசுகிறேன்

அன்புள்ளங்களுக்கு வணக்கம்!.

நான் சான் ஆண்டோனியோ தமிழ்ச் சங்கம் பேசுகிறேன்.

முப்பது வயதை நெருங்கிக் கொண்டிருக்கும் நான், பேரவையின் 37 ஆவது தமிழ் விழாவில் இதுநாள்வரை காணாத மக்கள் பெருவெள்ள திருவிழாவினைக் கண்டு பேருவகை கொண்டு மிகவும் உற்சாகமாக இருக்கின்றேன்.

தமிழோசை ஊரெங்கும் மரபோசையாக முழங்கி நம் ஊருக்கே சென்று வந்த உணர்வுகளை அள்ளித் தருகிறது!

குளங்களும்,நதிகளுமாய் சுற்றி வந்த நான் இங்கும் வரலாற்றுச் சிறப்புமிக்க சான் ஆண்டோனியோ நதிக்கரையில் நடைபோட்டுக் கொண்டிருக்கிறேன். சென்னையை சகோதரி நகரமாய் கொண்டுள்ள நான் ஆனந்தமாய் அவளை அரவணைக்கின்றேன். ஊர் முழுவதும் பேர் சொல்லும் பல விடயங்கள் நிரம்பிய சுற்றுலாத்தலமான இவ்விடத்தில் தமிழுக்கான ஓர் இடமாக தரத்துடன் இருக்கின்றேன்.

சிறந்த நிர்வாகக் குழு அமைத்து நிதிநிலைமையை பாங்காய் வைத்து ஓர் குடும்பமாய் ஒற்றுமையுடன் நான் பெருவாழ்வு வாழ்கின்றேன்.

அனைத்து விழாக்களையும் நம் மக்களோடு மட்டுமின்றி ஸ்பானியர்களோடும் அமெரிக்கர்களோடும் பகிர்ந்து மகிழ்கின்றேன்.

ஒவ்வொரு வருடமும் புதுப்புது குடும்பங்கள் என்னைத் தேடி வருகின்றனர், குழந்தைகள் என் மேடையில் ஆடிப்பாடி மகிழ்கின்றனர். இளைஞர் அணியோ சக்கைபோடு போடுகின்றனர். ஆண்களும் பெண்களும் உற்சாகத்தோடு தன்னார்வலப் பணிகள் பல செய்து என்னை பெருமைப் படுத்துகின்றனர்!

அக்கம்பக்கம் மட்டுமின்றி வடமெரிக்கக் கண்டம் முழுவதுமே பேரும் புகழும் அடைந்து வருகிறேன் என்றால் அதற்கு எம்மக்களின் கடின உழைப்பே காரணம். அதற்கு என்றும் நன்றியுடன் தலைவணங்குவேன்.

என்னை மதித்து எங்கள் ஊரில் இத்தமிழ்விழாவினை கோலாலகமாய் நடத்துகின்ற பேரவை மக்களுக்கு மாபெரும் நன்றிகள் பல!

மக்களே! மீண்டும் சந்திப்போம், நன்றி வணக்கம்!

-இப்படிக்கு

சான் ஆண்டோனியோ தமிழ்ச் சங்கம்

சான் ஆண்டோனியோ செயற்குழு

திருமிகு.
செல்வகிரி அருணகிரி
தலைவர்

திருமிகு.
வாசுதேவன் நடராஜன்
தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்

திருமிகு.
துரை நடராஜன்
செயலாளர்

திருமிகு.
யுவராஜ் முனியன்
பொருளாளர்

திருமிகு.
வெங்கடேஷ் கண்டியர்
இயக்குனர் மக்கள் தொடர்பு

திருமிகு. வீலா ரமணன்
இயக்குனர் மொழியியல்
மற்றும் சமூக ஊடகம்

திருமிகு. ஆர்த்தி
இயக்குனர் விளையாட்டு
மற்றும் நலத்துறை

திருமிகு. வள்ளி
இயக்குனர்
இளைஞர் அணி

திருமிகு. பிரசன்னா
இயக்குனர் - விருந்தோம்பல்

திருமிகு.
கார்த்திகேயன் ரா.து
இயக்குனர் கலை மேலாண்மை

திருமிகு. திவ்யா
தொண்டு
மற்றும் நல்கை இயக்குநர்

திருமிகு. பிரீத்தா
நிர்வாகக் குழு

திருமிகு. பாரதி
நிர்வாகக் குழு

திருமிகு. ரகுராமன்
நிர்வாகக் குழு

திருமிகு. சதீஷ்
நிர்வாகக் குழு

திருமிகு. சிவசக்தி
நிர்வாகக் குழு

திருமிகு.
கார்த்திகேயன் சுப்பா
அறங்காவலர் குழு

திருமிகு.
குமார் வீரப்பன்
அறங்காவலர் குழு

திருமிகு.
விஜய் பார்த்தசாரதி
அறங்காவலர் குழு

திருமிகு.
மோகன் தாமோதரன்
கௌரவ நிர்வாகக் குழு

திருமிகு.
ராம் வெங்கட்ராம்
கௌரவ நிர்வாகக் குழு

திருமிகு.
சங்கர் செல்லக்கரை
கௌரவ நிர்வாகக் குழு

திருமிகு.
சுரேஷ் செல்வராசு
கௌரவ நிர்வாகக் குழு

முதன்மை ஆசிரியர், மலர்க் குழு

உரக்கச் சொல்
நான் தமிழனென்று!

நாகரிகத்தின் உச்சம் உணர்ந்த பூமியில் பிறந்து, திரைகடல் ஓடித் திரவியம் தேடி வந்து வாழும் இந்த பூமியில், பல முனைகளில் அறுசுவையும் தீஞ்சுவையும் தோய்த்தெடுத்த கொஞ்சுமொழித் தமிழுக்காக உழைக்கும் பெருமக்களையும், தன்னலமில்லா மனவோட்டம் கொண்டு உழைக்கும் அனைவரையும் ஒன்றிணைத்துக் கொண்டிருக்கும் பேரவைக் குழு உறுப்பினர்களையும், பரந்து விரிந்த உலகத்தில் வாழும் எனது தமிழ்ச் சொந்தங்கள் அனைவரையும் வாழ்த்தி வணங்குகிறேன்.

நடுங்கும் குளிர் நாடானாலும், கடுஞ்சுடும் பாலைநிலமானாலும் இளநீராய்க் குளிர்ந்த தேன் தமிழ் மொழி கேட்கையில் நா சுவைக்கின்றது. எங்கும் நம் மக்கள் நிறைந்த பேரண்டம் இது! உலகத்தின் மூலை முடுக்கெல்லாம் நம் தமிழ் மக்கள், தாய்மண்ணின் பசுமை நினைவுகளை நெஞ்சில் சுமந்தபடி!

அன்னையைக் கண்ட இளங்கன்று மடி தாவி ஓடுவது போல் அகமும் முகமும் மலர உறவு கொண்டு, நண்பர்களை அத்தை-மாமா, அண்ணன்- தங்கை, தாத்தா- பாட்டியென ஆழமான, அழுத்தமான, அற்புதமான, அழகான மற்றும் கனமான உறவுகளாக்கி தம் குழந்தைகளுக்குப் பண்பாடும் கலாச்சாரமும் புகட்ட தமிழ்ச் சங்கங்கள் அமைத்து அவர்கள் ஒற்றுமையை வளர்க்கின்றோம்.

தமிழ்க் குடும்பங்கள் எங்கு இணைந்தாலும் தமிழ்ப் பள்ளிகள் துவங்கி நம் தலைமுறைகள் ஆனந்தமாய் தமிழ் கற்றுக் கொள்ளும் அழகே அழகு! இதை தானே எதிர்பார்த்தோம்.

“தேமதுரத் தமிழோசை உலகெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும்” - பாரதியே, செய்து கொண்டிருக்கிறோம், மகிழ்வீர்களாக!

சமையல்கட்டில் ஒரு கால், கணினி அறையில் ஒரு கால், பிள்ளையின் குரலுக்கோர் கால் என பல கால்களும் கைகளும் கொண்டு சாதிக்கும் எத்தனையோ சாதனைப் பெண்களை அடையாளம் கண்டு அரங்கில் ஏற்றும் நம் பேரவையின் ஓர் அங்கமான இப்பேரவை மலரின் ஆசிரியராக இருக்கக் கிடைத்ததை, பெரும் பாக்கியமாகக் கருதி நன்றி கூறுகின்றேன் இந்நல்வாய்ப்பில்!

நமதருமை மலர்க் குழுவினரின் பல மாத பல மணிநேரக் கடின உழைப்பில் செவ்வனே செதுக்கப்பட்டுள்ளது இப்பேரவை மலர். ஒவ்வொருவரும் ஓர் இதழிதழாய் இணைந்தது தான் இம்மலர்!

இவ்விதழில் சமத்துவமும், தனித்துவமும் பலவகையில் கவிதைகளாக, கட்டுரைகளாக, கதைகளாக மிளிர்ந்து நிற்கின்றன. சமத்துவத்தின் மகத்துவம் பற்றியும், அதில் இத்தனை கூறுகளா என வியக்கும் படியும் அழகாய் வடித்திருக்கிறார்கள். இதனைத் தவிர பல்வேறு கருத்து மிகு படிப்பினைக் கட்டுரைகள் இதழ் உள்ளே இருக்கின்றன, படித்து மகிழுங்கள்! அனைத்துக் கவிஞர்களுக்கும், எழுத்தாளர்களுக்கும் மிக்க நன்றி!

அட்டைப்படத்தை சிறப்பாக்கிய மதுரையைச் சேர்ந்த பல விருதுகளை வென்ற 'கலைச் சுடர்மணி' திருமிகு.ரவி பேலெட் அவர்களுக்குப் பாராட்டுகளும் நன்றிகளும்! மனமுவந்து கொடை கொடுத்த வள்ளல்களுக்கு மாபெரும் நன்றிகள் பல!

எங்கள் தமிழ்ச் சங்கத்திற்கு இப்படியோர் விழா நடத்த வாய்ப்புக் கொடுத்த பேரவைக்கும், இதற்காக நாட்கணக்கில் உழைத்த தன்னார்வலப் பெருமக்களுக்கும் மிக்க நன்றி!

வாழ்த்துக் கடிதங்கள் அனுப்பி எங்களை உற்சாகப் படுத்திய பெருந்தகையோருக்கு நன்றி!

புலவர் மா.நன்னன் அவர்கள் தம் வாழ்வில் பெரியாரின் கொள்கைகளை முழுமையாகப் பின்பற்றி அந்நெறியிலிருந்து நழுவாது, வழுவாது இறுதி வரை வாழந்தவர்கள். பெரியாரின் கருத்துகளைத் திரட்டி பெரியாரின் கருத்துக் கனிகளை 48 முதற் பகுப்புகளாக 309 துணைப் பகுப்புகளாக 11 கிளைப்பகுப்புகளாக வகுத்திருக்கிறார். 4884 கருத்துக் கனிகள் அடங்கியுள்ள இந்நூலிலிருந்து கணிப் பொறியிலிருந்து கருத்துகளை எளிதில் பெற முடிவதைப் போல் பெரியாரின் கருத்துகளை எளிதாக அறிந்து கொள்ள முடிகிற வண்ணம் "பெரியார் கணினி" என்ற நூலைத் தொகுத்துள்ளார். மேலும் பெரியாரியல் வரிசையில் 19 நூல்கள், இவர் தாம் பெரியார் என்னும் வரலாற்று நூல் வரிசையில் 13 நூல்கள் பெரியாரைக் கேளுங்கள் என்ற நூல் ஆகியவையும் குறிப்பிடத்தக்கன.

பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனம் நடத்தும் திரு. கைலாசம் நினைவு அறக்கட்டளை தொடர் சொற்பொழிவாற்றி 1979-ஆம் ஆண்டிற்கான பெரியார் பேருரையாளர் எனும் உயரிய விருதைப் பெற்றார். அந்தப் பொழிவின் தொகுப்பு "ஒப்பற்ற சுயசிந்தனையாளர் பெரியார்" என்ற நூலாக வெளியிடப் பட்டுள்ளது.

"காலம் அல்லது மூலம்" என்ற அறிவியல் கருத்துகளைக் கொண்ட ஒரு தொகுப்பு நூல், "சும்மா விருக்க முடியவில்லை" எனும் சிந்தனைக் கொத்து என அவரது படைப்புகள் பகுத்தறிவுக் கருவுலமாகத் திகழ்கின்றன.

தன் உழைப்பால், கிடைத்த வாய்ப்புகளை மிகச் சரியாகப் பயன்படுத்திக் கொண்டு தமிழ் அறிஞராக, சீரிய பேராசிரியராக, பண்பாளராக, சான்றோராக, மானுடப் பற்றாளராக பகுத்தறிவு நெறியினின்றும் சற்றும் பிறழாதவராக செம்மாந்த வாழ்வு நிறைவாழ்வு வாழ்ந்தவர் புலவர் மா.நன்னன் அவர்கள்.

பெருங்கவிஞர் ஈரோடு தமிழன்பன் தமது கவிதையில் கூறியிருப்பதைப் போல

"குழந்தைகளோடு அவர் தமிழ்க் கிலுகிலுப்பை அசைக்கும் போதும்

அது தந்தை பெரியார் மடியைவிட்டு இறங்காது.

அந்த நாக்கின் அசைவு இன்றில்லை அந்த ஆசான் நன்னனும் இன்று இல்லை

அவரில்லை என்னும் அவலம் மட்டும் இன்றும் உள்ளது."

என அவர் வரலாறு முடிந்துவிடவில்லை.

தமிழ்நாட்டு முதலமைச்சரின் கூற்றுக்கிணங்க அவர் காலமானாலும் எழுத்தால் சிந்தனையால் செயலால் நன்னன் அவர்கள் வாழ்ந்தார், வாழ்கிறார், தொடர்ந்து வாழ்வார்.

தமிழைத் தமிழாக்குவோம்; தமிழைத் தமிழாகவே ஆள்வோம்; தமிழைத் தமிழாகவே வளர்ப்போம்!

சிறகடிக்கும் வானம்

மனிதன் தனியே தானாக தேடிச் செல்லாமல்
இயற்கையாய் தந்த போதி மரம் வானம்!

சற்று அமர்
உலகக் காற்றை சுவாசி
ஞானம் வளர்த்துக் கொள்
உயரம் பறக்க ஆசை கொள்,
தனியே அல்ல
ஏதோ ஒரு மதியிறுக்கப் பறவைக்கு கற்றுக்கொடு
“விடியாத வானம் என்று ஒன்றில்லை” என்று
இல்லையேல் செயற்கைச் சிறகை பொருத்து!

எந்தத் தாய்க்கும் தன் குழந்தை மட்டும்
தரையில் தத்தளிப்பது மகிழ்ச்சி அல்ல
எந்தத் தந்தைக்கும் தோள்களுக்கு மேல் வளர்ந்த
குழந்தையின் பாரம் வலி கொடுக்கும்

உன் சிறகினால் ஒருவரின் கண்ணீர்த் துடை
கூட்டமாக பறக்கும் பறவைகளுக்குத் தான் அழகு அதிகம்

கார்த்திக்
பாலசுப்பிரமணியன்

நீ சிறகடித்து பறக்கும் வானத்தில்
உன்னால் அந்த குழந்தைகளுக்கு
சிறகுக்குள் வானம் காணப்படும்!!!

வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையின்
37 ஆவது தமிழ் விழா சிறக்க வாழ்த்துகள்!

ELITE DENTAL
IMPLANTS COSMETICS AND FAMILY DENTISTRY

Dr. Mohan Raj Jaganathan
DDS BDS MPA

Dr. Veena Raja
DDS BDS MS PhD

4877 Fredericksburg Rd,
San Antonio, TX 78229
(210) 342-8251

1144 W Oaklawn Rd,
Pleasanton TX 78064
(830) 569-3888

www.sanantonio-dental.com
instagram.com/doctormohandds

சமத்துவம் தமிழின் தனித்துவம்!

நா.முத்துநிலவன் புதுக்கோட்டை

தமிழ் மொழியின் சமத்துவ மரபு

நாட்டில் வாழும் அனைத்து வகையான மதத்தினரும் கொண்டாடும்படியான இலக்கியங்களைக் கொண்ட மொழி ஜனநாயக மொழிதானே? அப்படியெனில் தமிழைக் காட்டிலும் ஜனநாயக மொழி வேறு இருப்பதாகத் தெரியவில்லை! ஆம்!

சமணத்திற்கு - சிந்தாமணி போன்ற பல இலக்கியங்கள்!

பவுத்தத்திற்கு - மணிமேகலை போன்ற பல இலக்கியங்கள்!

சைவத்திற்கு - தேவார திருவாசகங்கள் போன்ற பல இலக்கியங்கள்!

நா.முத்துநிலவன்

வைணவத்திற்கு - நாலாயிர திவ்வியப் பிரபந்தங்கள் போன்ற பல இலக்கியங்கள்!

கிறித்துவத்திற்கு - தேம்பாவணி, இரட்சணிய யாத்திரிகம் முதலான நூல்கள்!

இஸ்லாத்திற்கு - சீறாப்புராணம் தொடங்கி சிற்றிலக்கியங்கள் பல உள!

எதிர்நாயக மரபுக்கு - இராவண காவியம்

என இவ்வளவு மதங்களைப் பற்றிய இலக்கியங்கள் வேறு எந்த மொழியிலாவது இருக்கிறதா? வைணவ இலக்கியமான கம்ப ராமாயணத்தில் நூற்றுக்கு மேற்பட்ட இடங்களில் சைவ மதச் சிவனைப் புகழ்ந்த பாடல்கள் உள்ளன! "அரன் அதிகன் உலகளந்த அரி அதிகன் என்றுரைக்கும் அறிவிலோர்" என்று ஏதோ பக்திக்கு அப்பாற்பட்டுப் பாடுவது போலவே பாடியவர் கம்பர், கம்பநாட்டாழ்வார் என்பது வியக்கத் தக்கதல்லவா?

இந்த வேர்களின் விழுதாக, 20-ஆம் நூற்றாண்டின் இணையற்ற மகாகவி பாரதி, தனது புதிய ஆத்திசூடியின் காப்புச் செய்யுளில்

ஆத்தி சூடி, இளம்பிறை யணிந்து,
மோனத் திருக்கு முழுவெண் மேனியான்;
கருநிறங் கொண்டு பாற் கடல் மிசைக் கிடப்போன்;
முகமது நபிக்கு மறையருள் புரிந்தோன்;
ஏசுவின் தந்தை; எனப்பல மதத்தினர்
உருவகத் தாலே உணர்ந்துண ராது

பலவகை யாகப் பரவிடும் பரம்பொருள் ஒன்றே - என்பது முத்தாய்ப்பானது!

மொழி இலக்கியம் இப்படி எனில் சமூகமும்

சமத்துவ நோக்கிலானது என்பதைத் தனியாகச் சொல்லவும் வேண்டுமோ?

அரசனுக்கும் குடிமக்களுமான சமத்துவம்

சட்டமன்ற உறுப்பினரையோ, அமைச்சரையோ அல்லது நேராக அரசவைக்கே சென்று அரசனையே பார்த்து தனது குறைகளை ஒரு பெண்ணால் கூறமுடிந்ததாக நற்றிணை இலக்கியம் நவில்கிறது! 90, 400 எண்ணுள்ள பாடல்கள் இவற்றைக் கூறுகின்றன! இவற்றைப் பார்க்கும்போது, அரசனைச் சாதாரண மக்கள் சென்று காண்பது கடினமல்ல என்பதும் தெளிவாகிறது. இதுதானே அரசியல் சமத்துவம்?

கண்ணகியின் வழக்குரைக் காதை நமக்குத் தெரிந்ததுதானே? அரசனைப் பார்த்து வணக்கம்கூடச் சொல்லாமல் எடுத்த எடுப்பில் "தேரா மன்னா" எனச் சொன்ன திடீர்த் தாக்குதல் உலகப் புகழ்பெற்றதே! எளிய குரல்களை அரசன் கேட்க முடிந்த சமத்துவம் அடிப்படையான அரசியல் சமத்துவம் அல்லவா?

முதல் காப்பியமே குடிமக்கள் காப்பியம் எனும் குறிப்பு ஒன்றே போதும் மன்னரைக் காட்டிலும் மக்களுக்கு முக்கியத்துவம் தந்த அரசியல் சமத்துவம் கொண்டமொழி தமிழ் என்பதற்கு வேறு சான்று வேண்டுமோ?

முற்காலத்தில் "மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்" என்றிருந்த கருத்து மாறி, கம்பன் காலத்திலேயே "மக்கள்தாம் உயிர், மன்னன் உடம்புதான்" எனும் ஜனநாயகத் தெறிப்பு வந்துவிட்டதை "செயிர்தீர் உலகில் சென்று நின்றுவாழ் உயிரெலாம் உறைவதோர் உடம்பும் ஆயினான்" என்று மன்னனை குறிப்பிடுவதிலிருந்து புரிகிறதே!

"அவனை அவர் பாடிய" அதிகார சமத்துவ மரபு

இப்போது "சங்க இலக்கியம்" என வழங்கப்படும் சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளின் முன்னர் எழுதப்பட்ட எட்டுத் தொகை, பத்துப்பாட்டு எனப்பட்ட பதினெண் மேற்கணக்கு நூல்கள் எனும் பதினெட்டு நூல்களையும், சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர்த் தொகுத்தார்கள். பாடலின் பொருளை விளங்க யாரை யார் பாடியது, பாடிய சூழல் என்ன, என வரும் அடிக்குறிப்பு ஒவ்வொரு பாட்டுக்கும் உண்டு! அந்தக் குறிப்புகளில் சில நுட்பம் உண்டு.

ஒருபாடலை எழுதியவரே அடுத்த பாடலை அதே மன்னரைப் பற்றிப் பாடியிருந்தால் அந்தக் குறிப்பு இப்படி இருக்கிறது "அவனை அவர் பாடியது" அதாவது அதே அரசனை அதே புலவர் பாடியது என்பது இதன் பொருள்!

குறளின் சமத்துவக் குரல், இட ஒதுக்கீடு!

இப்படி ஒரு சிறுதலைப்பைப் பார்த்ததும் பலர் துணுக்குறுவர் ஆனால் உண்மை!

வள்ளுவர் சில குறள்களில் தரும் தனித்த அழுத்தத்தைக் கவனியுங்கள்

"உதவி வரைத்தன்று உதவி உதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து" (105)

"தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு" (212)

"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை" (322)

இவற்றை ஆழ்ந்து கவனித்தால் பொத்தாம் பொதுவாகச் செய்வதல்ல உதவி, யாருக்குத் தேவையோ அவர்களுக்கு மட்டும் செய்! என்னும் தெளிவான குரல் கேட்கிறதல்லவா? இதுதானே இட ஒதுக்கீடு? இதுதானே சமூக நீதி? இது தான் குறளின் சமத்துவக் குரல்!

சமத்துவ சமூக, சமயச் சார்பற்ற பழந்தமிழ் மரபு

சங்க இலக்கியம் முழுவதுமே நடந்த செய்திகளின் தொகுப்பா? கற்பனை ஊரின் கதைகளா? எனில் இரண்டும் கலந்துதான் இருக்க வேண்டும்! பாடியோர், பாடப்பட்ட அரசர் பெயர்களும் வகைகளும் அரிதாகத் தொகுக்கப்பட்டுள்ளன. (சங்க இலக்கிய ஆராய்ச்சி அட்டவணை - சென்னைப் பல்கலைக்கழக வெளியீடு-1973, பக்கம்-408)

சங்க இலக்கியத்தில் உள்ள பாடல்களில் மூவேந்தரைப் பற்றிய பாடல்களைக் காட்டிலும், சாதாரண மக்களை, அல்லது மக்கள் குழுவின் சாதாரணத் தலைவர்களை பாடிய பாடல்களே அதிகமுள்ளன. அதோடு, அந்த சாதாரண மக்களின் சிறு தெய்வங்களே நிறுவனமான பெருந்தெய்வங்களை விட அதிகமாகப் பாடப்பட்டுள்ளன என்பதும் மிகுந்த கவனத்திற்குரியது.

இங்கிலாந்து நாட்டின் ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக்கழகப் பேராசிரியர் ஜான் பி.மார் என்பார், "சங்க இலக்கியங்களை 'மதச்சார்பற்ற' இலக்கியம் என்றும், இதன் தொடர்ச்சியை அன்றைய

பிற பகுதி இந்திய இலக்கியங்களிலோ, பிற்காலத் தமிழ் இலக்கியங்களிலோ கூடக் காண முடியவில்லை“ என்று புகழ்கிறார். (‘A CULTURAL HISTORY OF INDIA’ - Edited by A.L.BASHAM, CLARENDON PRESS, OXFORD-1975-Page-36) இவர் கூறும் சான்றின் படி, சிவன் விஷ்ணு போன்ற பெருந்தெய்வங்களை விடவும் சாத்தன் சாத்தி முதலான சாதாரண கிராமக் கோவிலின் சாமிகளே அதிகம் பாடப்பட்ட, வழிபடப்பட்ட சங்க இலக்கிய “மதச்சார்பற்ற சமத்துவ மரபு“ இன்றும் தேவைப்படுகிறது அல்லவா?

சமயச் சார்புடன் எழுதப்பட்ட நூல்களைக் காட்டிலும்,

“பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்“ என்ற வள்ளுவர், மற்ற சமயங்களைத் தூற்றாமல் சமமாகப் பாவித்து எழுதிய இளங்கோவடிகள், கம்பர் போன்றோரே, சமயச் சார்புடைய ஆழ்வார், நாயன்மாரை விட அதிகம் பேசப்படுகின்றனர் என்பது முக்கியமான செய்தி.

இன்றைக்கும் அமைதியான மதச்சார்பற்ற வாழ்க்கை வாழ, நமது சங்ககால சமத்துவத் தமிழ் மரபின் தொடர்ச்சி தேவைப்படுகிறது. இன்னும் கோக்கவேண்டிய சமத்துவத் தமிழ் மரபின் கண்ணிகள் பலஉள:

1. தாவரத்துக்கும் ஓரறிவு உண்டு என அறிவியல் பாடும் தொல்காப்பியர்.
2. யாதும் ஊரே யாவரும் கேளிர் - சர்வதேச மனிதனைப் பாடும் பூங்குன்றன்.
3. யாயும் யாயும் யாரா கியரோ - சாதி மறந்த சமத்துவக் குறுந்தொகை.
4. மனத்துக் கண் மாசிலனாதலே அறம் என்று புதிய அறம்கண்ட குறள்.
5. ஒன்றே குலம் ஒருவனே தேவன் - மதம் கடந்த மனிதர் திருமூலர்.
6. மானுடம் வென்றதம்மா - மனிதக் குல வெற்றியைப் பாடும் கம்பன்.
7. வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடி - அன்பில் முதிர்ந்த வள்ளலார்.
8. தையலை உயர்வு செய் - வேதம் புதுமை செய்த பாரதி.
9. உலகம் உண்ண உண் உடுத்த உடு - என்ற பாரதிதாசன்.
10. சந்திரனைத் தொட்டதின்று மனிதசக்தி - பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்.

-இவற்றின் தொடர்ச்சியே நாம் தொடர வேண்டிய சமத்துவத் தமிழ் மரபு!

செ.இராசு (2 சனவரி 1938 – 9 ஆகத்து 2023)

புலவர் செ. இராசு தமிழகக் கல்வெட்டறிஞரும், தொல்லியலாளரும், நூலாசிரியரும் ஆவார்.

கல்வெட்டு, செப்wபேடு, ஓலைச்சுவடி தொல்லியல் எனப் பல்வகைப்பட்ட வரலாற்று ஆதாரங்களையும் ஆவணங்களையும் ஆய்வுசெய்யும் திறன் கொண்ட, மிகவும் அரிதான வரலாற்றாசிரியர் செ.இராசு, கொங்குநாட்டின் விரிவான காலநிரல் ஒன்றை தனிநபராகவே எழுதி உள்ளார். அவர் எழுதிய “ஈரோடு மாவட்ட வரலாறு” (2007), ஆங்கிலேயர் காலத்தில் வெளிவந்த மாவட்ட விவரச் சுவடிகளுக்கு இணையாக எழுதப்பட்டது

கொங்குப் பகுதிக்கும் சமணத்துக்கும் நெருங்கிய பிணைப்பு உண்டு. அப்பகுதியில் உள்ள சமணர் குகைகள், கோயில்கள், சிற்பங்கள், கல்வெட்டுகள், செப்பேடுகள், சமணர்களின் தமிழ்ப் பணிகள் என மிக விரிவான அவர் எழுதிய ஆராய்ச்சி நூலான ‘கொங்கும் சமணமும்’ அமைந்துள்ளது. “காலிங்கராயன் கால்வாய்’ என்கிற நூலை உருவாக்கவும் செ.இராசு பல ஆண்டுகள் உழைத்திருக்கிறார்.

இவர் எழுதிய “தஞ்சை மராட்டியர் செப்பேடுகள்” எனும் நூல் தமிழ் வளர்ச்சித் துறையின் 1983 ஆம் ஆண்டுக்கான சிறந்த நூல்களில் “வரலாறு, தொல்பொருளியல் “வகைப்பாட்டில் முதல் பரிசு பெற்றிருக்கிறது. இவரது அயரா உழைப்புக்கு கல்வெட்டறிஞர், பேரூராதீனப் புலவர், கல்வெட்டியல் கலைச்செம்மல், திருப்பணிச்செம்மல் என, பல்வேறு தமிழ் அமைப்புகள் இவருக்குச் சிறப்புப் பட்டங்களை வழங்கிச் சிறப்பித்துள்ளது.

வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையின்

37ஆவது தமிழ் விழா சிறக்க வாழ்த்துகள்!

மாதவி, கௌசி, முரளி, ஜீவன் சுப்ரமணியம்

inTEC

தமிழர் தொன்மை ஆய்வாளர் ஓரிசாபாலு

த.ரெ. தமிழ்மணி, திருவாரூர்

தமிழ்த்தாய் தமது தொன்மை அடையாளங்களைக் காலத் திருவிழாவில் தொலைத்து விட்டதாகக் கருதி என்றுமே கதறி அழுததில்லை. இயற்கையின் சுருக்குப் பையில் பாதுகாப்பாக இருப்பதறிந்து சீரிளமைத் திறத்தோடு பீடுநடை போட்டே வாழ்ந்து வந்தாள். மண்ணுக்குள் வைத்திருந்த வற்றை அவள் பிள்ளைகள் அவ்வப்போது எடுத்து வருவதைக் கண்டு இன்முகம் காட்டினாள். ஆயினும் கடலில் வைத்திருந்தவற்றைக் கண்டுபிடித்துக் கொண்டு வர ஆளில்லையே என்று ஏக்கம் அவளுக்குள் இருந்து வந்தது. அந்த ஏக்கம் தீர்க்க வந்த பிள்ளைகளுள் ஒருவர் தாம்ஓரிசாபாலுஎன்றழைக்கப்படும் சிவ பாலசுப்பிரமணி அவர்கள். அவரின் வாழ்வு ஒரு குளம்; ஆய்வுக்களமோ கடல். அவற்றில் ஒரு துளியை இங்குக் காணலாம்.

த.ரெ. தமிழ்மணி,
திருவாரூர்

"விழுப்புரம் காட்டான் வர்றான்" என்று உடன்பயிலும் மாணவர்கள் ஓரிசா பாலுவைக் கிண்டலடிக்க அவரோ தம் பாட்டியிடம் முறையிட்டார். அதற்குப் பாட்டி சொன்னார், " நீ பிறந்தது விழுப்புரம் இல்லடா! உறையூர் னு சொல்லு! முற்காலச் சோழர்கள் தங்களோட படைக் கருவிகளைக் கூர் தீட்டிய தலைநகரம்னு சொல்லு" என்று தெம்பூட்டினார். வரலாற்றுப் பெருமிதம் வாய்ந்த மண்ணில் பிறந்த அவர் தாம் பிற்காலத்தில் தன்னுயிரை அடமானம் வைத்துக் தமிழ் வரலாற்றை மீட்கக் களமாடினார்.

உறையூரில் பிறந்தாலும் தந்தை வங்கியில் பணிபுரிந்ததால் அவரின் பணிமாறுதலுக்கேற்ப குடும்பம் விழுப்புரம், புதுவை, நெய்வேலி, சென்னை போன்ற ஊர்களுக்குப் புலம்பெயர நேரிட்டது. ஆனால் ஓரிசா பாலுவின் கல்வித் தேடலில் எந்தத் தடைக்கல்லும் இடையூறு ஏற்படவில்லை. இளம் அறிவியல், பயன்பாட்டு இயக்கவியல், இந்திய அளவிலான பொறியியல் தேர்வில் வெற்றி எனத் தடம் பதித்தார். பள்ளி படிப்பு வரை தமிழிலேயே பயின்றார். பிற்காலத்தில் "தமிழில் படித்ததாலேயே என்னால் ஆய்வுலகில் வெற்றி பெற முடிந்தது." என நேர்காணல்களில் கூறும் போதெல்லாம் அவர் கண்களில் பெருமிதத்தைக் காண முடிந்தது. ஓரிசாவில் பணிபுரிந்து இந்தியாவிற்குப் பெருமை சேர்த்தார்.

செம்புலப் பெயல் நீர் போல, இராசேசுவரி என்னும் அன்புடை நெஞ்சம் கலந்தார் ஓரிசா பாலு. அவர்களுக்கு வெங்கடேசு, வீணா என்ற இரு காதல் பரிசுகள் பிறந்தன.

சுரங்கம் மற்றும் வெளிநாட்டு கருவிகளைப் பழுது பார்க்கும் நிறுவனத்தில் பொறியாளர்; உயிரி மருந்தியல், மாற்று எரிபொருள் துறையில் இயக்குநர் எனப் புலம்பெயர் மண்ணில் பொருள் தேடல் நடத்தும் போதே ஆய்வுத் தேடலும் அவருக்கு அருகே வந்தது.

ஓரிசாவில் தென்னிந்தியச் சங்கம் என்று ஒன்று இருந்தது. அது தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் பேசும் மக்களின் கூட்டமைப்பு. தமிழின் தனித்தன்மையை வெளிப்படுத்த இந்த அமைப்பு போதாதென்று கருதினார் ஓரிசா பாலு. நண்பர்களை ஒருங்கிணைத்து புவனேசுவர் தமிழ்ச் சங்கத்தைத் தொடங்கினார். பின்னாளில் அதன் செயலராகவும் ஆனார். அச்சங்கம் வெளியிட்ட மலரில் சுந்தரராசன் இ.ஆ.ப. கலிங்கத்திற்கும் தமிழ்நாட்டிற்கும் இடையேயுள்ள தொடர்பைக் குறித்து ஒரு கட்டுரை எழுதி இருந்தார். அதில், "இதைப் பற்றி யாரேனும் ஆய்வு நடத்தினால் கூடுதல் உண்மை தெரியவரும்" என்று குறிப்பிட்டிருந்தது. "இதை நாம் ஏன் ஆராயக்கூடாது?" என்ற கேள்வி ஓரிசா பாலுவின் ஆய்வுத் தேடலைத் துலங்கச் செய்தது. பல உண்மைகள் வெளிப்பட்டன. இதனால் பாலசுப்பிரமணி என்ற இயற்பெயர் கொண்ட இவர், அறிஞர்களால் முதலில் கலிங்காபாலு என்றும், பிறகு ஓரிசா பாலு என்றும் அழைக்கப்பட்டார். அவற்றில் ஓரிசா பாலு என்னும் பெயர் இறுதிவரை நிலைத்து விட்டது.

ஓரிசாவின் பிராமணி ஆற்றங்கரையில் 35 - 40 அடி நீளமுள்ள அனந்த சயனப் பெருமாள் சிலையைச் செதுக்கியது தமிழ்நாட்டில் இருந்து வந்தவர்கள் எனக் கண்டறிந்தார். முதலாம் நந்திவர்மன் காலத்தில் கொங்கு நாட்டைச் சேர்ந்த தமிழ்க் குறுநில மன்னன் தன் மகளை ஓரிய மன்னனுக்கு மணமுடித்திருந்த செய்தி வியப்புட்டியது. கலிங்க மன்னன் காரவேலன் கல்வெட்டில் "த்ரமிள சங்க மாத்யத்தை (த்ரமிள எனப்படும் தமிழ் தேசத்தை) பற்றிய குறிப்புகளும் கந்தா என்னும் பழங்குடியைச் சேர்ந்தவன் கார வேலன் என்ற செய்தியும் தமிழகத்திற்கும் கலிங்கத்திற்கும் உள்ள தொடர்பைப் பறைசாற்றின. இவை யாவும் ஓரிசா பாலுவின் ஆய்வுக்கு வெளிச்சம் பாய்ச்சின. இன்றைக்கும் ஓரிசாவின் பல பகுதிகளில் கலிங்கப்பட்டினம், வணிகப்பட்டினம், மாணிக்கப்பட்டினம், தமரா, பாலூர் எனப் பல ஊர்ப்

பெயர்கள் தமிழாக இருப்பதைக் குறிப்பிட்டு வியக்கிறார். இப்படி ஓரிசா குறித்து ஆய்ந்தவர், ஆமைகள் குறித்த ஆய்விற்கு வந்தது தற்செயலானது.

ஆமையின் இடப்பெயர்வை அறிய அதன் முதுகில் கருவி பொருத்தப்படும். அதில் ஒரு ஆமைக்குப் பொருத்தப்பட்டிருந்த கருவி பழுதானது. அதைச் சரி செய்ய அழைக்கப்பட்ட ஓரிசா பாலுவிற்கு ஆமைகள் மீது பார்வை விழுகிறது. "ஆமைகள் எங்கிருந்து எப்படி ஏன் கடற்கரைக்கு வருகின்றன எப்படி போகின்றன? என்பனவற்றை ஆராய உந்துதலாயிற்று.

தாய் முட்டையிட்ட கடற்கரையில்தான், குஞ்சுகள் வளர்ந்து தாயான பின் முட்டையிட வரும். இது, பிள்ளைப் பேற்றிற்காகத் தாய் வீட்டிற்கு வரும் தமிழ்ப் பெண்களின் மரபைப் போன்று இருப்பதாகத் தொடர்புபடுத்தும் ஓரிசா பாலு, ஆமைவழிப்பாதை என்ற ஒன்றைக் கண்டறிகிறார். ஆர்.எஃப்.ஐ.டி என்ற செயற்கைக்கோள் மூலம் ஆய்ந்த போது ஆமைகள் குறுகிய காலத்தில் பல்லாயிரம் கல் தொலைவு கடந்து வந்திருப்பதை அறிய முடிந்தது. ஒரு நாளைக்கு 85 கிலோமீட்டர் தொலைவே நீந்திக் கடக்க முடிந்த ஆமைகள், சில நாட்களில் பல்லாயிரம் மைல்களைக் கடந்து எப்படி வந்தது என ஆராய்ந்த போது தான் கடல் நீரோட்டத்தில் வந்ததைக் கண்டுபிடிக்க முடிந்ததாக ஓரிசா பாலு குறிப்பிடுகிறார்.

ஆமைகள் கடல் நீரோட்டத்தில் மிதந்தபடியே விரைவாக நெடுந்தொலைவைக் கடந்து விடுகின்றன.



அவை பர்மா, மலேசியா, இந்தோனேசியா, ஆசுதிரேலியா, இரசியா, மெக்சிகோ எனப் பல நாடுகளின் கடற்கரை வழியே பயணப்பட்டது கண்டறியப்பட்டது.

ஆமைகள் சென்ற வழிகள் அனைத்திலும் துறைமுகங்கள் இருந்தன. அவற்றில் பல, தமிழ்ப் பெயர்களுடனும், தமிழ்ப் பண்பாட்டுத் தொடர்புடனும் விளங்கின. பர்மாவில் தமிழா, சோழவன்; பசிபிக் பகுதியில் நான்மாடல்; குமரி, மெக்சிகோவில் தமிழி, சோழா எனத் தமிழ்ப் பெயர்களாகவே உள்ளன.

ஆமைகள் பாதையில் துறைமுகங்கள், தமிழ், தமிழர் அடையாளங்கள் இருப்பது மட்டுமல்ல; அப்பாதையைப் பயன்படுத்தியதற்குச் சான்றாகப் பழைய நிகழ்வொன்றையும் குறிப்பிடுகிறார். பர்மாவில் வடகிழக்குப் பருவக்காற்று காலத்தில், முழுநிலா நாளன்று, ஐராவதி ஆற்றங்கரையிலிருந்து ஆமைகள் கடலுக்குள் செல்லும். அந்நேரத்தில் தேக்கு மரங்களை அடையாளமிட்டுக் கடலில் போட்டு விடுவார்கள். அவை 3000 கிலோ மீட்டர் மிதந்து நாகப்பட்டினம் முதல் தனுசுகோடி வரை வந்து சேர்ந்து விடும். மரம் அனுப்பப்பட்ட தகவலைப் புறாக்கள் மூலம் ஓலைச்சுவடியில் கட்டி அனுப்புவார்கள். கட்டாக், இராசமுந்திரி போன்ற இடங்களில் வந்திறங்கும் அந்தப் புறாக்களிடமிருந்து தகவலைப் பெற்று வேறு புறாக்கள் மூலம் தமிழகத்திற்கு அனுப்புவர். அவை உரியவர்களுக்குச் சென்று சேர்ந்த பின் அம்மரங்களை யானை மீது ஏற்றிக் கொண்டுவந்து சேர்ப்பர். இக்குறிப்பின் மூலம் தமிழர்களின் ஆமைப்பாதை பயன்பாடு உறுதியாகிறது. யானைகளுக்கு எப்படி வலசை போகும் பாதைகள் இருக்கிறதோ, அப்படியே ஆமைகளுக்கும் இருக்கிறது. அதன் வழியாகவே பழந்தமிழன் உலகம் முழுவதும் பயணப்பட்டு இருக்கிறான் எனச் சான்றுகள் மூலம் நிறுவியுள்ளார்.

குமரிக்கண்டம் என்பது பொய்களின் அடித்தளத்தில் எழுப்பப்பட்ட மாளிகையன்று. இலக்கியத் தரவுகளாலும், தொல்லியல் எச்சங்களாலும் மெய்ப்பிக்கப்பட்ட, கடலுள் மூழ்கிய பெருநிலப்பரப்பு. இது குறித்த குறிப்புகள் தமிழ் இலக்கியப் பரப்பில் விரவிக் கிடக்கின்றன.

“செந்நீர் பசும்பொன் வயிரியர்க் கீத்த
முந்நீர் விழாவின் நெடியோன்
நன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே”

என்று முதற்சங்கத் தென்மதுரையைத் தன் கரையில் கொண்டிருந்த குமரிநாட்டு பஃறுளி ஆற்றையும், அக்காலத்துப் பாண்டிய அரசையும் பாடியுள்ளார் நெட்டிமையார்.

“பஃறுளி ஆற்றுடன் பன்மலை அடுக்கத்து
குமரிக்கோடும் கொடுங்கடல் கொள்ள”

எனக் கொடுங்கடல் கொண்டதைச் சிலப்பதிகாரம் அறியத் தருகிறது. இவை குறித்து ஓரிசா பாலு, “உலகத்திலேயே தொல்லியலுக்குத் தரவு தருகிற இடமாகத் தமிழ் இலக்கியம் மட்டுமே விளங்குகிறது” எனப் பெருமிதம் கொள்கிறார்.

அரிக்கமேடு கடலுக்குள் 16 கிலோமீட்டர் தொலைவில், 40 மீட்டர் ஆழத்தில், 5 கிலோமீட்டர் நீளமுள்ள மதிற்சுவரைக் கண்டறிந்தார். அது சங்க காலத்திற்கு முற்பட்ட செம்பராங்கல் பாறைகளால் ஆன கட்டடம். சிறுபாணாற்றுப்படை குறிப்பிடும் எயிற்பட்டினம் அது என்று ஆய்ந்து வெளிப் படுத்தினார். பூம்புகாரில் 5 கிலோமீட்டர் தொலைவில், 23 மீட்டர் ஆழத்தில் கண்டறியப்பட்ட கடலுக்குள் மூழ்கி இருந்த சக்கரவாளக் கோட்டத்தின் காலத்தைக் கிரகாம் ஆங்காங் கிமு 11,500 என்கிறார் என்றால், 16 கிலோமீட்டர் தொலைவில், 40 மீட்டர் ஆழத்தில் கண்டறியப்பட்ட எயிற்பட்டினத்தின் காலத்தை என்னவென்று கணிப்பது என்று ஒப்பிட்டு வியக்கிறார்.

மடகாசுகர் தீவு நாட்டில் இன்றும் ஏறுதழுவுதல் நடைபெற்று வருகிறது; மணக்கரை என்ற ஊரில் ஆற்று மணலில் தங்கம் எடுக்கிறார்கள்; சாம்பவான் என்னும் ஊர் பெயர் தமிழில் இருக்கிறது; தமிழ்நாட்டில் இருந்து 50,000 கிலோ மீட்டர் தொலைவில் எப்படி மரபு பரவி இருக்கிறது? இலட்சத்தீவினை "முந்நீர் பழந்தீவு பன்னீராயிரம்" என சோழர் காலக் கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. "கடலில் மூழ்கிய குமரிக்கண்டத்தைக் கடலில் தான் தேட வேண்டும். கரையில் தேடினால் எப்படிக் கிடைக்கும்?" என்ற கேள்வியை முன்வைத்து இவர் ஆழ்கடல் இறங்கி அள்ளி வந்தவை ஏராளம்.

"குமரிக்கண்ட ஆய்வை அரசு மேற்கொள்ள வேண்டும்" என்று பழனியைச் சேர்ந்த நாராயணமூர்த்தி என்பவர் தொடர்ந்த வழக்கில் உயர் நீதிமன்றம், ஓரிசா பாலுவை அறிவுரையாளராகச் சேர்த்து உத்தரவிட்டது. குமரிக்கடலில் 5000 கிலோ மீட்டர் வரை தமிழர்கள் வாழ்ந்ததற்கான தடயங்கள் கிடைத்திருக்கின்றன.

குமரிக்கண்டம் உலகை இணைத்த இடம். "கேட்வே ஆஃப் இந்தியா" என்று உலகத் தொடர்பில் குமரிக்கண்டத்தின் முதன்மையைப் பறைசாற்றுகிறார்.

தம் வாழ்நாளில் பெரும்பகுதியை ஆழ்கடல் ஆய்வில் செலவிட்டதால் இவரைக் கடல்சார் ஆய்வாளர் என்கிறார்கள். அவரைக் கடல்சார் ஆய்வாளர் என்று குறுக்கத் தேவையில்லை. அவர் விண்ணிலிருந்தும், மண்ணிலிருந்தும், கடலிலிருந்தும், தமிழர் தொன்மையும் பரவலையும் ஆராய்ந்து "தமிழ் உலக மொழி" என மெய்ப்பித்துள்ளார். எனவே ஓரிசா பாலுவைத் "தமிழர் தொன்மை ஆய்வாளர்" என்று அழைப்பதே பொருத்தமானதாகும். அவர் "தென்புலத்தார் ஐயை (AIYAI)" என்ற உலகத் தமிழ்க் குழுக்களை உருவாக்கி, அரசு சாராத் தன் பொருளியலில் சாகும் வரை ஆய்வை மேற்கொண்டு வந்தார். அதற்காக அவர் எதிர்கொண்ட இன்னல்களும் ஒடுக்குமுறையும் ஏராளம். புற்றுநோயால் நாவறுக்கப்பட்டும் தான் கண்டறிந்த உண்மைகளைப் பேசிக்கொண்டே இருந்தார். குமரிக்கண்ட ஆய்வைத் தொய்வின்றித் தொடரச் செய்வதே ஓய்வறியா ஓரிசா பாலுவுக்கும் தமிழுக்கும் நாம் செய்யும் கைம்மாறு ஆகும்.

FlyHigh Technologies

HEMANTH SAMBASIVAM
Founder and CEO

Our Products and Services

- Manufacturing Intelligence (MOM, MES, WMS,ERP)
- End to End Digitization
- Robotics (AMR, AGV, Forklifts, Service Robots)
- PLM
- Custom ERP Implementation
- Project Mangement
- Quality Management System

Contact Details
910-584-9463
hsam@flyhightek.com

Website
www.flyhightek.com
Dallas, Texas - USA

திருக்குறள் காட்டும் சமத்துவம்

தமிழ்-கொரிய, தமிழ்-சுமேரிய, தமிழ்-சீன பண்டைய தொடர்புகள், கோவில் குறியீடுகள், கோலங்கள் பற்றிய ஆய்வாளர்)

சமத்துவம் என்பது சமநிலையைக் குறிக்கும். காலம் காலமாய் ஆண் பெண், மேலோர் கீழோர், கற்றவர் கல்லாதவர், நல்லவர் தீயவர், அன்புடையார் அன்பிலார், செய்பவர் செய்யாதவர் என்ற பற்பல முரண்களுக்கு இடையே சமநிலையைப் பற்றி கூறியவர்கள் பலர். திருக்குறள் காட்டும் சமத்துவம் என்ற தலைப்பில் பல ஆண்டுகளாய் பல்வேறு அறிஞர்கள் பல்வேறு கருத்துக் களை முன்வைத்துள்ளார்கள். இக்கட்டுரை அத்தகையோரின் கருத்துக்களைத் தொகுத்து வழங்கும்.

முனைவர் சித்ரா

அறிஞர்களின் கூற்றுப்படி அந்நாடு இந்நாடு என்றன்றி எந்நாட்டிற்கும் அக்கால இக்காலங்களுக்கு மட்டுமேயன்றி எக்காலத்திற்கும் அச்சமயம் இச்சமயம் என்றன்றி எச்சமயத்திற்கும் அக்குலம் இக்குலம் என்றன்றி எக்குலத்தினருக்கும் அத்துறை இத்துறை என்றன்றி எத்துறைக்கும் அச்சூழல் இச்சூழல் என்றன்றி எச்சூழலுக்கும் ஏற்ப உலகப் பொதுமறையாம் திருக்குறளைத் தந்தவர் திருவள்ளுவர்(1) என்றும் "எந்த நோக்கிலிருந்து பார்த்தாலும் அந்நோக்கத்திற்குத் தகுந்த போக்கையும் எந்த கேள்வியைக் கேட்டாலும் அக்கேள்விக்குத் தகுந்த பதிலையும் எந்த சிக்கலைக் கூறினாலும் அச்சிக்கலுக்குத் தகுந்த தீர்வையும் தரவல்ல அமுதசுரபி திருக்குறள்(2)என்றும் குறிப்பிடுகிறார்கள் அறிஞர்கள்.

"வள்ளுவர் குறளில் சொல்லின் வன்மை பற்றிப் பேசுவார். ஆனால் எந்த மொழியின் பெயரையும் தம் தாய் மொழியான தமிழ் உட்படக் குறிப்பிட மாட்டார். நாடு பற்றிப் பேசுவார். ஆனால் எந்த நாட்டின் பெயரையும் குறிப்பிட மாட்டார். நீரைப் பற்றிப் பேசுவார். நதி வளத்தின் தேவை பற்றிப் பேசுவார். ஆனால் எந்த நதியின் பெயரையும் குறிப்பிட மாட்டார். அரசு, அமைச்சு, ஆட்சி பற்றிப் பேசுவார். நாடு பற்றிய பெயரோ குறளில் இடம் பெறாது. பேசுவது அனைத்தும் பொதுவாகவே கூறப்படுகிறது" (3), "மேலும் குறள் நூலில் எந்தச் சமய கருத்தோ சாதி குறிப்போ குலத்தைப் பற்றிய அடையாளமோ அணுவளவும் இல்லை"(4) என்ற அறிஞர்களின் கருத்துப்படி திருக்குறள் பல கருத்துக்களை நடுவு நிலைமையுடன் சமநிலையுடன் கூறுவதால் இந்நூலைச் சமத்துவ நூல் என்றும் கூட குறிக்கலாம்.

மக்கள், சமூகம் என்று பேசப்படும் போது சமத்துவம் என்ற சொல்லும் பேசப்படும். ஏனென்றால்

உலகில் பற்பல உயிர்களை அதனதன் சிறப்புகளுடன் இயற்கை உருவாக்கியுள்ளது. அதில் பற்பல முரண்களும் அமைக்கப்பட்டுள்ளன. அந்த முரண்கள் தீமை பயக்காத வகையில் அனைத்து உயிர்களும் சம நிலையில் இருப்பது உலகிற்கு நன்மை பயக்கும் என்ற விழுமியத்தால், பல அறிஞர்கள் சமத்துவம் பற்றிக் குறிப்பிடுவர்.

திருவள்ளுவர் கூறும் சமத்துவம் என்று கூறியதுமே அனைவரது நினைவிற்கும் வரும் குறள்

பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான் (குறள் 972)

"பிறப்பினால் எவருக்கும் பெருமை இல்லை, அவர்கள் சிறப்புற வேண்டுமெனில் நல்ல செயல்களில் ஈடுபட வேண்டும்; நன்மை செய்பவரே உயர்ந்த குலத்தினர், தீமை செய்பவரே என்றும் தாழ்ந்த குலத்தினர் ஆவர் என்று முக்காலமும் உணர்ந்த வள்ளுவர் விளக்குகிறார். மதங்கள் மனதை நெறிப் படுத்தவே மனிதத்தை மதங்கள் மேன்மைப்படுத்து கின்றன. அதற்கு வள்ளுவம் அற நூலாய் மத வேறுபாடு இன்றி அனைத்து மக்களுக்கும் வழிகாட்டுகிறது," (5) என்பார் ஓர் அறிஞர்.

"எல்லா மக்களும் உயிர்களும் பிறப்பால் ஒப்பானவையே, இருப்பினும் அவை சிறப்பால் வேறுபடுவதற்குக் காரணம் அவரவர்கள் செய்யும் தொழில் வேறுபாடுகளேயாகும்" என்று பரிமேலழகரும் பிறரும் கூறுவதாய் ஓர் அறிஞர் கூறுவார் (6). அந்த அறிஞர் பற்பல எடுத்துக்காட்டுகளைக் கூறி, "செய்தொழில் வேற்றுமையான்" எனும் குறள் தொடரை, "தொழில் செய் வேற்றுமையான்" என மாற்றி பொருள் கொள்வதே மெய்ப்பொருளாகவும், வள்ளுவன் படைக்கும் சாதி பேதமற்ற சமத்துவ சமுதாயத்துக்கு அரண் செய்வதாகவும் அமையும் என்று கூறுவார்(7). உயிரினங்களில் எந்த ஏற்ற தாழ்வும் கிடையாது. சாதி, மதம், இனம், மொழி பாகுபாடுகள் அற்ற மானிட சமுதாயமே மகத்தான சமுதாயம் என்பதை ஆணித்தரமாய் வலியுறுத்துகிறார் வள்ளுவர் என்பார் அறிஞர். திருக்குறள் நீதி நெறியோடு சார்ந்த அறத்தின் அடிப்படையில் எந்தவித சாதி சமய சமுதாய சார்பும் இன்றி எழுதப்பட்ட நூல்(8).

வள்ளுவர் சமத்துவம் பற்றி சமுதாயத்தில் சமத்துவம், பொருளாதார சமத்துவம், ஆண் பெண் சமத்துவம், போன்ற விழுமியங்களைப் பலரும் எடுத்துக் கூறியுள்ளார்கள். சமத்துவம் தோன்ற என்னென்ன தேவை என்பதை இங்குப் பார்ப்போம்.

ஓவியர் மாருதி



ஓவியர் மாருதி (28 ஆகத்து 1938 – 27 சூலை 2023)- தமிழ் புனை வெழுத்துக்கு தன்னுடைய கலையம்சம் பொருந்திய ஓவியங்களால் உயிரோட்டம் தந்தவர்.

வெ. அரங்கநாதன் என்ற இயற்பெயர் கொண்ட மாருதியின் சொந்த ஊர் புதுக்கோட்டை. ஐம்பதாண்டுகளுக்கு மேலாகக் கலைப்பயணம் செய்த அவருக்குத் தமிழக அரசு கலைமாமணி விருதளித்துச் சிறப்புச் செய்துள்ளது. 'தூரிகை களின் வேந்தர்' எனப் புகழ்பெற்ற மாருதி ஒரு சிறந்த ஆடை வடிவமைப்பாளரும் ஆவார்.

சமத்துவம் தோன்ற முதல் தேவை மனதினால் கூட எவர் பொருட்டும் யாருக்கும் கெடுதல் நினைக்காமல் இருப்பது என்பதை,

எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தானாம்
மாணாசெய் யாமை தலை. (குறள் 317)

என்றும், எல்லோரிடத்தும் அன்பு செய்தல் ஒன்றே சமத்துவம் உருவாக வழி என்பதை,

அன்புஈனும் ஆர்வம் உடைமை அதுஈனும்
நண்பு என்னும் நாடாச் சிறப்பு. (குறள் 74)

என்றும், பிறரின் துன்பத்தை தன்னுடைய துன்பமாய் கருதினால் அங்கும் சமத்துவம் இருக்கும் என்பதை,

அறிவினான் ஆகுவ துண்டோ பிறிதின்நோய்
தந்நோய்போல் போற்றாக் கடை. (குறள் 315)

என்றும், எக்காலத்திலும் நடுவுநிலை மாறாமல் வாழ்வோர் இருக்கும் சமூகத்தில் சமத்துவம் நிலைக்கும் என்பதை

சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க் கணி. (குறள் 118)

என்றும்,

அறம், பொருள் இன்பம் என்ற வாழ்க்கையின் மூன்று தத்துவங்களுடன் கூறும் வள்ளுவரின் வாக்கின் மூலம் நாம் அறியலாம்.

தனிமனித நிலை, குடும்ப நிலை, உறவினர் நிலை, சமூக உறுப்பினர் நிலை, குடிமக்கள் நிலை என்னும் தளங்களில் மனிதர்கள் பாதுகாக்க வேண்டிய பண்புகள் ஆற்ற வேண்டிய பணிகள் என, பன்முகக் கூறுகளை ஒழுங்குற அமைத்து ஒரு முழுமையான வாழ்வியல் கருத்தாக்கத்தை வள்ளுவம் தந்துள்ளது.

இவ்வாறு வள்ளுவர் மானுட வாழ்க்கையில் சமத்துவம் நிலைத்து நிற்க, பல குறள்களைத் தந்துள்ளதை யாரும் மறுக்க இயலாது. வள்ளுவர் சமத்துவம் போற்றும் மானிடர் என்று கூறுவது மிகையாகாது.

உசாத்துணை

1. பி. மணி, சோ. பாலசுப்பிரமணியன், வள்ளுவரின் சமுதாய நோக்கு, இக்கால உலகிற்கு திருக்குறள் தொகுதி 3, 2004, பக்கம் 52.
2. சி. கே. ரவிசங்கர் இக்கால உலகிற்கு திருக்குறளின் தேவை சமுதாய நோக்கு, இக்கால உலகிற்கு திருக்குறள் தொகுதி 2, 2004, பக்கம் 262.
3. வா. செ. குழந்தைச்சாமி, வாழும் வள்ளுவம், பக்கம் 49.
4. தி. தாமரைச்செல்வி, வள்ளுவத்தில் உலகம் பொதுமைக்கூறுகள், இக்கால உலகிற்கு திருக்குறள் தொகுதி 3, 2004 , பக்கம் 73.
5. க. ஜீ. உஷா நந்தினி, மனிதமும் மதமும், இக்கால உலகிற்கு திருக்குறள் தொகுதி 2, 2004, பக்கம் 11.
6. நடேச நாராயணன், செய்தொழில் வேற்றுமை, இக்கால உலகிற்கு திருக்குறள், தொகுதி 3, 2004, பக்கம் 48.
7. இ. எம். ராமச்சந்திரன், இக்கால உலகின் மத நல்லிணக்கத்திற்குத் திருக்குறள் தேவை, இக்கால உலகிற்கு திருக்குறள் தொகுதி 2, 2004, பக்கம் 122
8. நா. தனராசன், வள்ளுவம் காட்டும் வாழ்வியல் நெறி, https://malaysiaindru.my/113763, பிப்ரவரி, 2, 2024 கண்டது.

AJACE : Your Partner in IT Solutions

AJACE Inc., based in Chantilly, Virginia, is a leading provider of dynamic and cost-effective IT services and solutions. We specialize in custom application development, enterprise consulting, project management, and staff augmentation.

Our Services

- **Custom Application Development:** Creating tailored applications for seamless integration and optimal performance.
- **Enterprise Consulting:** Providing strategic advice to help businesses navigate modern IT landscapes.
- **Project Management:** Managing projects to ensure timely delivery and adherence to budget constraints.
- **Staff Augmentation:** Offering flexible staffing solutions with skilled professionals to meet your business needs.

Leveraging a rich pool of skilled consultants and IT professionals, Ajace delivers solutions that align with clients' strategic goals, utilizing the latest IT trends. Our services are designed to improve client satisfaction, reduce costs, save time, and enhance overall business performance, ensuring robust and scalable IT structures.For more information about our services and how we can assist your business, visit Ajace Inc.

AJACE Inc. 14159A Robert Paris Ct. Chantilly, VA 20151
Phone : 844-618-4685

வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையின்
37 ஆவது தமிழ் விழா சிறக்க வாழ்த்துகள்!
ரமணி ரகுநாத்
மற்றும் குடும்பத்தினர்

126-ஆவது பிறந்தநாள் காணும்
தில்லையாடி வள்ளியம்மை

காளிதாஸ். க. புதுச்சேரி

ஆங்கிலேயரின் அடக்குமுறை கொடுமைக்கு எதிராக உரிமைக்குரல் எழுப்பிப் போராடினோர் பலர். அப்போராட்டத்தில் ஆண்களுக்கு நிகராகப் பெண்களும் ஈடுபட்டார்கள். அவர்களுள் குறிப்பிடத் தகுந்தவர் தில்லையாடி வள்ளியம்மை ஆவார்.

பெற்றோரும் பிறப்பும்

புதுச்சேரியில் வாழ்ந்த முனுசாமி என்ற நெசவாளி தில்லையாடி என்னும் ஊரில் பிறந்த மங்களம் என்ற மங்கையை மணந்தார். தில்லையாடி, மயிலாடுதுறை மாவட்டத்தில் திருக்கடையூருக்குத் தெற்கே 3 கி.மீ. தொலைவில் உள்ளது. திருமணத்திற்குப் பின்னர் தில்லையாடியிலேயே அவர்கள் நெசவுத் தொழில் செய்து வாழ்ந்து வந்தார்கள். அந்நாளில், ஆங்கிலேயர் தம் நாட்டுத் துணிகளை இந்தியாவிற்கு கொண்டுவந்து விற்பனை செய்தனர். இதனால், நம்நாட்டில் உற்பத்தி செய்த துணிகளின் விற்பனை குறைந்து நெசவுத் தொழில் பாதிக்கப்பட்டது. அப்பாதிப்புக்கு உட்பட்டவர்களுள் முனுசாமியும் ஒருவர். நெசவுத்தொழில் பாதிப்பால் வறுமையில் வாடிய முனுசாமி தம் மனைவியுடன் வேலைதேடி தென் ஆப்பிரிக்காவில் குடியேறினார். அங்கு ஜோகன்ஸ்பர்க் என்னும் நகரத்தில் சிறிய அளவில் காய்கனிக் கடை நடத்தினார். இந்நிலையில், 1898-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 22-ஆம் நாள் முனுசாமி, மங்களம் இணையருக்கு பெண்குழந்தை ஒன்று பிறந்தது. அக்குழந்தையே வீரமங்கை வள்ளியம்மை ஆவார். வள்ளியம்மை பிறந்தது தென்னாப்பிரிக்காவென்றாலும் இவரது தாயார் பிறந்த ஊரான தில்லையாடியின் பெயரைக் கொண்டே தில்லையாடி வள்ளியம்மைஎன்று அழைக்கப்படுகிறார்.

காளிதாஸ். க.

அறப்போர்

தென்னாப்பிரிக்க நாட்டின் திருமணப்பதிவுச் சட்டப்படியும், கிறித்தவ மதச் சட்டப்படியும் நடைபெறாத திருமணம் செல்லாது என்று அந்நாட்டு உச்சநீதிமன்றம் 1913-ஆம் ஆண்டு ஒரு தீர்ப்பை வெளியிட்டது. அத்தீர்ப்பு அங்குக் குடியேறியிருந்த இந்தியர்கள் அனைவருக்கும் எதிராக அமைந்திருந்தது. பாதிக்கப்பட்ட இந்தியர்கள் தமது உரிமையை மீட்க அறப் போராட்டத்தில் ஈடுபட்டார்கள். அப்போராட்டத்தினை காந்தியடிகள் தலைமை ஏற்று வழிநடத்தினார் போராட்டத்தின் பொழுது காந்தியடிகள் நிகழ்த்திய வீரம் செறிந்த உரை, சிறுமி வள்ளியம்மையின் மனதில் ஆழமாகப் பதிந்தது. காந்தியடிகளின் உரிமை முழக்கத்தினால்

கவரப்பட்ட வள்ளியம்மை அப்போராட்டத்தில் முனைப்புடன் பங்கேற்றார். 1913-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 23-ஆம் நாள் வால்க்ஸ்ரஸ்ட் என்னும் இடத்தில் நடைபெற்ற அறப்போரில் ஒரு ஆங்கிலேயர் மகாத்மா காந்தியடிகளை நோக்கி "இந்தப் போராட்டத்தை கைவிடவில்லை என்றால் உன்னை சுட்டுவிடுவேன்." என்று துப்பாக்கியை கையில் ஏந்தி மிரட்டியதும் அருகில் இருந்த தில்லையாடி வள்ளியம்மை காந்தியடிகளின் மார்புக்கு முன்வந்து நின்று "முதலில் என்னைச் சுடுங்கள்!" என்று முழங்கி இருக்கிறார். இப்போராட்டத்தில் காந்தியடிகளின் மனைவி அன்னை கஸ்தூரிபாயும் கலந்து கொண்டார். வள்ளியம்மை கைது செய்யப்பட்டார். அவருக்கு தென்னாப்பிரிக்க நீதிமன்றம் மூன்று மாதக் கடுங்காவல் தண்டனை விதித்தது

சிறைவாழ்க்கை

சிறையில் வள்ளியம்மைக்குக் கல்லும் மண்ணும் கலந்த உணவே தரப்பட்டது. இதனால் அவர் உடல் நலம் பெரிதும் பாதிக்கப்பட்டது. கடுமையான காய்ச்சலுக்கு ஆட்பட்ட அவருக்குப் போதிய மருத்துவம் அளிக்கப்படவில்லை. சிறைச்சாலையில் நோயுடன் உயிருக்குப் போராடிய நிலையில் அவர் விடுதலை செய்யப்பட்டார்.

நாட்டுப்பற்று

உடல்நலம் குன்றிய நிலையில் சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்ட வள்ளியம்மை, தமது வீட்டில் படுத்த படுக்கையாக இருந்தார். இதனை அறிந்த காந்தியடிகள் வள்ளியம்மையைக் காண வந்தார்; காய்ச்சல் காரணமாக உடல் மெலிந்து நைந்து கிடந்த வள்ளியம்மையின் நிலைகண்டு கண்கலங்கி நின்றார். "சிறைத் தண்டனைக்காக நீ வருந்துகிறாயா?" என்று வள்ளியம்மையிடம் கேட்டார். உடல்நிலை தளர்ந்திருந்த அந்நிலையிலும் வள்ளியம்மை, "இல்லை, இல்லை மீண்டும் சிறை செல்வதற்கு தயார்" என்று கூறினார். அத்துடன் "இந்தியர்களின் நலனுக்காக எத்தகு இன்னல்களையும் ஏற்பேன். அதற்காக, என் இன்னுயிரையும் தருவேன்" என்று கூறினார். வள்ளியம்மையின் பதிலைக் கேட்டு காந்தியடிகள் உள்ளம் நெகிழ்ந்தார். கொடிய அடக்குமுறைச் சிறைவாசத்திற்கு ஆளாகி நோயின் கடுமையினால், துன்புற்றநிலையிலும் வள்ளியம்மை தமது உரிமை போராட்ட உணர்விலிருந்து சிறிதும் மனம் தளரவில்லை. சிறைச்சூழலால் உடல்நலம் குன்றிய வள்ளியம்மை 1914 பிப்ரவரி இருபத்திரண்டாம் நாளன்று தமது பதினாறாம் அகவையில் மரணம் அடைந்தார்.

காந்தியடிகளின் கருத்து

"என்னுடைய சகோதரியின் மரணத்தை விடவும் வள்ளியம்மையின் மரணம் எனக்கு பேரிடியாக இருந்தது" என்று காந்தியடிகள் மனம் வருந்தினார். "மாதர்களுக்கு அணிகலன்களாகத் திகழும் துன்பத்தைத் தாங்கும் மனவலிமை, தன்மானம், நல்லொழுக்கம் ஆகியவற்றுக்கு இலக்கணமாகத் திகழ்ந்தார். அவருடைய தியாகம் வீண் போகாது. சத்தியத்திற்காக உயிர் நீத்த அவருடைய உருவம் என் கண் முன் நிற்கிறது. நம்பிக்கைதான் அவருடைய ஆயுதம்." என்று தில்லையாடி வள்ளியம்மை குறித்து, இந்தியன் ஒப்பீனியன் இதழில் காந்தியடிகள் எழுதியுள்ளார். தென்னாப்பிரிக்க வரலாற்றில் வள்ளியம்மையின் பெயர் என்றும் நிலைத்து நிற்கும் என்று காந்தியடிகள் "தென்னாப்பிரிக்க சத்தியாகிரகம்" என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

"தில்லையாடி வள்ளியம்மை நினைவைப் போற்றி நடுவணரசு அஞ்சல் தலையும் அஞ்சல் உறையும் வெளியிட்டுள்ளது."

சென்னை, வண்டலூர் உயிரியல் பூங்காவில் பிறந்த பெண் புலிக்குட்டிக்குத் தில்லையாடி வள்ளியம்மை நினைவாக வள்ளி என பெயரிடப் பட்டுள்ளது.

காந்தியடிகள் தமிழர் மீதும் தமிழ் மொழியின் மீதும் மிகுந்த ஈடுபாடு கொண்டதற்கு வள்ளியம்மையும் ஒரு காரணம் என்று கூறலாம். காந்தியின் வாழ்க்கைப் பயணத்தில், அவர் மேற்கொண்ட சத்தியாகிரக வேள்விப் பணியின் போது பலியாகி, அவரை மகாத்மா என்ற உயர்நிலைநோக்கித் திருப்பிய பெருமை தில்லையாடி வள்ளியம்மைக்கு உண்டு. காந்தியடிகள் தமது தமிழகப் பயணத்தின் போது வாய்ப்புக்கிடைக்கும் பொழுதெல்லாம் வள்ளியம்மையின் தியாகத்தை நன்றியுடன் நினைவு கூர்ந்துள்ளார். திருமணமாகாத இளம்பெண்ணான வள்ளியம்மையின் வாழ்வு இந்திய விடுதலைப் போருக்கு முன்னோடியாக அமைந்தது. அவரது அளப்பரிய தியாகம் போற்றி வணங்கத்தக்கது. காந்தியடிகள் தென்னாப்பிக்காவிலிருந்து இந்தியா திரும்பியவுடன் 1915-ஆம் ஆண்டு மே திங்கள் 1-ஆம் நாள் தில்லையாடியில் அமர்ந்து உரை நிகழ்த்தியுள்ளார். அந்த நினைவுச் சின்னம் தில்லையாடியில் வள்ளியம்மை மண்டபம் எதிரில் அமைந்துள்ளது.

அரசு செய்த சிறப்புகள்

வள்ளியம்மையின் நினைவைப் போற்றும் வகையில் தில்லையாடியில் தமிழ்நாடு அரசு அவரது சிலையை நிறுவி மணிமண்டபம் அமைத்துள்ளது.

1972-ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 14-ஆம் நாள் மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் மு. கருணாநிதி தனது உரையில் "தில்லையாடி வள்ளியம்மைக்கு திருநகர் அமைத்ததன்றோ தமிழ் அரசு" என்றும் மாண்புமிகு சட்டப்பேரவை தலைவர் திரு கே. ஏ. மதியழகன் தனது உரையில் முதன்முதலாக சென்னைக்கு வந்த மகாத்மா காந்தியடிகள் தமிழ்நாட்டு மக்கள் தனக்கு அளித்த வரவேற்புக்கு பதில்சொல்கிற நேரத்தில் "நான் தென்னாப்பிரிக்க நாட்டிலே இருந்தேன். அங்கேயிருந்து நான் வந்து இந்திய விடுதலை போராட்டத்தை நடத்துகிறேன் என்பதற்காக என்னை இப்படி புகழ்கிறீர்கள். ஆனால் இந்திய சுதந்திரத்திற்காக போராட வேண்டும், இந்தியாவுக்கு விடுதலை வாங்கி தரவேண்டுமென்ற உணர்வை எனக்களித்ததே தமிழ்நாட்டின் வம்சாவளி 16 வயது சிறுமி தில்லையாடி வள்ளியம்மை தான்" எனக்குறிப்பிட்டதாக கூறியுள்ளார். மாண்புமிகு சட்டமேலவைத் தலைவர் திரு சி. பி. சிற்றரசு, திரு சா. கணேசன் அவர்களும் தில்லையாடி வள்ளியம்மையை நினைவு கூர்ந்து பாராட்டியுள்ளார்கள். புதுச்சேரி அரசும் புதுவை கதிர்காமம் அரசு உயர்நிலைப்பள்ளிக்கு தில்லையாடி வள்ளியம்மை பெயரைச் சூட்டி பெருமை சேர்த்துள்ளது.

"தென்னாப்பிரிக்க நாட்டில் இந்தியரின் நலனுக்காகப் போராடிய வீரதமிழ் மங்கை தில்லையாடி வள்ளியம்மையின் உரிமை உணர்வை அனைவரும் போற்றுவோம். நாட்டுநலனில் நாட்டங்கொண்டு தன்னலம் நீக்கி பொதுநலம் பேணி வாழ்வோம்."

aNiya siLks
ethnic excellence
1408 Gelding Dr, Aubrey, TX 76227
720-347-2727 / 412-506-0737
• Kanjeevarams • Soft Silks • Ikkat Patola • Pure Gadwal Silk
• Mysore Crepe • Pochampally Silk • Linen Silk
• Desi Tusser • Kuppadam Silks • Silk Cottons
• Designer Sarees • Half Saree Sets • Kids Wear
• Men's Kurtas & Much more

வாசுதேவன் நடராஜன் மற்றும் குடும்பத்தினர்

வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையின் 37 ஆவது தமிழ் விழா சிறக்க வாழ்த்துகள்!

துரை நடராஜன் மற்றும் குடும்பத்தினர்

சமுதாயச் சிற்பி தவத்திரு குன்றக்குடி அடிகளார்

அ.சுவாமிநாதன், எம் ஏ பி எட், தமிழாசிரியர் (ஓய்வு)

'சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை
இகல்வெல்லல் யார்க்கும் அரிது'

என்ற குறள் நெறிக்கு ஏற்ப நாவன்மை உடையவராய், அஞ்சா நெஞ்சராய், செயல் வீரராய், மக்கள் நலன் காக்கும் சேவகனாய், சாதிப் பாகுபாட்டை ஒழிக்கும் கோமகனாய்த் தோன்றியவர் தான் அரங்கநாதன், ஆம்! இயற்பெயர் அதுவே!

1925-இல் மயிலாடுதுறைக்கு அருகில் உள்ள நடுத்தட்டு எனும் கிராமத்தில் சி னி வ ா ச பி ள் ளை , சொர்ணத்தம்மாளுக்கு மகனாய்த் தோன்றிய தியாகச் செம்மல் அடிகளார் ஆவார்.

அ.சுவாமிநாதன்

இளமைப் பருவம்

கற்கை நன்றே! கற்கை நன்றே!
பிச்சை புகினும் கற்கை நன்றே!

என்ற முதியோர் சொல்லிற்கு ஏற்ப, கல்வியில் நாட்டம் கொண்டு பள்ளி இறுதி வகுப்பு வரை கசடற கற்றுத் தேர்ந்தார் அடிகளார். நீரை விலக்கிப் பாலை மட்டும் பருகும் அன்னம் போல தீயன விலக்கி, நல்லனவற்றைச் சிந்தையில் ஏற்றி, சிந்தனைச் செல்வராய் குறள் நெறிப்படி வாழும் பண்பாளராய் மெய்ப்பொருள் கேட்டறிந்து நல்லறிஞர்களின் நட்புடன் வாழ்ந்தார்.

தருமை ஆதீனத் தொடர்பு

தொண்டால், அறிவால், பக்தியால் சிறந்து விளங்கும் பல அடியார்களை உருவாக்கி வரும் மடம் தருமை ஆதீனமாகும். தருமை ஆதீன மடத்தில் அ ர ங் க ந ா த ன் க ண க் க ர ா க ப் பணியேற்றார். அங்கங்கே கலைகள் தேறும் அறிவன் போல இலக்கண இலக்கியமும் இப்பட்டறையில் கற்று வித்துவான் பட்டத்தையும் பெற்றார்.

தருமை ஆதீன கர்த்தர் அரங்க நாதனின் திறமைக் கண்டு வியந்து போற்றியதோடு நில்லாமல், துறவை மேற்கொள்ளச் செய்து, தன்னுடைய மடத்தில் 1945-இல் கந்தசாமித்தம்பிரான் என்கிற பெயரில் தொண்டு புரியச் செய்தார்.

"என் கடன் பணி செய்து கிடப்பதே" என்பதற்கு ஏற்ப பணிவுடன் பொறுப்பேற்ற அடிகளார் அனை வரும் போற்றும் வண்ணம் கடமை ஆற்றி வந்தார்.

வாழ்வில் ஏற்றம்

கால சக்கரம் சுழல்வது போல் கந்தசாமித்தம்பிரான்

வாழ்வில் புத்தொளி வீசத் துவங்கியது. குன்றக்குடி மடத்தில் நடைபெற்ற பூஜையில் கந்தசாமித்தம்பிரான் கலந்து உரையாற்றினார்.

குன்றக்குடி ஆதீன கர்த்தர் ஸ்ரீல ஸ்ரீ ஆறுமுக தேசிகர், கந்தசாமித்தம்பிரானின் மதிநுட்பம் கண்டு வியந்து பாராட்டி மகிழ்ந்தார்!

தருமபுர ஆதீனத்தின் அனுமதியோடு 1949 செப்டம்பர் 5-இல் குன்றக்குடி மடத்திற்கு கந்தசாமித்தம்பிரானை இளவரசுப்பட்டம் ஏற்கச் செய்தார் ஸ்ரீல ஸ்ரீ ஆறுமுக தேசிகர் அவர்கள். மேலும் "ஸ்ரீல ஸ்ரீ தெய்வசிகாமணி தேசிக பரமாச்சாரிய சுவாமிகள்" என்ற புதிய பெயரையும் சூட்டி மகிழ்ந்தார். குன்றக்குடி குன்றிலிருந்து அருள்பாலிக்கும் 'ஸ்ரீ சண்முகநாத பெருமானின் அருளால் 1952-இல் குன்றக்குடி மடத்தில் 45-ஆவது குருமகாசந்நிதானமாக தலைமைப் பொறுப்பை ஏற்றார் அடிகளார் அவர்கள்.

ஆன்மீகப் பணிகள்

குன்றக்குடி மடத்தின் நிர்வாகத்தில் இயங்கும் ஐந்து ஊர்க்கோவில்களில் வேதமும் தேவாரத் திருமுறைகளும் நாள் தோறும் ஒலிக்கச் செய்தார். "யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்பதற்கு ஏற்ப சிறந்த ஓதுவார்களின் துணையுடன் தேவாரப்பாடல்களை மாணவர்களும் பெற வழி வகுத்தார்.

1961-இல் அறநிலையத்துறை அமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்கள் முன்னிலையில் தமிழ் அர்ச்சனையை மதுரையில் துவக்கி வைத்தார். அது முதல் எல்லா கோவில்களிலும் தமிழிலும் அர்ச்சனை நடைபெறச் செய்தார்.'ஸ்ரீ சண்முகநாத பெருமானுக்குக் கோடி அர்ச்சனை, தேரோட்டம், தெப்ப உற்சவம், வைகாசி விசாகப் பெருவிழா, திருமுறை விழா" என்று நடத்தி தெய்வீக அருளையும் பெற்றார்.

கிராம முன்னேற்றம்

அடிகளார் அவர்கள் பொறுப்பேற்ற காலம் முதல் 'குன்னக்குடி' குன்றக்குடியாகக் குன்றாப் புகழுடைய குடியாகக் குன்றக்குடி கிராமம் முன்னேற வழிவகுத்தார். தன் பணி மடத்துடன் மட்டும் அல்லாது மக்கள் வாழ்வியல் நெறியிலும் கடமை ஆற்ற முற்பட்டார்.

கிராம மக்களை அழைத்து கூட்டுறவின் பெருமை மற்றும் உழைப்பின் மேன்மையை விளக்கினார். கூட்டுறவு வங்கி, கூட்டுறவு பண்டகசாலை, கூட்டுறவு கைக்குத்தல் அரிசி சங்கம், கூட்டுறவு பால்பண்ணை, கூட்டுறவு பாலிதின் தொழிற்சாலை, தீப்பெட்டி தொழிற்சாலை, கிராம நலச் சங்கம் ஆகியவற்றை உருவாக்கி மக்களை உழைக்க வைத்து அவர்களின் வாழ்வை உயர்த்தினார்.

அடிகளாரின் செயற்கரிய செயலால் குன்றக்குடி தொழிற்துறையில் 'குன்றில் இட்ட விளக்காக' திகழ்ந்தது. பதினைந்திற்கும் குறையாத கல்வி நிறுவனங்கள் அமைத்து மாணவர்கள் பயன்பெறச் செய்தார்.

இந்திரா காந்தியின் பாராட்டு

குன்றக்குடி எனும் கிராமத்தின் முன்னேற்றம் இந்தியா முழுவதும் பரவியது. உழைப்பால் தொழிலால் கிராமத்தை முன்னேற்றிய தவத்திரு அடிகளாரை 1985-இல் பிரதமர் இந்திரா காந்தி பெரிதும் பாராட்டி பரிசுகள் பல வழங்கினார்.

பெரியாரும் அடிகளாரும்

பெரியாரும் அடிகளாரும் இருவேறு துருவங்களாக இருந்த நேரம். அன்பால், நட்பால், சாதி ஒழிப்பு போராட்டத்தால் ஒரே நேர்கோட்டில் சாதனை புரிந்தார்கள் என்றால் மிகையாகாது. பெரியாரின் சில கருத்துகளுக்கு அஞ்சா நெஞ்சத்தோடு அருள்நெறித் திருக்கூட்டம் என்ற அமைப்பின் மூலம் எதிர்ப்பும் தெரிவித்தார்.

நட்பின் நிமித்தமாகப் பெரியார், அண்ணா, இராஜாஜி அவர்களை தன் மடத்திற்கு அழைத்து,

வரவேற்று உரையாடியும் மகிழ்ந்துள்ளார். இந்த உணர்வு 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்பதை நினைவூட்டுகிறது.

வெளிநாட்டுப்பயணம்

தமிழகத்தின் பட்டி தொட்டி மட்டுமல்லாது, தாய்லாந்து, இலங்கை, ஜப்பான், மலேசியா, சிங்கப்பூர், சீனா போன்ற நாடுகளுக்கும் சென்று தமிழையும், தமிழர் பண்பாட்டையும் உலக ஒற்றுமையையும் நிலைநாட்டினார்.

மேலவை உறுப்பினரும், தமிழ்ப்பணியும்

தெய்வீகப் பணியோடு சமூகப்பணி ஆற்றி வந்த அடிகளாரை, அன்றைய முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள், சட்டமன்ற மேலவை உறுப்பினராக்கிப் பாராட்டினார்.

தமிழகத்தில் அடிகளார் இல்லாத பட்டிமன்றம் கிடையாது. நல்ல பேச்சாளர்களை அழைத்து பட்டிமன்றம், வழக்காடு மன்றம், கருத்தரங்கம் பல நடத்தி அறிஞர்களின் பேச்சில் மயங்கி, அவர்களின் திறனைப் பாராட்டவும் தயங்கியதே இல்லை!

தெய்வீகப் பேரவை, திருக்குறள் பேரவை அமைத்து தமிழகம் முழுவதும் திருப்பணிகளின் பெருமை, நாயன்மார்கள், ஆழ்வார்களின் பெருமை மேலும் குறள் காட்டும் நெறிகளையும் மக்களுக்கு எடுத்துரைக்கத் தவறியதே இல்லை.

பாரி விழாவும், கலைஞர்களும்

பாரி மன்னன் ஆண்ட பறம்பு மலை என்ற பிரான்மலையில் ஆண்டுதோறும் மே மாதம் 'முத்தமிழ் விழா' எடுத்து, முத்தமிழ் வித்தகர்களையும் அழைத்துப் பாராட்டி மகிழ்ந்தார்!

1973-இல் பிரான்மலையில் முதலமைச்சர் டாக்டர் கலைஞர் கருணாநிதி தலைமையில் கவியரங்கம் நடத்தி, கலைஞரின் கையால் கவிஞர்களுக்கு பொற்கிழி வழங்கி சிறப்புச் செய்தார்.

மண்டைக்காடு நிகழ்வு

கன்னியாகுமரி மாவட்டத்தில் மண்டைக்காடு எனும் சிற்றூரில் கிறிஸ்தவர்களுக்கும் இந்துக்களுக்கும் இடையே மதக்கலவரம் உருவாயிற்று. ஊரடங்கு சட்டம் அமலுக்கு வந்தது.

யாரும் அந்த ஊருக்குள் நுழைய முடியாத

சூழ்நிலையில் அஞ்சாத துணிவோடு காவலர்கள் தடுத்த போதும், தடைகள் பல கடந்து கிறிஸ்தவ ஆலயத்துக்குள் சென்று அமர்ந்தார் நமது அடிகளார். மக்களிடையே சமரசம் பேசி அமைதிப்படுத்தினார். மக்களும் அமைதி அடைந்தனர். அன்றைய முதல்வர் டாக்டர் MGR அவர்கள் அடிகளாரின் அரும்பணியைப் பாராட்டி மகிழ்ந்தார்.

விளையாட்டும் அடிகளாரும்

நேருவைப் போலவே அடிகளாரும் குழந்தைகள் மேல் அன்பு கொண்டவர். அவர்களுக்காகச் சிறுவர் பூங்கா, படிப்பகம் அமைத்துக் கொடுத்தார்.

தொண்டி கடற்கரைக்குச் சிறுவர்களை அழைத்துச் சென்று கடலில் அவர்களோடு நீச்சலடித்து மகிழ்ந்தார். நேரம் கிடைக்கும் நாட்களில் தனது பள்ளிக்குச் சென்று அங்குள்ள ஆசிரியர்களுடன் கைப்பந்து (Volleyball) விளையாடி மகிழ்வார்.

நூல் வெளியீடு

திருவள்ளுவர் காட்டும் அரசியல் குறள் 100, குறள் செல்வம், மணிமொழி போன்ற எண்ணற்ற நூல்களை வெளியிட்டுள்ளார். தமிழகம் என்னும் இதழின் மூலம் கட்டுரை, கவிதை, வினா-விடைகளையும் மக்களுக்கு வழங்கி தமிழுக்குத் தொண்டாற்றினார்.

அணையா விளக்கு

1986-இல் தமிழக அரசால் 'திருவள்ளுவர் விருது' அடிகளாருக்கு வழங்கப்பட்டது. உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்து, உழவர்கள் இந்நாட்டு மன்னர்கள் என்று பெருமைப்படுத்தினார். மக்களோடு இணைந்து தூர்வாரி, மண் சுமந்து தன் எளிமையைச் சாதிப் பாகுபாடு, உயர்வு-தாழ்வு அற்ற தன்மையைச் செயலால் விளக்கினார்.

'மக்களின் சேவையே மகேசனின் சேவை' என்று இறுதிவரை ஆடம்பர வாழ்வை நீக்கி, துறவு நெறியில் மக்களுக்காகப் பாடுபட்டார்.

1995-ஆம் ஆண்டு ஏப்ரல் 5-ஆம் நாள் குன்றக்குடி மலையிலிருந்து அருள்பாலிக்கும் ஸ்ரீசண்முகநாதப் பெருமானின் திருவடியை அடைந்தார். அவரின் புகழுடம்பு குன்றக்குடி மணிமண்டபத்தில் அணையா விளக்காய் ஒளி வீசுகிறது.

◆

வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையின் 37 ஆவது தமிழ் விழா சிறக்க வாழ்த்துகள்!

வெங்கட், ஷீலா, ஸ்ருதி

வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையின் 37 ஆவது தமிழ் விழா சிறக்க வாழ்த்துகள்!

ராம் வெங்கட்ராமன், சாய்சிரிஷா ராம், ரக்ஷா ராம், ஷக்தி ராம்

செயற்கரிய செய்வார் பெரியர்–சிறியர் யார்?

முனைவர் மோ.கோ. கோவைமணி, பேராசிரியர் (ப.நி.)

அறத்தை அறத்திற்காகவே செய்பவர்கள், தீய நெறிகளை ஒதுக்கி மன உறுதியுடன் ஐம்புலன்களை ஒடுக்கி, விழுப்பமுடைய வினைகளை ஒழுக்கம் வழுவாது ஓம்பி தொண்டாற்று பவர். சமயம், மொழி, இனம், குலம், குடி என்ற வேறுபாடு ஏதுமில்லாமல் யாவரிடமும் கருணை காட்டுபவர். இவர்களின் பெருமையை எடுத்துரைப்ப தாக நீத்தார் பெருமை அதிகாரக் குறட்பாக்கள் அமைந்திருக்கின்றன. இவற்றில், நீத்தார் பெருமை அதிகாரத்தில் வரக்கூடிய 26-ஆம் குறள் செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர் செயற்கரிய செய்கலா தார்.

முனைவர் மோ.கோ. கோவைமணி

திருவள்ளுவரின் வாக்காக இருக்குமா என்கிற கருதுகோளை வினாவாக எழுப்பி, திருவள்ளுவப் பெருந்தகையின் உண்மையான வாக்கு, எவ்வாறு அமைந்திருக்கும் என்பதை நிரூபிக்கும் முகமாக இக்கட்டுரை அமைகிறது.

இதுவரை வெளிவந்துள்ள உரைகளை உற்று நோக்கும்போது செய்வதற்கு அரிய செயல்களைச் செய்பவர் பெரியோர் என்றும், அவ்வரிய செயல்களைச் செய்யாமல் எளிய செயல்களைச் செய்பவர் சிறியோர் என்றும் கொள்ள முடிகிறது. இவ்வுரையானது இப்பொழுது நடைமுறையில் உள்ள குறட்பா வரிக்குப் பொருந்துவதாக அமையலாம். ஆனால், வள்ளுவப் பெருந்தகையின் வாக்கு இதுவாக இருக்காது என்பதைக் கருதுகோளாக் கொண்டு ஆராயும் போது,செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர் செயற்குரிய செய்கலாதார். என்றிருக்க வேண்டும் என்று எண்ணத் துணிய முடிகிறது. இதற்கான காரணங்களைப் பின்வருமாறு ஆராய முற்படுகிறது இவ்வாய்வு.

ஓலைச்சுவடியில் இருக்கக் கூடிய எழுத்தமைவுகளைப் பார்க்கும் போது சில எழுத்து வரிவடிங்கள் மயக்க எழுத்துக்களாகத் தோற்றம் அளிக்கும். ஓலைகளில் எழுத்தைக் கீறல் முறையில் உருவாக்குகின்றனர்.

கீறல் முறையில் எழுத்தினை உருவாக்கும் போது எழுத்து கீறக் கீற எழுத்தின் அளவு ஓலை இடம் பெயர்ந்துவிடும். அப்படிப் பார்க்கும் போது கீறப்பெற்ற எழுத்திற்குப் பின்னோக்கி வரக்கூடிய எழுத்து வரி வடிவங்களை இன்று நாம் காண்பது போல் முழுமையாகக் கீற முடியாத அளவுக்கு அமைவதால் குறைபாட்டோடு கீறி முடிப்பர்.

அவ்வாறு கீழ் விலங்கு மற்றும் கீழ் விலங்குச் சுழி அமையக் கூடிய கு, டு, மு, ரு, ழு, ளு, டூ, மூ, ரூ, ழூ, ளூ ஆகிய எழுத்துக்களைக் கீறும்போது முதலில் அகர உயிர்மெய் கீறப்பெற்றதின் ஈற்றுப் பகுதியில் இருந்து

கீழ் விலங்கையோ கீழ் விலங்குச் சுழியையோ கீற வேண்டும். அகர உயிர்மெய் எழுத்து கீறி முடிக்கப்பெற்ற பின் அந்த எழுத்து கீறப்பெற்ற அளவுக்கு ஓலை இடம்பெயர்ந்து இருக்கும்.

இந்நிலையில் கீழ் விலங்கையோ கீழ் விலங்குச் சுழியையோ கீறும் போது தேவையான அளவுக்குப் பின்னோக்கி வளைத்துக் கீறுவதில் சிக்கல் ஏற்படும். மேலும், எழுத்து எழுதும்போது வெள்ளோலையில் எழுத்தினைக் கீறுவதால் உருவாகும் எழுத்தானது வெள்ளெழுத்தாக இருப்பதாலும், இவ்வகைப்பட்ட எழுத்துக்களை முழுமையாகக் கீற முடியாமல் குறைபட்டுக் கீறுவதாலும் வரி வடிவத்தில் எழுத்து மயக்கம் ஏற்படும்.

இவ்வாறு அமையும் போது குகரம் ககரமாக மயங்கி நிற்கும்போது அதைப் படிப்பவரோ படியெடுப்பவரோ அங்கே தோன்றும் வரி வடிவத்தைப் படிப்பதாலோ படியெடுப்பதாலோ எழுத்து மயக்கத் தால் சொல் மாற்றம் காண்பது இயல்பு. இந்நிலையில் தான், செயற்குரிய என்ற சொல் செயற்கரிய என்றவாறு படிக்கப்பெற்றும் எழுதப்பெற்றும் காலப்போக்கில் செயற்கரிய என்றே நிலைத்து விட்டது எனலாம்.

தெய்வப் பெருந்தகை வள்ளுவரால் தோன்றுவிக்கப்பெற்ற இந்நூல் குறைந்தது ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு எழுதப்பெற்ற உரைகள் எழுத்து மயக்கத்தால் எழுதப்பெற்ற ஓலைச்சுவடிகள் கிடைக்கப்பெற்ற நிலையில் அதற்கான உரைகளையே கண்டிருக்கின்றனர். இவ்வெழுத்து மயக்கத்தால் யாப்புக் குறைபாடும் (வெண்சீர் வெண்டளை) ஏற்படாததால் இவ்வுரைகள் வள்ளுவரின் உயரிய நோக்கத்தை எடுத்துரைக்காமல் எழுதப் பெற்றிருக்கின்றன எனலாம்.

அதாவது, யாவராலும் செய்ய முடியாத செயல்களைச் செய்து முடிப்பவர்கள் பெரியோர் என்றும், அவர்களாலே செய்யத்தக்க செயல்களையும் செய்யமாட்டாதவர்கள் சிறியோர் என்றும் கொண்டால்தான் வள்ளுவரின் உண்மையான நிலைப்பாட்டை உணர முடியும். செயற்கரிய செயல்களைச் செய்யாதவர் என்பதை விட செயற்குரிய செயல்களைச் செய்யாதவரே சிறியவர் என்று எண்ணிப் பார்த்தால் வள்ளுவரின் உள்ளம் உச்சிமேல் விளக்காகும்.

வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையின் 37 ஆவது தமிழ் விழா சிறக்க வாழ்த்துகள்!

பாரதி ரத்தினவேல் , உமா ஜகதீசன் , அர்ச்சிதா பாரதி , அர்த்தீவ்ஷ் பாரதி

மோகன் தாமோதரன் ,நித்யா மோகன் ,ஹரிணி மோகன், திஷா மோகன்

பிச்சை புகினும் கற்கை நன்றே காமராசர்

தினேஷ் பாபு கனகராஜ், டல்லாஸ், டெக்காசு

காமராசரின் ஆட்சி தமிழகத்தின் பொற்காலமென்றால் மிகையாகாது. காமராசர் ஆட்சியில் தொழில்துறை, கட்டுமானம், விவசாயம் எனப் பல துறைகளில் வளர்ச்சியைக் கண்டாலும் அவர் கல்வித் துறையில் ஆற்றிய சாதனை இந்தியாவில் எந்த முதல்வரும் செய்யாதது. "எனது மாணவர்கள் படிப்பதற்காக ஊர் ஊராகச் சென்று பிச்சை எடுக்கவும் நான் தயாராக இருக்கிறேன்" என்று முதல்வராக இருந்தபோது காமராசர் சொன்னார். கல்வி சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகளில் கடவுள் வாழ்த்து பாடுவதை நிறுத்திவிட்டு காமராசர் வாழ்த்துப் பாடலாம் என்றார் பெரியார்.

தினேஷ் பாபு கனகராஜ்

அன்றைய கல்வி நிலை

அன்றைய காலத்தில் 80 சதவீத பேர் படிப்பறிவு இல்லாதவர்களாக இருந்தனர். எரிகின்ற தீயில் எண்ணெய் விட்டார் போல் குலக்கல்வி திட்டத்தை ஆதரித்து ராஜாஜி பல பள்ளிகளை மூடினார். காமராசர் முதலமைச்சர் ஆனவுடன் புதிய பள்ளிக்கூடம் திறக்கவும், கட்டிடங்கள், ஆசிரியர்கள் சம்பளம், மேசை, நாற்காலியென இவை அனைத்துக்கும் 1,200 கோடி ரூபாய் தேவைப்பட்டது. ஆனால் அனைத்து இந்தியாவிற்கும் இந்தியக் கல்வி அமைச்சகம் அன்றைய தேதியில் ஒதுக்கிய தொகை 320 கோடி மட்டுமே. சற்றும் மனம் தளராமல் தேவைப்படுகின்ற பணத்தை மக்களிடமே திரட்டி மக்கள் இயக்கமாக மாற்றிப் பகல் உணவுத் திட்டம், இலவச சீருடைத் திட்டம், பள்ளிச் சீரமைப்பு இயக்கம், ஞானத் தந்தை திட்டம், முதியோர் கல்வியெனப் பல திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றிக் காட்டினார் காமராசர்.

பள்ளி சீரமைப்பு மாநாடு

அன்றைய பள்ளிகளில் நூற்றுக்கு 90 பள்ளிகளில் கழிப்பிட வசதியில்லை. நூற்றுக்கு 30 பள்ளிகளில் மட்டுமே குடிநீர் வசதி இருந்தது. நூலகம், விளையாட்டுத் திடல் என எந்த அடிப்படை வசதியும் இல்லாத பள்ளிகளே மிக அதிகம். காமராசர் 1958-இல் பள்ளி சீரமைப்பு மாநாடு நடத்தினார். அதன்படி வகுப்பறை கட்ட 3,000 ரூபாய் செலவாகும், வசதி படைத்தவர்கள் நிதி கொடுத்தால் பள்ளிகளுக்கு அவர்களின் பெயர்கள் வைக்கப்படும் என அறிவித்தார். நிலமாகவோ நிதியாகவோ பள்ளிகளுக்கு நிதி அளிக்கலாம் என்ற அவரது திட்டம் மக்கள் இயக்கமாக மாறியது. 12 பைசா முதல் அதிகபட்சமாக

50,000 ரூபாய் வரை நிதி வர ஆரம்பித்தது. 1958-லிருந்து 1965 வரை 150-க்கும் மேலான பள்ளி சீரமைப்பு மாநாடுகளை நடத்திக் காட்டினார். பல கோடி ரூபாய் மக்கள் தானமாகத் தந்தனர். பள்ளிகளின் தரமும் உயர்ந்தது. அப்போதைய பிரதமர் நேருவால் இத்திட்டம் பாராட்டப்பட்டது. 1960-இல் குடியரசுத் தலைவர் ராஜேந்திர பிரசாத் வேலூர் பள்ளி சீரமைப்பு மாநாட்டிற்கு வருகை தந்து சிறப்புச் செய்தார்.

பகல் உணவுத் திட்டம்

1955 மார்ச் 27 தமிழக வரலாற்றின் மிக முக்கியமான நாளாகும். பள்ளிகளில் பகல் உணவு வழங்கினால் வருகை அதிகமாகும் என்ற திட்டத்தை நெ. து. சுந்தரவடிவேலு என்ற பொது கல்வித்துறையின் துணை இயக்குநர் காமராசரிடம் தெரிவித்தார். ஒரு மாணவனுக்கு ஒன்றரை அணா ஒரு நாளுக்குச் செலவாகும். ஆண்டுக்கு 210 நாட்களுக்கு ஒரு மாணவனுக்கு ஆகும் செலவு 20 ரூபாய். குறைந்தபட்சம் 5 லட்சம் பேருக்கு இத்திட்டத்தை அறிமுகப்படுத்த வேண்டும். அதன்படி ஆண்டு ஒன்றுக்கு 1 கோடி ரூபாய் செலவாகும் என்று எடுத்துரைத்தார். இந்த செலவு ஓரிரு ஆண்டுகளில் 4 முதல் 5 கோடிகள் வரை உயரும். இப்படிச் செய்தால் பள்ளிகளில் வருகை அதிகரித்து இடைநிறுத்தம் குறையும் என்றார். அன்றைய தேதியில் ஒரு கோடி ரூபாய்க்கு ஒரு திட்டம் என்றவுடன் பல எதிர்ப்பு எழுந்தது. காமராசர் பணத்தை வீணடிக்கிறார் என்ற குற்றச்சாட்டும் இருந்தது.

நெ. து. சுந்தரவடிவேலு

நெ. து. சுந்தரவடிவேலு கோவில்பட்டியில் உரையாற்றிய போது, பயிரை அறுத்தவுடன் முதல் அளவை சாமிக்கும், இரண்டாம் அளவை காவலுக்கும் தருவது போல் மூன்றாவது அளவை பள்ளிக்கூட அன்னதானத் திட்டத்திற்குத் தாருங்கள் என்று பேசினார். அவரின் பேச்சு மக்கள் இயக்கமாக மாறியது. அவர் தனக்குக் கீழ் பணிபுரியும் ஊழியராக இருந்தாலும் அவரின் இச்செயலைப் பாராட்டி அதைப் பரப்புரை செய்தார் காமராசர். பின்னர் 3,000 ஊர்களில் இத்திட்டம் விரிவு செய்யப்பட்டது. காமராசர் தன்னை முன் நிறுத்துவதை விட திட்டம் யாரிடமிருந்து வந்தாலும் அவற்றின் பலன் மக்களுக்குச் சேருவதில் மட்டுமே முனைப்பாக இருந்தார். பின்னாளில் நெ. து. சுந்தரவடிவேலு இந்திய கல்வி இயக்கத்தின் திட்டங்களில் பங்காற்றினார்.

ராஜாஜி காலத்தில் மூடப்பட்ட ஆறாயிரம் பள்ளிகளைத் திறந்தார் காமராசர். மேலும் 17,000-க்கும் மேற்பட்ட பள்ளிகளை எல்லா ஊர்களுக்கும் கொண்டு சென்றார். ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் 7 சதவீதமாக இருந்த கல்வி கற்போரின் எண்ணிக்கை காமராசரின் ஆட்சியில் 37 சதவீதமாக உயர்ந்தது என்பதே வரலாறு கூறும் உண்மை.

உசாத்துணை: நெ. து. சுந்தரவடிவேலு நினைவலைகள் பாகம் 3

◆

காரைக்குடி மணி

'தாள உலகின் தவப்புதல்வன்' எனப் புகழப்படும் காரைக்குடி மணி(செப்டம்பர் 11, 1945 - மே 4, 2023) மிருதங்கத்தைத் தனது வாழ்நாள் இணையாகக் கொண்டவர். மிருதங்க இசை மேல் கொண்ட பெருங்காதலால் இல்லற வாழ்வில் நுழையாத இவர் தனது எட்டாவது வயதிலேயே மிருதங்கத்தோடு மேடை ஏறியிருக்கிறார்.

பட்டம்மாள், சுப்புலட்சுமி, மதுரை சோமு போன்ற பல புகழ்பெற்ற கர்நாடக இசைக்கலைஞர்களுக்குப் பக்கவாத்தியம் வாசித்த இவர் மிருதங்கத்தை கச்சேரிகளில் முதன்மைப்படுத்தியதில் பெரும்பங்கு வகித்தவர். மற்ற அயல்நாட்டு இசைக்கலைஞர்களுடன் இணைந்து மிருதங்க இசையை புதிய தளத்துக்கு கொண்டு சென்றவர் என்ற சிறப்புடையவர்.

சங்ககாலத்தில் ஒலித்த எங்கள் குரல் இன்றும் ஒலிக்குமா?

ஜெயா மாறன் அட்லாண்டா, ஜார்ஜியா

எங்கள் அலுவலகத்தில் ஒரு புத்தக விவாதக் கூட்டம் நடந்தது. சி. என். என். நிறுவனத்தின் முதல் பெண் துணைத் தலைமை நிர்வாகி கெயில் எவன்ஸ் அவர்கள் எழுதிய 'ஆணைப் போலச் செயல்படு! பெண்ணைப் போல வெற்றி பெறு!' (*Play Like a Man! Win Like a Woman!*) என்ற புத்தகத்தைப் பற்றிய விவாதக் கூட்டம் தான் அது. ஐம்பது பேர் உட்காரும் அறையில் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நாங்கள் ஒரு பத்துப் பதினைந்து பெண்கள் நிகழ்வு தொடங்குவதற்குப் பத்து நிமிடங்கள் முன்னதாகவே சென்று விட்டோம். நிகழ்வு தொடங்கியதும், "முதல் வரிசையில் இருப்போரெல்லாம் எழும்புங்கள்" என்றார் கெயில். எழுந்தவர்கள் எல்லாரும் ஆண்கள் தான். "பத்து பெண்கள் நிகழ்வு தொடங்கும் முன்பே வந்துவிட்டீர்கள். ஆனால், ஏன் ஒருவர் கூட முன் வரிசையில் உட்காரவில்லை. வந்தவுடன், அறையின் மையப்பகுதியையோ பின் பகுதியையோ தான் பார்க்கிறீர்கள் பெண்கள். ஆனால், ஆண்களோ வந்தவுடன் விறுவிறுவென்று முன் வரிசைக்குத் தான் வருகிறார்கள். ஏன் இந்தப் பழக்கம்? ஆண்கள் அளவிற்கு நாம் படித்திருக்கிறோம், ஒரு வேலையைப் பெண் கையாளும் முறை

ஜெயா மாறன்

தனித்துவமாக இருக்கிறது, நிர்வாக இயக்குநர்கள் கலந்து கொள்ளும் முக்கியமான கூட்டங்களில் ஓரிரு பெண்கள் தான் இருக்கிறார்கள், அப்படி ஒரு பெண் இருந்தால் கூட, புதிய புதிய அணுகுமுறைகளைக் கொண்ட நல்ல முடிவுகளை எடுக்க முடிகிறது என்று ஆய்வுகள் சொல்கின்றன. இதெல்லாம் நம்முடைய பலமாக இருக்கும் பொழுது, நாம் ஏன் முன் வரத் தயங்குகிறோம்?" என்று கேட்டார் கெயில்.

கேட்டுவிட்டுப் பதிலையும் அவரே சொன்னார். "ஓர் ஆண் வேலையில் அடுத்தக் கட்டத்திற்குச் செல்லும் பொழுது, உயர் பதவி, அதிகச் சம்பளம் இவற்றை மட்டுமே பார்க்கிறார். ஆனால் ஒரு பெண் அடுத்தக் கட்டத்திற்குச் செல்லும் பொழுது, இந்த வேலைச் சூழல், பணிச்சுமை என் குடும்ப வாழ்க்கையை, பிள்ளை வளர்ப்பைப் பாதிக்குமா? பதவி உயர்வின் காரணமாக, குடும்பத்தை விட்டுவிட்டு அடிக்கடி பிற ஊர்களுக்குச் செல்ல வேண்டியிருந்தால் உறவுகளும் சமுதாயமும் பழி சொல்லி விடுமா? என்று ஒரு கட்டத்திற்குள் நின்று தான் அவள் யோசிக்க வேண்டியிருக்கிறது. ஆண் தன்னைத் தானாக (தனி மனிதனாக) முன்னிறுத்துகிறான். ஆனால், பெண் தன்னை ஒரு

குடும்பத்தின், சமுதாயத்தின் பிரதிநிதியாகவே முன்னிறுத்த வேண்டியிருக்கிறது. ஏற்கனவே பார்த்த மாத்திரத்தில் ஆண் புத்திசாலி என்றும், பெண் முட்டாள் என்றும் இன்றைய சமூகம் கூட நினைக்கிறது. ஒவ்வொரு வாய்ப்பிலும் பெண் தன்னை நிரூபிக்க வேண்டியிருக்கிறது. அப்படியிருக்க, நாம் ஒரு கட்டத்திற்குள் நின்று தயங்கித் தயங்கி நம்மை முன்னிறுத்தினால், கிடைக்கும் ஓரிரு வாய்ப்புகளும் ஆணுக்குத் தானே கிடைக்கும்? அதனால்தான் தலைமைப் பதவிகளில் பெண்கள் இன்னமும் அதிகமாக இல்லை", என்றார் கெயில்.



இனி நாம் சிந்திப்போம். திங்கள் முதல் வெள்ளி வரை வெளியூர் சென்று வேலை பார்த்து வரும் ஆணிடம், யாரும் எந்தக் கேள்வியும் கேட்பதில்லை. அவர் மனைவி உள்ளூரில் வேலை செய்து கொண்டு பிள்ளைகளையும் வளர்த்துக் கொண்டிருப்பார். ஆனால், பெண் வெளியூர் சென்று வேலை செய்வது தெரிந்த அடுத்த நொடி, பிள்ளைகளை யார் பார்த்துக் கொள்கிறார்கள்? என்ற கேள்வி வரும். அவனிடம் கேட்காத கேள்விகளை ஏன் அவளிடம் மட்டும் கேட்கிறோம். வாரம் முழுக்க வெளியூர் சென்றுவிட்டு வந்து வார இறுதியில் மட்டுமே ஒரு நல்ல கணவனாக, தந்தையாக ஓர் ஆணால் இருக்க முடியுமென்றால், அதே போல், வார இறுதியில் மட்டும் ஒரு நல்ல மனைவியாக/தாயாக ஒரு பெண்ணால் ஏன் இருக்க முடியாது? அவளால் இருக்க முடியாது என்று சமுதாயம் மட்டுமல்ல, அந்தப் பெண்ணே முடிவு செய்கிறாள். எந்நேரமும் நல்ல மனைவி / நல்ல தாய் என்ற பட்டத்தைக் கட்டிக்கொண்டே திரிய வேண்டியிருக்கிறது.

"என்ன வேண்டுமானாலும் படி. ஆனால், ஐந்து மணிக்கு வீட்டுக்கு வருவது போன்ற வேலையைத் தேர்ந்தெடு!" என்ற அறிவுரையோடு தான் நமக்கும் கல்வி தரப்பட்டது. மருத்துவரானால் கூட, பல் மருத்துவத் துறை, கண், மூக்கு, செவித் துறை போன்ற துறைகளில் அவசர சிகிச்சை போன்ற சிக்கல்கள் இல்லை என்பதால் அந்தத் துறைகளைப் பெண்கள் எடுப்பது தான் சிறந்தது என்ற அறிவுரையோடு தான் இன்றைய பெண்களுக்குக் கூட கல்வி தரப்படுகிறது. அதனால் தான் இன்னமும் பொறியியல், ஆய்வு போன்ற துறைகளில் பெண்கள் குறைவாக இருக்கிறார்கள். 2019-ஆம் ஆண்டின் அமெரிக்க மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் படி பொறியியல் துறையில் பெண்களின் பங்கு பதின்மூன்று விழுக்காடு தான்.

இந்த நிலை மாற வேண்டும். அவள் விரும்பியதைப் படிக்கும் பொழுது, விரும்பிய துறையை/வேலையைத் தேர்ந்தெடுக்கும் பொழுது அதற்கேற்றாற் போல் வாழ்விணையரைத் தேர்ந்தெடுக்க /குடும்பத்தை அமைத்துக் கொள்ள/ தனித்து வாழ அவளுக்குத் தெரியும். குடும்ப நிர்வாகத்திற்கு/பிள்ளை வளர்ப்பிற்கு ஏற்றார் போல் வேலையை மாற்றிக் கொள்ள, வேண்டுமானால் வேலையை விட, அவளுக்குத் தெரியும்! பெண்ணென்றால் சமைக்க வேண்டும், கட்டாயம் வாழ்விணையரோடு வாழ வேண்டும், குழந்தை பெற வேண்டும், நல்ல மனைவியாக, நல்ல அம்மாவாக இருக்க வேண்டும், அதற்கேற்றாற்போல் உன் விடுதலையை நீ பயன்படுத்த வேண்டும் என்று அவளைக் கட்டாயப் படுத்துவது எப்படி அவளுக்கான விடுதலையாகும்? பெண் விடுதலை, ஆண் விடுதலை போல எல்லையற்றதாக ஏன் இல்லை? அவளுக்கு விடுதலை என்று சொல்லிவிட்டு, அவளுக்கான முடிவுகளை நீங்களே எடுத்துவிட்டு, அவளைக் கொண்டு வந்து உங்கள் முடிவுகளுக்குள் செருகுவது எப்படி அவளின் விடுதலையாகும்? நீ இந்தக் கட்டுப்பாடுகளுக்குள் தான் சிந்திக்க வேண்டும் என்று சொல்வது, நீ சிந்திக்கவே கூடாது என்று சொன்னதை விடக் கொடுமையானது இல்லையா?

இந்த நூதனப் பெண் விடுதலையைத் தான் பூரணப் பெண் விடுதலை என்று இன்றைய பெண்கள் நம்புகிறார்கள். இதனால் தான் பெரிய பதவியில் இருக்கும் பெண்கள் கூட நான் நல்ல அம்மாவாக இல்லை என்று வருந்துகிறார்கள். என் குடும்பத்திற்காக என் வேலையை விட்டேன். பிள்ளையை நல்ல முறையில் வளர்த்தேன், என் குடும்பமே என் அடையாளம் என்று பெருமை கொள்கிறார்கள். இவையெல்லாம் சுய சிந்தனையாக, அன்பின் வெளிப்பாடாக இருந்தால் நல்லது. ஆனால், பெரும்பாலும் இவையெல்லாம் தன் சுயத்தை மறைத்து, சமுதாயத்திற்குப் பயந்து சொல்லப்படும் சொற்களாகவே உள்ளன.

சரி. சங்ககாலம் எப்படி இருந்தது? பல ஆண் புலவர்களும், கிட்டத்தட்ட நாற்பது பெண்பாற்

புலவர்களும் இருந்தார்களாம். ஆணாதிக்கச் சமூக மாகத்தான் இருந்திருக்கும். ஆனாலும் வெண்ணிப் பறந்தலைப் போரைப் பாடிய வெண்ணிக்குயத் தியாரை வைத்து அங்கே பெண் விடுதலை எப்படியிருந்தது என்று ஆய்கிறேன். பதின்ம வயது இளைஞன் கரிகால் பெருவளத்தானுக்கும், பாண்டியப் படையின் துணையுடன் வந்த சேர மன்னன் பெருஞ்சேரலாதனுக்கும் வெண்ணிப் பறந்தலையில் போர் நடந்தது. போரில் கரிகாலன் பெருவெற்றி பெற்றான். உலகமே கரிகாலனைப் புகழ்ந்தது. புகழ்வதைத் தவிர வேறொன்றுமில்லை என்று தான் எல்லோரும் நினைத்தார்கள். ஆனால், வெண்ணிக்குயத்தியார் மட்டும் போரில் நடந்தவற்றை நன்கு ஆய்ந்தார். பெருஞ்சேரலாதனின் நெஞ்சில் குத்திய வேல் முதுகு வழியாக வெளியே வர, நெஞ்சில் தான் வேல் குத்தியதென்றாலும் முதுகில் புண் பட்டதை அவமானமாக நினைத்து, பெருஞ்சேரலாதன் அதே நிலையில் போர்க் களத்திலேயே வடக்கிருந்து உயிர் துறந்த செய்தி தெரிய வந்தது. இவனையல்லவா பாட வேண்டும் என்று எண்ணினார் வெண்ணிக்குயத்தியார்.

நான் ஒரு பெண், இதைப் போய் அரசவையில் பாடலாமா? பாடினால், மன்னன் என்ன தண்டனை தருவான்? இந்தச் சமுதாயம் என்ன சொல்லும்? என்பன போன்ற எந்தச் சிந்தனையும் இல்லாமல் கரிகாலனிடமே போய், "கரிகாலா! நீ போரில் வென்றிருக்கலாம். ஆனால், நெஞ்சில் வேல் குத்திய போதும் போர்க்களத்தில் வடக்கிருந்து உயிர் துறந்தானே பெருஞ்சேரலாதன் அவன் தான் உன்னை விட நல்லவன்!" என்று வெற்றி பெற்றவனிடம் போய், தோற்றவனைப் புகழ்ந்து பாடினார். நேர்மையாகப் பாடினார். நீங்கள் சொன்னால் சரி! என்று கரிகாலனும் ஏற்றுக்கொண்டான்.

இப்படி, பின் விளைவுகளைப் பற்றிக் கவலைப் படாமல் மனதில் பட்டதை ஆண்களால் பேச முடியும் இன்று. பெண்களால் பேச முடியுமா என்றால் கேள்விக்குறி தான். ஆனால், சங்க காலத்தில் ஒரு பெண் பேசினார். அரசும் அதை ஏற்றுக்கொண்டது. அது தான் சமத்துவம். அந்த நிலை நிகழ்காலத்தில் இல்லை. சமுதாயமும் மாற வேண்டும். அரசும் ஆணுக்கும் பெண்ணுக்கும் சமமான சட்ட திட்டங்களைக் கொண்டு வர வேண்டும். இன்னும் செல்ல வேண்டிய தூரமிருக்கிறது.

◆

வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையின் 37 ஆவது தமிழ் விழா சிறக்க வாழ்த்துகள்!

யுவராஜ் முனியன் மற்றும் குடும்பத்தினர்

அசோக் ஆண்டப்பன் மற்றும் குடும்பத்தினர்

வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையின் 37 ஆவது தமிழ் விழா சிறக்க வாழ்த்துகள்!

கார்த்திக் கணபதி மற்றும்
குடும்பத்தினர்



ரமா ராஜசேகர் மற்றும் குடும்பத்தினர்

நாகராஜன் , மேனகா, கனிஷ்கா,
மற்றும் மிரித்விகா

சுரேஷ் ஸ்ரீபதி ராவ் மற்றும்
குடும்பத்தினர்

பிரசன்னா மற்றும் குடும்பத்தினர்

ரகு சந்தர் , பிரியா ரகு ,ரக்ஷனா ரகு

குறள் கூறும் அறம்

சிவலக்சுமி சிவலோகேஸ்வரன், வகுப்பு - 4, E M க்ரிம்மெர் எலிமெண்டரி பள்ளி, பிரீமான்ட், கலிஃபோர்னியா

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு"

என்று "அ" என்ற எழுத்தே எல்லா எழுத்துக்களுக்கும் முதலானது, அதுபோல உலகத்து உயிர்கள் எல்லாவற்றிற்கும் கடவுளே முதல்வனாக இருக்கிறார் என்று தமிழின் முதல் எழுத்தான அகரத்தைச் சிறப்பித்துக் கூறும் திருக்குறள் கூறும் அறம் பற்றிக் கூறப்போகின்றேன்.

சிவலக்சுமி
சிவலோகேஸ்வரன்

திருக்குறள் என்றாலே விரிகுடா பகுதியில் உள்ள குறள் கூடத்தால் ஆண்டுதோறும் நடத்தப்படும் திருக்குறள் போட்டி தான் நினைவுக்கு வருகிறது. நான்கு வயதில் 80 திருக்குறளை மனப்பாடம் செய்து ஒப்புவித்து முதல் பரிசை பெற்றேன். அத்துடன் நின்றுவிடாது ஒவ்வொரு வருடமும் திருக்குறளையும் அதன் பொருளையும் விளங்கி ஆர்வத்துடன் படித்து போட்டியில் பங்குபெறுகின்றேன், இவ்வாறாகத் திருக்குறளின் எண்ணிக்கையை அதிகரிக்கும்பொழுது எனக்குத் திருக்குறளின் மேல் உள்ள பற்று மிகவும் அதிகரித்துக் கொண்டே போகின்றது.

திருக்குறளானது இன, மத, மொழி வேறுபாடின்றி எல்லோராலும் விரும்பிப் படிக்கின்ற ஒரு நூலாகும். திருக்குறள் தமிழில் வெளிவந்த உலகப் புகழ் பெற்ற ஒரு இலக்கிய நூலாகும். திருவள்ளுவரால் இயற்றப்பட்ட திருக்குறளில் 1330 திருக்குறள்கள் உள்ளன. 1330 திருக்குறள்களும் 133 அதிகாரங்களாக வகுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு அதிகாரத்திலும் 10 திருக்குறள்கள் உள்ளன. உலகப் பொதுமறையான திருக்குறளானது அறம், பொருள், இன்பம் என மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

திருக்குறளில் திருவள்ளுவரால் கூறப்பட்ட அறக்கருத்துக்களையும், நான் திருக்குறளை எனது வாழ்க்கை நெறிக்கு எவ்வாறு எப்போது எங்கு பயன்படுத்துகின்றேன் என்றும் இப்பொழுது கூறப்போகின்றேன். ஆஸ்திரேலியாவில் பிறந்து அமெரிக்காவில் வாழ்கின்ற எனக்கும் என்னைப் போன்ற வெளிநாடுகளில் பிறந்த பல சிறுவர்களும் விரும்பிப்படிக்கும் அளவிற்குத் திருவள்ளுவரால் எழுதப்பட்ட திருக்குறள் பல அரிய அறக்கருத்துக்களை தன்னுள் உள்ளடக்கியுள்ளது. திருக்குறளை நான் படிக்கும் பொழுது முதலில் ஒவ்வொரு சொற்களையும் பிரித்து அதற்குத் திருவள்ளுவர் என்ன நோக்கத்துடன் பொருள்

எழுதியுள்ளார் எனப் படிக்கின்றேன். இவ்வாறு படிக்கும் பொழுது சிறுவர்களாகிய நாம் திருக்குறளின் பயன்பாட்டையும் அதில் கூறியுள்ள அறக்கருத்துக்களையும் அறிந்து கொள்கின்றோம்.

"செய் நன்றி" என்ற அதிகாரத்தில் எப்படி நன்றி மறவாமல் வாழ வேண்டும் என்ற அறக்கருத்தைத் திருவள்ளுவர் கூறியுள்ளார்.

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

என்ற திருக்குறளின் மூலம் எமக்கு ஒருவர் உதவி செய்தால் அதை நாங்கள் எமது வாழ்க்கை முழுவதும் மறக்கக்கூடாது என்ற அறக்கருத்தை கற்றுக் கொண்டேன்.

பொறுத்தார் பூமி ஆள்வார் என்ற வாசகத்திற்கு அமைய மனிதர்களிடம் உள்ள உயர்ந்த பண்பான பொறுமை பேணுதலைத்திருக்குறளில்பொறையுடமை என்ற அதிகாரத்தில் திருவள்ளுவர் விளக்கியுள்ளார்.

சுரேஷ் செல்வராஜ் மற்றும் குடும்பத்தினர்

அன்பு, அடக்கம், வாய்மை போன்ற நற்பண்பு களில் பொறுமையே மேலாகப்போற்றப்படுகிறது.

"ஒறுத்தார்க்கு ஒருநாளே இன்பம் பொறுத்தார்க்கு
பொன்றுந் துணையும் புகழ்"

என்ற திருக்குறளின் மூலம் மற்றவர்கள் செய்கின்ற பிழையைப் பொறுத்துப் போகாதவர்களுக்கு அந்த ஒரு நாள் மட்டும் தான் இன்பம் ஆனால் மற்றவர்கள் செய்கின்ற பிழையைப் பொறுத்துப் போகின்றவர்களுக்கு உலகம் அழிகின்ற வரைக்கும் புகழ் நிலைத்து நிற்கும் என்று பொறுமையின் புகழைத் திருவள்ளுவர் கூறியுள்ளார். இவ்வாறான நல்ல அறக்கருத்துக்களைத் திருக்குறளில் படிப்பதன் மூலம் நான் எனது வாழ்க்கையில் எவ்வாறு பொறுமையுடன்இருப்பதுஎனக்கற்றுக்கொண்டேன்.

திருவள்ளுவர் வாய்மை என்ற அதிகாரத்தில் கூறியுள்ள சொன்ன சொல்லைத் தவறாமல் கடைப்பிடித்து ஒழுகுதல், நிறைவேற்றுதல் போன்ற ஒழுக்கங்கள் சிறுவர்களாகிய எம்மை வாழ்க்கையில் ஒரு முழு மனிதனாக உருவாக்குவதற்கு வழிகாட்டுகிறது.

"உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்து ளெல்லாம் உளன்"

என்ற திருக்குறளின் மூலம் திருவள்ளுவர் உண்மையின் உயர்வை உணர்த்தி, நாமும் எமது உள்ளம் அறிந்த வகையில் பொய் சொல்லாமல் இருந் தால் உலகத்தில் உள்ள எல்லோராலும் போற்றப்படுவோம் என்ற அறக்கருத்தை வலியுறுத்தி நிற்கின்றார்.

சிறுவர்களாகிய நாம் எப்படி நல்ல நண்பர்களை ஆராய்ந்து பார்த்த பின்பே எமது நண்பர்களாகச் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்பதை கற்றுத் தருவதாகக் கீழ்க்காணும் திருக்குறள் அமைகிறது.

"ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை
தான்சாம் துயரம் தரும்"

நாங்கள் ஆராயாமல் ஒருவரோடு நட்பை ஏற்படுத்திக்கொள்கின்ற நட்பு ஒருவரின் வாழ்க்கை அழியும் அளவிற்குத் துயரத்தை ஏற்படுத்திவிடும் என்பதை இத்திருக்குறள் கற்பிக்கின்றது. திருக்குறளை நாமும் படித்து அதில் கூறப்பட்டுள்ள நல்ல அறங்களான நன்றி மறவாமை, பொறுமை, வாய்மை, நல்ல நட்பு போன்ற நற்பண்புகளை இளமையிலே கடைப்பிடித்து நல்லவர்களாக வாழப் பழக வேண்டும். ◆

வள்ளுவன் வழி விருந்தோம்பல்

சிவனுஜா சிவலோகேஸ்வரன், ஆறாம் வகுப்பு, ஜான் எம் ஹார்னெர் மிடில் பள்ளி, பிரீமான்ட், கலிபோர்னியா

தமிழர்களின் பண்புகளில் சிறந்த பண்பான விருந்தோம்பலைப் பற்றி வள்ளுவனின் திருக்குறள் மூலம் நாம் கற்றுக் கொள்ளப் போகின்றோம். விருந்தோம்பல் என்பது வீட்டிற்கு வரும் விருந்தாளியை நாம் முகமலர்ச்சியுடன் அன்பாக வரவேற்று அவர்களுக்கு உணவு அளித்து அந்த விருந்தினர்களைக் கடவுளுக்குச் சமமாகப் போற்ற வேண்டும் என்று திருவள்ளுவர் கூறியுள்ளார்.

"இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம்
விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு."

என்ற திருக்குறளின் மூலம் விருந்தினருக்கு உபகாரம் செய்வதற்காகவே இல்வாழ்க்கையை நடத்துகின்றோம் என்று விருந்தின் பெருமையைச் சொல்லி விருந்தோம்பல் என்ற அதிகாரத்தைத் திருவள்ளுவர் ஆரம்பித்துள்ளார்.

எங்களுக்கு அமிர்தமே கிடைத்தாலும் விருந்தினரை வைத்துக் கொண்டு ரகசியமாக உண்ணக்கூடாது என்று

"விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று."

சிவனுஜா சிவலோகேஸ்வரன்

என்ற திருக்குறளின் மூலம் விருந்தோம்பலின் முக்கியத்தை எமக்குக் கற்பித்துள்ளார்.

ஒவ்வொரு நாளும் வீட்டிற்கு வருகின்ற விருந்தினரைக் காத்து அவர் மனம் நோகாது விருந்தளிப்பதே உண்மையான விருந்தோம்பல் என்பதை

"வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுதல் இன்று"

என்ற திருக்குறளின் மூலம் நான் அறிந்துகொண்டேன்.

ஒரு நாளைக்கு விருந்தோம்பல் செய்வது வள்ளுவன் காட்டும் விருந்தோம்பல் ஆகாது. நாள்தோறும் விருந்தினரை உபசரித்து உணவளிப்பவரது வாழ்க்கையில் வறுமை வராது என்று பொய்யாமொழிப் புலவர் திருவள்ளுவர் உறுதியாக விருந்தோம்பல் என்ற அதிகாரத்தின் மூலம் சிறுவர்களுக்குக் கூறியுள்ளார்.

"அகனமர்ந்து செய்யாள் உறையும் முகனமர்ந்து
நல்விருந் தோம்புவான் இல்"

என்ற திருக்குறளின் மூலம் செல்வத்துக்கு உரியவளான திருமகள் மனநிறையுடன் விருந்தோம்பல்

செய்பவரின் வீட்டில் முகமலர்ச்சியுடன் வந்து உறைவாள் என்று கூறி விருந்தோம்பலின் மேன்மையை திருவள்ளுவர் சிறப்பித்துக் கூறியுள்ளார்.

"வித்தும் இடல்வேண்டும் கொல்லோ விருந்தோம்பி
மிச்சில் மிசைவான் புலம்"

இந்த திருக்குறளின் மூலம் திருவள்ளுவர் விருந்தோம்பல் செய்பவரது நிலத்தில் வித்து விதைக்காமலே பயிர் விளையும் என்று விளக்கியுள்ளார்.

"செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு"

என்ற திருக்குறளின் மூலம் சிறப்பாக விருந்தினரை உபசரித்து விட்டு இனியும் ஒரு விருந்தினருக்காகக் காத்திருப்பவனுக்கு தேவலோகத்தில் நல்விருந்து செய்வதற்குத் தேவர்கள் காத்திருப்பார்கள் என்று விருந்தோம்பலின் சிறப்பை மேலும் சிறப்பித்து சிறுவர்களாகிய எமக்கு உயர்த்திக்காட்டுகிறார்.

"இனைத்துணைத் தென்பதொன் றில்லை விருந்தின்
துணைத்துணை வேள்விப் பயன்"

இந்த திருக்குறளின் மூலம் திருவள்ளுவர்,

விருந்தினரைப் பேணுவதும் ஒரு யாகமே. அதைச் செய்வதால் வரும் நன்மை இவ்வளவு என்று அளவிட முடியாது; வரும் விருந்தினரின் தகுதி அளவுதான் நன்மையின் அளவாகும் என்று விருந்தோம்பல் செய்வதன் பயனை விளக்கியுள்ளார்.

"பரிந்தோம்பிப் பற்றற்றேம் என்பர் விருந்தோம்பி
வேள்வி தலைப்படா தார்"

சிறப்புமிக்க விருந்தோம்பலைப் பொருள் உள்ள போது சிறப்பாகச் செய்யாதவர்கள், கடினப்பட்டுச் சேர்த்த செல்வம் எல்லாம் இல்லாமல் போகும்போது, இப்போது எந்தத் துணையும் இல்லாதவராய்ப் போனோமே என்று வருந்துவர் என்று திருவள்ளுவர் மேற்கூறிய திருக்குறளின் மூலம் சுட்டிக் காட்டியுள்ளார்.

"உடைமையுள் இன்மை விருந்தோம்பல் ஓம்பா
மடமை மடவார்கண் உண்டு"

விருந்தோம்பல் செய்யாத அறிவில்லாத தன்மை எப்படி என்றால் பொருள் செல்வம் இருந்தும் இல்லாதவர் போல மதிக்கப்படுவர் என்று நாம் பொருள் இருந்தால் விருந்தோம்பி மேலும் பொருள் செல்வத்தைச் சேர்க்க வேண்டும் என்று விருந்தோம்பலின் அறத்தன்மையை, இந்த திருக்குறளின் மூலம் எமக்கு வெளிப்படுத்தியுள்ளார்.

விருந்தினரை நாங்கள் எவ்வாறு முகமலர்ச்சியுடன் வரவேற்க வேண்டும் என்பதைப் பின்வரும் திருக்குறளில் திருவள்ளுவர் விளக்கியுள்ளார். இங்கு அனிச்சம் பூவை ஒப்பிட்டு அனிச்சம் பூ எப்படி மணந்தவுடன் வாடி விடுமோ அதுபோல இன்முகத்துடன் வரவேற்று விருந்தோம்பல் செய்யாவிடின் விருந்தினரின் முகமும் அனிச்சம் பூ போல வாடித்துன்பப்படுவர் என்று விருந்தோம்பலின் முறையை திருவள்ளுவர் கூறியுள்ளார்.

"மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து".

விருந்தோம்பல் என்ற அதிகாரத்தின் 10 குறள் களின் மூலம் திருவள்ளுவர் எமக்கு விருந்தோம்பலின் சிறப்பையும், விருந்தோம்பல் செய்யும் முறையையும் விருந்தோம்பலால் எமக்குக் கிடைக்கும் நன்மையையும், விருந்தோம்பல் செய்யாவிடின் எமக்கு ஏற்படும் தீமையையும் சிறப்பாக வலியுறுத்திக்காட்டியுள்ளார். விருந்தோம்பல் என்ற அதிகாரத்தைப் படித்து வள்ளுவன் வழி நாமும் தக்கவிருந்தோம்பல் செய்வோம்.

◆

கொரியாவை ஆண்ட தமிழச்சி

வீரா கிருத்திகா கந்தசாமி, நியூயார்க் தமிழ்க் கல்வி கழகம்

2001-ஆம் ஆண்டு, ஹியோ உவாங் ஓக் (Heo Hwang ok) என்கின்ற செம்பவளத்திற்கு உத்தரப்பிரதேசத்தில் உள்ள அயோத்தியில் ஒரு நினைவகம் கட்டப்பட்டிருக்கிறது. அதைத் தொடர்ந்து இந்தியாவிற்கு வரும் தென் கொரியா மக்களின் எண்ணிக்கை இரண்டு மடங்காக உயர்ந்திருக்கிறது. அங்கே செம்பவளம், குலம் காக்கும் குலதெய்வமாக வணங்கப்படுகின்றாள். கொரிய மக்கள் ஏன் ஒரு இந்தியப் பெண்ணை கடவுளாக வணங்க வேண்டும்? இவருக்கும் நம் தமிழ்நாட்டிற்கும் என்ன தொடர்பு?

வீரா கிருத்திகா கந்தசாமி

சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்பு செம்பவளம் என்கின்ற ஒரு 16 வயது அரசிளங்குமரி "ஆயுதா" என்கின்ற நாட்டில் வாழ்ந்து வந்தார். "ஆயுதா" என்பது பண்டைய தமிழ் நாட்டை ஆண்ட பாண்டியப் பேரரசின் நாடு ஆகும். தற்போது இந்த இடம் தென் தமிழகத்தில் உள்ள கன்னியாகுமரியாக இருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

செம்பவளம் தென் கொரியாவிற்குப் பயணம்:

கடல் சார் வணிகத்தில் கொடிகட்டிப் பறந்த பாண்டியநாடு, உலகின் பிற நாடுகளுடன் நல்ல வர்த்தக உறவைக் கொண்டிருந்தனர். ஒரு நாள் இளவரசி செம்பவளதின் கனவில் கொரியா மன்னன் சுரோ (Suro) தோன்ற, அவள் பெற்றோரிடம் தென் கொரியா செல்ல அனுமதி கேட்டாள். பெற்றோரும் பச்சைக் கொடி காட்ட , செம்பவளம் தனது இராசியத்தைச் சேர்ந்த 40 அடிமைகள் மற்றும் நாட்டு மக்கள் சிலருடன் கொரியாவுக்குச் சென்றார்.

காய (இன்றைய கிம்ஹே - Gimhe, South korea) நாட்டு மக்கள், தாங்கள் கொண்டுவரும் கன்னிப் பெண்களில் இருந்து ஒரு மனைவியைத் தேர்ந்தெடுக்கும் படி அவரிடம் கோரிக்கை விடுத்தனர். தனது மனைவியைத் தேர்ந்தெடுக்கும் உரிமை தனது பெற்றோருக்கும் மற்றும் அது சொர்க்கத்தால் கட்டளையிடப்பட வேண்டும் என்று சுரோ கூறினார். ஆச்சரியப்படும் விதமாக பரலோக இறைவன் அவர் பெற்றோரின் கனவில் தோன்றி, "ஆமை வழித்தடங்களைப் பின்பற்றி உலகின் அத்தனை நாடுகளுக்கும் கடல் வழியாகச் சென்று திரும்பி வந்த "திரை மீளர்கள்" புதல்வியை அரசன் இராணியாகக் காண்பான்" என்று கூறினார்.

செம்பவளம் திருமணத்திற்குப் பின் தன் பெயரை ஹியோ உவாங் ஓக் என்று மாற்றிக்கொண்டார். இது 13-ஆம் நூற்றாண்டில் ஒரு புத்த துறவியால் எழுதப்பட்ட கொரியா பண்டைய புத்தகமான "சம்குக் யூசா - Samguk Yusa"-இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

செம்பவளம் வம்சாவளியினர்:

செம்பவளத்துக்கும் சுரோவுக்கும் 12 குழந்தைகள். தென் கொரியா மக்கள்தொகையில் கிட்டத்தட்ட 10% அதாவது 6 கோடி மக்கள் கிம்ஹே கிம், ஹியோ மற்றும் லீ குலங்கள், இளவரசி செம்பவளம் மற்றும் சுரோவின் நேரடி வழித்தோன்றல்கள் என கண்டறியப்பட்டுள்ளன.

செம்பவளம் காயவிற்கு வந்த நாளிலிருந்து பலர் அவளிடம், அவள் எந்நாட்டவள் என்று கேட்டனர்.

"நான் ஆயுத இராசியத்தில் இருந்து வந்தவள்" என்று கூறியுள்ளார்.

ஆயுதா மற்றும் அயோத்தியா:

"ஆயுத இராச்சியம்" என்பது பண்டைய தமிழ்நாட்டின் பாண்டிய பேரரசை சேர்ந்த "ஆய் இராச்சியம்" என்பதைக் குறிக்கிறது. ஆனால் சிலர் வட இந்தியாவில் உள்ள அயோத்தியுடன் ஆயுத இராசியத்தை தவறாக இணைத்தனர்.

"சம்குக் யூசா" எழுதப்பட்ட 13-ஆம் நூற்றாண்டில் உத்தரப் பிரதேசத்தில் உள்ள அயோத்தியின் பண்டைய பெயர் சாகேதா. அங்கு கடல் அல்லது துறைமுகப் பகுதி எதுவும் இல்லை. அதனால் இங்கிருந்து செம்பவளம் சென்றிருக்க முடியாது .

இளவரசி செம்பவளம் கையில் வைத்திருந்த திரிசூலத்தில் இரட்டை மீன்களின் சின்னம் இருந்ததாகக் கூறப்படுகிறது. இது பாண்டிய இராசியம் அவர்களின் கொடிகள், நாணயங்கள் மற்றும் சின்னங்களிலும் இருக்கின்றது. எனவே செம்பவளம் பாண்டிய நாட்டுக்குச் சொந்தமானவர் என்பது நிரூபணமாகிறது. செம்பவளம் என்பது தூய தமிழ்ப் பெயர், அதாவது சிவப்பு பவளம். இதேபோல், அவரது கொரியப் பெயரான "ஹியோ ஹ்வாங் ஓகே" அதே பொருளைப் பகிர்ந்து கொள்கிறது. செம்பவளமும் அவளது அடிமைகளும் கடல் பேரழிவுகளில் இருந்து அவர்களைக் காப்பாற்ற ஏழு கற்களைக் கொண்டு வந்தனர். இன்னும் அந்த கற்கள் கொரியாவில் உள்ள அவரது நினைவு இடத்திற்கு அருகில் வைக்கப்பட்டுள்ளன. இந்த பாரம்பரியம் பண்டைய தமிழகத்தில் "நடுகல்" என்று அழைக்கப் படுகிறது. தமிழகம் (பண்டைய தமிழ்நாடு) தவிர இந்தியாவில் எங்கும் இந்த நடைமுறையை காண முடியாது.கொரியா மக்களின் உணவுப் பழக்கமும் தமிழர்களின் உணவுப் பழக்கவழக்கங்களுடன் ஒத்து போகின்றது. இருவரும் பெரிய அளவில் அரிசியை உணவாக எடுத்துக்கொள்பவர்கள்.

மேலும் கொரியாவில், அவர்கள் தங்கள் அம்மா மற்றும் அப்பாவை, அம்மா என்றும் அப்பா என்றும் அழைக்கிறார்கள் (அதாவது தமிழ் மொழியிலும் அம்மா மற்றும் அப்பா என்று அர்த்தம்). கொரிய மொழியிலும் தமிழிலும் ஒரே மாதிரியான 500 சொற்களை ஆராய்ச்சியாளர்கள் கண்டு பிடித்துள்ளனர்.

முத்து வேட்டை மற்றும் வளர்ப்பு தொழில் அவர்கள் இருவருக்கும் (தமிழர்கள் மற்றும் கொரியர்கள்) இடையே ஒரு தனித்துவமான ஒற்றுமை. பவள ஆபரணத் தொழிலில், முத்து வேட்டையாடுதல் சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்பு பண்டைய தமிழகத்தில் மட்டுமே தெரிந்திருந்தன. இன்றும் தமிழகம் மற்றும் தென் கொரியாவில் பெண்கள் ஆழ்கடல் முத்து வேட்டையில் ஈடுபட்டு வருகின்றனர்.

தமிழகத்தில் கும்மி பாட்டு என்பது பாரம்பரிய நடனங்களில் ஒன்று. அதே போல் கொரியாவிலும் இன்றும் "கங்காங்சுள்ளெ" (Ganggangsulle) என்னும் பிரபலமான நடனம் பின்பற்றப்படுகிறது. இதில் ஒற்றுமை என்னவென்றால் "கும்மி " என்பது பொங்கல் அறுவடையின் போது பெண்களால் சுற்றி வட்டமாக நின்று கைகளைத் தட்டி ஆடப்படும். இதை அப்படியே பின்பற்றும் விதமாக கொரியாவிலும் அறுவடைத் திருவிழாவின் போது கங்காங்சுள்ளெ (Ganggangsulle -கும்மி நடனம்) பெண்கள் வட்டமாக நின்று கைகளைத் தட்டி ஆடி மகிழ்வார்கள்.

செம்பவளம் சூரிரத்னவாக மாறியது என்?

கரக்குலத்தின் தெய்வமாக போற்றப்படும் செம்பவளம் உத்தரப்பிரதேசத்தில் உள்ள அயோத்தியில், சரயு நதிக்கரையோரத்தில் பிறந்ததால் இவருக்கு சூரிரத்னா என்று பெயர் சூட்டினார் என்று சில ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

விழித்தெழு தமிழனே:

ஒரு தமிழ் இளவரசி கொரியாவின் கடவுளாக வணங்கப்படுவது எந்த அளவிற்கு பெருமையாக உணரப்படவேண்டிய ஒன்றோ அதை விட இன்னும் பல மடங்கு நாம் வெட்கப்படவேண்டிய விடயம் என்னவென்றால் நம்மில் பலருக்கும் இந்த வரலாறு தெரியாது என்பதே. நம் வரலாற்றை நாம் தேடிப் பார்த்து ஆராயாதவரை இப்படித்தான் நம் ஒவ்வொரு வரலாற்று பெருமையையும் மற்றவர்கள் தனது என்று உரிமை கொண்டாடுவார்கள். நம் வரலாற்றின் பெருமை நமக்கு வேண்டும் எனில் நாமே அதை வெளிக்கொண்டுவர வேண்டும். நம் உரிமைக்காக நாம்தான் போராட வேண்டும்.

நம் வரலாற்றின் மகிமையும் பெருமையும் கட்டாயம் ஒவ்வொரு தமிழின மக்களும் பெருமையாகக் கொண்டிருக்க வேண்டும். செம்பவளம் மட்டுமின்றி இன்னும் நாம் மறந்து விட்ட எத்தனையோ வரலாறு நம்மிலும் நம் மண்ணிலும் மறைந்து உள்ளது.

◆



சிறுகதை எழுத்தாளர் கு.அழகிரிசாமியின் படைப்புலகம் ஓர் அலசல்

நாஞ்சில் இ. பீற்றர் (வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவையின் முன்னாள் தலைவர்)

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் நடத்திய நூற்றாண்டு கண்ட சாகித்திய அகாதமி விருது பெற்ற எழுத்தாளர் கு. அழகிரிசாமியின் கதைகள் குறித்த 'நாளும் ஒரு கதை' என்ற இணையவழித் தொடர் நிகழ்ச்சியின் வழியாக அன்னாரது 111 சிறுகதைகளையும் படித்தும், கதை சொல்லிகளால் கேட்டும் பயனடைந்தோம். அன்பளிப்பு மற்றும் குமாரபுரம் ஸ்டேசன் என்ற இரண்டு கதைகளைக் கூறி திரு. வீ.ப. ஜெயசீலன் I.A.S., அவர்கள் 2023 டிசம்பர் மாதம் மூன்றாம் நாள் இந்த நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்தார். இந்தக் கட்டுரை எழுதும்போது 109-ஆவது நிகழ்ச்சி நடந்துவருகிறது. ஒவ்வொரு நாளும் கதையைக் கேட்டபின்பு விரிவான கலந்துரையாடல் நடைபெறும். 'நாளும் ஒரு கதை', நிகழ்ச்சியில் தவறாது கலந்து கொண்டதன் விளைவே இந்தக் கட்டுரை.

நாஞ்சில் இ. பீற்றர்

கு. அழகிரிசாமி இன்றைய சிறுகதை எழுத்தாளர்களுக்கு முன்னோடியாகத் திகழ்பவர் என்றால் மிகையாகாது. புதுமைப்பித்தனுக்குப் பின் தமிழ்ச் சிறுகதைத் தளத்தில் அதிகம் கொண்டாடப் படுபவர் அவர். அவருடைய கதைகள், அவர் பிறந்த கரிசல் மண்ணான திருநெல்வேலியையும் அவர் வாழ்ந்த கால மக்களையும் நன்கு பதிவு செய்துள்ளன. அவரது கதைகளில் ஆழமான மனித நேயத்தைக் காண முடியும்.

அவரது கதைகள் தமிழ் இலக்கியத்திற்குக் கிடைத்த கொடை எனலாம். சிறந்த சிறுகதை எழுத்தாளர் களில் ஒருவரும், இலக்கியத்தின் அனைத்துக்களங்களிலும் தடம் பதித்தவருமான கு. அழகிரிசாமி அவர்கள், தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டியை அடுத்த இடைசெவல் கிராமத்தில் செப்டம்பர் 23, 1923-இல் பிறந்தார். எழுத்தாளர்கள் கி.ராஜ நாராயணன், வல்லிக்கண்ணன், தொ. மு. சி. இரகுநாதன், புதுமைப்பித்தன் ஆகியோர் இவரது சமகால எழுத்தாளர்கள். முதன்முதலாக இவர் எழுதிய 'உறக்கம் கொள்ளுமா?' என்ற கதை 'ஆனந்த போதினி' (1943) என்னும் மாத இதழில் வெளிவந்தது. சார்பதிவாளர் அலுவலகத்தில் கிடைத்த அரசு வேலையை விட்டுவிட்டு, எழுத்துமீது கொண்ட ஆர்வத்தால் சென்னைக்கு வந்தவர், 'ஆனந்த

அழகிரிசாமியின் சிறுகதை பட்டியல்

1.உறக்கம் கொள்ளுமா? 2.இரவு 3.கவியும் காதலும் 4.வனஜும் 5.விதவை 6.பைரவி 7.வள்ளியம்மையின் அதிர்ஷ்டம் 8.வள்ளியின் வாழ்க்கை 9.பித்தளை வளையல் 10.குழந்தையின் தியாகம் 11.முருங்கைமர மோகினி 12.மனசும் கல்லும் 13.சுப்பையாத் தேவரின் கனவு 14.மனிதக்கடை சரசுவதி 15.வெந்தழலால் வேகாது 16.தேவையும் தெய்வமும் 17.விட்ட குறை 18.தர்ம ராஜ்யம் 19.ஏமாற்றம் 20.மீனா 21.ரச விகாரம் 22.காடாறு மாதம் 23.சிரிக்கவில்லை 24.திரிபுரம் 25.தவப்பயன் 26.ஒட்டப் பந்தயம் 27.17ஆம் நம்பர் வீட்டு நாய் 28.உலகம் யாருக்கு? 29.ராஜா வந்திருக்கிறார் 30.சத்தியவான் 31.வெறும் நாய் 32.சாப்பிட்ட கடன் 33.தகப்பனும் மகனும் 34.இரண்டு பெண்கள் 35.அன்பளிப்பு 36.காதல் போட்டி 37.இரண்டு ஆண்கள் 38. கல்யாணகிருஷ்ணன் 39.பாம்புக் குட்டி 40.பாலம்மாள் கதை 41.பார்த்தது 42.பெரிய மனுஷி 43.திரிவேணி 44.பட்டுச் சொக்காய் 45.அழகம்மாள் 46.புது உலகம் 47.காலகண்டி 48.ஆண் மகன் 49.மூல காரணம் 50.வாத்தியாரம்மாள் 51.மாறுதல் 52.ஞாபகார்த்தம் 53.ஜாதியாசாரம் 54.ஆதாரம் இருக்கிறதா? 55.கிழவியின் லட்சியம் 56.தம்பி ராமையா 57.கய ரூபம் 58.இரு சகோதரர்கள் 59.இதுவும் போச்சு சிவசிவா! 60.இருவர் கண்ட ஒரே கனவு 61.வசந்தாவின் தந்தை 62.தெய்வம் பிறந்தது 63.பேதமை 64.குமாரபுரம் ஸ்டேஷன் 65.சந்திப்பு 66.இரண்டு கணக்குகள் 67.நல்லவன் 68.சொல்லும் பொருளும் 69.காதல் பிரச்சினை 70.பெருமாள் எழுவில்லை! 71.தரிசனம் 72.மனப்பால் 73.சிங்கப்பூர் சென்ற மகன் 74.காற்று 75.கார் வாங்கிய சுந்தரம் 76.அக்கினி கவசம் 77.கற்பக விருட்சம் 78.யாருக்குக் கட்டிய வீடு? 79.திருவொற்றியூர் வல்லி 80.விட்ட குறையைத் தொட்ட குறை 81.அழகின் விலை 82.ஒரு மாத வீவு 83.சரஸ்வதி பூஜை 84.தியாகம் 85.புரட்சி எழுத்தாளரின் கதாநாயகி 86.ஒருவன் இருக்கிறான் 87.வரம் வாங்கியவர் 88.தேவ ஜீவனம் 89.போலி 90.அபார ஞாபகம் 91.எங்கிருந்தோ வந்தார் 92.வரப்பிரசாதம் 93.பெரிய பேய் 94.மற்றொரு பயிற்சி 95.தீ விபத்து 96.புத்தி 97.அதிருப்தி 98.தன்னையறிந்தவர் 99.கண்ணம்மா 100.செவிசாய்க்க ஒருவன் 101.புன்னகை 102.புதிய ராஜா 103.சிறுமைத் கதை 104.பங்களாத்தின் தற்கொலை 105.முகக் கனை 106.நிலைக்கண்ணாடி 107.வளையல்காரன் 108.மன்க்கோட்டையும் ஏமாற்றமும் 109.வழக்கி விழுந்த சகோதரி 110.பிரேமாவின் தற்கொலை 111. பிரக்ஞை

போதினி' மாத இதழில் உதவி ஆசிரியராகச் சேர்ந்தார். 1944 முதல் 1952 வரை சென்னையில் 'பிரசண்ட விகடன்', 'தமிழ்மணி', 'சக்தி' ஆகிய பத்திரிகைகளில் ஆசிரியராகப் பணியாற்றினார்.

மலேசியாவில் பணி

'சக்தி' இதழில் பணியாற்றிய பிறகு ஐந்தாண்டுகள் மலேசியா (1952-1957) சென்று, மலேசியா தமிழ்நேசன் இதழின் ஆசிரியராகப் பணியாற்றினார். 1955-ஆம் ஆண்டு கு.அழகிரிசாமிக்கும், சீதாலட்சுமிக்கும் மலேசியாவில் திருமணம் நடைபெற்றது. 1957-இல் மனைவியுடனும் மகனுடனும் தமிழ்நாட்டுக்குத் திரும்பிய அவர், 1960-ஆம் ஆண்டு வரை காந்தி நூல் வெளியீட்டுக் கழகத்தில் மொழிபெயர்ப்பாளராகப்



பணியாற்றினார். பிறகு "நவசக்தி' நாளிதழில் 1965 வரை பணியில் இருந்த காலத்தில்தான் அவர் "கவிச்சக்ரவர்த்தி' என்ற வரலாற்று நாடகத்தை எழுதினார். அந்த நாடகம் அவருக்குப் பெயரையும் புகழையும் பெற்றுத்தந்தது.

கு. அழகிரிசாமியின் பன்முகத் தன்மை

கு. அழகிரிசாமி பல இலக்கிய வகைகளைக் கையாண்டு, தம் இலக்கியப் படைப்பாளுமையை வெளிப்படுத்தி, சிறுகதை ஆசிரியர், நாவலாசிரியர், நாடக ஆசிரியர், மொழிபெயர்ப்பாளர், பதிப்பாளர், கட்டுரையாளர், இதழாசிரியர், உரையாசிரியர் என்று பல பரிமாணங்களைக் கண்டவர். இவற்றைத் தவிர ஓவியம், கவிதை, கீர்த்தனை, பதங்கள் இவற்றிலும் தேர்ந்தவராக விளங்கினார். இசையில் கு. அழகிரி சாமிக்கு விருப்பம் அதிகம். நாதஸ்வரக் கலைஞர் காருகுறிச்சி அருணாசலம், இசையறிஞர் விளாத்தி குளம் சுவாமிகள் ஆகியோருடன் தொடர்பிலிருந்து மரபிசை கற்றுக்கொண்டார். தமிழில் இசைப்பாடல்களை எழுதிய அவர், வழக்கொழிந்து போன இசைப்பாடல்களைத் தேடித் தொகுப்பதில் ஈடுபட்டார். கர்நாடக இசையை முறையாகக் கற்றுக் கொண்டுள்ளார். தியாகராஜர் கீர்த்தனைகளின்மீது அளவற்ற பற்றுக் கொண்டவர். அவர் வாழ்வினை அடிப்படையாகக் கொண்ட திரிவேணி என்ற சிறுகதைப் படைப்பாக்கம்தான் அவர் பெயரை நிலைநாட்டியது. இதழ்களில் பணியில் சேர்ந்தபின் வெவ்வேறு பெயர்களில் எழுதினார். சிறுகதைகளே அழகிரிசாமியின் முதன்மையான இலக்கியச் சாதனைகள்! கல்கி முதலிய இதழ்களில் தொடர்கதைகளும் எழுதியுள்ளார்.

மொழியாக்கங்கள்

மாக்ஸிம் கார்க்கியின் "அமெரிக்காவிலே", "லெனினுடன் சில நாட்கள்" ஆகிய நூல்களை 1950-இல் மொழியாக்கம் செய்தார். பின்னர் 1957 முதல் 1960 வரை மாக்சிம் கார்க்கியின் "யுத்தம் வேண்டாம்", "விரோதி பணியா விட்டால்" ஆகிய கட்டுரை நூல்களை மொழியாக்கம் செய்தார். லாரன்ஸ் பன்யனின் "அக்பர்", குடியரசுத்தலைவர் இராஜேந்திர பிரசாத்தின் "இந்திய ஒருமைப்பாடு" ஆகிய நூல்களையும் மொழியாக்கம் செய்தார். "ராஜா வந்திருக்கிறார்" என்ற இவரது கதை பல இந்திய மொழிகளிலும் இரஷ்ய மொழியிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

நாடகங்கள், கடிதங்கள்

கு. அழகிரிசாமி எழுதிய "கவிச்சக்கரவர்த்தி கம்பர்" என்னும் நாடகம் எஸ்.வி.சகஸ்ரநாமம் குழுவினரால் மேடையேற்றப்பட்டது. "வெந்தழல் வேகாது", "திருவொற்றியூர் வல்லி", "காலகண்டி" போன்ற சிறுகதைகளில் சில புராணகால நிகழ்ச்சிகளைத் தற்காலத்தில் கொண்டுவந்து நிலை நிறுத்தியுள்ளது சிறப்பாகும். அவர் மலேசியாவிலிருந்தபோது எட்டயபுரம் கடிகை நமசிவாய புலவர் இயற்றிய 'வல்லி பரதம்', 'முக்கூடற்பள்ளு' ஆகிய இசைநாடகங்களைத் தயாரித்தார்; தியாகராஜர், பாரதியார், கவிமணி தேசிகவினாயகம் பிள்ளை போன்றோரின் பாடல்கள் சிலவற்றுக்கு இசையமைத்துள்ளார். கூடவே அண்ணாமலை ரெட்டியாரின் 'காவடிச்சிந்தையும்' பதிப்பித்துள்ளார். கடிதங்கள் எழுதுவதை ஓர் இலக்கியக் கடமையாகவே செய்துவந்தவர் கு. அழகிரிசாமி. அவர் கி.ராஜ நாராயணனுக்கு எழுதிய கடிதங்களும், சுந்தர ராமசாமிக்கு எழுதிய கடிதங்களும் தொகுத்து வெளியிடப்பட்டுள்ளன.

தமிழ் இலக்கியத்தில் கு. அழகிரிசாமியின் இடம்

கு. அழகிரிசாமியின் பெரும்பாலான கதைகள் வாழ்க்கையை வெளிப்படையாகச் சொல்வனவாக, தன்னியல்பாகவே மானுட நேயம் என்று சொல்லப்படும் அறநிலையின் உச்சம் தொடுவனவாக அமைந்துள்ளன. இவரது கதைகளில் எளிய மக்கள் தம் வாழ்வில் எதிர்கொள்ளும் உறவுச்சிக்கல்கள், முரண்பாடுகள், துயரங்கள் எல்லாம் உள்ளம் நெகிழும்படிக் காட்டப்படுகின்றன. அழகிரிசாமி எழுதிய சிறந்த நாவல்களில் சில: "தீராத விளையாட்டு", "டாக்டர் அனுராதா", "புது வீடு புது உலகம்", "துறவு" ஆகியவை. பால காண்டம், அயோத்தியா காண்டம், ஆரணிய காண்டம், கிஷ்கிந்தா காண்டம், சுந்தர காண்டம் என்ற ஐந்து காண்டங்களைக் கொண்டு அவர் கம்பராமாயணத்தைப் பதிப்பித்தார். காண்டத்தின் பாடல்கள், பாடலின் அருஞ்சொற்பொருள், உரைநடையில் கதைச்சுருக்கம், கம்பர் வரலாறு ஆகியவற்றைக் கொண்டது இந்நூல். சென்னிகுளம் அண்ணாமலை ரெட்டியார் எழுதிய காவடிச்சிந்து நூலின் செம்மை செய்யப்பட்ட பதிப்பை அழகிரிசாமி தொகுக்க, சக்தி காரியாலயம் வெளியிட்டது. அவரது வாழ்நாளில் வெளிவராத அவரது கவிதைத் தொகுப்பு கருப்பு கன்னி.

"பாத்திரங்களை எடுத்துக்கூறும் முறையிலும், சம்பவங்களை விளக்கும் நகைச்சுவைத் திறனிலும், யதார்த்த வாழ்வின் அடித்தளத்திற் காணப்படும், மனிதாய நிலைகளை எடுத்துக்காட்டும் சிறப்பினும் அழகிரிசாமிக்கு இன்றைய தமிழ்ச் சிறுகதையுலகில் இணையொருவருமில்லை" என்று உயர்வாக அளவிடுகிறார் தமிழறிஞர் கார்த்திகேசு சிவத்தம்பி.

ஆசிரியர், பத்திரிகையாளர், சிறுகதை ஆசிரியர், கட்டுரையாளர், நாவலாசிரியர், நாடக ஆசிரியர், கவிஞர், பாடலாசிரியர், மொழிபெயர்ப்பாளர் என்ற பன்முகப் பரிமாணம் கொண்ட கு. அழகிரிசாமி 1970-ஆம் ஆண்டு தமது 47-ஆவது வயதில் மறைந்தார். இவரது மறைவுக்குப் பின், 1970-இல் இவருடைய "அன்பளிப்பு" எனும் சிறுகதைத் தொகுப்பிற்கு சாகித்திய அகாதமி விருது கிடைத்தது. பழ. அதியமானைப் பதிப்பாசிரியராகக் கொண்டு இவரது அனைத்துச் சிறுகதைகளையும் காலச்சுவடு பதிப்பகம் செம்பதிப்பாக 2011-இல் வெளியிட்டது.

கட்டுரைக்குத் துணைசெய்தவை:

1. *https://thamaraithamil.blogspot.com/2016/09/blog-*
2. *https://ta.wikipedia.org/s/c6l*
3. *https://www.hindutamil.in/news/blogs/214170-10.html-post_23.html*

கு. அழகிரிசாமியின் நூல்கள் (1942 1070) & (1950 1970), பதிப்பாசிரியர் பழ. அதியமான், காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில்.

◆

தமிழிசை வளர்த்த மூவர்

மேகலா இராமமூர்த்தி, புளோரிடா

தமிழிசை மூவர் அல்லது தமிழிசை மும்மூர்த்திகள் என்று அழைக்கப் படுபவர்கள் முத்துத்தாண்டவர், அருணாசலக் கவிராயர், மாரிமுத்தாப் பிள்ளை ஆகியோர். தமிழிலேயே பாட்டெழுதி, தமிழிலேயே பாடித் தமிழிசையை வளர்த்தவர்கள் இம் மூவரும். கருநாடக இசையின் மும்மூர்த்திகள் என்றழைக்கப்படும் தியாகராஜர், சியாமா சாஸ்திரிகள், முத்துசாமி தீட்சிதர் ஆகியோரினும் காலத்தால் முற்பட்டவர்கள் இவர்கள்.

மேகலா இராமமூர்த்தி

கிருதி என்றழைக்கப்படும் கீர்த்தனை களுக்கு வடிவம் கொடுத்தோர் தமிழிசை மூவரே ஆவர். இந்நாளைய இசைப் பாடல்களின் அடிப்படையாகவுள்ள பல்லவி, அனுபல்லவி, சரணம் அல்லது எடுப்பு, தொடுப்பு, முடிப்பு எனும் அமைப்புமுறை இவர்களின் பாடல்களிலேயே முதலில் காணக் கிடைக்கின்றது.

இம்மூவருள் முத்துத்தாண்டவர் காலத்தால் முற்பட்டவர். அருணாசலக் கவிராயரும் மாரிமுத்தாப் பிள்ளையும் சமகாலத்தவர்கள். இனி, இம்மூவர் குறித்தும் இவர்கள் ஆற்றிய இசைத்தொண்டு குறித்தும் சுருக்கமாய்க் காண்போம்.

முத்துத்தாண்டவர்

கி.பி.1525 – 1625க்கும் இடைப்பட்ட காலத்தவர் தாண்டவர்; சீர்காழியில் இசைவேளாளர் குடும்பத்தில் பிறந்தவர். சீர்காழிக் கோயிலில் நாகசுரம் வாசிக்கும் தொழிலைச் செய்துவந்தனர் இவரின் குடும்பத்தார். இளமையில் தீராத நோயொன்றால் தாண்டவர் பீடிக்கப்பட்டமையால் குலத்தொழிலைச் செய்யமுடியாமல் போனது; ஆதலால், குடும்பத்தாரின் வெறுப்புக்கு ஆளானார். அதனால் மிகவும் மனம்வருந்திய இவர், தம் உடல்நலன் சீர்ப்படவேண்டிச் சீர்காழியில் கோயில்கொண்டுள்ள திருத்தோணியப்பரையும் திருநிலை நாயகியையும் தினமும் வழிபட்டுவந்தார்.

தாண்டவர் முத்துத்தாண்டவர் ஆனமை

சீர்காழிக் கோயிலையே தஞ்சமெனக் கொண்டு வாழ்ந்துவந்த தாண்டவர், ஒருநாள் பசிச் சோர்வால் கோயில் வாகனங்கள் வைக்கப்படும் ஒதுக்குப்புறமான இடத்தில் படுத்துறங்கிவிட்டார். பொழுது விடிந்தது. பூசாரியும் ஏனையோரும் கோயில் கதவைத் திறந்து உள்ளே வந்தபோது கையில் பொற்கிண்ணத்தோடு அம்பிகையின் சன்னிதியில் தாண்டவர் நிற்கக் கண்டனராம். அவரை வியப்போடு

அனைவரும் சூழ்ந்துகொண்டபோது, அம்பிகையே கிண்ணத்தை அளித்துத் தில்லைக்குப் போகும்படித் தம்மிடம் கூறியதாகத் தாண்டவர் தெரிவித்தாராம். தாண்டவர் கையில் முத்துப்போல் ஒளிவிட்ட கிண்ணமும், அவர் முகத்தில் தோன்றிய முத்துப்போன்ற முறுவலும் அவர் சொன்னது மெய்யே என்று மற்றவர்க்கு உணர்த்தியதாகவும் அன்றுமுதல் தாண்டவரை அனைவரும் முத்துத் தாண்டவர் என்று அழைக்கத் தொடங்கியதாகவும் அவரின் பெயருக்கான காரணம் சொல்லப்படுகின்றது.

ஏறக்குறைய எண்பது ஆண்டுகள் வாழ்ந்த முத்துத்தாண்டவர் பலநூறு கீர்த்தனைகளைப் பாடியதாகத் தெரிகின்றது. அவற்றில் நமக்குக் கிடைத்தவை 85 கீர்த்தனைகள் மட்டுமே. அவருடைய கீர்த்தனைகளில் பெரும்பாலானவை தில்லை நடராசப் பெருமானின் ஆடலை வியந்து பாடுவதாகவே அமைந்துள்ளன. மற்றவை பல்லவி, அனுபல்லவி, சரணம் என்ற கீர்த்தனை அமைப்பில் அகப்பொருள் சார்ந்து விளங்குகின்றன. இவை இறைவனைத் தலைவனாகவும் தம்மைத் தலைவியாகவும் வைத்து அவர் பாடிய காதற்சுவைப் பாடல்களாகும். கருநாடக இசையில் இத்தகைய பாடல்வகை 'பதம்' என்றழைக்கப்படும்.

முத்துத்தாண்டவரின் புகழ்பெற்ற கீர்த்தனைகள்

ஆடிக்கொண்டார் அந்த வேடிக்கை காண, அருமருந்தொரு தனிமருந்தினி, மாயவித்தை செய்கிறானே அம்பலவாணன், தெருவில் வாராரோ முதலியவை.

அருணாசலக் கவிராயர்

அருணாசலக் கவிராயர் தில்லையாடி எனும் ஊரில் கி.பி. 1711-ஆம் ஆண்டு நல்லதம்பிப் பிள்ளை, வள்ளியம்மை இணையரின் புதல்வராகப் பிறந்தார். இளமையிலேயே கவிபாடும் புலமை பெற்றவராகவும் பாடல்களை இசையுடன் பாடும் ஆற்றல் வாய்ந்தவராகவும் விளங்கிய அருணாசலக் கவிராயர், நூற்பயன்களை இசையுடன் சொற்பொழிவாற்றும் திறமையும் மிக்கவர்.

அருணாசலக் கவிராயரின் பல்துறைத் திறனை அப்போதைய தருமபுர ஆதீனகர்த்தர் பெரிதும் மதித்தார். எனவே, கவிராயரைச் சீர்காழிக்கு அழைத்துக் குடும்பத்தோடு அவர் அங்கே தங்குவதற்கு வசதிசெய்து கொடுத்தார். சீர்காழியில் வாழ்ந்தமையால் சீர்காழி அருணாசலக் கவிராயர் என்று அவர் அழைக்கப்பெற்றார்.

அருணாசலக் கவிராயரின் படைப்புகள்

அசோமுகி நாடகம், சீர்காழித் தலபுராணம், சீர்காழிக் கோவை, இராமநாடகக் கீர்த்தனை, அனுமார் பிள்ளைத்தமிழ் முதலியன. இவற்றுள் இசைநாடக நூலாக விளங்குவது இவரின் இராமநாடகக் கீர்த்தனை. இந்நூல் கவிராயருக்கு அழியாப் புகழை ஈட்டித் தந்தது.

இராமாயணக் கதையை வால்மீகி சமற்கிருதத்தில் இயற்றினார். கம்பர் தமிழில் பாடினார். அருணாசலக் கவிராயர் 258 இசைப்பாடல்களில் இராமநாடகத்தை வடிவமைத்தார். கீர்த்தனைகளால் தமிழில் முதலில் இசைநாடகம் படைத்தவர் இவரே.

கம்பராமாயணம் திருவரங்கக் கோயிலில் அரங்கேறியதுபோல் அருணாசலக் கவிராயரின் இராமநாடகக் கீர்த்தனையும் திருவரங்கக் கோயிலில் அரங்கேறியது. இக்கீர்த்தனைகளைக் கேட்டு மகிழ்ந்த மக்கள், கவிராயருக்கு 'இராமாயணக் கவிஞன்' எனும் பட்டம்வழங்கிச் சிறப்பித்தனர். இந்நூல் பின்னர் 'இராம நாடகம்' என்றும் 'சங்கீத இராமாயணம்' என்றும் அழைக்கப்பட்டது.

ஒருசில இராமநாடகக் கீர்த்தனைகள் இக்கால இசைக்கச்சேரிகளிலும் நாட்டியக் கச்சேரிகளிலும் பாடப்பெறுகின்றன. அவை: "யாரோ இவர் யாரோ", "இராமனுக்கு மன்னன்முடி தரித்தாலே", "எனக்குன் இருபதம்", "யாரென்று இராகவனை", "ஏன் பள்ளி கொண்டீர் ஐயா" முதலியவை. இக்கீர்த்தனைகளுள் 'யாரோ இவர் யாரோ' என்ற கீர்த்தனை இசையரசி எம்.எஸ். சுப்புலட்சுமியால் பிரபலமடைந்தது. 'எனக்குன் இருபதம்' என்ற கீர்த்தனையை பாடிப் பிரபலமாக்கியவர் டி.கே. பட்டம்மாள். 'இராமனுக்கு மன்னன்முடி' என்ற கீர்த்தனை, திரைப்பட நடிகையும் பாடகியுமான பி. பானுமதியின் குரலில் 'பத்துமாத பந்தம்' எனும் திரைப்படத்தில் இடம்பெற்றுப் பெரும் புகழடைந்தது.

மாரிமுத்தாப் பிள்ளை

மாரிமுத்தாப் பிள்ளை கி.பி. 1712-இல் சிதம்பரத்துக்கு அருகிலுள்ள தில்லைவிடங்கன் எனும் ஊரில் பிறந்தார். இவர் தந்தையார் பெயர் தெய்வப் பெருமாள் பிள்ளை. சிறுவயதில் தமிழ்க்கல்வியும் சமயக் கல்வியும் முறையாகப் பெற்ற மாரிமுத்தாப் பிள்ளை, சமய தீட்சையும் பெற்று விளங்கினார். இசையிலும் நல்ல புலமையும் தேர்ச்சியும் பெற்றிருந்தார்.

மாரிமுத்தாப் பிள்ளையின் படைப்புகள்

இயற்புலமையும் இசைப்புலமையும் இறையன்பும் வாய்க்கப்பெற்றிருந்த மாரிமுத்தாப் பிள்ளை தெய்வநூல்கள் பல இயற்றினார். அவை, புலியூர் வெண்பா, சிதம்பரேசர் விறலிவிடு தூது, தில்லைப் பள்ளு, சித்திரக் கவிகள், தில்லைவிடங்கன் ஐயனார் நொண்டி நாடகம், ஆதிமூலேசர் குறவஞ்சி முதலியன; இவற்றோடு பல கீர்த்தனைகளும் இயற்றியுள்ளார்.

கீர்த்தனைகள்

மாரிமுத்தாப் பிள்ளை இயற்றிய கீர்த்தனைகளில் இன்று நமக்குக் கிடைப்பவை 25 ஆகும். தில்லை நடராசப் பெருமானை முன்னிலைப்படுத்திப் பாடிய இவரது கீர்த்தனைகளுக்கு ஒரு தனிச்சிறப்பு உண்டு. இறைவனை இகழ்வதுபோல் புகழ்வார்; நிந்திப்பது போல் துதிப்பார். இவற்றை வஞ்சப்புகழ்ச்சிக் கீர்த்தனைகள் என்பர். இவரது கீர்த்தனைகளில் சில இந்நாளிலும் இசைக் கச்சேரிகளிலும் நாட்டியக் கச்சேரிகளிலும் பாடப் பெறுகின்றன. அவை: காலைத் தூக்கிநின்று, எந்நேரமும் ஒருகாலைத் தூக்கி, ஒருகால் சிவசிதம்பரம், ஏதுக்கு இத்தனை, என்ன பிழைப்பு முதலியன.

தமிழிசை மூவர் உருவாக்கித் தந்த அற்புதமான இசைப்பாதையானது அவர்களை தொடர்ந்துவந்த இசைவல்லுநர்கள் பலரும் அத்துறையில் எளிதாகப் பயணிக்க உதவியது எனில் மிகையில்லை. தமிழில் இசைவளர்த்த இம்மூவரையும் சிறப்பிக்கும் வகையில் சீர்காழியின் மையப் பகுதியில் இவர்களின் முழுவுருவ வெண்கலச் சிலைகளுடன் கூடிய மணிமண்டபம் தமிழக அரசின் சார்பில் கட்டப்பட்டுள்ளது.

கட்டுரைக்கு உதவியவை

1. https://ta.wikipedia.org/wiki/தமிழிசை_மூவர்
2. https://ta.wikipedia.org/wiki/முத்துத்_தாண்டவர்
3. https://ta.wikipedia.org/wiki/அருணாசலக்_கவிராயர்
4. https://www.tamilvu.org/courses/degree/d051/d0513/html/d0513441.htm

வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையின் 37-வது தமிழ் விழா சிறக்க வாழ்த்துகள்!

OUR TEAMS GLOBAL

வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையின் 37-வது தமிழ் விழா சிறக்க வாழ்த்துகள்!

RRG Developers

MULTI FAMILY & COMMERCIAL DEVELOPERS

ஷங்கர், சவிதா, அத்விகா, அன்விதா

லோகேஷ் ரவி குடும்பத்தினர்

சந்திரசேகரன் மற்றும் குடும்பத்தினர்

விஜய் பார்த்தசாரதி மற்றும் குடும்பத்தினர்

ஸ்ரீனிவாசன் கண்ணப்பன் மற்றும் குடும்பத்தினர்

சிவசக்தி போத்திராஜ் மற்றும் குடும்பத்தினர்



பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்

முனைவர் என். பானுமதி பாலசுப்ரமணியன்

ஏழாயிரம் ஆண்டுகளுக்கு முன் சங்கப் புலவர் கணியன் பூங்குன்றனாரால் எழுதப்பட்ட பாடல் இது. தன் ஊரையன்றி வெளி உலகம் கண்டிராத ஒரு குறுகிய நிலப்பரப்பில் வாழ்ந்த மனிதனின் உலகளாவிய பரந்த மனப்பான்மையை வெளிப்படுத்துகிறது. சங்க இலக்கியம் என்பது கி.மு.300 மற்றும் கி.பி.300-க்கும் இடைப்பட்ட காலத்தில் உருவாக்கப்பட்ட மிகப் பழமையான இலக்கியங்களின் தொகுப்பாகும். இது 473 புலவர்களால் எழுதப்பட்ட 2,381 பாடல்களைக் கொண்டுள்ளது; சங்க இலக்கியங்கள் அகம், புறம் என இரு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுஅகம் என்பது இல்லற வாழ்க்கையைப் பற்றியும், புறம் என்பது கொடை, போர், வீரம், ஆட்சி போன்ற செய்திகளையும் குறிப்பிடுவதாக தொகுக்கப்பட்டுள்ளன. சுருங்கச் சொல்வதென்றால் இது பழந்தமிழர்களின் வாழ்வியலை எடுத்துக் காட்டுகிறது.

முனைவர்
என். பானுமதி
பாலசுப்ரமணியன்

"தீதும் நன்றும் பிறர் தர வாரா" நன்மையும், தீமையும் பிறரால் வருவதில்லை. துன்பமும் ஆறுதலும் கூட மற்றவர் தருவதில்லை. அனைவரையும் உறவினர்களாகப் பார்ப்பது, சக மனிதர்களிடையே விருப்பு வெறுப்பு இல்லாததொரு சமநிலை சார்ந்த வாழ்வை ஊக்குவிக்கிறது. மனிதனை நியாயவானாக மாற்ற வேண்டிய செயல், மனிதன் இருக்கும் வரை நடத்தப்பட்டுக் கொண்டே இருக்க வேண்டிய செயல். அதற்கான கருவியைத் தனது அனைத்து அங்கங்களிலும் வைத்திருக்கும் பண்பாட்டினையே மிகச்சிறந்த பண்பாடாக நாம் கருதுகிறோம்.

அத்தகைய பண்பாட்டு விழுமியங்கள் செழிப்புற்று இருப்பதே நாகரிகச் சமூகத்திற்கான சான்று.

"அருளென்னும் அன்பீன் குழவி
பொருளென்னும்
செல்வச் செவிலியால் உண்டு"

என வள்ளுவர் கூறும் கருத்து இங்கு குறிப்பிடத்தக்கது.'அன்பு' என்பது நம்மைச் சுற்றியுள்ளோர் பால் தோன்றும் உணர்வு. அறியாதவர் பால் தோன்றும் அன்பே 'அருள்' என்னும் உணர்வு. இத்தகையை அருட்குணத்தையே எல்லா அற நூல்களும் சமயங்களும் போதிக்கின்றன.

ஐ.நா போன்ற உலகத்தை ஒருமைப்படுத்துவதற்கான நாகரிக நடைமுறைகளுக்கு ஏறக்குறைய மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தோன்றிய உலக சகோதரத்துவத்தைப் பற்றிய எண்ணமே 'யாதும்

ஊரே யாவரும் கேளிர்' என்ற வரியாக வெளிப்பட்டிருக்கிறது.

சமத்துவம்

இப்பரந்து விரிந்து உள்ள புவிப்பந்தில் 195 நாடுகள் உள்ளன. இன்றைய உலகின் மக்கள்தொகை பிப்ரவரி 12, 2024 கணக்குப்படி 8,090,630,040 அதாவது 8.1 பில்லியன். பல்வேறு கலாச்சாரங்கள், மொழிகள் மற்றும் வரலாறு கொண்டது இவ்வுலகு. இதில் நாம் அனைவரும் சமத்துவத்துடனும், சகோதரத்துவத்துடனும் வாழ வேண்டும். மொழி, மதம், சாதி, இனம், ஏழை பணக்காரன் என்ற தடைகள் களையப்பட வேண்டும். சுருங்கச் சொன்னால் மக்களிடம் மனித நேயம் வளர வேண்டும்.

நாடுகளிடையே நிகழும் வன்மமும் போர்களும் தடுக்கப்படவேண்டுமெனில் நம்மிடையே சமத்துவம் மற்றும் சமாதானம் நிகழ வேண்டும், இத்துடன் புரிதல் உணர்வும் மேம்பட வேண்டும்.எல்லோரும் உறவினர்கள் என்ற கருத்தை ஏற்றுக் கொள்வது சமத்துவமான சமூகத்தை வளர்க்க உதவுகிறது. இது சிறந்த மனது மற்றும் சகிப்புத் தன்மையை வளர்க்கிறது.

இவ்வெண்ணம் அனைவருக்கும் ஒரே மாதிரியான வாய்ப்புகள் மற்றும் உரிமைகள் கிடைப்பதை உறுதி செய்து மனிதாபிமானத்தை அங்கீகரிக்கின்றது.

நம்முடைய வருங்கால இந்தியாவின் குழந்தைகளை மனித நேயமிக்கவர்களாக உருவாக்குவது பெற்றோரின் கடமையாகும். நிலையாமை என்பதே நிலையாய் இருக்கும் இவ்வாழ்வில் இயல்பாய் வாழ்ந்தால் இன்பமாக வாழலாம். இந்தப் புறநானூற்றுப் பாடலின் வயதை மூவாயிரம் ஆண்டுகள் என்று கொண்டால் கூட இப்படியொரு மொழியில் அழகுடன் கூடிய அறநெறி உரைக்கவே ஒரு நாகரிகம் அதற்குப் பல பத்தாயிரம் ஆண்டுகள் முன்பே வாழ்ந்து தழைத்திருக்க வேண்டும். மக்கள் ஒருவருக்கொருவர் இணைந்திருப்பதை உணரும்போது, தனிநபர்கள் ஒத்துழைக்கவும், வளங்களைப் பகிர்ந்து கொள்ளவும், பொது நலனுக்காக ஒன்றாக வேலை செய்யவும் வாய்ப்புள்ள ஒரு ஆதரவான சூழலை அது வளர்க்கிறது.

சமத்துவம் செழிக்க வழி முறைகள்

குடிமக்கள் தம் நம்பிக்கைகளின் படி கோயில்கள் அல்லது வழிபாட்டுத் தளங்களைக் கட்ட அனுமதிப்பது என்பது நாட்டிற்குள் உள்ள கலாச்சார பன்முகத் தன்மையைக் காட்டுவதோடு பல்வேறு மத மரபுகளை மதிப்பதற்கு இடமளிக்கிறது.இவ்வெண்ணம் அனைவருக்கும் ஒரே மாதிரியான வாய்ப்புகள் மற்றும் உரிமைகள் கிடைப்பதை உறுதி செய்து மனிதாபிமானத்தை அங்கீகரிக்கின்றது. நம்மைச் சுற்றியுள்ள மக்களின் கலாச்சாரங்கள் மற்றும் வளங்களுக்கு நாம் நம் நன்றி உணர்வை வளர்த்துக் கொள்ள வேண்டும். நாம் ஒற்றுமை மற்றும் சமூக நல்லிணக்கத்தை மேம்படுத்தும் திட்டங்களை ஊக்குவிக்க வேண்டும்.கலாச்சார இடைவெளிகளைக் குறைத்து புரிதலை மேம்படுத்த ஆக்கப் பூர்வமான விற்பனை நிலையங்களை பயன்படுத்த வேண்டும்.

நாடுகளிடையே நிகழும் வன்மமும் போர்களும் தடுக்கப்படவேண்டுமெனில் நம்மிடையே சமத்துவம் மற்றும் சமாதானம் நிகழ வேண்டும். இத்துடன், புரிதல் உணர்வும் மேம்பட வேண்டும்.

முடிவுரை

நாம் பலநாடுகளில் வாழ்கின்றோம், வாழ விரும்புகின்றோம். பணம் சம்பாதிப்பது மட்டும் நம் குறிக்கோளல்ல, சில நூற்றுக்கணக்கான காரணங்கள் உள்ளன. வாழ்க்கை எங்கும் மாறுவதில்லை. உண்பது, உடுப்பது, பருகுவது, செலவழிப்பது, வேலை பார்ப்பது மற்றும் குடும்ப வாழ்க்கை மாறுவதில்லை. எது எப்படி இருந்தாலும் மக்கள் மக்களாகவே தான் இருக்கின்றார்கள். ஆல்பிரட் லார்ட் டென்னிசன் என்ற ஆங்கிலக்கவி எழுதிய யுலிஸில் என்ற கவிதையில் "*I am a part and parcel of all that I have met*" என்று குறிப்பிடுகிறார். இது தான் உண்மை. வாழ்க்கை முறை நாட்டுக்கு நாடு மாறுபடலாம். ஆனால் அடிப்படையில் வாழ்க்கை நம் கையில் தான்.

நேற்று இருந்த ஒருவர் இன்றில்லை என்னும் பெருமையுடையது இவ்வுலகு. வாழ்க்கை நிலையற்றது, நீரில் தத்தளிக்கும் படகு போன்றது. இங்கு எதுவுமே நிரந்தரமில்லை. ஆகையால் இருக்கும் வரை மற்ற மனிதர்களை மதித்து நடக்க வேண்டும். அனைவரும் மகிழ்ச்சியோடும், நிம்மதியோடும் வாழ்வதற்காகத் தான் போராடுகிறோம்.

நாம் சமூக மற்றும் கலாச்சார வேறுபாடுகளை பொருட்படுத்தாமல் மக்களைச் சமமாக நடத்த வேண்டும். இத்தகைய சமத்துவத்தை விரும்பும் நாடானது, சமூக மாற்றத்தை ஏற்படுத்துவதற்குத் தயாராகின்றது. இளம் வயதிலேயே முட்செடி போல வளரும் வேற்றுமைகளைக் களைத்துப் பிறரை நேசிக்கும் தன்மையை விதைக்க வேண்டும். அப்போது தான் போரும் பூசலுமற்ற உலகைக் காண முடியும். நமது ஒவ்வொருவருடைய கடமை அதுவே.

வாழ்க்கை வாழ்வதற்கே! வளர்க சமத்துவம்!!

◆

டெக்சாசும் தமிழர்களும்

முனைவர் ஸ்ரீனிவாசன் கண்ணப்பன், சான் அன்டோனியோ

ஐவகை நிலங்களையும் உள்ளடக்கிய பெரும் நிலப்பரப்பாம் வளம் கொழிக்கும் டெக்சாஸ் மாநிலத்தில் தமிழர்கள் வாழ்வாங்கு வாழ்வதில் ஆச்சரியம் ஏதும் இல்லை என்றாலும் தமிழர்களால் டெக்சாசிற்கும், டெக்சாசால் தமிழர்களுக்கும் விளைந்த பயன்களை இத்தருணத்தில் எண்ணிப்பார்ப்பது சாலச்சிறந்தது என்றே தோன்றுகிறது. புனித அந்தோணியாரின் பெயரால் 1718-இல் துவங்கப்பட்ட சான் அன்டோனியோ எனும் மூதூரில் தொல்குடிகளான தமிழர்கள், பேரவையின் 37-ஆவது பெருவிழாவிற்காக ஒன்று கூடுவது இந்த மாநகரத்திற்கும் டெக்சாஸ் மாநிலத்திற்கும் பெருமையே!

முனைவர்
ஸ்ரீனிவாசன் கண்ணப்பன்

எழுபது சதவிகித மாநில மக்கள் (அதாவது 20 மில்லியன்) ஐந்து பெருநகரங்களைக் கொண்ட டெக்ஸ்-எ-ப்ளெக்ஸ் (TEX-A-PLEX) எனும் முக்கோண வடிவிலான நிலப்பகுதியில் வாழ்கிறார்கள். கோவிட் பெருந்தொற்றிற்கு பின் டெக்சாஸ் மாநிலத்தின் டால்லஸ், போர்ட்ஓர்த், ஹூஸ்டன், சான் அன்டோனியோ, ஆஸ்டின் உள்ளிட்ட முக்கோண நிலப்பரப்பில் மக்கள் தொகை கணிசமாக உயர்ந்துள்ளது வரவேற்க தக்கதே! இதில் நமது தமிழ் இனத்தின் மக்கள் தொகை உயர்வும் அடங்கும் என்பது பெரு மகிழ்ச்சியே! சங்ககாலத்திற்கு முன்பிருந்தே இடர் வரவுகளைப் பொருட்படுத்தாமல் கடல் தாண்டி தடம் பதிக்கும் வணிக முனைப்பு கொண்ட தமிழ்ச்சமூகம் இன்றளவும் அந்த மரபுகளைப் பின்பற்றி வருகிறது.

1960-களில் இருந்தே தமிழர்கள் டெக்சாசில் கணிசமான அளவில் குடியேறத் துவங்கிவிட்டார்கள் என்று நமது தமிழ் அமைப்புகளும் நிறுவனங்களும் நமக்கு உணர்த்துகின்றன. அறுபதுகளில் குடியேறிய எண்ணெய் மற்றும் எரிவாயு பொறியாளர்கள் முதல் இரண்டாயிரத்திற்குப் பின் குடியேறிய மென்பொருள் வல்லுநர்கள் வரை அனைவரையும் பாகுபாடின்றி தனது மார்போடு அணைத்துக் கொண்டது டெக்சாஸ் எனும் செல்வப்பெருநிலம். வேலை நிமித்தமாகக் குடியேறிய தமிழ் மக்கள் இன்று தொழில் முனைவோராக, முகவர்களாக, முதல்வர்களாக, தொழிலதிபர்களாக உருவெடுத்து நிற்பது நம் இனப்பெருமைக்கு ஒரு பேரெடுத்துக்காட்டு.

தமிழர்களின் அமெரிக்கக் கனவிற்கும் முன்னேற்றத்திற்கும் வாழ்விற்கும் டெக்சாஸ் அள்ளித்தந்த கொடைகள் ஏராளம். மாநிலத்தின் சாதகமான சீதோஷ்ண நிலையும், மாநில வரிவிலக்கும், தொழில் முனைவோருக்கான சலுகைகளும், கட்டுப்படியான வாழ்க்கை செலவினங்களும், ஏற்புடைய வாழ்க்கைத் தரமும், மனமகிழ் கேளிக்கை

வசதிகளும், சாலை மற்றும் தொழில் உள்கட்டமைப்பு வசதிகளும், ஆராய்ச்சியுடன் கூடிய பெரும் மருத்துவமனைகளும், உயர் கல்வியை அள்ளித்தரும் உலகப்புகழ்ப் பெற்ற பல்கலைக்கழகங்களும், அள்ள அள்ளக் குறையாத எரிபொருள் வளமும், பல்துறை வேலைவாய்ப்புகளும் யாரையும் டெக்சாசை நோக்கி நகரவைக்கும் என்பதில் ஐயமில்லை. டால்லஸ், போர்ட்ஓர்த் வானூர்தி நிலையம் மன்ஹாட்டனை விடப் பரப்பளவில் பெரியதும், இங்கிருந்து எந்த நாட்டிற்கு வேண்டுமானாலும் குறுகிய கால அவகாசத்தில் வானுயரலாம் என்பதும் தனிச்சிறப்பே!.

உலக கல்வித்தர வரிசையில் 43-ஆவது இடத்தை தக்க வைத்துள்ள ஆஸ்டினில் அமையப்பெற்ற டெக்சாஸ் பல்கலைக்கழகம் அமெரிக்காவின் மூன்றாவது நில உடைமையாளர் என்பது பல பேருக்குத் தெரியாத ஒரு தகவல். எழுபத்தைந்தாயிரம் மாணாக்கர்களைக் கொண்ட டெக்சாஸ் எ&எம் பல்கலைக்கழகம் தான் அமெரிக்காவில் பெருமளவு மாணவச்சேர்க்கை கொண்ட பல்கலைக்கழகமாகத் திகழ்கிறது! இந்த பல்கலைக்கழகங்கள் மற்றும் டால்லஸ், ஹூஸ்டன், சான் அன்டோனியோ பல்கலைக்கழகங்கள் போன்ற டெக்சாசின் நூற்றிஐம்பத்திஒன்பது பல்கலைக்கழகங்கள் நமது தமிழ் சமூகத்திற்காற்றிய பங்கு அளவிடமுடியாத ஒன்றாகும். வருடத்திற்கு ஆறரை லட்சம் வேலைவாய்ப்புகளை அள்ளித்தரும் சிறந்த மாநிலமாக டெக்சாஸ் ஒளிர்கிறது, மிளிர்கிறது. இதில் நமது தொழில்முனைவோரின் வேலைவாய்ப்புகளும் அடங்கும். ஐந்நூறு வளம்மிக்க (போர்ச்சுன் 500) நிறுவனங்களில் ஐம்பது டெக்ஸ்-எ-ப்ளெக்ஸ் (TEX-A-PLEX) எனும் முக்கோண நிலப்பகுதியில் அமைந்துள்ளது வேலைவாய்ப்பை நாடுவோருக்கு ஒரு வரப்பிரசாதம்.

சான் அன்டோனியோவின் தமக்கை நகராகச் சென்னை இருந்து வருகிறது. இதன் காரணமாகப் புரிந்துணர்வு ஒப்பந்தங்களால் தொழில் புத்தாக்கங்களும் கலை மற்றும் கலாச்சார பரிமாற்றங்களும் நிகழ்ந்து தமிழர்களுக்குப் பெருமை சேர்க்கின்றன. உலகிலேயே மிக தரம் வாய்ந்த மருத்துவ மையம் ஹூஸ்டன் மாநகரில் அமையப்பெற்றுள்ளது நமது அறிவார்ந்த மருத்துவச் சொந்தங்கள் பலர் அர்ப்பணிப்போடு சேவைசெய்ய வழிவகுத்துள்ளது. உலக நாடுகளின் வரிசையில் 2.4 ட்ரில்லியன் டாலர்கள் மதிப்பிற்கு வர்த்தகம் செய்யும் டெக்சாஸ் ஒன்பதாவது இடத்தை தன்னகத்தே வைத்துள்ளது. அமெரிக்காவின் முன்னோடி ஏற்றுமதி மாநிலமும் டெக்சாசே என்பது தமிழர்கள் அதிக அளவில் இங்குத் தொழில் துவங்கியதின் பின்னணியில்

உள்ளது. உலக அளவில் பில்லியனயர்கள் எனப்படும் மாபெரும் செல்வந்தர்கள் வசிக்கும் நான்காவது இடம் என்ற பெருமையை டால்லஸ் மாநகரம் தட்டிச்சென்றுள்ளது.இதில்நமதுதமிழ்சொந்தங்களும் அடங்குவர் என்பது நமக்குப் பெருமையே!

நாகரிகத்தின் தொன்மங்களை, பண்பாட்டின் விழுமியங்களை, வாழ்வியலின் பழக்க வழக்கங்களை விதையெனத் தாங்கி அயல்நாடுகளில் விதைத்து வளம் பெறச்செய்வது தமிழர்கள் தொன்றுதொட்டு தொடர்ந்து வரும் மானுடவியல் செயலாகும். தமிழர்களின் தனித்துவம் அறம் சார்ந்ததாக, கொடை சார்ந்ததாக, அறிவியல் சார்ந்ததாக என்றுமே இருந்துள்ளது என்பது இலக்கியங்கள் நமக்குச் சொல்லும் பாடம். அந்த மரபில் வந்த நாம் இங்குத்தமிழைப் பேணுவது,தமிழர் கலாச்சாரத்தைப் பாதுகாப்பது மற்றும் வாழ்வியலைத் தொய்வின்றி தொடர்வது என்பது இயல்பான ஒன்றே. தமிழ் வளர்ச்சிக்காக நம்மவர்கள் செய்துவைத்த அத்துணையும் இன்று பயனளித்து வருவது மகிழ்ச்சியேயாகும். அனைத்து மாநகரங்களிலும் பல நகர நூலகங்களில் தமிழுக்கென பிரிவு அமைத்து அடுக்ககங்களில் நூல்கள் நிரம்பி வழிவதைப் பார்ப்பதே ஒரு மகிழ்வான தருணமாகும். ஊருக்கு ஊர் தமிழைப் போதிக்கும் பள்ளிகள் தன்னார்வலர்களால் நடத்தப்படுவது தமிழை உயிர்ப்பித்து வைக்கும் என்பதில் ஐயமில்லை.

நம்மவர்களின் பெருமுயற்சியினால் ஹூஸ்டன் பல்கலைக்கழகத்தில் தமிழுக்கென இருக்கையொன்று அமையப்பெற்று அங்கீகரிக்கப்பெற்ற பாடத்திட்டங்கள் கற்பிக்கப்படுவது மேலும் தமிழ் கற்கும் ஆர்வத்தைத் தமிழர்களையும் தாண்டி இட்டுச்செல்லும் என்பது திண்ணம். டால்லஸ்

நகரில் அமைந்துள்ள ஒரு அமைப்பு துவக்கி வைத்த திருக்குறள் போட்டி இன்று டெக்சாஸ் முழுவதும் பரவி தமிழ் அமுது சொரிகின்றது. விடுதலைக்கவிஞன் பாரதியின் பெயரால் துவங்கப்பெற்ற கலைமன்றம் ஒன்று ஹூஸ்டன் மாநகரில் கலை வளர்த்துவருவது அனைவரும் அறிந்ததே. சென்னையிலுள்ள கானசபாக்கள் போல் இங்கும் சபாக்கள் வந்து விட்டது கலையின்பால் நமக்கிருக்கும் உணர்வை வெளிக் கொணர்கின்றது. கலை மன்றங்களும், தமிழ்மன்றங்களும், தமிழ்ச்சங்கங்களும் ஊருக்கு ஊர் தமிழர்களுக்குச் சேவை செய்கின்றன. தமிழிலே வானொலி அலைவரிசை விமரிசையாக ஒலிபரப்பாகிறது, இணையத்தில் தமிழ்த் தொலைக் காட்சி ஒன்று ஒளிபரப்பாகிறது, இலக்கிய நயம் கொஞ்சும் தமிழிதழ்கள் நமது கரங்களிலே தவழுகின்றன, தமிழ்ப்புலவர்களும் படைப்பாளிகளும் நமக்கு மொழிவிருந்து படைக்கிறார்கள் – இத்தனையும் நமதருமை டெக்சாசிலே! தமிழர்களால் எடுப்புவிக்கப் பெற்ற பேராலயங்கள் ஏராளம் எனச் சொல்லலாம்.

சங்கம் வளர்த்த மாமதுரையின் ஆட்சி தெய்வம் அன்னை மீனாட்சியின் பெயரால் ஹூஸ்ட்டன் மாநகரில் அமையப்பெற்ற ஆலயம் அமெரிக்காவில் சுற்றுலாப் பயணிகள் ஆர்வமுடன் இசைந்து பார்க்கும் இடங்களின் பட்டியலில் வருகின்றது. டால்லஸ் மாநகரில் மாரியம்மனுக்கென்று ஒரு சிறுதெய்வ வழிபாட்டுத்தலம் அமைந்து வருவது நாம் போகுமிடமெல்லாம் நமது நம்பிக்கையையும் நாம் சுமந்து செல்லும் பண்பாட்டை எடுத்துரைக்கின்றது! பல மதங்களைச் சார்ந்த எண்ணற்ற வழிபாட்டுத் தலங்கள் தமிழர்களின் முயற்சியினால் நடந்து வருவதும் அவையில் நமது பண்டிகைகள் தாயகம் போல் சீரும் சிறப்புமாக நடப்பதும், நமது பண்பாட்டு அசைவுகளின் வெளிச்சமே! தமிழருக்கென்று ஒரு முன்னோடி தமிழரின் பெயரில் அருங்காட்சியகம் ஒன்று ஹூஸ்ட்டன் மாநகரில் அமைந்துள்ளது, தமிழர் பெயரால் அறக்கட்டளைகள், தாயகத்திற்கு உதவும் கரங்களும் உள்ளங்களும் – இவை அனைத்தும் டெக்சாசிற்கு தமிழர்கள் சேர்க்கும் பெருமைகளே!

தமிழர்களின் தனித்துவமும் மேன்மையும் நமது அடுத்த தலைமுறையினருக்கு எடுத்துச்செல்வதற்கு, பேரவை நிகழ்வுகள் போல் ஆயிரமாயிரம் முயற்சிகள் மலரட்டும் என எங்கும் நிறை இறையுணர்வை வேண்டி விழைகிறேன்! நன்றி.

◆

வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையின் 37 ஆவது தமிழ் விழா சிறக்க வாழ்த்துகள்!

காந்தேஷ் ஸ்ரீனிவாசன் மற்றும் குடும்பத்தினர்

சதிஷ் குமார் சம்பத் குமார், சரண்யா குணசேகரன்

அசோகன் ஸ்ரீனிவாசன் மற்றும் குடும்பத்தினர்

தமிழ்த் தேனீ

தமிழ்த் தேனீ

மாணிக்கவாசன்,வளர்மதி வாசன், விக்னேஷ் வாசன், வினிஷா வாசன்

மோகன் வைரக்கண்ணு மற்றும் குடும்பத்தினர்

அமெரிக்கத் தமிழ்க் கல்விக் கழகம்

ஸ்ரீனிவாஸ் பிரபாகர்

அமெரிக்கத் தமிழ்க் கல்விக்கழகம் அமெரிக்கா மட்டுமல்லாது, கனடா, தென் கொரியா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் வாழும் தமிழ்ச் சிறார்களுக்கு தமிழ்க் கல்வியைக் கொண்டு சேர்க்கும் பணியைக் கடந்த 14 ஆண்டுகளாகச் செய்து வருகிறது.

அதன் பாடப் புத்தகங்கள் ஆண்டுதோறும் மீள் பார்வை செய்யப்பட்டு, எளிமைப்படுத்தப்பட்டு, அதன் உள்ளடக்கத்திலும் வடிவமைப்பிலும் புதிய மாற்றங்களுடன், உலகளாவிய தரவடிவில் உருவாக்கப்பட்டு வருகின்றன. இந்த ஆண்டு நிலை-7க்கான புத்தகம் புதிய பாடத் திட்டங்களுடன், முற்றிலும் புது வடிவமைப்பில் உருவாகிக் கொண்டிருக்கிறது.

ஸ்ரீனிவாஸ் பிரபாகர்

அ.த.கவின் ஆண்டு விழா, கடந்த டிசம்பர் மாதம் 9 மற்றும் 10-ஆம் தேதிகளில், மெய்நிகர் விழாவாக நடந்து முடிந்தது. அதில் 300-க்கும் மேற்பட்ட மாணவர்கள் பல்வேறு போட்டிகளில் பங்கெடுத்து, அவர்தம் தமிழ் சார்ந்த திறமைகளை வெளிப்படுத்தினர். ஒவ்வொரு பள்ளியிலும் 5 ஆண்டுகளுக்கும் மேலாக தன்னார்வ ஆசிரியர்களாகப் பணிபுரியும் அனைவருக்கும் "நெடுநாள் ஆசிரியர்" விருது வழங்கி மகிழ்ந்தது அ.த.க. பல்வேறு அறிஞர் பெருமக்களின் உரையும் இவ்விழாவில் இடம் பெற்றது. மேலும் 2024 மற்றும் 2025 க்கான புதிய செயற்குழுவும் விழாவில் அறிமுகப்படுத்தப்பட்டது.

பழைய செயற்குழுவின் சாதனைகளை நினைவுகூர்ந்து, அந்தக் குழுவின் சிறப்பான செயல்பாடுகளை மனதில் இருத்தி, அடுத்தடுத்த ஆண்டுகளுக்கான புதிய திட்டங்களையும் தீட்டி புதிய செயற்குழு வேலைகளை ஆரம்பித்துள்ளது. அ.த.க.வுடன் இணைந்து செயல்படும் பள்ளிகளுக்கு இருமொழி முத்திரை பெற உதவுவது, பள்ளிகள் தங்கள் மாணவர்களுக்கான மொழித்திறன் மதிப்பீடு (language credits) பெறும் பணிக்கு வழிகாட்டுவது, ஆகியவற்றைத் தொடர்ந்து இந்த ஆண்டு அ.த.க. பாடத்திட்டம் மற்றும் அ.த.க. சார்ந்த பள்ளிகளுக்கு அங்கீகாரம் பெறும் (Accreditation) பணியில் ஈடுபட்டுள்ளது.

அ.த.க.விற்கென ஒவ்வொரு ஆண்டும் வெளி வரும் விழா மலரானது இனி ஆண்டிற்கு இருமுறை வெளியிடப்படும். திருக்குறள் போட்டிகள், புத்தக விமர்சனம் என வெவ்வேறு புதிய முயற்சிகளில் அ.த.க. ஈடுபட்டு வருகிறது. இந்த ஆண்டு முதல், அ.த.க.வில் நிலை-8 வரை பயின்ற முன்னாள் மாணவர்கள் சிலரை ஒருங்கிணைத்து, வெள்ளோட்ட மாக இளையோர் குழு ஒன்றினை ஏற்படுத்தி, அடுத்த தலைமுறையை அ.த.க.விற்கு கொண்டு வர முயல்கிறது.

"தலைமுறைக்கும் தமிழ்" என்ற அ.த.க.வின் கொள்கையை ஒட்டி பல்வேறு செயல் திட்டங்களுடன் செயல்படும் அமெரிக்கத் தமிழ்க் கல்விக் கழகத்தைப் பற்றிய மேலதிகத் தகவல்களை கீழ்க்கண்ட இணைப்பில் பார்க்கவும். www.americantamilacademy.org

◆

கௌதம் ராஜன்
குடும்பத்தினர்

Rajan Gowdhaman
Realtor

Mail: rajrealtorsa@gmail.com
Cell: 210 393 4107
Office: 210 844 8683

Step Into
Texas Premier Realty
3834 Deerfield Dr,
San Antonio, TX 78218

Equal Housing Opportunity · REALTOR® · MULTIPLE LISTING SERVICE MLS



சமத்துவம் தமிழரின் தனித்துவம்

நியூஜெர்ஸி பாலா இயக்குனர்,கலைஞர் அறக்கட்டளை – அமெரிக்கா

முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் என்பது வெறும் பெயரல்ல தமிழ் இனத்தின் நூற்றாண்டு சமூக நீதி வரலாறு!!

பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியாரின் மாணவனாய், தென்னாட்டு பெர்னாட்ஷா பேரறிஞர் அண்ணா அவர்களின் தம்பியாய், ஐந்து முறை தமிழ்நாட்டின் முதலமைச்சராய் இருந்து ஒடுக்கப்பட்ட, ஒதுக்கப்பட்ட, அடித்தட்டு மக்களின் தலைமுறைகள் வளர்ச்சிக்கு இட ஒதுக்கீடு பெற்றுத் தந்து சமத்துவம், சமூக நீதி திட்டங்களைத் தீட்டிய தமிழ் இனத்தின் மாபெரும் தலைவர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள்!!

நியூஜெர்ஸி பாலா

சங்க காலத்தில் அனைத்து தரப்பு மக்களும் எழுத்தறிவு மிக்க சமூகமாக விளங்கிய சமூகம் தமிழ்ச் சமூகமாகும். ஆனால் இடைப்பட்ட 2000 ஆண்டுக் காலத்தில் தமிழ்ச் சமூகத்தை சாதிரீதியாகவும், வர்ணாசிரமத்தின் படியும் பிளவுபடுத்தி கல்வியறிவு அற்ற சமூகமாக மாற்றினர் வட நாட்டிலிருந்து வந்த கூட்டம்.

16-ஆம் நூற்றாண்டில் வணிகம் செய்ய வந்த ஆங்கிலேயர்கள் 18-ஆம் நூற்றாண்டு வரை தமிழ்ச் சமூகத்தைக் கல்வியறிவு பெற்ற சமூகமாக மாற்ற எந்த முயற்சியும் செய்யவில்லை. ஆனால் 18-ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு ஆங்கிலேயர்கள் ஆட்சி அதிகாரம் செய்ய நினைத்த போது அவர்களுக்கு வேலை செய்யக் கல்வியறிவு பெற்ற மனிதர்கள் தேவைப்பட்டனர். இதனால் கிறிஸ்தவ அமைப்புகளின் மூலம் பள்ளிகளைத் திறந்து கல்வி சொல்லிக் கொடுக்கப்பட்டது. இதனால் பெரும்பாலும் பயன்பெற்றவர்கள் மேல்தட்டு சமூக மக்கள். 1900-களில் மதராஸ் மாகாணத்தில் ஆண்களின் கல்வியறிவு வெறும் 12 சதவிகிதமாக மட்டுமே இருந்தது. அதிலும் பெண்களின் கல்வியறிவு 1 சதவிகிதமாக மட்டுமே இருந்தது.

1920-களில் நீதிக் கட்சி (Justice Party), சுயமரியாதை இயக்கம், திராவிடர் கழகம் போன்ற இயக்கங்கள் ஒடுக்கப்பட்ட, அடித்தட்டு மக்களுக்கான உரிமை கோரிக்கைகளில் முதன்மையானதாக இருந்தது கல்வியறிவு கோரிக்கை. அதிலும் பெண்களுக்கான கல்வியறிவு கோரிக்கை அதிகமாகப் பேசப்பட்டது. நீதிக் கட்சியின் ஆட்சியில் தமிழ்நாடு முழுவதும் பள்ளிக்கூடங்கள் திறக்கப்பட்டு மாணவர்களுக்குச் சத்துணவு வழங்கப்பட்டது. தந்தை பெரியார், பெருந்தலைவர் காமராசர், பேரறிஞர்

அண்ணா ஆகியோரின் பங்கு இதில் அதிகம்.

சாதியால் பிளவுபட்ட தமிழ்ச் சமூகம், திராவிட இயக்கங்களின் முயற்சியால் சமத்துவ கல்வியறிவு பெற்ற சமூகமாக முன்னேறத் தொடங்கி இருந்தது. 1969-இல் பேரறிஞர் அண்ணா அவர்களின் எதிர்பாராத மறைவுக்குப் பின்னால் தமிழ்நாட்டின் முதலமைச்சராக 45-ஆம் வயதில் பொறுப்பு ஏற்கிறார். அவர் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோரின் கனவை நிறைவேற்றுவதை முக்கிய கடமையாக ஏற்கிறார்.

1924 - 2018

ஒரு மனிதன் பிறந்ததிலிருந்து, வளர்ந்து, வாழ்ந்து, இறக்கும் வரை முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் தீட்டிய திட்டங்களால் பயனடைந்த மனிதனாகவே இருப்பான். இங்கே முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் கல்வியில் சமத்துவத்தை எப்படிக் கொண்டு வந்தார் என்று பார்ப்போம்.

1. தமிழ் மொழி 1-ஆம் வகுப்பு முதல் 10-ஆம் வகுப்பு வரை கட்டாயப் பாடமாக்கப்பட்டது.

2. 1-ஆம் வகுப்பு முதல் 12-ஆம் வகுப்பு வரை இலவச கல்வி என்று இருந்ததை உயர் கல்லூரிகள் வரை விரிவுபடுத்தினார்.

3. பள்ளி செல்லும் மாணவர்கள் நீண்ட தூரம் நடந்து செல்லும் அவலம் நீங்க இலவச பேருந்து வசதி செய்து கொடுத்தார்.

4. 1996-2001 ஆட்சிக் காலத்தில் மட்டும் 7000 பள்ளிகளைத் திறந்தார்.

5. தாழ்த்தப்பட்ட, பழங்குடியின, மிகப் பிற்படுத்தப் பட்ட மாணவர்களுக்கு ஊக்கத் தொகை கொடுத்தார்.

6. குடும்பத்தில் முதல் தலைமுறை பட்டதாரிகளுக்கு ஆண்டுக்கு 2,000 வீதம் 80,000 ரூபாய் கொடுத்து கிராமப்புற மாணவர்களைப் பட்டதாரிகள் ஆக்கினார்.

7. மாவட்டத்திற்கு ஒரு மருத்துவ, பொறியியல் கல்லூரி திறந்தார்.

8. மருத்துவம், பொறியியல் கல்லூரி படிப்புகளுக்கு நுழைவுத் தேர்வை நீக்கி ஒடுக்கப்பட்ட, ஒதுக்கப்பட்ட, அடித்தட்டு மாணவர்களும் உயர் கல்வி பெற வழி செய்து சமத்துவத்தை நிலை நிறுத்தினார்.

9. அண்ணா தொழில்நுட்ப பல்கலைக் கழகங்களின் பிரிவுகளைத் தமிழ் நாட்டில் பல்வேறு இடங்களில் உருவாக்கினார்.

10. தகவல் தொழில்நுட்ப துறையின் வளர்ச்சியைக் கணித்து மாநில தகவல் தொழில்நுட்ப கொள்கையை உருவாக்கினார்.

11. சென்னையில் டைடல் பூங்கா (Tidel Park) உருவாக்கி இன்று ஒடுக்கப்பட்ட, ஒதுக்கப்பட்ட, அடித்தட்டு மாணவர்களும் உலகம் முழுவதும் தகவல் தொழில்நுட்பத் துறையில் உயர் பதவியிலிருக்க காரணம் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள்.

12. தகவல் தொழில்நுட்பச் சிறப்புப் பொருளாதார மண்டலங்களை உருவாக்கி டாடா கன்சல்டன்சி சர்வீஸ், விப்ரோ, இன்போசிஸ், போலாரிஸ், காக்னிசன்ட் போன்ற தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் தங்கள் அலுவலகங்களை அமைக்கக் காரணமாய் இருந்தார்.

13. இட ஒதுக்கீட்டின் மூலமாக மருத்துவம், பொறியியல் கல்லூரி படிப்புகளுக்குத் தாழ்த்தப்பட்ட, பழங்குடியின, மிகப் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு உயர் கல்வி நிறுவனங்களின் வாய்ப்பு தந்து கல்வியில் சமத்துவத்தைக் கொண்டு வந்தார்.

14. இவை அனைத்திற்கும் முத்தாய்ப்பாக மாணவச் செல்வங்களின் கல்வி சுமையைக் குறைத்து உயர் தரக் கல்வி வழங்க உலகத் தரத்திலான சமச்சீர்க் கல்வி முறையைக் கொண்டு வந்து கல்வியில் சமத்துவத்தைக் கொண்டு வந்தார்.

முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் சாதனைகளைச் சொல்லப் பக்கங்கள் போதாது, அவர் தன் வாழ்நாள் முழுவதும் ஒடுக்கப்பட்ட, ஒதுக்கப்பட்ட, அடித்தட்டு மக்களின் சமூக நீதி, சமத்துவம் பேண உழைத்துக் கொண்ட இருந்தார்.

இந்த வருடம் தமிழின தலைவர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு ஆண்டில் அவரின் வழியில் நடந்து சமூகநீதி, சமத்துவம் கொண்ட மனித இனத்தை உருவாக்குவோம் என்று உறுதி ஏற்போம்.

!! தமிழ் வெல்லும் !!

மிசௌரி தமிழ்ப் பள்ளி மற்றும் மிசௌரி தமிழ்ச் சங்கம் இடம் வாங்கியதற்கான பத்திர பதிவு ஆவணத்துடன் பதிவு அலுவலகத்தில்

தமிழ்க் கல்வி மற்றும் பண்பாட்டு மையம்

ஒரு முன்மாதிரித் திட்டம்

மிசௌரி தமிழ்ச் சங்கம் மற்றும் மிசௌரி தமிழ்ப்பள்ளி கட்டிட மேலாண்மைக் குழு

மேனாள் தலைவர்: வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவை, நிறுவனர்: மிசொரி தமிழ்ப் பள்ளி
நிறுவனர் தலைவர்: மிசொரி தமிழ்ச் சங்கம், அமெரிக்கத் தமிழ்க் கல்விக்கழகம்

முனைவர்
அரசு செல்லையா

உலம் பெயர் தமிழர்கள் தனிப்பட்ட வாழ்விலும், சமூக வாழ்விலும், தொழில்துறை வாழ்வின் தேவைகளிலும் தம்மை ஆற்றலுடன் நிலை நிறுத்திக்கொள்வதுடன், நம் இளைய தலைமுறைக்கும் தமிழ் மொழி, கலை மற்றும் பண்பாட்டைப் பயிற்றுவிப்பது மிகவும் அத்தியாவசியமான ஒன்று.

இந்த சேவையில், அமெரிக்கா முழுதும் தமிழ்ச் சங்கங்களும், பள்ளிகளும் வெகு சிறப்பாக இயங்கி வருவதை அனைவரும் அறிவோம். நம் தமிழ்ச் சமூகத்தின் வாழ்வின் அங்கங்களாக ஒன்றுடன் ஒன்றாக கரம் சேர்த்து நம்மை முன்னத்தி ஏராக வழி நடத்தும் அமைப்புக்கள் அவையிரண்டும்!

அடையாளம்

தமிழ்ப் பள்ளிக்கும், தமிழ்ச் சங்கத்திற்கும் சொந்தமாக நிரந்தரமாகப் பள்ளிக்கூடமும், அரங்கமும், நூலகமும் கட்டியெழுப்புவது என்பது அவசியமானது. இந்த கட்டமைப்பு, நம் மொழியையும், கலைகளையும், பண்பாட்டையும், அமெரிக்க மண்ணில் நிலை நிறுத்த, தமிழர்களின் வாழ்வியலை அடுத்த கட்டத்திற்கு உயர்த்தி, என்றென்றும் அடையாளச் சின்னங்களாக உலகுக்குப் பறைசாற்றி நிற்கப் போகின்றன.

நம் மொழி, கலை, இலக்கியம், பண்பாடுகள் எல்லாம் எதிர்காலத்தில் மேலும் தழைத்தோங்க, நம் அடையாளங்களைத் தொடர்ந்து எடுத்துச் செல்லவும், அடுத்த நம் தலைமுறை கூடி மகிழ்ந்து தமிழை வளர்க்க ஒரு நிரந்தர இடம் தேவை என்பதை உணர்ந்து மிசௌரி மாகாணத்தின் செயிண்ட் லூயிஸ் நகரில் ஏழு ஏக்கர் நிலம் வாங்கப் பட்டுள்ளது.

மிசௌரி தமிழ்ச் சங்கப் பங்களிப்பு

அமெரிக்கத் தமிழ்ச் சமூகத்திற்கும், அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவைக்கும் மிசௌரி தமிழ்ச் சங்கம் தொடர்ந்து பல பரிமாணங்களில் பங்களித்து வருகின்றது. 1997 மற்றும் 2014 ஆண்டுகளில் பேரவை விழாவைச் சீரும் சிறப்புமாக நடத்திய தமிழ்ச் சங்கம். தமிழ் முன்னோடி விருதுகள், சங்கங்களின் சங்கமம், குறும்படப் போட்டி, பறை, சிலம்பம் எனக் குறிப்பிட்டுச் சொல்லும் அடையாளங்களான பல்வேறு நிகழ்ச்சிகள் இங்கிருந்து தொடங்கப்பட்டவை . இதுவரை மூன்று



படத்தில் இருப்பவர் இடமிருந்து வலம்: சிவராசன் ஜயப்பன், கண்ணன் துரைராஜ், இளங்கோ திருப்பதி, பூபதி சாமிக்கண்ணு, சிக்கல்குமார் நாகராசன், பொற்செழியன் இராமசாமி, பதிவு அலுவலக பிரதிநிதி, சிவசங்கர் சங்கரநாராயணன், செந்தில் இராதாகிருட்டிணன், வீரபாண்டியன்.

பேரவைத் தலைவர்கள், மிசௌரி தமிழ்ச் சங்கத்திலிருந்து பல்லாண்டு காலம் பணியாற்றி பின்னர் பேரவைத் தலைவர்களாகி மிகச்சிறப்பாக வழி நடத்தியுள்ளனர்.

கொடையளிப்பீர்

மிசௌரி தமிழ்ப் பள்ளியும், தமிழ்ச் சங்கமும் நடத்திய நிதி திரட்டும் நிகழ்வின் வாயிலாக செயின்ட் லூயிஸ் நகரத் தமிழ்ச் சமூகத்தின் பங்களிப்பில் சிறப்பாக நிதி திரட்டும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

பள்ளி வகுப்பறைகளுக்குக் கொடையாளர்களின் பெயர் வைக்கும் திட்டத்தில், இதுவரை 12 குடும்பங்கள், ஒவ்வொரு குடும்பமும் 25 ஆயிரம் அமெரிக்க வெள்ளி நிதி அளித்துள்ளார்கள்.

அதுபோல அரங்கத்திற்கும், நூலகத்திற்கும், பண்பாட்டுத்தள அருங்காட்சியகத்திற்கும் நிதி திரட்டிக் கொண்டிருக்கிறோம். அதற்குக் கொடையாளர்களின் பெயர்களையே வைக்கும் திட்டமும் இருக்கிறது. தங்களின் பெயர்தாங்கி காலத்திற்கும் நிற்கப் போகும் தமிழ் அடையாளச் சின்னங்களுக்குப் பரந்த மனதுடன் கொடையளிப்பீராக! எதிர்காலத்தில் தமிழ் மொழிக் கட்டமைப்பு நமது ஒட்டுமொத்த அமெரிக்கத் தமிழ்ச் சமூகத்தின் சொத்தாக இருக்கப் போகின்றது என்பதில் ஐயமில்லை.

தமிழர் மரபான அறவாழ்வின் அடிப்படைப் பண்பான ஈகையுள்ளத்துடன், இந்த மாபெரும் தமிழ்க் கனவு நனவாக நிதி அளித்து இந்த திட்டம் நிறைவேற உதவுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

"செல்வத்துப் பயனே ஈதல்", அதிலும் தலைமுறைகள் பயன்படுத்த, காலத்துக்கும் நிலைத்து நிற்கப் போகும் ஒரு மையத்திற்கு எனில் இரட்டிப்பு நிறைவு தானே!

◆

மொழி சமத்துவம் தமிழில் மொழி மாற்றம் செய்யப்பட்ட இலக்கியங்கள்

வசந்தி ராஜராஜன், ஸ்டுடென்ட்ஸ் விஷன் அகாடமி (Students Vision Academy)

"யாதும் ஊரே யாவரும் கேளிர் "

– **கணியன் பூங்குன்றனார்**

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்"

– **திருக்குறள்**

மனித சமத்துவத்தை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகவே பறை சாற்றியது தமிழ் மொழியும் தமிழ் இலக்கியங்களும்.

சமத்துவம் என்ற சொல் உணர்த்துவது என்ன? அனைத்தும் சமம் என்பது தானே?

மொழி சமத்துவம் என்பதை இங்கு கட்டாயம் விளக்கியாக வேண்டும். அவ்வாறாயின் அனைத்து மொழிகளும் சமமா என்ற கேள்வி எழுகிறது. உலகில் கிட்டத்தட்ட 6,500 மொழிகள் இருக்கின்றன. அவற்றுள்ளும் ஆறு மொழிகளே மிகப் பழமையானவை. அதில் நம் தமிழ் மொழியும் ஒன்று. அவற்றுள்ளும் என்றும் வளர் தமிழாக நம் மொழி விளங்குவது போற்றுதலுக்குரிய ஒன்று.

இலக்கியங்கள், மனிதனின் அறிவும் கற்பனையும் சார்ந்து அமைவது. அதனூடே அழகான சொல் வளமும் சேரும்போது, அது நிலைத்தன்மையைப் பெறுகிறது. அவ்வாறு போற்றப்பட்டவையே நம் சங்கத்தமிழ் இலக்கியங்கள். ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே முகிழ்த்த அரும்பெரும் பெட்டகங்கள் அவை. இலக்கியங்கள் காலக் கண்ணாடி. அவ்விலக்கியங்களில் எழுதப்பட்ட வரலாற்றுக் குறிப்புகள் அன்றைய சமூகத்தின் நிகழ்வுகளை அறிய நமக்கு கிடைத்த புதையல்.

வசந்தி ராஜராஜன்

இலக்கியங்கள் இரண்டு வகைகளாகப் பிரிக்கப்படும். ஒன்று, வாழ்க்கைப் பற்றியது. மற்றொன்று, வாழ்க்கைக்காக நடைபெறும் போராட்டங்கள் பற்றியது. முந்தையது அகவாழ்க்கை, மற்றது புறவாழ்க்கை. புற வாழ்வின் ஒருபிரிவு பொதுவியல்.

வளமான மொழியில் படைக்கப்பட்ட இலக்கியங்கள், பிற மொழியினருக்கும் சென்று சேர உதவுவது மொழிபெயர்ப்பு. இந்த மொழிபெயர்ப்பினை மொழி ஆக்கம் என்றும் கூறலாம். பொதுவாக மொழிபெயர்ப்பை ஆறு வகைகளாகப் பகுக்கலாம். சொல்லுக்குச் சொல் மொழிபெயர்த்தல், விரிவான மொழிபெயர்ப்பு, முழுமையான அல்லது சரியான மொழிபெயர்ப்பு, சுருக்கம், தழுவல் மற்றும் மொழியாக்கம்.

மொழிபெயர்ப்பாளர் இருமொழித் திறன் பெற்றவராக இருந்தால் மட்டுமே மொழிபெயர்க்கப் படும் நூலின் கருத்தை உள்வாங்கி, அதே கருத்தை மொழிபெயர்த்த நூலில் தர இயலும்.

மொழிபெயர்ப்பினால் புதிய சொற்கள் உருவாகி மொழி வளம் பெறுகிறது. பிற இனத்தவரின் பண்பாடு, நாகரிகம், பழக்கவழக்கங்கள் போன்றவற்றை அறிய முடிகிறது. உலகப் புகழ்பெற்ற அறிவியல் கண்டுபிடிப்புகளையும், இலக்கியப் படைப்புகளையும், அறிவதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது.

தமிழில் நமக்குக் கிடைக்கும் முதல் இலக்கண நூலான தொல்காப்பியத்தில்,

"மரபுநிலை திரியா மாட்சியவாகி
உரை படு நூல்தான் இருவகை இயல
முதலும் வழியும் என நுதலிய நெறியின"

(தொல் - மரபியல் -92)

என்ற நூற்பாவில், முதல்நூல், வழிநூல் என நூல் இருவகைப்படும் என்றும்

"வழியெனப்படுவது அதன் வழித்தாகும்"
"தொகுத்தல் வகுத்தல் தொகைவிரி மொழிபெயர்த்து
அதர்ப்பட யாத்தலோடு அன்ன மரபினவே" (97)

என்று மொழிபெயர்ப்பின் வகைகளையும் விரிவாகக் கூறுகிறார்.

"மாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும்" - சின்னமனூர் செப்பேடுகளில் குறிப்புகள் உள்ளன. இதன் வழி மகாபாரதக் கதையை தமிழில் மொழிபெயர்த்த குறிப்புகளைக் காண முடிகிறது.

ஒருமொழியின் வளம் என்பது, பிறமொழிகளிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ள இலக்கியங்களையும், அம்மொழியிலிருந்து பிற மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள இலக்கியங்களையும் பொறுத்தே அமைகிறது எனில் தமிழ்மொழி இம்மொழிபெயர்ப்புத் துறையில் எல்லா மொழி களிலும் மேம்பட்ட நிலையில் உள்ளது எனலாம். விவிலியத்திற்கு அடுத்ததாக நம் திருக்குறள் உலக மொழிகள் பெரும்பாலான மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்ட நூல் என்பதே இதற்குச் சான்று.

சங்க காலக் காப்பியங்களில் சிலப்பதிகாரம், மணிமேகலை, போன்ற இலக்கியங்கள் தமிழில் மூலப்படைப்புகளாக அமைந்தன. மற்றவை யாவும் பிராகிருதம், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளின் தழுவல்களாகத் தமிழாக்கம் பெற்றவை.

2023-சாகித்ய அகாதமி விருதுகள்

இந்திய மொழிகளில் இலக்கியத்தின் உயரிய விருதாக கருதப்படும் சாகித்திய அகாதமியின் 2023 விருதுப்பட்டியலில் இடம் பெற்ற தமிழ்நூல்கள்

நூல்	நூலாசிரியர்
நீர்வழிப் படூஉம்	தேவிபாரதி
யுவ புரஸ்கார்	
திருக்கார்த்தியல்	ராம் தங்கம்
பால சாகித்ய புரஸ்கார் விருது	
ஆதவன் பொம்மை	உதயசங்கர்
மொழிபெயர்ப்பு	
கருங்குன்றம்	கண்ணையன் தட்சிணா மூர்த்தி மூலம்- மமாங் தய் (The Black Hill, English)

கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் பைசாசம் என்னும் மொழியில், குணாட்டியர் எனும் புலவர் உதயணன் சரித்திரத்தைப் பாடினார். பின்னர் துர்விநீதன் அக்கதையை வடமொழியில் பிருகத்கதா என்ற பெயரில் எழுத, இந்த வடமொழி நூலைத் தழுவியே கொங்கு வேளிரின் பெருங்கதை அமைந்துள்ளது.

க்ஷத்திர சூடாமணி, கத்தியசிந்தாமணி, ஜீவன்தார சம்பு, ஸ்ரீபுராணம் ஆகிய நூல்களைத் தழுவியே சீவக சிந்தாமணி எழுதப்பட்டது. தோலாமொழித் தேவரின் சூளாமணியும் வடமொழி நூல் ஒன்றின் தழுவலே ஆகும். சிறுகாப்பியங்களுள் யசோதர காவியம் என்ற காப்பியத்திற்கு புஷ்பதந்தர் என்பவர் சமஸ்கிருதத்தில் இயற்றிய யசோதர காவிய என்ற படைப்பே மூல நூலாகும்.

கி.பி. 10-ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு பிரபுலிங்க லீலா என்ற காப்பியத்தை கன்னட மொழியிலிருந்து, 17-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள், பிரபுலிங்க லீலை என்ற சிற்றிலக்கியமாகத் தமிழாக்கம் செய்துள்ளார்.

தொடக்க காலத்தில் சமஸ்கிருத நூல்கள் தழுவல்களாகவும், அதனைத் தொடர்ந்து நேரடி மொழி பெயர்ப்பாகவும் பல நூல்கள் தமிழுக்கு வந்தன. அவ்வகையில், வேத உபநிடதங்கள், இதிகாசம், புராணம், நாடகம், புதினம், சிறுகதை,

தர்க்கம், அறிவியல், தத்துவம், சோதிடம் போன்ற இலக்கியங்கள் தமிழில் மொழிபெயர்ப்பாயின. தமிழில் ஏறத்தாழ அறுநூறுக்கும் மேற்பட்ட நூல்கள் இவ்வாறு மொழி பெயர்ப்பாகியுள்ளன.

பாரதம், கீதை, பாரதக் கிளைக்கதைகளை பலரும் மொழிபெயர்ப்பு செய்துள்ளனர். வேதகிரி முதலியார், ஸ்ரீபட்டர், கே.ராமசாமி நாயுடு, சி. ஆனந்தாச்சாரி, சுப்பிரமணிய பாரதியார், போன்றவர்கள் பகவத் கீதையை மொழி பெயர்த்துள்ளனர். காளிதாசரின் இரகுவம்சம், குமாரசம்பவம் ஆகியன தமிழில் மொழி பெயர்க்கப்பட்டன. வடமொழியில் தோன்றிய கதை இலக்கியங்களில் 'பஞ்ச தந்திரம்' மொழி பெயர்க்கப்பட்ட கதை இன்றளவும் போற்றப்பட்டு வருகிறது.



பிராகிருதமும், வடமொழியும் கலந்த நடையில் மகேந்திரவர்மன் எழுதிய மத்தவிலாச பிரகடனம் என்ற நாடகத்தை டி.என். சுப்பிரமணியமும், மயிலை சீனி. வேங்கடசாமியும் தமிழில் மொழி பெயர்த்துள்ளனர். ஷேக்ஸ்பியரின் ஆங்கில நாடகங்கள் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு நடிக்கப்பட்டது போலவே காளிதாசரின் சாகுந்தலம் தமிழில் சகுந்தலவிலாசம் என்ற பெயரில் மொழிபெயர்க்கப்பட்டு நடிக்கப்பட்டது. இந்நாடகத்தை பதினாறு ஆசிரியர்கள், முக்கியமாக மறைமலையடிகள் அவர்களும் மொழிபெயர்த்துள்ளனர். சூத்திரக்கரின் மிரிச்சிக்கடிகா என்ற நாடகத்தை மண்ணியல் சிறுதேர் என்று தமிழில் பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியார் மொழிபெயர்த்துள்ளார். விசாகத்தரின் முத்திராட்சம் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

அத்வைத சிந்தா கௌஸ்துபம், குரு தத்துவ இரகசியம், வேதாந்த பரிபாஷை போன்ற இன்னும் எண்ணற்ற தத்துவ நூல்கள் வடமொழியிலிருந்து தமிழுக்கு மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

வீரசோழியம், நேமிநாதம், நன்னூல் போன்ற தமிழ் இலக்கண நூல்களில் வடமொழிச் சொற்கள் தமிழில் வழங்கி வரும் இலக்கணத்தைக் கூறுகிறது. இதிலிருந்து மொழி பெயர்ப்பு எவ்வாறு இலக்கியங்களில் முக்கியப் பங்கை வகிக்கின்றன என்பதை உணர முடிகிறது.

லார்டு எட்வர்ட் இராபர்ட் லிட்டன் அவர்களின் *"The Secret Way"* என்ற நூலை பேராசிரியர் சுந்தரம்பிள்ளை மனோன்மணீயம் என்ற பெயரிலும், ஜான் பனியன் *(John Bunyan)* எழுதிய *"The Pilgrim's Progress"* என்ற நூலை எச். ஏ. கிருஷ்ணபிள்ளை அவர்கள் இரட்சணிய யாத்திரிகம் என்றும் மொழிபெயர்த்துள்ளனர்.

பாரசீகக் கவிஞர் கியாசுதீன் அடிலாபாத் உமர்கயாம் என்பவர் எழுதிய "ரூபாயத்" என்னும் நான்கடிச் செய்யுட்களைத் தமிழில் உமர்கயாம் பாடல்கள் என்னும் தலைப்பில் கவிமணி மொழிபெயர்த்துள்ளார்.

அறிவியல் மொழிபெயர்ப்பைப் பொறுத்தவரை மூல மொழியில் உள்ள கருத்துக்களை உள்வாங்கி சுருக்கமாக மொழிபெயர்த்தல் முறையில் 'காலம் மிகக் குறுகியது' என்ற தலைப்பில் வை.சாம்பசிவம் 'ஆல்பர்ட் ஐன்ஸ்டனின் எண்ணங்களை மொழிபெயர்த்துள்ளார்.

ஒரு மொழியின் வளம் என்பது நிலைத்து நிற்கும் இலக்கியங்கள் உருவாகும் போதுதான். அவ்வகையில் நம் தமிழில் உள்ள இலக்கியங்களில் மொழிமாற்றம் பெற்ற இலக்கியங்கள் மிகுந்திருந்தாலும், அவை தமிழரின் பண்பாடு, கலாச்சாரம் போன்றவற்றை சார்ந்துஎழுதப்பட்டகாரணத்தால்,தனித்தன்மையுடன் மூலநூல் போன்றே விளங்குகிறது. இதற்கு கம்பராமாயணம் எடுத்துக்காட்டு. கதையை மட்டுமே எடுத்துக் கொண்டு, கம்பர் அமைத்திருக்கும் பாடல்களால் இன்றளவும் போற்றப்பட்டு வருகிறது.

தற்காலம், கணினி மற்றும் இணையவழியால் உலகத்தை ஒரு சிறிய வட்டத்திற்குள் கொண்டு வந்துள்ளது. அதனால் மொழிபெயர்க்கும் வசதிகளும் வளர்ந்திருக்கிறது. இதனால் இன்னும் வேகமாக இலக்கியங்கள் யாவும் மொழிமாற்றம் அடைந்து, எல்லா மொழிகளிலும் எல்லா நூல்களும் அனைவரையும் சேர்த்து மொழிவளம் பெருகும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

◆

வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையின் 37 ஆவது தமிழ் விழா சிறக்க வாழ்த்துகள்!



Dr. மாலதி & Dr. விஜய் கோலி

ஜிடி. நாயுடு

சரோ. இளங்கோவன்

ஜிடி. நாயுடு, என்கிற கோபால்சாமி துரைசாமி நாயுடு ஐயா தாமஸ் எடிசனுக்கு ஒத்த விஞ்ஞானி என்ற பெருமையை தமிழ்நாட்டிற்கு அளித்தவர். அவர் மார்ச்சு மாதம் 23, 1893 அன்று இவ்வுலகில் உதித்தார். தந்தை கோபால் சாமி நாயுடு. அவர் பிறந்த ஊர் கோயம்புத்தூர் அருகில் அமைந்த கலன்கல் என்ற ஊர். இவர் தந்தையார் ஒரு விவசாயி. ஜிடி நாயுடு 1920-இல் பேருந்து தொழில் நடத்தினார். இந்தப் பேருந்து பொள்ளாசிக்கும் பழனிக்கும் ஓடியது. சில வருடங்களில் இம்முயற்சி Universal Motor Service (UMS) என்கிற தொழிற்சாலையாக உருமாற்றம் பெற்று மிகவும் நல்ல பொது நலப் பேருந்துகளை உருவாக்கியப் பெருமையை அடைந்தது. 1937-ஆம் ஆண்டு UMS தொழிற்சாலை இந்தியாவிலேயே முதன்முதல் பேருந்துவை உருவாக்கியது.

சரோ. இளங்கோவன்

ஜிடி நாயுடுவின் பள்ளிக்கல்வி மிகவும் சாதாரணமானதுதான். பள்ளி செல்ல பிடிக்காது. குறும்பு நிறையச் செய்வார். கல்லூரிக்குச் செல்ல வில்லை. ஆனால் அவரது விடாமுயற்சி, விஞ்ஞானப்பார்வை, அவரை புகழ் உச்சாணிக்கு கொண்டு சென்றது. எடுத்துக்காட்டாக அவர் ஒரு மோட்டார்பைக்கை அக்கு வேர் ஆணிவேராகக் கழட்டி, அதனை கண்கூடாகப் பார்த்து புரிந்துகொண்டு திருப்பி முழுமையான வடிவுக்கு கொண்டுவந்தது அவர் தொழில்நுட்பப் புலமையைக் காட்டிற்று.

இந்த மோட்டார் பைக் எப்படி கிடைத்தது என்றால் ஒரு உணவகத்தில் வேலை செய்து சேமித்த பணத்தில் வாங்கியது. 1937-இல் ஐரோப்பா பயணம் மேற்கொண்டு பல தொழிற்சாலைகளை நேரில் பார்த்து தொழில் நுட்பங்களை உள்வாங்கிக்கொண்டார். அவர் படைத்த கருவிகள் பல. அவற்றை மலிவாக உருவாக்குவது, அவருடைய சமூக நலப் பற்றைக் காட்டுகிறது. மின் சாரத்தில் இயங்கும் சவரக்கத்தி (Rasant Razor), புகைப்படக்கருவி பாகம், பழச்சாறு எடுக்கும் இயந்திரம், ஓட்டு எண்ணும் கருவி, மண்ணெண்ணையில் இயங்கும் மின்விசிறி, 70 ரூபாய் ரேடியோ (1947), இருவர் அமரும் 2,000 ரூபாய் மதிப்புள்ள பெட்ரோல் கார் (1952) என பற்பல படைப்புகள்.

அரசின் உரிம ஆதரவு கிடைக்காமல் கார் உற்பத்தி நிறுத்தப்பட்டது. 1935-ஆம் ஆண்டு அரசர் 5-ஆம் ஜார்ஜ் இறுதி ஊர்வலத்தை இவருடைய சொந்த புகைப்படக்கருவி கொண்டு ஒளிப்படம் உருவாக்கினார் என்ற பெருமை இவருக்கு உண்டு.

ஜெர்மனியில் ஹிட்லரை இரண்டாம் உலகப்போருக்கு முன் சந்தித்துள்ளார். பெரும்தலைவர் கல்வி வள்ளல் காமராசரை பல நிகழ்ச்சிகளுக்கு வரவழைத்து மகிழ்ந்துள்ளார். தந்தை பெரியாரும் இவரும் நெருங்கிய நண்பர்கள். சமூக விஞ்ஞானியான பெரியாரும் தொழில்நுட்ப விஞ்ஞானியான ஜிடி. நாயுடும் கருத்து இணக்கம் உள்ள நண்பர்களாக விளங்குவது ஆச்சரியமில்லை. 1936-இல் அரசியலில் மேல்சபைக்கு போட்டியிட்டு வெற்றி பெறவில்லை. இதுவும் ஒரு நன்மைக்குதான். இவருடைய விஞ்ஞான வளர்ச்சி மேன்மேலும் தொடர வாய்ப்பு என்றே எடுத்துக்கொள்ளலாம்.

சர். சி.வி. ராமன், சர். விஸ்வேசரய்யா இவருடைய நண்பர்கள். இவர்கள் ஐயாவின் கோயம்புத்தூர் தோட்டத்தைக்கண்டு மிக மகிழ்ந்தவர்கள். மிக குறைந்த நேரத்தில் அதாவது 11 மணி நேரத்தில் ஒரு வீடு கட்டும் ஐயாவின் திட்டத்திற்கு இந்த விஞ்ஞானிகள் அடிக்கல் நாட்டி, நாயுடு ஐயாவை பெருமைப் படுத்தினார்கள். மகாத்மா காந்தி, பண்டிட் ஜவர்கலால் நேரு, சுபாஸ் சந்திரபோஸ் இவர்களை நிறைய புகைப் படங்கள் எடுத்த பெருமை நாயுடு ஐயாவிற்கு உண்டு. இயந்திரப் புலமைமட்டு மல்லாது, தாவர உலகத்திலும் நிறையப் புரட்சி கள் ஐயா செய்தார். அவை என்னவென்றால், உற்பத்தி பெருக தாவர ஒட்டுக்கலை, தாவரங்களுக்கு சத்து ஊசி போட்டு மிக உயரமான பருத்திச் செடிகள், அதிக விளைச்சலைக் கொடுக்கும் சோளம், பப்பாளி, ஒட்டு மாங்கனிகள் போன்ற படைப்புகள்.

1944-ஆம் ஆண்டு பேருந்து தொழிலிருந்து ஓய்வெடுத்துக் கொண்டு கல்வி உலகிலும் பெரும் தொண்டுகள் பல செய்தார். அவருடைய கல்விக் கொடை இந்தியாவிலேயே , முதல் பாலிடெக்னிக் கல்லூரி மற்றும் ஆர்தர் பாலிடெக்னிக் காலேஜ் என்ற கல்விக் கூடங்கள். அப்பொழுது ஆர்தர் ஹோப் என்பவர் மெட்ராஸ் ப்ரெசிடென்சியின் ஆளுநர். நாயுடு ஐயா முதல் கல்லூரி தலைவராக இருந்தார். அவர் கல்லூரி படிப்பு 4 வருடங்களுக்கு பதிலாக 2 வருடங்கள் போதும் என்று தன் கருத்தை வெளியிட்டார். அதை மற்றவர்கள் ஏற்றுக்கொள்ளா ததால் பதவியை ராஜினாமா செய்துவிட்டார். மேலும் தொழிற்சாலையில் வேலை செய்தவர்கள் குழந்தைகளுக்கு கல்வி உதவித் தொகை, பலவித ஆராய்ச்சிகளுக்கும், பொதுமக்கள் மற்றும் ஒடுக்கப்பட்டவர்கள் வாழ்க்கை முன்னேற்றத்திற்கும்

திட்டங்கள் என பல தொண்டுகள் மக்களுக்கு வழங்கினார். 1967-ஆம்ஆண்டு ஜிடி நாயுடு தொழில் நுட்ப அருங்காட்சியகம் அமைக்கப்பட்டது. நான் பத்தாம் வகுப்பு 1964-இல் படிக்கும் போது பள்ளியின் சுற்றுப்பயணத்தால் கோயம்புத்தூர் செல்லும் வாய்ப்பு கிடைத்தது. ஐயாவின் அருங்காட்சியகம் கண்டு மகிழ்ந்தேன், வியந்தேன். கோயம்புத்தூருக்கு இன்னொரு நல்ல காரியம் நடந்தது. அது என்னவென்றால், மூன்று பெரும் ஆளுமைகள் ஜிடி நாயுடு, ரத்தினசபாபதி முதலியார் மற்றும் இந்தியாவின் முதல் பொருளாதார அமைச்சர் R.K. சண்முகம் செட்டியார் இவர்கள் மூவரும் அரும்பாடுபட்டு கோயம்புத்தூர் நகரத்திற்கு சிறுவாணி ஆற்று நீர் கிடைக்க வழிவகுத்தனர்.

தற்பொழுது ஆர்தர் பாலிடெக்னிக் காலேஜ் அரசு கல்லூரியாக மாறியுள்ளது. இவ்வளவு வியக்கத்தக்க அறிவும் ஆற்றலும் கொண்ட ஐயா 1974-ஆம் ஆண்டு ஜனவரி 4-ஆம் தேதி அன்று, அவரது 80 வயதில் வயது மூப்பின் காரணமாக இயற்கை எய்தினார். இம்மாபெரும் விஞ்ஞானி மறைவிற்கு ஆழ்ந்த வருத்தம் தெரிவித்த பலருள் குறிப்பிடதக்கவர் நோபல் பரிசு பெற்ற சர் சி. வி. ராமன் அவர்கள். அவர் ஐயாவைப் பற்றி மாபெரும் கல்வியாளர், தொழிலதிபர், தொழில்நுட்ப விஞ்ஞானி, மக்கள் தொண்டர், கோடியில் ஒரு மனிதர் என்று புகழ் மாலை சூட்டினார். அவர் மகன் வழி குடும்பத்தினர் ஜிடி தொழில் நிறுவனத்தையும் அருங்காட்சியகத்தையும் மற்றும் கல்வி கூடங்களையும் பராமரித்து வருகின்றனர். ஜிடி நாயுடு அறிவாற்றலையும் மக்கள் தொண்டறத்தையும் போற்றி வாழ்வோம்.

இந்த அரிய மனிதரை ஏன் மக்கள் போற்றிக் கொண்டாடவில்லை என்ற ஒரு குறை உண்டு. காரணம் அரசியல், சினிமா மோகம் மக்கள் கவனத்தை ஈர்ப்பதால் தான். இனி பள்ளிகளில் இந்திய விஞ்ஞானிகள் சமூகநீதி தலைவர்களைப் போற்ற ஒரு சிறப்பு மாதம் தேர்ந்தெடுத்து கொண்டாடினால் இந்த குறையை நீக்கலாம். குழந்தைகள் வருங்காலத்தை ஒளிமயமாக்குவார்கள் என்பது உறுதியாகும். ◆

Biryani Bowl

Biryani Bowl
AN AUTHENTIC INDIAN CUISINE

+1 (210) 251-4762
contact@biryanibowltx.com
10555 Culebra Rd, Suite#105,
San Antonio, TX 78251
biryanibowltx.com

பேரவையின்
37 ஆவது தமிழ்விழா
சிறப்புற வாழ்த்துகள்!

பேரவை
விழா மலர்க்குழு



புதுப்புனல் பொங்கும் அருவி

இரம்யா ரவீந்திரன், சார்லட், வட கரோலைனா

பேரவை அருவி குழுவின் சார்பாக அனைவருக்கும் முதற்கண் வணக்கங்கள்.

எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு - குறள் 467

என்பது வள்ளுவர் வாக்கு. அருவி இதழ், கொரோனா பெருந்தொற்றின் போது இரண்டாண்டுகள் வெளிவரவில்லை. பெரும்தொற்றிற்குப் பின் 2022 இல் பேரவையின் புதிய செயற்குழு பொறுப்பேற்ற பின், புதிய அருவி குழு அமைக்கப்பட்டது. அருவி ஆசிரியர் மற்றும் துணை ஆசிரியர்கள் யாவரும் பெண்கள் என்பது ஒரு முக்கியச் சிறப்பு. அது மட்டுமன்றி அருவி குழுவில் இடம்பெற்றுள்ள உறுப்பினர்களில் சரி பாதி பெண்கள் என்பதையும் இங்கே குறிப்பிட்டாக வேண்டும்.

இரம்யா ரவீந்திரன்

அருவிக்கான பணிகளை ஆரம்பிக்க வேண்டும் என்ற போது, இந்த இதழை எப்படி முன்னெடுத்துச் செல்வது என்பதை புதிய குழுவின் ஆசிரியர் மற்றும் இணை ஆசிரியர்கள் ஒன்றாகக் கலந்து பேசி ஒரு செயல் வடிவம் கொடுத்தோம். அருவி இதழ் என்பது தமிழ்ச் சங்கங்களின் நிகழ்வுகள் மட்டுமன்றி ஒரு இலக்கிய இதழாக, பேரவை நடத்திய அல்லது நடத்தவிருக்கும் நிகழ்வுகளை பற்றிய ஒரு ஆவணமாக, பேரவை விழா குறித்த செய்திகளைத் தாங்கி வரும் ஊடகமாக என்று பல்வேறு பரிணாமங்களை எடுக்கக் கூடிய ஒரு இடத்தில் இருந்தது என்பது புலனாகியது.

எனவே அருவி குழுவின் முக்கிய நோக்கங்களாக பின் வருவனவற்றை அறிவித்தோம்.

1. ஒவ்வொரு காலாண்டும் பேரவை உறுப்பினர் சங்கங்களின் நிகழ்ச்சிகள், தன்னார்வத் தொண்டுப் பணிகள் மற்றும் செயற்பாடுகள் பற்றிய செய்திகளைத் தொகுத்து அனைவரும் அறியத் தருதல்.

2. பேரவையின் செயல்பாடுகள் மற்றும் பேரவை நிகழ்வுகள் குறித்த முக்கிய செய்திகளை உறுப்பினர்களுக்கும், உறுப்பினர் சங்கங்களுக்கும் கொண்டு சேர்த்தல்.

3. பேரவை விழா குறித்த செய்திகளை உடனுக்குடன் அனைவருக்கும் தெரிவித்தல்.

4. தமிழிலக்கிய ஆர்வத்தையும், தமிழில் எழுதும் ஆர்வத்தையும் வளர்த்தல்.

5. வட அமெரிக்காவிலிருந்து தாய் மண்ணிற்கும் ஒரு உறவுப் பாலத்தை ஏற்படுத்துதல்.

6. திறன் மிக்கவர்களை இனம் கண்டு அவர்களின் திறமைகளை அனைவரும் அறியச் செய்தல்.

அட்டைப்படம் முதல் அருவியின் உள்ளே இடம் பெறும் கட்டுரைகள் வரை எப்படி அமைய வேண்டும் என்பதை முடிவு செய்ய இந்த வரைவு பேருதவியாக இருந்தது. ஒவ்வொரு இதழின் அட்டைப்படத்தையும் அந்த இதழுக்கென முடிவு செய்யப்பட்ட கருப்பொருளைக்கொண்டு வரையப்பட்ட ஓவியமொன்றை ஒரு வட அமெரிக்க வாழ் ஓவியரிடமிருந்து பெறுகிறோம். ஒவ்வொரு இதழிலும் குறைந்தபட்சம் இரண்டு இலக்கிய ஆளுமைகளின் படைப்பினைப் பெற்று வெளியிட்டு வருகிறோம்.

தமிழ்ச் சாதனையாளர்களை அடையாளம் காட்ட "வாழ்த்துவோம் வாரீர்" என்ற பகுதியையும், வட அமெரிக்க வாழ் எழுத்தாளர்களை அடையாளம் காட்ட ஒரு பகுதியும், மறைந்த தமிழ்ச் சாதனையாளர்களை, ஆளுமைகளை நினைவு கூரும் வகையில் "நினைவில் நின்றவர்கள்" என்ற பகுதியும் தொடர்ந்து வழங்கி வருகிறோம். கவிஞர் ஜோ. அருள்பிரகாசம், கவிஞர் உமாதேவி, கவிஞர் அமுதா தமிழ்நாடன், கதைசொல்லி நெல்லை உலகம்மாள், எழுத்தாளர் திரு. அ.முத்துலிங்கம், கவிஞர் மகுடேசுவரன், கவிஞர் மனுஷ்யபுத்திரன், எழுத்தாளர் திரு. இலட்சுமி சரவணகுமார், கவிஞர் போகன் சங்கர், மகாகவி ஈரோடு தமிழன்பன், பேராசிரியர் முனைவர் கு.வெ. பாலசுப்ரமணியன், எழுத்தாளர் திரு. இமையம், கவிஞர் திரு. ஆரூர் தமிழ்நாடன், மூத்த பத்திரிகையாளர் திரு. ஜெயபாஸ்கரன் எனப் பல ஆளுமைகள் அருவி

இதழுக்காக கட்டுரைகள், கவிதைகள் ஆகியவற்றை வரைந்து அளித்திருக்கிறார்கள். அருவி ஆசிரியர் குழுவினைச் சார்ந்த பலரும் அருவிக்குப் படைப்புகளை தொடர்ந்து அளித்து வருகின்றனர். திறமையான ஓவியர்களை, எழுத்தாளர்களை, கவிஞர்களை வட அமெரிக்க வாசகர்களுக்குத்தொடர்ந்து அறிமுகம் செய்வது மிகுந்த மனநிறைவை அளிக்கும் பணி என்றால் அது மிகை இல்லை.

ஒவ்வொரு இதழுக்கும் தமிழ்ச் சங்க செய்திகளைப் பெற்று அளிக்க அருவி குழுவின் தன்னார்வலர்கள் அரும்பணியாற்றி வருகின்றனர். தமிழ்ச் சங்கங்கள் பல பயனுள்ள விடயங்களை முன்னெடுத்து செய்து வருவதை படிக்கும் அனைவருக்கும் இதே போன்ற நல்ல முயற்சிகளை தமது சங்கத்திலும் செயல்படுத்தும் நல்வாய்ப்பு அமைகிறது.

36-ஆவது பேரவை விழா குறித்த பலப் பயனுள்ள தகவல்களை அருவி இதழ் வாசகர்களுக்கு கொண்டு சேர்த்தது. பேரவை நடத்தும் பல்வேறு போட்டிகள் குறித்த அறிவிப்புகள், பேரவை விழா ஏற்பாடுகள், பேரவை விழா சிறப்பாக நடந்து முடிந்த பின் பல்வேறு ஆளுமைகள் கொடுத்த பின்னூட்டங்கள், விழாவில் எடுத்த நிழற்படங்கள், தன்னார்வலர்களுக்கு எடுத்த பாராட்டு விழா புகைப்படங்கள் எனப் பலவும் அருவி இதழ்களில் இடம் பெற்றுள்ளது. தற்சமயம் 37-ஆவது பேரவை விழாக் குறித்த செய்திகளை வாசகர்களுடன் பகிர்ந்து வருகிறோம்.

2023 இல் இருந்து வெளிவந்துள்ள அருவி இதழ் விவரங்கள் கீழே.

பணி மலர் 2023	https://fetna.org/aruvi-panimalar-2023
இளவேனில் மலர் 2023	https://fetna.org/aruvi-ilavenil-malar-2023
கோடை மலர் 2023	https://fetna.org/aruvi-kodai-malar-2023
இலையுதிர் மலர் 2023	https://fetna.org/aruvi-ilayudhir-malar-2023
பணி மலர் 2024	https://fetna.org/aruvi-pani-malar-dec-2023
இளவேனில் மலர் 2024	https://fetna.org/aruvi-ilavenil-malar-2024
கோடை மலர் 2024	https://fetna.org/aruvi-kodai-malar-2024

முத்தாய்ப்பாக, அருவி இதழ் சென்ற வருடம் 2023 நவம்பர் மாதத்தில் ஒரு குறுங்கதைப் போட்டியை அறிவித்து நடத்தியது. இத்தனை ஆண்டுகளில் அருவி இதழ் முதன் முறையாக நடத்திய இப்போட்டியில் வடஅமெரிக்க வாழ் எழுத்தாளர்கள் கலந்து கொண்டு தங்களது படைப்புக்களை அனுப்பினர். மூன்று வெற்றியாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. இந்த இரண்டு ஆண்டுகளில் அருவி இதழ் ஏற்றம் பல கண்டு வீறு நடை போட்டு வருகிறது. அருவி குழுவிற்கு கண்ணாக விளங்கும் அருவிக் குழுவின் உறுப்பினர்கள், இதழுக்காக செய்திகளை பகிர்ந்து வரும் தமிழ்ச் சங்கத் தன்னார்வலர்கள், தமிழ் ஆளுமைகள், பேரவையின் செயற்குழு உறுப்பினர்கள் எனப் பலருக்கும் இந்த நேரத்தில் எங்கள் நன்றிகளை உரித்தாக்குகிறோம்.

◆

வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையின்
37 ஆவது தமிழ் விழா சிறக்க வாழ்த்துகள்!

DWARKA
STUDIOS

பேரவையின் தொழில் முனைவோர் மாநாடு

International Tamil Entrepreneur Network

யாழ்ப்பாணம் - 2024

க. தில்லைக் குமரன் பேரவைத் தலைவர், 2006-2008; பேரவையின் தமிழ்விழா (2015) ஒருங்கிணைப்பாளர், சான் ஓசே, கலிபோர்னியா

க. தில்லைக் குமரன்

35 ஆண்டுகளுக்கு முன்பு நியூயார்க், நியூ செர்சி, ஹாரிஸ்பர்க், டெலவர் பகுதித் தமிழ்ச்சங்கம் ஆகிய சங்கங்களுடன் இலங்கைத் தமிழ்ச்சங்கமும் இணைந்து வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவையைத் துவக்கினர். துவங்கிய காலத்திலிருந்தே தமிழீழத்தில் பேரவையின் நிகழ்வொன்றை நடத்த வேண்டுமென்பது பலரது கனவு. 2009-ம் ஆண்டு தமிழினப் படுகொலைக்கு பின்பாவது ஒரு விழா நடத்த வேண்டும் என்று ஏங்கியவர்களில் நானும் ஒருவன். 2006-2008 காலங்களில் நான் தலைமைப்பணியை பொறுப்பேற்ற நாள் முதல் நான் கண்ட கனவு 2024 சனவரி 19-ம் நாள் யாழ் பல்கலைகழகத்தின் சிறப்பு மிக்க கைலாசபதி அரங்கத்தில் நிறைவேறியது.

போருக்குப்பின் 15 ஆண்டுகள் ஏதும் செய்ய இயலவில்லை என்பது என் போன்றோர் அனைவரின் நெஞ்சத்தையும் உறுத்திவந்தது உண்மைதான். இப்போது, முனைவர் பாலா சுவாமிநாதன் அவர்களின் தலைமையில் முதன் முறையாக பேரவையின் தொழில் முனைவோர் மாநாடு யாழ்ப்பாணத்தில் நடந்தேறியது என்பது ஒரு வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த நிகழ்வு. பேரவையுடன் யாழ் IT Hub மற்றும் யாழ்ப்பாண பல்கலைக்கழகமும் இணைந்து இந்நிகழ்வை ஒழுங்கு செய்தது மேலும் சிறப்பு. யாழ் பல்கலையின் 50-வது ஆண்டு இது. 50 ஆண்டுகளில் ஒருநாள் கூட விடுமுறை விடாமல் தொடர்ந்து மாணவர்களுக்கு அருந்தொண்டாற்றி வருகிறது இப்பல்கலைக்கழகம். பெருமை வாய்ந்த இப்பல்கலையுடன் இணைந்து இவ்விழாவை நடத்தியது பேரவையின் பல சாதனைகளில் ஒரு பொன்மகுடம். இதற்கு நாம் பேரவையின் செயற்குழு, FiTEN குழு, யாழ் IT Hub, மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினரை நெஞ்சார வாழ்த்தி, பாராட்டி நன்றி நவில்வது நம் தலையாய கடமை. பேரவையின் FiTEN 3-வது தொழில் முனைவோர் மாநாடு இது.

இம்மாநாடு போரினாலும் அதற்குபின்பும் சொல்லொண்ணா துன்பம் அனுபவித்து வரும் ஈழத்தமிழர்களின் மனதிற்கு ஒத்தடம் கொடுத்து, அவர்களின் வலிக்கு மருந்தளித்து, நம்பிக்கையையும், ஊக்கத்தினையும் தந்தது என்பது மிகையல்ல, உண்மை. அமெரிக்கா, கனடா, இலண்டன், தமிழ்நாடு போன்ற இடங்களிலிருந்து தமிழர்கள் பலர் வந்து

சிறப்பு செய்தது மட்டுமல்லாமல் தமிழ் மண்ணிற்காக தம் இன்னுயிரையும் அர்ப்பணித்த மாவீரர்களுக்கும், அங்கு அடக்குமுறைக்குள் வாழும் மக்களுக்கும் இம்மாநாடு நல்லதொரு நம்பிக்கையைத் தந்துள்ளது என்று மாநாட்டில் கலந்துகொண்டவர்கள் கூறியது மனதை நெகிழச் செய்தது.

நாதசுரம், தவில் இசையுடன், குத்துவிளக்கேற்றி, தமிழ்த்தாய் வாழ்த்துடன் இம்மாநாட்டைத் துவக்கி வைத்து தலைவர் பாலா சுவாமிநாதன் அவர்கள் உரையாற்றியபோது, இன்றைய பேரவைக் கூட்டம் ஒரு நிகழ்வு மட்டுமல்ல; இது தமிழர் ஒருமைப்பாட்டின் கொண்டாட்டம் - மனங்களையும் இதயங்களையும் ஒன்றிணைக்கும் நோக்கத்துடன் நமது அன்புக்குரிய தமிழ்ச் சமூகத்தின், குறிப்பாக வடக்கு- கிழக்கு பிராந்தியத்தின் பொருளாதாரத்தை புத்துயிர் பெறச் செய்யும் சீரிய முயற்சி" என்று கூறி அனைவரது எண்ணங்களையும் பிரதிபலித்தார். தொடர்ந்து முன்னாள் தலைவர் திரு. க. தில்லைக்குமரன் ஆகிய நான் பேரவையின் ஈழத்தமிழர்களுடனான உறவை குறித்து விரிவாக உரையாற்றுகையில் ஈழத்தமிழர் களுக்கும், ஈழச்சிக்கலுக்கும் பேரவை 2009 முதல் 'உலகத் தமிழர் நேரம்' நிகழ்ச்சியின் மூலம் செய்து வரும் பணிகளைச் சுட்டிக்காட்டினேன். மாநாட்டின் சிறப்பு விருந்தினராக திரு. ராஜ் ராஜ்ரட்ணம் அவர்கள் பங்கேற்று உணர்ச்சிமிக்க உரையாற்றியது இம்மாநாட்டின் சிறப்பு. அவர் பேசுகையில் விவசாயிகளுக்கு நிதியளித்து அவர்களுக்கு உதவுவதாகவும், அரிசி அரைக்கும் தொழிற்சாலை அமைத்து விவசாயிகளுக்கு அதிக இலாபம் ஈட்ட வழி வகுக்கவுள்ளதாகவும் கூறினார். திரு. ராஜ்ரட்ணம் அவர்களின் 'சமனற்ற நீதி' என்கிற புத்தக வெளியீடு மறுநாள் மற்றொரு விழாவில் நடைபெற்றது. மாநாட்டில் திரு. ராஜ் பேசும் போது அவரின் தமிழுணர்வு நன்கு தெரிந்தது. ஈழத்திற்குப் பல உதவிகளை அவர் செய்து வருகிறார், குறிப்பாக விவசாயத்துறையில் அவர் பல முன்னேற்பாடுகளை செய்யப் போவதாகக் கூறியது அனைவரையும் கவர்ந்தது. தொடர்ந்து யாழ் பல்கலையின் துணைவேந்தர் சிறீசற்குணராஜா தமிழரின் அறிவுத்திறனையும், வாணிகத்திறமையையும், கடலோடும் வன்மையையும் விளக்கியது அனைவருக்கும் உத்வேகத்தை கொடுத்தது. தொடர்ந்து பல உரையாடல்கள், உரைகள், பட்டறைகளும் நடந்தது.

அறிஞர் கைலாசபதி உள்ளரங்கம் முழுதும் மாணவர்கள் மற்றும் தொழில் முனைவோர், பேராசிரியர்கள் போன்றோரினால் நிரம்பி வழிந்தது. University Business Linkage (UBL) அமைப்பை தலைமையேற்றி நடாத்திவரும் பேராசிரியர் ஈசுவர மோகன் அவர்கள் வடக்கின் நிலையை விரிவாக எடுத்துக்கூறி என்னென்ன தேவை என்பது குறித்து பேசினார். அவருடன் பேரவை இணைந்து பெரிய உதவிகளை செய்வது அம்மக்களால் பெரிதும் வரவேற்கப்படும் என்பது உண்மை. யாழ் மண்ணில் Fiten- Yarl நிகழ்வை வெற்றிகரமாக நடத்துவதற்கு அரும்பாடுபட்டு சாத்தியமாக்கிய ஷான் நந்தகுமார், பார்த்திபன் பரஞ்சோதி, சயந்தன் போன்றோர் என் நெஞ்சில் உயர்ந்து நிற்கின்றனர்.

பேரவைத் தலைவர் பாலா சுவாமிநாதன்,

பெருமதிப்பிற்குரிய ராஜ் ராஜரட்ணம், முன்னாள் தலைவர் கால்டுவெல் வேள்நம்பி, தில்லைக்குமரனாகிய நான் ஆகியோர் எடுத்திருக்கும் இந்த முயற்சிக்கு எத்தடை வரினும் தளராது செய்துமுடிக்க திடசங்கற்பம் பூண்டு நிற்கிறோம்.

இந்த மாநாட்டின் நோக்கங்கள்

- தமிழ் நாட்டிற்கும் ஈழத்திற்குமுள்ள பண்பாட்டு, மொழித் தொடர்பு நாம் நன்கறிவோம். பேரவை 35 ஆண்டுகளாக உலகெங்கும் வாழும் தமிழர்களை நாடு, மதம், சாதி, அரசியல் சார்பற்று இணைத்து வந்துள்ளது. ஈழத்தமிழர்கள் தமக்கு உடை எடுப்பது சென்னையிலும், காஞ்சியிலும்தான். ஈழம் சைவம் வளர்த்த மண், அம்மக்கள் போகாத தமிழ்நாட்டு கோவில்களே இல்லை. பேரவை ஈழத்தமிழர்களை பண்பாடு, மொழி ரீதியாக அரவணைத்து வந்தாலும், பொருளாதார ரீதியாக ஈழமும் தமிழ்நாடும் சற்று விலகியே இருந்துவருகின்றன. தாய்த்தமிழ் நாட்டையும், தமிழீழத்தையும் தொழில் முறையாக இணைப்பது இம்மாநாட்டின் முதன்மைக் குறிக்கோள். அதை இந்த மாநாடு சாதித்துள்ளது என்றே கூறவேண்டும். தமிழ்நாட்டு தொழிலதிபர்கள் ஈழத்தில் தமது அலுவலகத்தின் கிளைகளைத் துவங்கி ஈழத்தமிழர்களுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்துவது எப்படி என்று இம்மாநாடு விவாதித்தது. தமிழ்நாட்டிலிருந்து வந்த சில தொழிலதிபர்கள் அது குறித்து விரிவாக பேசினர். நாம் அவ்விவாதத்தை தொடர வேண்டும்.

- உணவுப் பொருட்கள் பதப்படுத்துவதில் தமிழ்நாடு முன்னணியிலுள்ளது. ஈழத்து உணவு வகைகள் தமிழ்நாட்டில் பலருக்கு தெரிவதில்லை. மேலும் தமிழ்நாட்டு உணவு உற்பத்தி நிபுணர்கள் ஈழத்தில் அந்த வசதிகளை ஏற்படுத்த வேண்டும் என்கிற நோக்கில் ஒரு பட்டறை நடந்தது.

இம்மாநாட்டின் மற்றொரு சிறப்பு, முனைவர் பாலா சுவாமிநாதன், முன்னாள் தலைவர் திரு. கால்டுவெல் வேள்நம்பி, சென்னையில் வாழும் தொழிலதிபர் திரு. ரவி சுந்தரம் ஆகிய மூவரும் இணைந்து 300,000 வெள்ளிகள் வடகிழக்கு பகுதிகளில் அமெரிக்கத் தமிழர் நிதி (American Tamil Fund) அமைப்பின் மூலமாக சிறுதொழில்களில் முதலீடு செய்வோம் என்று அறிவித்தது மாநாட்டிற்கு வந்த அனைவரையும் நெகிழச்செய்தது. இந்த பெரும் முயற்சியை முன்னெடுக்கும் திரு. கால்டுவெல் அவர்களை நெஞ்சாரப் பாராட்டுவது நமது கடமை. அன்றிரவு நடந்த இரவு உணவு விருந்தில் இம்முயற்சியை திரு. கால்டுவெல் மற்றும் முனைவர் பாலா வந்திருந்த சிலரிடம் விவரித்துக் கூறியவுடன், ஆர்வத்துடன் கவனித்துக் கொண்டிருந்த நல்லுள்ளம் கொண்ட ஈழத்தமிழரொருவர் உடனேயே சிறிதும் தயக்கமின்றி நானும் அம்முயற்சியில் பங்கேற்பேன் என்றும் அமெரிக்கத் தமிழர் நிதி திரட்டும் நிதி திரட்டும் நிதிக்கு ஒப்பாக (maching) நிதியளிப்பதாக உறுதியளித்தது அனைவரையும் வியப்பிலும், மகிழ்ச்சிக் கடலிலும் ஆழ்த்தியது. நல்லவர்கள்

உள்ளவரை நல்லது தொடர்ந்து நடந்தேறும் என்பது வட அமெரிக்காவைச் சேர்ந்த பெயர் வெளியிட விரும்பாத அந்த நல்லவரின் செயலை ஓர் எடுத்துக்காட்டு. இந்த நிதி அமெரிக்கத் தமிழர் நிதி (*American Tamil Fund*) மூலம் முதலீடு செய்யப்படும்.

இன்று ஈழத்திலும், மலையகத்திலும் முதலீடு செய்ய தனியே அமெரிக்கத் தமிழர் நிதி - ஈழம் (*American Tamil Fund - Eelam*) என்கிற பெயரில் வங்கியில் கணக்கும் துவங்கியாகிவிட்டது. அனைவரும் உறுதியளித்தபடி நிதியும் வரத்துவங்கியுள்ளது. வரும் காலத்தில் ஈழத்தில் இந்த அரும் பணி துவங்கவுள்ளது.

வெளிநாடுகளில் வாழும் நமக்கு ஈழ மண்ணில் என்ன நடக்கிறது என்று தெளிவாகத் தெரிவதில்லை. 3 நாட்கள் இங்கு நின்று அம்மக்களுடன் அளவளாவி அன்னார் படும் பாட்டை அவர்களே சொல்லும்போதுதான் 15 ஆண்டுகள் வீணடித்து விட்டோமே என்று நெஞ்சை நெருடியது. நாங்கள் பலருடன் கலந்துரையாடினோம். அர்ப்பணிப்பிற்கு இலக்கணம் எழுதிய கேணல் திலீபன் நினைவிடத்தைக் காணும் போது இம்மக்களுக்கு நாம் செய்யவேண்டிய கடமையை நமக்கு உணர்த்தியது.

தந்தை செல்வா அவர்களின் நினைவிடம், யாழ்ப்பாண பல்கலைக்கழகம், நல்லூர் கந்தசாமி ஆலயம் என்று பல இடங்களுக்குச் சென்றது அனைவரின் மனங்களை நிறைவுப்படுத்தியது. முன்னாள் பெண் போராளிகளை எதிர்பாராமல் சந்திக்க நேர்ந்தபோது அவர்களது தற்போதைய வாழ்க்கையை பற்றி கேட்டறிந்தோம். அவர்களின் சோகத்தை எழுத வார்த்தையில்லை.நெஞ்சு கனத்துப் போனது. தமிழ் மண்ணிற்காக, தமிழீழ மக்களுக்காக, தேனினும் இனிய தமிழ் மொழிக்காக தம் வாழ்வை அர்ப்பணித்த அவர்களின் அவலக்குரல் தொடர்ந்து என் செவியில் ஒலித்துக்கொண்டுள்ளது. அவர்களுக்கு ஏதேனும் நம்மால் முடிந்த உதவியை செய்யவேண்டும். சோகம் என்னவென்றால் எந்த மக்களுக்காக அவர்கள் தம் வாழ்வை அர்ப்பணித்தார்களோ அம்மக்கள் இந்த போராளிகளை சரிவர புரிந்துக் கொள்ளாமல் ஒதுக்கி வருவது நமக்கு பேரதிர்ச்சியை தந்தது. அவர்களுக்கு என்னால் முடிந்த ஆறுதல்களைக் கூறி அவர்களது வாழ்வாதாரத்தையும், பெருமையையும் காப்பதற்கு உறுதிபூண்டு விடைபெற்றேன். அவர்களை விட்டு அகன்று நெடுந்தூரம் வந்துவிட்டாலும், அவர்களது வலியின் பாரத்தை இப்பொழுதும் சுமந்து கொண்டிருக்கிறேன்

எல்லாவற்றிற்கும் மேல் அடுத்த நாள் நான் நண்பர்கள் சிலருடன் நிராயுதபாணியான 1,50,000 தமிழர்கள் அநீயான முறையில் கொன்றொழிக்கப்பட்ட முள்ளிவாய்க்கால், நந்திகடல் பகுதிக்கு சென்று விதையாகியிருக்கும் அம்மக்களுக்கு வீரவணக்கம் செய்ததுதான் இந்த பயணத்தின் மிக முக்கிய விடயம். மாவீரர்கள், அப்பாவி மக்களின் உதிரம் சிந்திய அந்த மண்ணில் காலடி வைத்தபோது உடல் சிலிர்த்தது, கண்கள் பனித்தது. அம்மக்களின் அந்த இறுதி அலறல்கள் காதைப் பிளந்தது. முல்லைத்தீவு கடலும் அமைதி கொள்ள முடியாமல் அலையலையாய் ஆர்ப்பரித்தது. அங்கு தம் இன்னுயிரை ஈந்த தமிழர்களின் நினைவை நெஞ்சிலேந்தி இம்மக்களுக்கு நாம் நம் வாழ்வில் ஏதேனும் செய்ய வேண்டும் என்கிற உறுதியுடன் யாழ் நகரிலிருந்து பிரியா விடைபெற்றோம்.

இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வை அருமையாக நடத்திய *FiTEN-Yazh* குழுவினருக்கு நமது நெஞ்சார்ந்த பாராட்டுகள். இனிவரும் காலங்களிலும் இது போன்ற நிகழ்வுகளை ஈழத்திலும், மற்ற நாடுகளிலும் பேரவை நடத்தும் என்கிற நம்பிக்கை நமக்கு உள்ளது.

வாழ்க தமிழ்! வளர்க தமிழினம்! வெல்க தமிழர் தேசம்!

◆

CARRUS HEALTH

Specializing in the operation of:

✧ General & Post-Acute Hospitals

✧ Behavioral Health Hospitals

✧ Outpatient Centers and Clinics

✧ Skilled and Long Term Care Facilities

✧ Construction & Development Services

இறுதிக் குரல்

போதி மரம் போதுமென
புத்தரின் போதனைகளைப் புதைத்த
வழக்கம் தொடர்கிறது இன்றும்
விடியலின் கதவைத் தாழ்ப்பாளிட்டு
ஊரெங்கும் பறைசாற்றப்படுகிறது
சமத்துவமே சத்தியமென்ற கூவல்

குழந்தைகளின் மீதான வன்முறை
சாதி வெறியில் புணர்தல்
உழைப்புச் சுரண்டல்
குரங்கு பொம்மையைப்போல்
காதைப் பொத்தினாலும்
துளைத்துக் கொண்டேயிருக்கின்றன
துயரச் செய்திகள்

200 சதவீதம் திறமையைக் காட்டினாலும்
புறந்தள்ளப்படுகிறது பெண்ணின் அறிவு

சுபா காரைக்குடி
நியூஜெர்சி, அமெரிக்கா

சிறுகச் சிறுக
சமத்துவம் நோக்கி நகர முயன்றாலும்
உடைந்த குடம் வழியே
வழிந்தோடும் நீராய்
ஒழுகுகிறது பெண் வாழ்வு

சரிசமமாகச் சம்பளமோ பதவியோ
ஒருபோதும் தரத் துணிந்ததில்லை
ஒவ்வொரு துளி உழைப்பையும் உறிஞ்சி
சமத்துவம் பேசும்
இச்சமூகம்

இதில்
மாற்றுப் பாலினத்தவரை
அரவணைக்க
எத்தனைமாயிரம் காலங்கள்
மண்டியிட வேண்டியிருக்குமோ

வயிற்றெரிச்சலோடு
காலங்காலமாய்க் கனன்றுகிடந்த
அக்னிக்குழம்புகள்
தொடர்ந்து
மோதிக் கொண்டிருக்கின்றன
பாறைகளோடு

ஆதிக்கத்தினை எதிர்த்து
பிறக்கும்
இந்த என் கவியே
இவ்வுலகினில்
ஒரு பெண்ணின்
இறுதிக் குரலாக இருக்கட்டும்.

ஆண் பெண் பொருளாதாரச் சமத்துவம்

முனைவர் குருவம்மாள் , மேனாள் தமிழ்த்துறைத் தலைவர், கிராமியப் பல்கலைக்கழகம், காந்திகிராமம்.

இந்தியாவில் சுதந்திரம் இருபாலாருக்கும் கிடைக்கிறது. எனினும் சுதந்திர இந்தியாவில் பொருளாதாரச் சுதந்திரம் பெண்களுக்குக் கிடைத்திருக்கிறதா? இந்தியாவின் நிதியமைச்சர் இப்போது ஒரு பெண்பாலார். இல்லங்களில் நிதி நிர்வாகிகள் மங்கையரே. எனினும் பொருளாதார சுதந்திரம் பெண்களுக்கு? அடுக்குப்பானையிலும் அஞ்சறைப் பெட்டியிலும் முந்தானை முடிச்சிலும் சுருக்குப் பையிலும் ஒளித்தும் மறைத்தும் பெண்கள் சேமித்த பணத்தை சிறுவாடு என்றே நகையாடுகின்றனர். ஆலயங்களில் அஷ்டலட்சுமியாக வணங்கி, வழிபடப்பட்டாலும் இல்லங்களில் கஷ்டலட்சுமியாகவே வலம் வருகின்றனர். “பானையைப் பிடித்தவள் பாக்கியசாலி“ என்றும் “அடுப்படியே திருப்படி ஆம்படையான் தெய்வம்” என்றும் அடுக்களையில் முடங்கினர். ”பத்தாளு வேலையை சித்தாளு செய்யும்” என்று பெண்களின் உழைப்பைச் சுரண்டும் நிலையில், இருபாலார் பொருளாதார சமத்துவம் புரட்சிகரமான சிந்தனைதான். ”பொருள் இல்லார்க்கு இவ்வுலகமில்லை” என்று வள்ளுவச் சிந்தனை இருபாலாருக்கும் பொதுதானே, இதில் பெண் பாலார் மட்டும் பொருள் இல்லார் ஆகினரே?

மு. குருவம்மாள்

பொருளாதார சமத்துவமின்மையால் குடும்பத்தில் நல்லிணக்கம் சிதைந்து குடும்ப அமைதி குலைகிறது. குடும்ப ஒற்றுமை உலைந்து தனிப் பெற்றோராகி, மனநலம் குன்றி, மனச் சிதைவுக்குள்ளாகின்றனர்.

சிலப்பதிகாரத்தில் கோவலன் தந்தையை “இருநிதிக் கிழவன் என்றும்”, “வருநிதி பிறர்க்கு ஆர்த்தும் மாசாத்துவன்” என்றும் குறிப்பிடுகின்றார் இளங்கோவடிகள். இருநிதி என்பதனை நிலத்தின் வழியாக வணிகம் செய்து கிடைக்கும் வருவாய் சங்கநிதி என்றும் நீரின் வழியாக வணிகம் செய்து கிடைக்கும் வருவாய் பதுமநிதி என்றும் வருநிதி என்பதனை உழைப்பின்பயனாய் வந்த தரு பொருள் என்றும் உரையாசிரியர்கள் விளக்குகின்றனர். சம்பளமில்லாத வேலைக்காரிகளாகிய இல்லத்தரசிகளுக்கு வரு பொருள் இல்லை. கொள்ளிக்குப் பிள்ளை என்று சொத்துரிமையை ஆண்களுக்கு உரியதாக்கிய சமூகத்தில், குலம் தரு பொருள் பெண்களுக்கு இல்லை. எனவே இருநிதிக் கிழவனாக ஆண் மகனும் வறுமையின் கிழவியாகப் பெண் மகளும் வாழுகின்ற சூழலில் ஆண் பெண் பொருளாதார சமத்துவம் பேசு பொருளாவது அவசியம்.

தேவலோகத்தில் ஆயிரம் யாகங்கள் செய்தவர் எவராயினும் இந்திரன் ஆகலாம். அவருக்கு இந்திராணி உரியவள் ஆகலாம் என்பதிலிருந்து, கிருத யுகத்தில் உடைமைப் பொருளாகப் பெண்ணிருந்த நிலை புலனாகிறது. தொடிச் செடி போல சீதையை இராவணன் தூக்கிச் சென்றான் என்றால் திரேதாயுகத்தில் கடத்தல் பொருளாகப் பெண்ணிருந்த நிலை விளங்குகிறது. அரிச்சந்திரன் மனைவி சந்திரமதியை விற்பனைப் பொருளாக்கியதும் இதே யுகம் தான். பாஞ்சாலியை சூதாட்டத்தில் பணையப் பொருளாக்கியது துவாபரயுகம். கலியுகத்தில் விளம்பரப் பொருளாக, அலங்காரப் பொருளாக, பரிசுப் பொருளாகப் பயன் படுத்தப்படுகின்றனர். இப்படிப் பெண்களைப் பொருளாக்கிய சமூகத்தில் பெண்களுக்குப் பொருளாதாரமா? "ஈன்று புறம் தருதல் என்தலைக் கடனே" என்று சங்க காலத்துப் பெண்பாற் புலவர் பாடுகின்ற இரண்டாயிரம் ஆண்டுகளாக, போரிடத் தகுந்த மகனை பெற்றுத் தருவதே பெண்ணின் கடமை, மனித மறு உற்பத்திக்கு மட்டுமே பெண் என்ற கருத்தாக்கம் அழுத்தமாகி யுள்ளது. ஆஸ்திக்கு ஆணும் ஆசைக்குப் பெண்ணும் என்ற சிந்தனைத் தாக்கம், இருபாலாரிடையே பொருளாதார சமமின்மையைப் புலப்படுத்துகின்றது. "அஞ்சு பொண்ணு பிறந்தா அரசனும் ஆண்டி" என்ற சொல்லாடலின் விளைவாகக் கருவறையே கல்லறையாகியதும் உண்டு பெண் சிசுக்களுக்கு. இனத்தூய்மைக்கும் குலத்தூய்மைக்கும் நிலவுடைமைச் சமூகத்தில் பெண்களைக் குறியீடாக்கிப் பாதுகாக்கப்பட வேண்டிய வீட்டு அடிமைகளாகிய பெண்களுக்குப் பொருளாதாரமா?

விவேகானந்தரின் சீடர் நிவேதிதா அம்மையாரைப் பாரதியார் சந்தித்த போது, தன்னை சுதந்திரப் போராட்ட வீரர் என்று அறிமுகம் செய்து கொண்டார். "மனைவியை அழைத்து வரவில்லையா"? என்று அம்மையார் வினவிய போது, "வெளியில் அழைத்து வரும் வழக்கமில்லை" என்று பாரதியார் கூறினார். "நீங்கள் முதலில் உங்கள் வீட்டுப் பெண்களுக்கு சுதந்திரம் கொடுத்து விட்டு எங்களிடம் சுதந்திரம் கேளுங்கள்" என்று நிவேதிதா அம்மையார் கூறினார். இந்த சந்திப்பிற்குப் பின்னர்தான் பாரதியார், "ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானம்" என்று குடும்ப சமத்துவம் பேசுகின்றார். பாரதிதாசனும் "பெண்ணடிமை தீருமட்டும் பேசும் திருநாட்டு மண்ணடிமை தீர்ந்து வரல் முயல் கொம்பே" என்று சமூக சமத்துவம் பேசுகின்றார்.

நிலவுடைமைச் சமூகத்தில் "அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு?" என்று கற்கும் வாய்ப்பு முடங்கியது. "கல்வியில்லாப் பெண்கள் களர் நிலம்" என்றது பணவுடைமைச் சமூகம். பகுத்தறிவுச் சமூகமோ, பட்டங்கள் ஆளவும் சட்டங்கள் செய்யவும் பாரினில் பெண்களை ஆயத்தப்படுத்தியது. பாத்திரத்தில் பெயர் எழுதி பரவசம் அடைந்த பெண்களுக்குப் பத்திரத்தில் பெயரெழுதிச் சொத்துரிமையாக்கும் சட்டம் வந்து, பொருளாதாரச் சமத்துவம் காணச்செய்தது. வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டிவைக்கும் நிலை கல்வி, வேலை வாய்ப்பு காரணமாக நீங்கியது. எத்துறையிலும் பெண்கள் சாதனையாளராகின்றனர். விண்வெளி ஆய்விலும் பெண்கள் பங்கேற்கின்றனர். ஊரக மாதர் சங்கங்கள் ஒன்றிணைந்து, பெண்கள் வங்கி உருவாக்குகின்றனர். சுய உதவிக்குழுக்களின் ஊதிய உருவாக்கம் தோன்றின. பெண், தொழில் முனைபவராகிப் பொருளாதாரச் சமத்துவம் பெற உழைக்கின்றனர். ஆண் பெண் பொருளாதார சமத்துவம் வந்தால் இருபாலாரிடத்தும் மன உளைச்சலைத்தரும் தாழ்வு மனப்பான்மை அகலும். குடும்பக் கட்டமைப்புகளில் மனமுறிவுகளுக்குக் காரணமான தன் முனைப்பு நீங்கும். சமூகக் கட்டமைப்பில் வன்முறைகளுக்குக் காரணமான பொருளாதார ஏற்றத்தாழ்வுகளுக்கு இடமிருக்காது. எனவே குடும்ப, சமூக, தேச, உலக அமைதிக்குக் காரணமான இந்த ஆண் பெண் பொருளாதார சமத்துவம் என்ற நலமிக்க சிந்தனை நனவாகிட வேண்டும்.

◆

எம்.பி.என்.பொன்னுசாமி

எம்.பி.என்.பொன்னுசாமி (19 மார்ச் 1933 – 27 நவம்பர் 2023) தமிழ் மக்களின் நெஞ்சில் நீங்கா இடம் பிடித்த கலைப் படைப்பு தில்லானா மோகானாம்பாள். அதை இரசித்தவர்கள். கதையின் மையச் சரடான நாதஸ்வரத்தையும் அதை மிகச் சிறப்பாக வாசித்த நாதஸ்வரக் கலைஞர்கள் எம்.பி.என்.சேதுராமனையும் அவருடைய சகோதரர் எம்.பி.என்.பொன்னுசாமி அவர்களையும் எளிதில் மறந்துவிட மாட்டார்கள். மதுரையைப் பூர்வீகமாக கொண்ட பொன்னுசாமி மதுரை மீனாட்சி சந்நிதியில் தனது ஏழாவது வயதில் இசைப்பயணத்தைத் துவங்கினார்.

தலைமுறைகள் கடந்து நாதஸ்வரத்துடன் பயணிக்கும் இசைக்குடும்பத்தைச் சேர்ந்த எம்.பி.என்.பொன்னுசாமி அவர்களுக்கு தமிழக அரசு கலைமாமணி விருதளித்து சிறப்புசெய்துள்ளது.

உலகத் தமிழ்க் கல்விக்கழகம்

வெற்றிசெல்வி ராஜமாணிக்கம், நிறுவனர், தலைமை நிர்வாகி

"தெள்ளுற்ற தமிழமுதின் சுவைகண்டார்
இங்கமரர் சிறப்புக் கண்டார்"

தமிழால் சிறப்புப் பெற்ற பேரவையின் 37-ஆவது தமிழ் விழா மலரில் எங்கள் தமிழ்ப் பள்ளி குறித்து எழுதுவதில் மிகுந்த மகிழ்ச்சி.

வெற்றிசெல்வி ராஜமாணிக்கம்

இருபத்தாறு ஆண்டுகளுக்கு முன் நான்கு குழந்தைகளுடன் எங்கள் வீட்டு முற்றத்தில் தொடங்கப்பட்ட தமிழ்ப் பள்ளி இன்று ஐந்து நாடுகளில் பல கிளைகள், சார்பு பள்ளிகள் என விரிந்து 3-ஆவது தலைமுறையைச் சேர்ந்தோர் உட்பட 17,333 மாணவர் களுடன் வெற்றிகரமாகத் தொடர்கிறது. இங்குள்ள நம் குழந்தைகள் மொழியில் வலுவான அடித்தளத்தைப் பெறவும், தமிழில் சரளமாகப் பேசவும், நம் கலாச்சாரம், மொழி, முன்னோர்களின் வாழ்வியல் ஆகியவற்றை அறிந்து தன் வேர் குறித்த அறிவுடன் பெருமிதமடைந்து அவர்கள் தொடர்ந்து நம் தாய்மொழியாம் தமிழை அடுத்தடுத்த தலைமுறை களுக்கு கொண்டு செல்லவும் வேண்டும் என்பதே எங்கள் முதன்மையான நோக்கம்.

முதன் முதலில் கலிபோர்னியாவில் எங்கள் பள்ளியை நிறுவி இன்று அமெரிக்காவின் 19 மாவட்டங்களில் சார்பு பள்ளிகளையும், மேலும் ஐந்து உலக நாடுகளில் பல சார்பு பள்ளிகளையும் தொடங்கியுள்ளோம். தமிழ் வகுப்புகள் தொடக்கப்பள்ளி முதல், நடுநிலைப் பள்ளி வரை தொடங்கப் பட்டு பின் உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தப்பட்டது. இப்பள்ளியில் மாணவர்கள் தமிழை வெறும் தாய்மொழியாக மட்டும் கற்காமல் விருப்பப்பாடமாகவும் கற்கலாம். இது அவர்கள் கல்லூரிப் படிப்பிற்குப் பயன்பெறும் வகையில் அமையும். இந்த எண்ணத்தில் எங்கள் பள்ளி மாவட்டத்தில் அனுமதி பெற்று இன்று கலிபோர்னியாவில் பல உயர்நிலைப் பள்ளிகளில் மாணவர்கள் சீனம், ஸ்பானியம், லத்தீன் போன்ற மொழிகளைப் போல தமிழையும் விருப்ப மொழியாகப் பயில்கிறார்கள். தமிழை மொழிப்பாடமாகப் பயிலும் எங்கள் மாணவர்கள் கலிபோர்னியாவில் உள்ள பல்கலைக் கழகங்கள் மட்டுமின்றி உலகில் உள்ள பல பல்கலைக் கழகங்களிலும் சேர்ந்து தங்கள் பட்டப் படிப்பைத் தொடர்கின்றனர்.

உலகத் தமிழ்க் கல்விக்கழகத்தின் பாரம்பரிய பாடத்திட்டத்திலிருந்து சற்றே விலகி, பேசுவதை முதன்மையாகக் கொண்ட புதிய பாடத்திட்டத்தை எங்கள் இரண்டு கிளைகளில் அறிமுகப்படுத்தி

இருக்கிறோம். இதன் மூலம் மாணவர்கள் தமிழில் சரளமாகப் பேசக்கற்றுக் கொள்வார்கள். வார்த்தை களை முதலில் கற்று பின் மொழியில் புலமைப் பெற்ற பிறகு எழுதவும் படிக்கவும் கற்றுக்கொள்வார்கள்.

உலகம் முழுவதும் உள்ள பல தமிழறிஞர்களின் ஆலோசனைகள் மற்றும் உதவிகளைக் கொண்டு எங்கள் பாடத்திட்டத்தில் பல மாற்றங்களை செய்து இன்று எங்களுக்கென்று தனியே பாடப் புத்தகங்களை வெற்றிகரமாக உருவாக்கி இருக்கிறோம். மழலையர் வகுப்பு முதல் 7-ஆம் வகுப்புவரை நாங்கள் சொந்த புத்தகங்களை உருவாக்கியுள்ளோம். அடுத்த ஆண்டு எட்டாம் வகுப்பிற்கும் எங்கள் சொந்த புத்தகங்கள் உபயோகத்திற்கு வரும் என்று பெருமிதத்தோடு தெரிவித்துக் கொள்கிறோம். தற்போதுள்ள எங்கள் பாடத்திட்டம் வாசித்தல், எழுதுதல் , உரையாடுதல் ஆகியவற்றில் கவனத்தைச் செலுத்துகிறது. எங்கள் நடைமுறைப் பாடத்திட்டம் மாணவர்களுக்குக் கற்பித்தலில் ஆர்வத்தை ஏற்படுத்தக் கூடிய வகையில் அமைந்துள்ளது. எங்கள் ஆசிரியர்களும் அவ்வப்போது பெற்றோர்களைச் சந்தித்து மாணவர்களின் வளர்ச்சி, மொழியில் அவர்களுக்கு உள்ள ஈடுபாடு, அவர்கள் மேலும் தமிழ் கற்க தேவையான உதவி ஆகியவற்றைக் குறித்து பேசுகிறார்கள்.

எங்கள் பாடத்திட்டக்குழு மாணவர்கள், பெற்றோர், ஆசிரியர்கள், மற்றும் தமிழறிஞர்களுடன் அவ்வப்போது ஆலோசித்து ஆங்கிலத்தை முதன்மையாகக் கற்கும் மாணவர்களுக்கு அதுவும் வேற்று மண்ணில் வாழும் குழந்தைகளுக்கு ஏற்ற வகையில் பாடத்திட்டத்தையும் புத்தகங்களையும் மாற்றி அமைக்கிறார்கள். காலத்திற்கும் சூழலுக்கும் ஏற்ற வகையில் மின்- புத்தகங்கள், ஒளி - ஒலி வட்டத் தகடுகள், ஆகியவை மாணவர்களுக்குப் பிடித்த வகையில் பாடல்கள், கதைகள் ஆகியவற்றைக் கொண்டுள்ளதாக செய்யப்படுகின்றன.

மாணவர்கள் மூன்று வயதில் மழலையர் வகுப்பில் சேர்கின்றனர். பின் ஐந்து வயதில் எழுத்துக்களைப் பயிலத் தொடங்குகின்றனர். மொழி மட்டுமின்றி நம் கலாச்சாரத்தைப் பற்றியும் தெரிந்து கொள்ளும் வகையில்எங்கள்பாடத்திட்டம்அமைக்கப்பட்டுள்ளது. தங்கள் உறவினர்கள், குடும்பத்தினர் மற்றும் நண்பர்களுடன் தயக்கமின்றித் தமிழில் அவர்கள் பேச வேண்டும் என்பதே எங்கள் நோக்கம்.

தன்னார்வலர்களுக்கு ஆண்டுதோறும் ஆசிரியர் பயிற்சி அளிக்கிறோம். இப் பயிற்சியானது பெற்றோர்கள் என்பதைக் கடந்து ஆசிரியர்களாக

முறையாக மாணவர்களுக்குப் பயிற்றுவிக்க பெரிதும் உதவுகிறது.

இது மட்டுமின்றி நான்கு ஆண்டிற்கு ஒரு முறை புலம் பெயர்ந்தோர் தமிழ்க் கல்வி மாநாடு ஒன்றை நடத்தி வருகிறோம். இதில் உலகின் பல நாடுகளைச் சேர்ந்த தமிழறிஞர்கள், தமிழ்ப்பயிற்றுநர், மாணவர்கள் ஆகியோர் கலந்து கொள்கின்றனர். ஒவ்வொருவரும் தாங்கள் சந்திக்கும் சவால்கள், ஆலோசனைகள் ஆகியவற்றை பரிமாறிக் கொள்கின்றனர். இது பாடத்திட்டத்தை மேம்படுத்தவும், மாணவர்களுக்கு ஏற்ற வகையில் புதிய புத்தகங்களை அறிமுகப்படுத்தவும் உதவுகிறது.

உலகத் தமிழ்க் கல்விக்கழகம், நம் தாய்மொழி நம்மோடு நின்றுவிடாமல் நமது அடுத்த தலைமுறையினரிடம் எடுத்துச்செல்வதையே தலையாய கடமை என்பதை மனதிற் கொண்டு செயல்பட்டு வருகிறது. எங்களிடம் படித்த மாணவர்களே ஆசிரியர்களாகவும், அவர்களின் குழந்தைகள் எங்கள் பள்ளியில் புதிய மாணவர்களாகவும் தமிழ்ப் பயில வருகிறார்கள். இது இன்று மூன்றாம் தலைமுறையாகத் தொடர்கிறது. விரைவில் அடுத்த தலைமுறையினர் எங்கள் பள்ளியைத் தொடர்ந்து நடத்திச் செல்வார்கள் என்று நம்புகிறோம்.

தமிழால் இணைந்து, வேற்று மண்ணில் நம் மக்களுடன் கலந்து, மொழி சார்ந்த மரபுக் கலைகளைக் கண்டு களிக்கவும், நம் கலைஞர்களை சந்திக்கவும் வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்து, ஆண்டுதோறும் அமெரிக்காவில் அனைத்து மாநிலங்களைச் சார்ந்த தமிழ் மன்றங்களை இணைத்து வெற்றிகரமாக விழா எடுக்கும் தமிழ்ப் பேரவைக்கு (FETNA) எங்கள் உலகத் தமிழ்க் கல்விக்கழகம் சார்பில் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். நன்றி! ◆

7+ to University

MC 4.0
Coding | Robotics | AIOT

MAKER &CODER
EXPLORE, INNOVATE, EXCEL

THE FUTURE IN YOUR HANDS

The World's Most Ingenious Multi-Coding Robotics AIoT Kit

- Touch Screen
- Stackable
- AI
- IoT
- LiDar
- 3D Simulator

www.makerandcoder.com

USA : 300 E Royal Ln #135, Irving, TX 75039, U | Phone: +1 (469) 865-2080

Middle East : 105, 1st Floor, The Atrium Centre, Bank Street, Bur

தனித்துவமாய் தமிழின் சமத்துவம்

வள்ளுவர் - அவர்
வழிவழியாய் வந்தவர்
வரிவடித்த தமிழிலக்கியம்
முரசொலிக்கும் சமத்துவம்.

கருவறை துறந்து
கல்லறையில் உறங்கும் தூரம்
காலும் கரம்பும்
காதலிக்கும் அலைவு நேரம்.
பூத உடலில் நம்வாழ்வு.

மனிதன்
காதலிக்க பிறந்தவன் சிறந்தவன்
பேதமையால் வேடவனாய் மாறாது
பேணிக்காப்பது தமிழ்த்தாய் - அவள்
கரம் இறுகப்பற்றி வாழ்ந்திடுவாய்.

முல்லைவேந்தன் பாரி புகழ்
மனுநீதி சோழன் மனம்
வானுயர பறைசாற்றும் சமத்துவம்
மனிதன் மனிதனோடு மட்டுமின்றி
மண்ணுயிர் அனைத்தும் சமம்போற்றி
தனித்துவமாய் தமிழின் சமத்துவம்.
தமிழ் படி! தமிழ்வழி செயல்படு!!

மணிவண்ணன்
மாரி



சங்க இலக்கியத்தில் பெண்களுக்கான சமத்துவம்

நளினி சுந்தரராஜன். கவிஞர், மில்வாக்கி தமிழ்ச் சங்கம், விஸ்கான்சின், வட அமெரிக்கா

தமிழ் இலக்கியத்தை இன்றளவும் தமிழ் ஆர்வலர்கள் தேடிப் படிப்பதும், நவீன இலக்கியங்களுக்கு அடித்தளமாகவும் விளங்குவது சங்க இலக்கிய நூல்கள். அன்றைய கால கட்டத்தில் ஆண்பாற் புலவர்களுக்கு நிகராக பெண்பாற் புலவர்களும் ஆளுமை நிறைந்தவர்களாயிருந்தனர். மாபெரும் அவைகளில் அவர்களுக்குத் தனி மரியாதையும் சிறப்பும் கிடைத்தன. அரசரோடும், சான்றோர்களோடும் சரி நிகராக விவாதம் செய்யும் திறன் பெற்றவர்களாயிருந்தனர்.

நளினி சுந்தரராஜன்

கல்வி கேள்விகளில் சிறந்தோங்கியது மட்டு மல்லாமல் அரசவைகளிலும் அங்கம் வகித்தனர். அரசனுக்கு ஆலோசனை கூறுபவராகவும், போர்க் காலங்களில் அரசர்களுக்கிடையே தூது செல்லும் திறன் கொண்டவர்களாகவும், சமுதாயச் சீர்கேடுகளை தங்கள் எழுத்துக்களின் வாயிலாகச் சாடுபவர்களாகவும் இருந்துள்ளனர் என்பதை சங்க இலக்கியம் தெளிவாக எடுத்துரைக்கிறது.

சங்க காலப் புலவர்கள் எழுதிய நூல்களில் அவர்கள் இயற்பெயர் பெரும்பாலும் குறிப்பிடப்பட வில்லை. பெண்பாற் புலவர்கள் என்றால் முதலில் நினைவுக்கு வருபவர் ஔவையார்.

பல்வேறு காலகட்டங்களில் ஔவையார் என்ற பெயரில் பல புலவர்கள் வாழ்ந்து வந்துள்ளனர். இலக்கியங்களில் அவர்களின் கற்பனை, நடை, சொல்வளம், பொருட் செறிவு ஆகியன பலர் போற்றும் வகையில் அமைந்துள்ளன. சங்க கால ஔவை கி.பி. 2-ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டவர். அகநானூறு, புறநானூறு, நற்றிணை, குறுந்தொகை போன்ற சங்க நூல்களில் இவர் பாடல்கள் இடம்பெற்றுள்ளன. இடைக்கால ஔவை 10-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஔவை ஆத்திச்சூடி, கொன்றை வேந்தன், மூதுரை, நல்வழி என்று நீதி நூல்கள் பல எழுதியவர். சமயப் புலவர் ஔவை கி.பி.14-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். விநாயகர் அகவல், ஞானக்குறள் எழுதியவர். பிற்காலத்தில் 17-18-ஆம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த ஔவையார்களில் ஒருவர் நாலு கோடிப் பாடல் மற்றும் பல்வேறு தனிப் பாடல்களுக்குச் சொந்தக்காரர். இவர்கள் வாழ்ந்த காலங்கள் வேண்டுமானால் வேறாக இருக்கலாம். ஆனால், இவர்தம் கவித்திறமும், மதி நுட்பமும் காலங்கள் தாண்டியும் பெயர் சொல்கின்றன.

நாலு கோடி பாடல்

ஆண்பாற் புலவர்களுக்கு நிகராய், ஏன்

அவர்களையும் விட அறிவில் மேலானவராய் 17-18-ஆம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த பிற்கால ஔவைப் பெருமாட்டி திகழ்ந்தார் என்பதற்கு பின்வரும் கதை சான்று.

சோழ மன்னன் ஒருவன் இலக்கியப் போட்டியொன்று வைத்து தனது அவைப் புலவர்களை அழைத்து, 'நாளை பொழுது விடிவதற்குள் நீங்கள் நாலு கோடி பாடல்கள் பாட வேண்டும்' என்று ஆணையிட்டான். ஓர் இரவுக்குள் நாலு கோடி பாடல்களா? இயற்ற இயலாவிடில் மன்னனின் கோபத்திற்கு ஆளாக நேரிடுமோ என்றஞ்சினர். அறிவுத் திறனும் மதிநுட்பமும் மிகுந்த ஔவையிடம் முறையிட்டனர். அவர் புலவர்களைப் பார்த்து 'கவலை வேண்டாம் நாலு கோடி பாடலைப் இப்போதே பாடுகிறேன் மன்னனிடம் சென்று அதைப் பாடுங்கள்' என்று கூறிவிட்டு ஒரே ஒரு பாடலை மட்டும் பாடினார். அந்தப் பாடல்...

"மதியாதார் முற்றம் மதித்தொரு கால்சென்று மிதியாமை கோடி பெறும்;
உண்ணீர் உண்ணீர் என்று உபசரியார் தம்மனையில் உண்ணாமை கோடி பெறும்;
கோடி கொடுத்தும் குடிப்பிறந்தார் தம்மோடு கூடுதல் கோடி பெறும்;
கோடானு கோடி கொடுப்பினும் தன்னுடைநாக் கோடாமை கோடி பெறும்!"

அவர் கவித் திறம் கண்டு புலவர்கள் மெய்சிலிர்த்துப் போயினர். மன்னனும் வியந்து போனான்.

போரைத் தடுத்த புலவர்

அதியமானிடம் நெல்லிக்கனி பெற்ற சங்க கால ஔவை தூது சென்று பெரும் போரை நிறுத்தும் வல்லமை பெற்றவராய் இருந்தார் என்பதற்கு பின்வரும் கதை சான்று.

தகடூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்து வந்த அரசன் அதியமானின் அவைப் புலவராகவும், மதி ஆலோசனை வழங்கும் மந்திரியாகவும் ஔவை இருந்தார். காஞ்சியின் அரசன் தொண்டைமான் தகடூரைக் கைப்பற்ற நினைத்தான். அதனை ஒற்றர்கள் மூலம் அறிந்த அதியமான் போரில் சிறந்த வீரனாயினும் போரை விடுத்து அறம் சார்ந்த வழியில் வாழ நினைத்ததால் தொண்டைமானுடனான போரைத் தவிர்க்க நினைத்தான். தூதுவராக ஔவையை காஞ்சிக்கு அனுப்பினான்.

கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு.

தொண்டைமான் ஔவையை வரவேற்று உபசரித்துப் பின்பு தன் படைபலத்தை ஔவைக்குக் காட்டி மறைமுகமாக அதியமானை எச்சரிக்க விரும்பினான். எல்லா ஆயுதங்களும் பளபளவென்று

நெய் தடவி, மயில் பீலியும் பூ மாலையும் கொண்டு அலங்கரிக்கப்பட்டு வைக்கப்படிருந்தன. அவன் திமிர் புரிந்த ஔவை அதியமானின் படைக்கலங்கள் பழையதும், உடைந்தும், ரத்தம் தோய்ந்தும் கொல்லன் பட்டறையில் தான் இருக்கும் என்று மறைமுகமாக 'உன்னைக் காட்டிலும் அதியமான் போர் வீரம் கொண்டவன்' என்பதை உணர்த்தும் வஞ்சப் புகழ்ச்சிப் பாடல் ஒன்றைப் பாடினார்.

"இவ்வே, பீலி யணிந்து மாலை சூட்டிக்
கண்டிர ணோன்காழ் திருத்திநெய் யணிந்து
கடியுடை வியனக ரவ்வே யவ்வே
பகைவர்க் குத்திக் கோடுநுதி சிதைந்து
கொற்றுறைக் குற்றில மாதோ வென்றும்
உண்டாயிற் பதங்கொடுத்
தில்லாயி னுடனுண்ணும்
இல்லோ ரொக்கற் றலைவன்
அண்ணலெங் கோமான் வைந்நுதி வேலே!"

பாடலின் உட்பொருளை உணர்ந்த தொண்டைமான் போரைக் கைவிடுத்தான். சாணக்கியத் தந்திரமாக இருபக்கமும் பெரும் சேதம் விளைவித்திருக்கக் கூடிய போரைத் தடுத்தது ஔவையின் சாதுர்யம்.

இவ்விரு கதைகளும் அந்தக் காலத்தில் ஔவைகளின் கற்றறிவிற்கும், மதிநுட்பத்திற்கும் எத்தகைய மதிப்பும் பெருமையும் இருந்தன என்பதற்குச் சான்று. அறிவிலும், திறமையிலும் சிறந்து விளங்கிய பெண்களுக்கான சமத்துவம் போற்றியது பண்டையத் தமிழர் காலம்.

◆

சுதந்திரப் போராளி வீரபாண்டிய கட்டபொம்மனிடம் காணப்பட்ட சமத்துவம்

இந்து வெங்கடவரதாச்சாரி

இந்திய விடுதலைப் போராட்ட காலத்தில் தமிழ்ச் சமூகத்தின் சமத்துவ நிலை இன்றியமையாதது.

எத்தனையோ விடுதலைப் போராட்ட வீரர்கள் நம் நாட்டு விடுதலைக்குப் போராடி, சிறை சென்று, துன்புற்று, கொண்ட கொள்கையை விடாது மடிந்தனர். அவர்கள் யாவரும் புதைக்கப்படவில்லை, விதைக்கப்பட்டனர். மக்களின் மனதில் விடுதலை என்னும் விருட்சம் வளர்ந்து, சுதந்திரம் என்னும் காற்றை சுவாசிப்பதற்கு விதையாக திகழ்ந்தனர். அவர்களின் வீரமும் தீரமும் நிறைந்த, ஆங்கிலேயரையே அச்சம் கொள்ள வைத்த பாஞ்சாலங்குறிச்சி பாளையத்துக்காரனான வீரபாண்டிய கட்டபொம்மன் பற்றித் தான் இக்கட்டுரை. வீரபாண்டிய கட்டபொம்மனை நினைவு கூறும் போது அவனுடன் இருந்த வீரர்கள் வெள்ளையத்தேவன், சுந்தரலிங்கம் மற்றும் அமைச்சர் தானாபதி பிள்ளையை மறக்க இயலுமா?

இந்து வெங்கடவரதாச்சாரி

வல்லநாட்டுப் பகுதியில் ஆடு மாடுகளைப் பாதுகாத்தான் வெள்ளையத்தேவன். தனியாளாக அங்கு வந்த கொள்ளையர் களை விரட்டி வீர சாகசம் புரிந்தான். இவன் வீரத்தையும் வாள் வீச்சையும் அறிந்த வீரபாண்டிய கட்டபொம்மன் "பகதூர்" என்று பட்டமளித்து தமது படைத்தலைவர்களின் ஒருவனாக நியமித்தார். வாரிசு இல்லாத காரணத்தால் கட்டபொம்மன் வெள்ளையத் தேவனை தமது மகனாக ஏற்றுச் சிறப்பித்தார். வெள்ளையத்தேவன் மறவர் குலத்தைச் சேர்ந்தவன் என்பது குறிப்பிடத்தக்கது.

சுந்தரலிங்கம், பாஞ்சாலங்குறிச்சிக்கு அருகிலுள்ள கவர்னகிரி என்னும் இடத்தைச் சேர்ந்தவன். இவனுடைய வீரத்தையும் போர் திறமையையும் அறிந்த வீரபாண்டிய கட்டபொம்மன் தமது போர்ப்படையில் சுந்தரலிங்கத்தை இணைத்துக் கொண்டார். சுந்தரலிங்கம் தேவேந்திர குலத்தைச் சேர்ந்தவன். மற்ற தேவேந்திர வேளாளர் வகுப்பைச் சேர்ந்த இளம் வீரர்களையும் கட்டபொம்மனின் படையில் சேர்வதற்கு சுந்தரலிங்கம் காரணமாக இருந்தார். இருவரையுமே தனது வாரிசாகவே கருதினான் கட்டபொம்மன்.

வீரபாண்டிய கட்டபொம்மனின் தலைமை அமைச்சராக சுப்ரமணிய பிள்ளை பணியாற்றினார். இவருக்குத் தானாபதி பிள்ளை என்ற மற்றொரு பெயரும் உண்டு.

ஆம் வீரபாண்டிய கட்டபொம்மன் என்ற நாயக்கர் வகுப்பைச் சார்ந்த மன்னருக்கு மறவர் குலத்தில் பிறந்த வெள்ளையத்தேவனும், தேவேந்திர குலத்தில் பிறந்த சுந்தரலிங்கமும், பிள்ளைமார் வகுப்பில் பிறந்த தானாபதி பிள்ளையும் துணையாகவும் தூணாகவும் இருந்தனர். இங்கு சாதி பார்த்து பதவிகள் கொடுக்கப்படவில்லை, அறிவும் திறமையும் வீரமும் விவேகமும் தான் முன்னிறுத்தப்பட்டது.

ஆம் சாதிகளை மறந்து சாதனைகளை மட்டுமே வீரபாண்டிய கட்டபொம்மன் அளவுகோலாகக் கொண்டிருந்தார் என்பதற்கு இம் மூவருமே சாட்சி. இவர்களின் போராட்டம் இவ்வுலகம் அறிந்ததே!

நம்முடைய தமிழ்ச் சமூகம் சமத்துவத்துடன் இருந்தது என்பதற்கு நமது வீரபாண்டிய கட்டபொம்மனே மிகப்பெரிய சான்று. என்றும் அந்த மேலான சமத்துவத்தை நம் மனதில் நிறுத்திச் செயல்படுவோம்.

வாழ்க தமிழ் சமூகம்! வாழ்க சமத்துவம்!

High Circle

BANKING

UPTO 4.00% APY*
ON BUSINESS CHECKING ACCOUNT

UPTO $125M*
FDIC PER ACCOUNT

INVESTMENTS

Diversify your portfolio with Venture Capital, Private Equity & Real Estate investments!

ANTHROPIC SPACEX OpenAI

CARILLON PARC SOUTHLAKE Legacy North

LIFESTYLE

Access a range of exclusive lifestyle benefits.

1.3M+
Hotels Worldwide

25+ CITIES
for Curated Dining

7K+ UNIQUE
Global Events & Activities

Gain exclusive access to the community of High Circle members including founders, executives, physicians, and more..

* High Circle Inc. is a financial technology company, not a FDIC-insured depository institution. All deposit products and services are provided by FirstBank, a Tennessee Corporation, Member FDIC. Funds in your deposit account are insured up to $250,000. The FDIC's deposit insurance coverage only protects against the failure of the FDIC-insured depository institution.

www.joinhighcircle.com

சுவடுகளை மறப்பது ஏனோ?

பேராசிரியர் முனைவர் கலை மதீ, மயாமி,ஃபளோரிடா.

அன்னியன் வந்தான்
அவன்தான் யாதும் என்றான்
அவனைப் பணிவதுதான் உன் கடமை என்றான்.

பணிந்தோம், பயந்தோம், சுவடுகளை மறந்தோம்
சுட்ட வடுக்களை மறந்தோம்
சுயமரியாதையை இழந்தோம்.

ஏன் வந்தோம்
எங்கிருந்து வந்தோம்
ஏதுமறியா ஏமாளியானோம்.

வெள்ளையர்கள் வரும் முன்னே
வெள்ளை சொழாந்தியம் ஏறி
வெகு தூரம் சென்றான் தமிழன்.

நினைத்துப் பாருங்கள் ஒரு நொடி
அன்று கடாரம் கொண்ட சோழன் பேராசை கொண்டிருந்தால்
மற்ற நாடுகள் தமிழகத்துக்கு தலை வணங்கியிருக்கும்.

தமிழனின் தொன்மையும்
தமிழனின் வல்லமையும்
தரணியே போற்றும் இன்று.

வென்றால் அடிமை ஆக்குவது
பரங்கியரின் பழக்கம்
தோழன் ஆக்குவது தமிழரின் வழக்கம்
தோழன் ஆக்குவது தமிழரின் வழக்கம்.

தரணியெங்கும் தமிழ் ஓங்கட்டும்!
நம் தமிழ்ப்பணி என்றும் சிறக்கட்டும்!

வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையின் 37-வது தமிழ் விழா சிறக்க வாழ்த்துகள்!

Best wishes from

Clara D'Silva
President and Founder

Prakash Anthony
CEO and Co-Founder

Korcomptenz
TOTAL TECHNOLOGY TRANSFORMATION

USA: 35 Waterview Blvd, Suite 207, Parsippany, NJ 07054 | Phone : 1-973-601-8770
INDIA: No. 146 Greams Road, Thousand Lights, Chennai, TN, India- 600 006

www.korcomptenz.com

USA | CANADA | INDIA | UAE | AUSTRIA | SAUDI ARABIA

கதை கேளு கதை கேளு நிஜமான கதை கேளு!

சுவையோடு சுகமாக உருவான கதை கேளு!

மயிலே மயிலே என்றவுடன் ஆடல் நிகழ்ச்சி என்று பலரும் நம்பினர். ஆனால் ஒருவரின் வாழ்க்கையில் நடந்த விடயத்தை அனைவருடன் எந்த தயக்கமுமின்றி பகிர்ந்து கொள்ளும் கதை நிகழ்ச்சி.

கதை சொல்லியின் அனுபவத்தை மட்டுமே கதையாக, கோர்வையாகத் திறமையுடன் சொல்லுவது தான் இந்த நிகழ்ச்சியின் தனிச்சிறப்பு. எத்தனையோ கதை நிகழ்வுகள் நடந்தாலும், Story Telling - The Moth Style வகையில்

நம் வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவை பெருமையுடன் வழங்கிய இரண்டு வருட நிகழ்ச்சி - மயிலே மயிலே.

எங்களின் நிகழ்ச்சிகள்:

முதல் நிகழ்ச்சி	-	திரு. பவாவுடன் கதை சொல்லும் தொடக்க நிகழ்வு
இரண்டாம் நிகழ்ச்சி	-	திருமதி. சி. வனிதாமணி அருள்வேல் - கதைக்களம்
மூன்றாம் நிகழ்ச்சி	-	திருமிகு. நெல்லை உலகம்மாள் (கல்வி ஆலோசகர்)
காதலர் தின சிறப்பு நிகழ்ச்சி	-	திரு. ரமேஷ் கண்ணா (திரை நடிகர், இயக்குநர், எழுத்தாளர், டப்பிங் கலைஞர்)
ஐந்தாம் நிகழ்ச்சி	-	திரு. V.K.T பாலன் ஐயா அவர்களுடன் கதை சொல்லும் சித்திரை நிகழ்வு
ஆறாம் நிகழ்ச்சி	-	பேராசிரியர் திருமிகு.அமுதா இராமானுஜம் அவர்களுடன் கதை சொல்லும் நிகழ்வு
ஏழாம் நிகழ்ச்சி	-	திருமதி. ஷியாமளா ரமேஷ்பாபு அவர்களுடன் கதை சொல்லும் நிகழ்வு

மேலும் மேலும் இது போன்ற பலன் தரும் நல் குழுக்களை பேரவை அமைக்க வேண்டும் என்பது தான் இந்த குழுவின் ஒருங்கிணைத்த கருத்து.

மயிலே மயிலே

தலைமை
பமிலா வெங்கட்

துணைத் தலைமை
மங்களா ஐயர்

ஆலோசகர்
முனைவர்
பாலா சுவாமிநாதன்

குழு உறுப்பினர்கள்:

செந்தாமரை
பிரபாகர்

ஷீலா
ரமணன்

ஜேசு
சுந்தர மாறன்

சுபாஷிணி தேவி
தினகரன்

கவிஞர்களின் வேடந்தாங்கல்!

கரகரப்புக் குரல்
கேட்டு நாளாகிப்போனதே!
செய்தியாளர் சந்திப்பெல்லாம்
நாளும் சிரிப்பின்றி முடிகிறதே!
தலைப்புச் செய்தியெல்லாம்
தலைப்பின்றி வருகிறதே!
கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே
வாளொடு முன்தோன்றி மூத்தகுடி
இன்று நீயின்றி அலைகிறதே!

நெல்லறுக்கும் உழவருக்கும்
சொல்லறுக்கும் புலவருக்கும்
பக்கபலமானாய்; நிற்க நிழலானாய்!
முன்னவர்காள்உழவர் சந்தையில்
உளம் மகிழ்ந்து களைப்பாறினர்!
பின்னவர்காள்தொல்காப்பியப்
பூங்காவில் தமிழ் குடித்து
தத்தம் இளைப்பாறினர்!

அலையையே படகாக்கினாய்
மலையையே குடையாக்கினாய்!
குரலோடு பிறந்ததும் நீ
விரலோடு வளர்ந்ததும் நீ!

முனைவர் அருள்
வீரப்பன், நியூ யார்க்

ஒலிவாங்கியெல்லாம்
உள்வாங்கிக்கொண்டனவாம்
செய்தியாளர் சந்திப்பில்
உன்பேச்சு கேட்காததால்!

உன் அரசியலை மறுதலிப்பவர்கூட
உன்தமிழ் கேட்க மட்டும் காத்திருப்பர்!
ஆங்காங்கே அன்றலர்ந்த
காளான்களாய்ப் பூத்திருப்பர்!
பன்னாட்டு அறிவியல் மாநாடுபோல்
செம்மொழி மாநாடு கண்டாய்!
சக்கர நாற்காலியில் உட்கார்ந்து கொண்டே
உலகத்தையே கோவையில் குவியவைத்தாய்!

குறைகளை நிறையாக்கினாய்!
நிறைகளை நிறைவாக்கினாய்!
கவிஞர்களும் - தமிழ்
அறிஞர்களும் அவ்வப்போழ்து
தங்கிப்போன தமிழ்ப் பூங்கா!
கார் உள்ளளவும் - கடல்
நீர் உள்ளளவும் இந்தப்
பார் உள்ளளவும்
உன் புகழ் நீங்கா!!

QBRAINX
Transforming You

NAVIGATING TOMORROW'S DIGITAL HORIZONS

About Us

QBrainX is your trusted partner in digital transformation, driving success for global industries through innovation and technology. We empower businesses with personalized solutions, fostering growth and excellence while staying true to our core values. Embrace creativity and innovation with

QBrainX Overview

- 6 yrs — Digital Transformation Ecosystem
- 100+ — Implementations
- 30+ — Solution Architects
- 350+ — Experienced Consultants
- 50+ — Customer Support Managed Globally
- 45+ — Onshore Consultants

databricks SAP snowflake

Why Choose Us?

- Industry oriented domain knowledge
- Artificial Intelligence and Machine Learning
- Rapid response team to address major challenges and project delays
- License Optimization
- Our BXT methodology- considering Business objective, user eXperience and building the Technology
- Design Authority
- Strong and efficient governance - keeping cost, timeline and the resources at target
  Experienced consultants throughout the

Industry Vertical

Healthcare · Manufacturing · Retail · Finance
Oil & Gas · Transportation · FMCG · Pharma

Engagement Models

- Consulting and Implementation
- Managed Services
- Prepaid hours
- Time & Material

Get In Touch
www.qbrainx.com

+1 703-577-1310
rajkumar.s@qbrainx.com
Bentonville, AR 72712

2023 சாக்ரமெண்டோ பேரவைத் தமிழ் விழா

ஜான் பிரிட்டோ - ஒருங்கிணைப்பாளர், மலர்மகள் அகிலன் - இணை ஒருங்கிணைப்பாளர்

36-ஆவது பேரவை விழா, சாக்ரமெண்டோ திங்களொடும், செழும்பரிதி தன்னோடும், விண்ணோடும், உடுக்களோடும், மங்குல் கடல் இவற்றோடும் பிறந்த நமது தமிழ் மொழியினை ஆருயிராகக் கருதும் வட அமெரிக்கத் தமிழர்கள் அனைவருக்கும் வணக்கம்.

தங்கத் தலைநகராம் சாக்ரமெண்டோவில் தமிழ்த் திருவிழா! கனவு நனவாகிய வேளை!

"தொட்டாலும் கை மணக்கும்; சொன்னாலும்
வாய்மணக்கும்; துய்யசேற்றில் நட்டாலும்

தமிழ்ப்பயிராய் விளைந்திடும் தமிழ் உள்ளம்" என்பது போலப் புலம் பெயர்ந்தாலும் தடம் மாறாமல் தமிழ் மொழியின் கலை, இலக்கியம் மற்றும் பண்பாட்டுச் சிறப்பை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்லும் நோக்கில், வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையும், வெள்ளி விழா கண்ட சாக்ரமெண்டோ தமிழ் மன்றமும் இணைந்து நடத்திய பேரவையின் 36-ஆவது தமிழ் விழா கலிஃபோர்னியாவின் தலைநகரான சாக்ரமெண்டோவில் 2023-ஆம் ஆண்டு ஜூன் 30, சூலை 1 மற்றும் சூலை 2 ஆகிய தேதிகளில் மிகச் சிறப்பாக நடந்து முடிந்தது. "தொன்மை தமிழரின் பெருமை" என்ற கருப்பொருளில், அருட்பிரகாச வள்ளலார் மற்றும் ஆறுமுக நாவலரின் தமிழ்த் தொண்டைச் சிறப்பிக்கும் வகையில் அவர்களது 200-ஆவது அகவையைக் கொண்டாடியதும் விழாவிற்குச் சிறப்புச் சேர்த்தன. இவ்விழாவிற்கு வட அமெரிக்காவிலிருந்து மட்டுமல்லாமல் உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் இரண்டாயிரத்து ஐந்நூறுக்கும் அதிகமான மக்கள் வருகை தந்திருந்தனர்.

பேரவையின் 36-ஆவது தமிழ் விழாவில், வட அமெரிக்க வாழ் தமிழ் மக்களுடனான உறவுப்பாலத்தைப் பலப்படுத்தும் முகமாகத் தமிழ்நாடு முதல்வர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் காணொளி வழியாகவும், புதுவை முதல்வர் ந. ரங்கசாமி அவர்கள்

கடிதம் வழியாகவும் தங்களது வாழ்த்துச் செய்தியைப் பகிர்ந்தது விழாவிற்கு மேலும் சிறப்பு சேர்த்தது.

முதற்கண் இம்மாபெரும் வரலாற்று நிகழ்வின் ஒருங்கிணைப்பாளராக எங்களை நியமித்த பேரவைக்கும், சாக்ரமெண்டோ தமிழ் மன்றத்திற்கும் எங்களது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

சாக்ரமெண்டோவில் வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையின் பேரவை விழா சாத்தியமா என்று கேள்விக் குறியோடு தொடங்கி, "ஆம்!! சாத்தியம்" என்று இரண்டு ஆண்டு கடின உழைப்பால் சாத்தியமாக்கி, விழா சிறப்பாக நடைபெற்றிட நேரம் பாராமல், கண் துஞ்சாமல், சோர்வின்றி, தனிப்பட்ட

விடயங்களைப் பின்தள்ளி, பல்வேறு விடயங்களில் ஒரு மனதாகத் தோள் கொடுத்து, உதவி என்று கேட்டபோதெல்லாம் முகம் கோணாமல், தங்களை ஈடுபடுத்திக் கொண்டு ஒற்றுமையாக உழைத்திட்ட 300-க்கும் மேலான தன்னார்வலர்கள், பேராதரவு நல்கிய பேராளர்கள், வாழ்நாள் உறுப்பினர்கள், தமிழ்ச் சங்கத் தலைவர்கள், கொடையாளர்கள் மற்றும் விழாவில் பங்கேற்ற அனைவருக்கும் இவ்வேளையில் சாக்ரமெண்டோ தமிழ் மன்றம் மற்றும் வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையின் சார்பாக சிரம் தாழ்த்தி நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஜான் பிரிட்டோ

இப்பேரவை விழாவின் ஒரு அங்கமாக, FiTEN தொழில் முனைவோர் மாநாடு சென்னையில் சனவரி 9, 2023 அன்று நடத்தப்பட்டது. இம்மாநாட்டில் தமிழ்நாடு முதல்வர் திரு. மு.க ஸ்டாலின், நிதி அமைச்சர் திரு பி.டி. ஆர். பழனிவேல் ராஜன், கிராமப்புற மற்றும் சிறு தொழில் துறை அமைச்சர் திரு. டி.எம். அன்பரசன் அவர்களும் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர். மேலும் பல்வேறு துறையைச் சார்ந்த தொழில் முனைவோர்கள் உட்பட ஆயிரத்துக்கும் மேலானவர்கள் கலந்து கொண்டனர். தமிழ் தொழில் முனைவோர்களுக்கான ஒரு இணைப்பை ஏற்படுத்தி, தமிழ்நாட்டில் தொழில் முதலீடுகளை

ஊக்கப்படுத்திடும் ஒரு சிறப்பான முன்னெடுப்பாக இவ்விழா அமைந்தது.

இதன் தொடர்ச்சியாக சூன் 30, 2023 அன்று FiTEN இரண்டாவது மாநாடு சாக்ரமெண்டோவில் நடைபெற்றது. இதில் கலிஃபோர்னியாவின் துணைநிலை ஆளுநர் திருமிகு எலனி, தமிழ்நாடு கல்வி அமைச்சர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி மற்றும் தொழில் முனைவோர்கள் என ஆயிரத்திற்கும் மேலானவர்கள் கலந்து கொண்டனர். இதில் இளம் தொழில் முனைவோரை ஊக்கப்படுத்தும் போட்டிகளும் கலந்துரையாடல்களும் நடைபெற்றன. அன்று இரவு கொடையாளர்களுக்கான சிறப்பு விருந்து மற்றும் நட்சத்திர இரவு கொண்டாட்டங்களோடு முதல் நாள் நிகழ்வு நிறைவு பெற்றது.

சூன் 1, 2023 அன்று குத்து விளக்கு ஏற்றுதலுடன் தொடங்கிய பேரவை விழா, கலை, இலக்கியம் சார்ந்த நிகழ்வுகள், இணை அமர்வுகள், மரபுக்கலை கலைஞர்கள், கலைத்துறை நட்சத்திரங்கள், உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்து வருகை தந்திருந்த எழுத்தாளர்கள் மற்றும் பல்வேறு ஆளுமைகள் பங்கேற்ற சிறப்பு நிகழ்வுகள் என்று மகிழ்ச்சிப் பெருவிழாவாக நடைபெற்று சூலை 3 அன்று இனிதே நிறைவுற்றது. விழாவிற்கு வந்திருந்த அனைவருக்கும் சுவையான உணவு ஏற்பாடும் செய்யப்பட்டிருந்தது.

சாக்ரமெண்டோவில் நடைபெற்ற 36-ஆவது பேரவை விழாவில் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய சிறப்பு நிகழ்வுகள் பல இருந்தாலும் அவற்றில் ஒரு சிலவற்றை இங்கே பகிர்ந்து கொள்ள விரும்புகிறோம்.

1. கலிஃபோர்னியா துணை நிலை ஆளுநர் மாண்புமிகு எலினி கவுனாலகிஸ், தமிழ்நாடு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி மற்றும் பல்வேறு தொழில் ஆளுமைகள் பங்குபெற்ற தொழில் முனைவோர் மாநாடு.

2. தமிழ்நாடு அரசின் சார்பாகக் கலந்து கொண்ட மரபுக்கலை கலைஞர்கள் திரு. மருங்கன் பாண்டி, திரு. பாண்டியராஜ் அழகு, திரு. சக்திவேல் சங்கர், திரு. முத்துச்சந்திரன் பாலகிருஷ்ணன், திரு. கணேசன் ரத்தினசாமி, திரு. ஜீவராவ்

நதிராவ், திருமிகு பார்கவி பாஸ்கர், திருமிகு தேவி கந்தன், திரு. குமரேசன் பழனி, திரு. விக்னேஷ் வெங்கடேசன், திரு. ராஜமாணிக்கம் வெள்ளைச்சாமி, திரு. ராஜ்குமார் ராஜமாணிக்கம் ஆகியோர் கலந்து கொண்ட 90 நிமிட மரபுக்கலை நிகழ்வு.

3. திரு. இமையம், திரு. பவா செல்லதுரை, திரு. ஜோ மல்லூரி மற்றும் திரு. ராமலிங்கம் என்று கலை, எழுத்து மற்றும் இலக்கிய ஆளுமைகள் பங்குபெற்ற தமிழின் தொன்மை பற்றிய ஆய்வரங்கம்.

4. திருக்குறளைக் குழந்தைகள் உதவியுடன் இசைவடிவில் அரங்கேற்றியது.

5. தமிழ் ஓசை - திரு. ஜேம்ஸ் வசந்தன் குழுவினரின் சேர்ந்திசை வடிவில் தமிழ் இலக்கியம்.

6. திரு. சுகி சிவம், திரு. மோகன சுந்தரம் மற்றும் திருமதி. பர்வின் சுல்தானா பங்கு பெற்ற சிறப்புப் பட்டிமன்றம்.

7. திருமிகு சுதா ரகுநாத் குழுவினரின் தமிழ் இசை.

8. குழந்தைகளுக்கான தமிழ் வினாடி வினா அறிமுகம்.

9. தமிழரின் தொன்மை குறித்த அருங்காட்சியகம்.

10. மருத்துவர்கள் திரு. அருள் அமுதன், திருமதி உமா செந்தில்குமார் மற்றும் மருத்துவர் திரு. பழனிமாணிக்கம் ஆகியோர் பங்கு பெற்ற சித்த மருத்துவம், நவீன மருத்துவம் குறித்த இணைய அமர்வுகள்.

11. நவீன இலக்கியம் குறித்த இணை அமர்வுகள்.

12. திரை நட்சத்திரங்கள் திரு சந்தானம், இயக்குநர் திரு. சசிகுமார், செல்வி ஐஸ்வர்யா ராஜேஷ், நடன இயக்குநர் திரு. சாண்டி மற்றும் சின்னத்திரை நட்சத்திரங்கள் திரு. பாலா, திருமதி மணிமேகலை, திரு. விஜய், திரு. ஆதவன், திரு. சுதன் பங்குபெற்ற சிறப்பு நிகழ்வுகள்.

12. சுற்றுச்சூழல் பேண பாக்கு மட்டைத் தட்டில் உணவு பரிமாறுதல்.

13. சிறப்புப் பேருந்தில் சுற்றுப்பயணம்.

14. மாற்றுத் திறனாளி குழந்தைகளின் தனித்திறனைப் பேரவை விழாவில் கொண்டாடியது.

15. விழா அரங்கம், இணை அமர்வுகள் மற்றும் தங்கும் விடுதி அனைத்தும் மிக அருகில் அமைந்தது.

16. மூன்று நாட்களில் பல வகையான அறுசுவை உணவு படைத்தது

சாக்ரமெண்டோவில் நடைபெற்ற இப்பெரும் தமிழ் விழாவை நாம் கொண்டாட, பாராட்ட, நினைவில் கொள்ள என்று பல காரணங்கள் உள்ளன. அளவில் சிறிய தமிழ்ச் சங்கமாக இருந்தாலும் 300-க்கும் மேற்பட்ட தன்னார்வலர்களின் இரண்டு ஆண்டுகளுக்கும் மேலான தொடர் உழைப்பால் விழாவைச் சிறப்பாக நடத்தி இருக்கிறோம் என்று நம்புகிறோம்.

இதற்காக உழைத்த தன்னார்வலர்கள், பங்கேற்பாளர்கள், விழா ஒருங்கிணைப்பாளர்கள் ஆதரவு நல்கிய பேராளர்கள், வாழ்நாள் உறுப்பினர்கள், தமிழ்ச் சங்கத் தலைவர்கள், கொடையாளர்கள் மற்றும் பேரவைச் செயற்குழுவிற்கும் மீண்டும் எங்கள் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மலர்மகள் அகிலன்

"தூயஉள்ளம் அன்புள்ளம் பெரிய உள்ளம்
தொல்லுலக மக்களெலாம் ஒன்றே என்னும்
தாயுள்ளம் தனிலன்றோ இன்பம்!"

என்பதை மெய்ப்பிக்கும் வகையில் திசை, இன பாகுபாடில்லாமல் வளர்ந்த தமிழ் மொழி மேலும் வளர, வாழ, தழைத்தோங்கத் தமிழ் விழாவில் பங்கேற்றுச் சிறப்பித்த உங்கள் அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தமிழால் இணைவோம்!!

தமிழைத் தரணி போற்றிடச் செய்திடுவோம்!!

◆

ABI Enterprises, Inc

11415 Sagemorgan Drive, Houston, TX 77089

Sam Kannappan PE (broker)

Phone: 281-484-2270

Mobile: 713-724-4399

Email: sam.kannappan@gmail.com

Som Nair (Associate)

Phone:713-340-1340

Mobile: 713-320-9334

Fax: 713-341-0904

Email: somnair2002@yahoo.com

Abby Kannappan (Associate)

Mobile: 832-247-0609

Email: abbycni@gmail.com

பெருஞ்சித்திரனாரின் நூறாசிரியம்

முனைவர் மு. இளங்கோவன்

இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற பாவலராக விளங்கியவர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் (10 மார்ச் 1933 – 11 சூன் 1995) ஆவார். மொழி, இன, நாட்டு உணர்வுடன் தமிழில் வீறார்ந்த படைப்புகளைத் தந்த இப்பெருமகனார் பேச்சாலும் எழுத்தாலும் அளப்பரும் தொண்டுகளைத் தமிழ்மொழிக்குச் செய்துள்ளார். தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ் நிலம் என்னும் இதழ்களை நடத்தியும் பல்வேறு அரிய நூல்களைப் படைத்தும் தமிழர்களுக்கு இனவுணர்வை ஊட்டியவர். அனைத்து வயதினருக்கும் இவர் இயற்றிய பாடல்கள் காலத்தால் என்றும் நினைவுகூரத்தக்கவை.

முனைவர்
மு. இளங்கோவன்

பெருஞ்சித்திரனார் அவர்கள் பாடல் புனைவது போன்றே உரை வரைவதிலும் பெரும்புலமை கொண்டவர். இவர்தம் திருக்குறள் மெய்ப்பொருளுரை இவர் மிகச் சிறந்த உரையாசிரியர் என்பதற்குச் சான்றாகும். இவர் பல்வேறு காலங்களில் இயற்றிய அரிய ஆசிரியப்பாக்கள் தொகுக்கப்பெற்று, நூறாசிரியம் என்னும் தலைப்பில் நூலுருவம் பெற்றுள்ளது. இந்த நூலில் நூறு ஆசிரியப்பாக்கள் உள்ளன. இவற்றுள் 71 பாடல்கள் புறத்துறை சார்ந்ததாகவும், 29 பாடல்கள் அகத்துறை சார்ந்ததாகவும், உள்ளன. (பின்னிணைப்பில் கூடுதலாக இவரியற்றிய 24 பாடல்கள் உரையின்றித் தொகுத்துத் தரப்பட்டுள்ளன). முதல் 66 பாடல்களுக்கு இவர் வரைந்துள்ள பொழிப்பும், விளக்கமுமாக அமையும் உரையும், இவர் மறைவு காரணமாகப் பிற்பகுதியில் உள்ள 34 பாடல்களுக்குப் புலவர் இறைக்குருவனார் வரைந்த உரையும் அரிய தமிழ் விருந்தாகக் கிடைக்கின்றன. நூறாசிரியத்தின் பாடல் சிறப்பு களையும் உரைச்சிறப்புகளையும் அறிமுகப் படுத்துவதாக இக்கட்டுரை அமைகின்றது.

பெருஞ்சித்திரனார் தென்மொழி ஏட்டில் தொடர்ந்து எழுதிய ஆசிரியப்பாக்களுள் முதல் பத்துப்பாடல்கள் நூறாசிரியம் என்னும் பெயரில் 1979-ஆம் ஆண்டு முதன்முதல் வெளிவந்தது. அதன் இரண்டாம் பதிப்பு 1986-இல் வெளிவந்தது. அடுத்த பத்துப்பாடல்கள் கொண்ட இரண்டாம் தொகுதி 1981-இல் வெளிவந்தது. பெருஞ்சித்திரனாரின் மறைவுக்குப் பிறகு 1996-இல் நூறு ஆசிரியப்பாக்களால் இயன்ற பாடல்களும் உரைகளுமாக அமைந்த நூறாசிரியச் செம்பதிப்பு வெளிவந்தது.

நூறாசிரியம் குறித்த நூலாசிரியர் கருத்துகள்

பெருஞ்சித்திரனார் பாடல் புனைவதில் வல்லவர் என்பதைப் போன்று, உரைநடை எழுதுவதிலும் பேராற்றல் கொண்டவர் என்பதை அவர் எழுதியுள்ள

தென்மொழி ஆசிரியவுரை மெய்ப்பிக்கும். இவர் தம் பாட்டு நூல்களுக்கும் உரைநடை நூல்களுக்கும் வரையும் முகப்புரைகள் ஆழமும் அடர்த்தியும் கொண்டவை. நூல் நுவல் பொருளைக் கற்போர்க்கு எளிமையாக அறிமுகம் செய்து, முழு நூலையும் கற்கத்தூண்டும் ஆர்வத்தைக் கிளர்த்துவன. அவ்வகையில் நூறாசிரியம் முதல்பகுதி, இரண்டாம் பகுதிகளுக்கு இவர் வரைந்துள்ள முன்னுரைப்புகள் நூறாசிரியத்தின் சிறப்பினைக் கண்முன் கொண்டுவந்து நிறுத்தும்.

நூறாசிரியம் அறிமுகம்

தமிழ்ப் புலமையுலகில் ஆசிரியப்பாவுக்குப் பெரும்பங்கு உண்டு. சங்கப் பனுவல்களான எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் பெரும்பாலும் ஆசிரியப்பாக்களால் அமைந்தவையாகும். தொல் காப்பியர் ஆசிரியப்பா குறித்து, அரிய இலக்கணக் குறிப்புகளை வழங்கியுள்ளார். அகவலோசை கொண்டது ஆசிரியப்பா (அகவ லென்ப தாசிரி யம்மே, செய்.81) என்னும் தொல்காப்பியர் ஆசிரியப்பாவிற்குரிய அசை, சீர், தளை, அடி குறித்து விரிவாக விளக்கியுள்ளார். பாட்டியற்றும் புலவோர்க்குத் தாம் உரைக்க நினைக்கும் கருத்துகளை நுட்பமாகவும் எளிதாகவும் உரைப்பதற்கு ஆசிரியப்பா பெருந்துணைபுரிவதால் மிகுதியாக இவ்வடிவத்தைப் புலவர்கள் பயன்படுத்தியுள்ளனர்.

பழந்தமிழ்ப் பாடல்களில் பெரும் பயிற்சியும் புலமையும்கொண்ட பெருஞ்சித்திரனார் அப்பாடல்களுக்கு நிகரான ஆழ்ந்த செய்திகளை அதே வடிவத்தையும் நடையையும் பின்பற்றி எழுதியுள்ளமையால் "நுனிப்புல் மேய்ந்து", மேலோட்டமாக இலக்கிய உலா வருபவர்களுக்கு இவர் பாடல்கள் தம்மை நெருங்கவிடாமல் செய்கின்றன. ஆழ்ந்த ஈடுபாட்டுடனும், ஆர்வத்துடனும் நூறாசிரியப் பாக்களைப் படித்தால் இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் மொழி வரலாறும், தமிழக வரலாறும், தமிழ்நாட்டு மக்களின் வாழ்வியலும் இந்நூலுள் பொதிந்து வைக்கப்பட்டுள்ளதை அறிய இயலும்.

புறத்திணை, அகத்திணை சார்ந்த பாடல்களால் இந்த நூல் அமைந்துள்ளது. திணை, துறை வகுத்துக்காட்டப்பட்டுள்ளன. பொழிப்பும், விளக்கவுரையும் இந்த நூலுக்கு நூலாசிரியரால் எழுதப்பட்டுள்ளதால் நூலாசிரியர் உணர்த்த நினைத்த செய்திகளை தெளிவாக அறிந்துகொள்ள இயலும்.

புறத்திணையமைப்பில் அமையும் இந்த நூல் பாடல்களில் இறை(1), இறைநெறி(31), நிலையாமை, ஈகைச்சிறப்பு(3), வறுமையின் கொடுமை(8, 29), அன்பின் சிறப்பு(5), வாழ்வியல் ஒழுங்கு(2), சான்றோர் சிறப்பு(7), மறுமணம்(13), தாய்மைக்கு ஏங்குதல்(17), மெய்யறிவு(15), பகைவர் செயல்(21), மூடத்தனமான விழாக்களை எதிர்த்தல்(20), சென்னைப் பட்டினத்து நிலைமை(38), தலைவனின் அழகிய தோற்றம்(39), நட்புச் சிறப்பு(40), பாவேந்தர்(12), அறிஞர் அண்ணா(32), தந்தை பெரியார்(24), காமராசர்(85) குறித்து எழுதியுள்ள பாடல்களும் இந்தி எதிர்ப்பு மறவர்களையும், அவர்களின் வீரஞ்செறித்த ஈக வாழ்வியலையும் இந்த நூலில் பெருஞ்சித்திரனார் பாட்டுவழி நிலைநிறுத்தியுள்ளார்.

அகத்திணையமைப்பில் அமையும் பாடல்களில் தலைவனின் அன்புக்கு ஏங்கும் தலைவியின் நெஞ்சம்(6), காதல்சிறப்பு(18), தலைவனின் இல்வாழ்க்கை(8), பிரிவுத்துயர்(10), தலைவனின் அன்புள்ளம்(11), தலைவியின் துன்பத்திற்குக் கூறும் நான்கு காரணங்கள்(19), இயற்கையாக எழுந்த காதல்(22), புதல்வரைப் பயந்த தாயின் அன்புவாழ்க்கை(23), தலைவனின் உயர் ஒழுக்கப் பண்பு(25), பெண்களின் தற்காப்புப் பண்பு(26), கொடைச்சிறப்பு(27), தலைவியை ஆற்றியிருக்க வேண்டுதல்(28), களவுக்காதல்(30), இல்லறத் தலைவியின் செயலைப் புகழ்தல்(33), தலைவனின் அன்புச் சிறப்பு(34), பரத்தையர் இழிவு(35), தலைவியின் பிரிவுத்துயர்(36), முதலிய செய்திகள் உள்ளன.

பெருஞ்சித்திரனார் தம் நூறாசிரியம் நூலுள் பயன்படுத்தும் சொற்களும், பாடலடிகளும், பாடல்கள் உணர்த்தும் உள்ளடக்கங்களும் சங்கச் சான்றோர்களின் செய்யுள்களைப் படிக்கும் மன உணர்வை ஏற்படுத்துவன. அதுபோல் அவர் வரையும் உரைகளில் நயம் கண்டு உரைக்கும் பகுதிகளும், பெய்த சொற்களுக்கான காரணங்களும் அறியும்பொழுது தமிழ்ச்செழுமையை அறிய இயலும். பாடல்களில்பொதிந்துவைக்கப்பட்டிருக்கும் உள்ளுறைப் பொருளை விளக்கிச் சொல்லும் பெருஞ்சித்திரனார் பாடலை மயக்கமின்றிப் புரிந்துகொள்ள நல்வழி ஏற்படுத்தித் தருகின்றார்.

இருபதாம் நூற்றாண்டில் எத்தனையோ பாட்டு நூல்கள் தோன்றியிருப்பினும் மற்ற நூல்களுக்கு இல்லாத தனிச்சிறப்புகள் பல நூறாசிரியம் நூலுக்கு உண்டு. அவற்றுள் ஒன்று: மொழிக்கும் நாட்டுக்கும் உழைத்த அரிய தமிழ்த்தொண்டர்களின் செயல்களையும் அரும்பெரும் தலைவர்களின்

மொழி, இனக்காப்புப் பணிகளையும் இந்த நூல் நுட்பமாகப் பதிவு செய்துள்ளது. அதுபோல் இறை, மெய்யியல், அகவுணர்வுகள் சார்ந்த கருத்துகளும் உலகியல் சார்ந்த விருப்பங்களும் பதிவாகியுள்ளன. நூற்றாண்டு கடந்தும் இவர்களின் சிறப்புகளை இந்த நூல் பாடல்கள் மக்களுக்கு நினைவூட்டிக்கொண்டே இருக்கும். உவமை, உருவகம் உள்ளிட்ட அணிகளையும் உள்ளுறை, இறைச்சி உள்ளிட்ட அழகியல் பண்புகளையும் இந்த நூல் பாடல்கள் தாங்கியுள்ளன.

இருபதாம் நூற்றாண்டில் மிகப்பெரும் அறிவுப்புரட்சி செய்த தந்தை பெரியாரின் பணிகளையும் அப்பணிகளால் தமிழ்க் குமுகம் பெற்ற பயன்களையும், அவர்தம் ஆளுமைத் திறத்தையும் புகழ்ந்துரைக்கும் வகையில் பெருஞ்சித்திரனார் எழுதியுள்ள நூறாசிரியப் பாடல் புகழ்பெற்றதாகும்.

தொல்குடிமை கட்டழித்த
ஆரியத்தை அடிதுமித்துப்
பட்டமும் பதவியும் பரவலும் நாடாது,
பழமை கடிந்து பாழ்மை புலங்காட்டி,
மருளும் இருளும் மறுமையும் போக்கி,
நிகழ்நலம் ஒன்றே நிறைத்தெனக் காட்டிக்,
குலக்கோ டரிந்து சமயக்கா லறத்துணித்துக்
கலக்குறு கொள்கைக் கடவுண் மறுத்தே
யாரும் யாவும் யாண்டுந் துய்மெனப்
புதுமை பொழிவித்துப், பொதுமை தழைவிக்கும்
அரிய ராகலி னவரே
பெரியா ரென்னும் பெயரி யோரே! (பாடல் 24)

என்று பெரியாரின் பணிகளைப் பாடியுள்ளமை கற்போர்க்குப் பேருவை அளிப்பதாகும்.

புறநானூறு உள்ளிட்ட சங்க இலக்கியங்களுக்கு அளிக்கும் அறிந்தேற்பினைப் பெருஞ்சித்திரனாரின் நூறாசிரியம் நூலுக்குத் தமிழ்க் கல்வி உலகமும் உலகத் தமிழர்களும் வழங்குதல் வேண்டும். இப்பாடல்களை மக்கள் மன்றங்களுக்குக் கொண்டுசேர்ப்பது தமிழ் உணர்வாளர்களின் கடமையாகும்.

◆

Balagan Business & TaxService

AN AICPA PEER REVIEWED FIRM
SERVING ALL STATES FROM OUR NATIONS CAPITAL



"Tax Seasons Is Around The Corner, Are You Ready ?"

- Accounting And Bookkeeping Service
- Audit, Review, Compilation And Attestation Service
- Tax Service
- IRS Service
- Web Hosting
- Business Consultancy
- Dedicated Service With Smiling Faces
- Experienced And Reliable Staff Year
- Rely On 25 Years Of Experience

(301)931-1040, (301)931-1042
(301)595-4331, (703)723-4488, (703)723-4458
(703)723-1140 , (301)595-4332
www.balaganfinancials.com

Main Office: 12100 Franklin Street
Beltsville, MD 20705

Branch Offices: 44335 Premier Plaza
Suite#100, Ashburn, VA 20147

BALAGAN ARUMUGASWAMY, CPA

பாலகன் சரஸ்வதி கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி

முக்கூடல், திருநெல்வேலி .

பாடப்பிரிவுகள்:

- B.Sc(Mathematics)
- B.Sc(Computer Science)
- B.Sc(Information Technology)
- B.Com(Professional Accounting)
- B.Com
- B.A (English)
- B.A (Tamil)

01
2024-2025 கல்வி ஆண்டிற்க்கான அட்மிஷன் நடைபெறுகிறது
அனைத்து மாணவிகளுக்கும்
25% தள்ளுபடி

02
மாவட்ட மற்றும் மாநில அளவில் விளையாட்டு போட்டிகளில் பங்குபெற்ற மாணவிகளுக்கு
50% தள்ளுபடி

03
அனைத்து பள்ளிகளிலும் முதல் மூன்று மதிப்பெண் எடுத்த மாணவிகளுக்கு
100% தள்ளுபடி

எமது கல்லூரியின் சிறப்பு அம்சங்கள்

1. அனுபவம் மிக்க பேராசிரியர்கள்.
2. குறைந்த கட்டணத்தில் தரமான கல்வி
3. நூலகம் மற்றும் கணினி நூலகம்.
4. காணொளி காட்சி LCD வகுப்பறைகள்.
5. விடுதி வசதி.
6. அனைத்து பகுதிகளில் இருந்து பேருந்து வசதி.
7. Wi Fi வசதியுடன் கூடிய வளாகம் மற்றும் விளையாட்டு மைதானம்.
8. கல்வி உதவித்தொகை வசதி (SC,ST,BC,Minority Scholarship).
9. மாவட்ட மற்றும் மாநில அளவில் விளையாட்டு போட்டிகளில் பங்கேற்ற மாணவிகளுக்கு 50% கல்வி உதவித்தொகை.
10. சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் மற்றும் காற்றோட்டமான வகுப்பறை.
11. சிறந்த நிறுவனங்களில் 100% வேலை வாய்ப்பு.
12. மாணவிகளின் தனித்திறமை ஊக்குவிக்கும் வகையில் பயிற்சிகள் வழங்கப்படும்.
13. அரசு போட்டித் தேர்வுக்கான பயிற்சி.
14. தொழில் முனைவோருக்கான திறன் பயிற்சி.
15. அரசு பள்ளியில் பயின்ற மாணவிகளுக்கு மாதம் தோறும் ரூபாய் 1000 ஊக்கத்தொகை பெற்றுத்தரப்படும் .
16. இலவச கணினி பயிற்சி.

Scan QR code to apply

அட்மிஷன் தொடர்பான தகவல்களுக்கு அழைக்கவும்
04634213319. 9042404647.6380114480
balagansaraswathicollege.edu.in, balagansaraswathicollege@gmail.com

Mr.BALAGAN ARUMUGASWAMY
MA,BGL,CPA (USA), LLM (USA)
Founder, Chairman & Secretary

Dr. R. KRISHNAVENI
M.Com.,M.Phil.,MBA,Ph.D
Principal

தமிழும் தம்பிகளும்சூழ் உலகம் அண்ணனுடையது

பழநிபாரதி

(வெளிவரவிருக்கும் அண்ணன் அறிவுமதியின் 'தாய்ப்பால்' நூலுக்காக எழுதியது)

அண்ணன் அறிவுமதியைப் பற்றி எழுத நினைக்கையில், அவர் எனக்கு அறிமுகமானதும் அன்பியலான அவரது ஞாபகங்களும் அலையடிக்கின்றன.

என் தந்தை சாமிபழனியப்பன், புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் வழிவந்த கவிஞர்களுள் ஒருவர். தமிழக அரசின் செய்தி மக்கள் தொடர்புத் துறையில், தமிழரசு பத்திரிகையின் ஆசிரியர்குழுவில் பணியாற்றிக் கொண்டிருந்தார். அவரது வழியாகத்தான் கவிதையின் வெளிச்சம் என்மீதும் விழுந்தது.

பழநிபாரதி

சின்னஞ்சிறு வயதில் ஒரு நாள் அப்பாவின் விரல்பிடித்துக்கொண்டு நடக்கும்போது, கவிதை என்றால் என்ன என்று கேட்டேன். அந்நேரம் மிகுந்த மகிழ்ச்சியோடு அவர் என்னைப் பார்த்த முகம் கவிதைமயமானது. வீட்டுக்கு வந்ததும் பாரதியார், பாரதிதாசன் கவிதைகளை எடுத்துத்தந்து, படி என்றார். எனக்குள்ளும் கவிதைகள் அரும்பத் தொடங்கின. பாரதியை, பாரதிதாசனை எனக்குத் தந்த என் அப்பாதான் அண்ணன் அறிவுமதியையும் அறிமுகப்படுத்தினார்.

அப்போது நான் எட்டாவது வகுப்பு படித்துக்கொண்டிருந்தேன். என் தந்தையைப் பார்க்க, அண்ணன் எங்கள் வீட்டுக்கு வந்திருந்தார். ஆர்வமிகுதியில் நான் எழுதிவைத்திருந்த மழலைப் பாடல்களை அவரிடம் காட்டினேன். பழ.பாரதி என்ற பெயரில் ஒன்றிரண்டு கவிதைகள் பத்திரிகைகளிலும் வெளியாகியிருந்தன. எல்லாவற்றையும் பொறுமையாகப் படித்து, சில திருத்தங்கள் செய்து தந்தார். பிறகு பழ.பாரதி என்று எழுதாதே பழநிபாரதி என்று எழுது எனச் சொல்லி, என் பெயருக்கு முன்னால் என் தந்தையின் தமிழை முன்வைத்து, பழ.பாரதியாக இருந்த என்னை பழநிபாரதியாக்கியவர் அண்ணன் அறிவுமதி.

என்னைப்போல பலநூறு இளைஞர்களைத் தனது இதயத்திலும் தோள்களிலும் சுமந்து நடந்தவர் அண்ணன் அறிவுமதி.

குருவிக்கூடும் கூட்டாஞ்சோறுமானது அவரது வாழ்வு. சென்னையில் அவர் குடியிருந்த வீடுகளை, வீடு என்பதைவிடச் சற்றுப் பெரிய கூடு என்றுதான்



சொல்லவேண்டும். அங்கே அண்ணனின் குடும்பம் வாழ்ந்த வாழ்வு, அன்பின் பெருவாழ்வு. சமைத்த உணவு சிறிதளவுதான் என்றாலும் 'தேவர்க்குரிய அமிழ்தம் கிடைத்தாலும் அதனை இனிதென்று தான்மட்டும் தனித்துண்ணமாட்டார்' என்கிற புறநானூற்றின் பண்பாட்டுமழையில் அந்த வீடு நனைந்திருந்ததை அங்கே அண்ணனைச் சந்திக்கச் சென்ற ஒவ்வொருவரும் உணர்ந்திருக்கக் கூடும்.

90களில் 'உள்ளேன் அய்யா' என்றொரு திரைப்படத்தை இயக்குவதற்காக அண்ணன் ஓர் அலுவலகத்தை அமைத்தார். சென்னை தியாகராய நகரில், 73 அபிபுல்லா சாலையில் அமைந்த அந்த அலுவலகம், பறவைகளின் சரணாலயம்போல ஓர் அழகான இடம். அன்பான இடம். நிறைய கவிஞர்களுக்கு, கலைஞர்களுக்கு, இலக்கியவாதிகளுக்குத் தஞ்சம் தந்த இடம். இரவும் பகலும் அந்த அலுவலகத்தின் கதவுகள் மூடப்பட்டதே இல்லை.

எங்கே போவது என்று தெரியாமல் பல இளைஞர்கள் சென்னைக்கு இலக்கியத்தில், திரைத்துறையில் ஏதாவது சாதிக்க வேண்டும் என்று வந்திறங்குகிறபோது அவர்களுக்குத் தாய்வீடாக இருந்தது அந்த அலுவலகம். அங்கேவந்து குளித்துவிட்டுப் போவார்கள். பசிக்கிறபோது ஒருவேளை சோறு கிடைக்கும் என்று நம்பிக்கையோடு வருவார்கள். இரவு எங்கே தங்குவதெனத் தயக்கம் வருகிறபோது அங்கு வந்து உறங்குவார்கள்.

கவிக்கோ அப்துல் ரகுமான், இயக்குநர்கள் பாரதிராஜா, பாலா, பொன்வண்ணன், தயாரிப்பாளர் தாணு, ஓவியர் மருது, வீர சந்தானம், சுப. வீரபாண்டியன், 'ஆனந்த விகடன்' கண்ணன், ஒளிப்பதிவாளர்கள் கே.வி.மணி, ஆர்தர் ஏ.வில்சன், செழியன், விஜய்மில்டன், என பல ஆளுமைகள் அவ்வப்போது வந்துசெல்லும் அண்ணனின் அலுவலகம்தான் - சீமான், கே.செல்வபாரதி, கவிதாபாரதி, வாசன், நா.முத்துகுமார், தாமிரா, கே.ஆர்.ஜெயா, வீரமணி, திருமாவேலன், தபூ சங்கர், இசாக், இராதாகிருஷ்ணன், நந்தலாலா, நெல்லை ஜெயந்தா, சந்ரு, சரவணன், ஆண்டன் பெனி போன்றவர்களுக்கான சந்திப்பு மையமாகவும் நட்புப்பாலமாகவும் திகழ்ந்தது.

அப்படியொரு கூட்டுவாழ்க்கையின் நம்பிக்கையை அண்ணனுடைய உறவு வளர்த்தது.

யாரேனும்ஒருவருக்குஒருவாய்ப்புகிடைத்துவிட்டால் அதை அந்த அலுவலகத்தில் உள்ள எல்லாரும் சேர்ந்து கொண்டாடுவோம். அண்ணன் தனது படைப்புகளாலும் பயணங்களாலும் உணர்ந்ததும் உணர்த்தியதும் இத்தகைய தமிழ் விழுமியங்களைத்தாம்.

அதன் தொடர்ச்சிதான் அண்ணனின் இந்தத் 'தாய்ப்பால்' படைப்பும். இயற்கையுடன் இயைந்த தமிழ்வாழ்வின் இழந்த அடையாளங்களையும் விழுமியங்களையும் பெருமிதங்களையும் மீட்டெடுக்கவும் இளையதலைமுறைக்கு அவற்றை ஊட்டிவளர்க்கவுமான காத்திரமான கவிமுழக்கங்கள் இவை.

"உயிர்கள் யாவும் நேரென்போம்! - நாம்
உலகத்தட்டில் சோறுண்போம்!"

என்கிற வரிகளில் 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்ற அய்யன் வள்ளுவனின் முகம் ஒளிர்கிறது.

"இனத்தின் முகமே மொழியாகும்! -அதை
இழத்தல் இனத்தின் அழிவாகும்!"

என்கிற வரிகளில் 'தமிழ் எங்கள் பிறவிக்குத் தாய்' என்ற பாவேந்தர் பாரதிதாசனின் குரல் ஒலிக்கிறது.

வள்ளுவனும் பாரதிதாசனும் மட்டுமல்ல, காரல் மார்க்ஸ், லெனின், தந்தை பெரியார், அண்ணல் அம்பேத்கர், அய்யா பெருஞ்சித்திரனார், தம்பி பிரபாகரன் உட்பட்ட மானுடக் கலை இலக்கிய அரசியல் போராளிகளின் கூட்டுமுழக்கமாக இந்நூல் நம்மைத் தட்டியெழுப்புகிறது.

"ஆண்பால் பெண்பால் பார்க்காதே! - நீ
ஆளுமைப் பண்பைத் துறக்காதே!"

பால் பேதம் பார்க்கும் சமூகத்தை எதிர்த்து ஆண்களும் பெண்களும் சேர்ந்து உயர்த்திப் பிடிக்கவேண்டிய பதாகை வரிகள் இவை.

"பறவை முட்டைகள் உடைக்காதே! - நீ
பல்லுயிர்க் கதவுகள் அடைக்காதே!"
"மரங்களை வளர்த்து மழையாக்கு! - நீ
மனங்களைத் துடைத்துத் தமிழாக்கு!"

என்றகிற வரிகளில் பல்லுயிர்களையும் கட்டியணைத்து சுற்றுப்புறச் சூழலைக் காப்பாற்றுவதற்காக ஒரு தாயின் உள்ளுருகுகிற மெல்லிய குரல், பிரபஞ்சத்தின் கருவறையில் வள்ளலாரின் அணையாத சுடரெடுத்து எரிந்துகொண்டிருக்கிறது.

தீபமாக எங்கே ஒளிரவேண்டும்; தீப்பந்தமாக எங்கே எரிய வேண்டும் - இரண்டும் அண்ணன் அறிவுமதியின் கவிதைகளுக்குத் தெரியும்.

"உழைப்பின் உடல் அசைவுகளது அதிர்வுகளில் வேர்பிடித்து இசை வழிய வளர்ந்தது எம் கவிதை மரபு. 'மௌனவாசிப்பு' என்கிற பம்மாத்து எம்மை மயக்கியது. இன்று மயக்கம் தெளிந்துவிட்டது.

எழுதப் படிக்கத் தெரியாத அம்மாவின் பேச்சுத் தமிழுக்குள்தாம் எம் இனமரபிற்கான கவிதைக்கூறுகள் இருக்கின்றன. எனவே

எம் தாயின் தாலாட்டுகளை... தெம்மாங்குகளை... கும்மிகளை... நடவுப்பாடல்களை... ஒப்பாரிகளை... புதிர்களை... சொலவடைகளை... வசவுகளைத் தேடிப் புறப்படுகிறேன். ஆம், மீண்டும் என் தாய்மொழிக்கே திரும்புகிறேன்" என்று அண்ணன் தனது ஒரு புத்தக முன்னுரையில் எழுதியிருப்பார். அவர் மட்டுமன்று, வாசிக்கும் நம் ஒவ்வொருவரையும் தாய்மொழிக்கும் தாய்மைக்கும் திருப்புவதாக இந்தத் 'தாய்பால்' அமைந்திருக்கிறது. "சூரியனை பூமி சுற்றுவது எப்படி பூமியின் இயல்போ அதுபோல இத்தொகுப்பு மக்களைச் சென்றடையும் என்று நம்புகிறேன். இந்த நூலை விமர்சனம் செய்யுங்கள் என்று எந்த விமர்சகனுக்கும் நான் வேண்டுகோள் விடுக்கத் தயாரில்லை,சமூகமாற்றத்தைக்கடமையாகக்கொண்ட விமர்சகனைத்தவிர" இது அண்ணன் அறிவுமதியின் 'நிரந்தர மனிதர்கள்' நூலுக்கு மக்கள் பாவலர் இன்குலாப் எழுதிய மதிப்புரையின் கடைசிப் பத்தி.

நிரந்தர மனிதர்களுக்கு இன்குலாப் முன்மொழிந்ததை தாய்ப்பாலுக்கு நான் வழிமொழிகிறேன்.

◆

VERIZEAL
Ship With Confidence

Shipping is complicated. **We make it simple.**

Ready to upgrade your transportation management? Verizeal TMS is more than just software; it's a cutting-edge platform that transforms your logistics operations.

Streamline processes, optimize shipping routes, and boost customer satisfaction by automating essential tasks—saving time, cutting costs, minimizing errors, and letting you prioritize critical activities.

6 Reasons to Choose Verizeal Cloud-based TMS

REAL-TIME VISIBILITY

Accelerates shipping visibility to drive better decision-making and response to disruptions.

BLOCKCHAIN INTEGRATION

Ensures audit-quality change in custody and strengthens security for all transactions and trading partners.

HAZMAT COMPLIANCE

Helps maintain compliance with accurate classification, document generation, and record-keeping.

EXPORT COMPLIANCE

Provides regulatory compliance, document management, and "restricted parties" screenings to mitigate risks.

WORKFLOW MANAGEMENT

Enables efficient task allocation and tracking with collaboration across the supply chain.

WAREHOUSE EFFICIENCY

Provides streamlined order fulfillment, load planning, and seamless integration with enterprise systems.

VERIZEAL
Ship With Confidence

Ship with confidence. Ship with Verizeal.
(469) 830-5644 • sales@verizeal.com • verizeal.com

அச்சாணி அறக்கட்டளை

INVISIBLE HANDS,VISIBLE IMPACT

பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மை கடலின் பெரிது.

“தோளோடு தோள் சேர்ந்து புற்றுக்கு வைப்போம் முற்று”

+1 408 320 9441

info@achaani.org

www.achaani.org

501(c)(3) non-profit org

தென்றலே!!! வாழ்த்துவம் வா!!!

பேராசிரியர் கு.வெ.பாலசுப்பிரமணியன்,
மேனாள் இலக்கியத்துறைத் தலைவர், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

கால்பதித்துக் குடியேறிக் கடுமுழைப்பால்
கடமையெல்லாம் புரிந்ததனால் தமிழினத்தார்
மேல்நிலைக்கே உயர்ந்திருந்தார் அமெரிக்காவில்;
வளர்துறைகள் பலவற்றில் திறன்மிகுத்தே
ஆல்போல்த் தழைத்தபோதும், தாம்பிறந்த
அன்னைநிலம், தாலாட்டி வளர்த்தெடுத்த
பால்போலும் செந்தமிழும் மறந்தா ரில்லை
பண்பாட்டை ஒருசிறிதும் துறந்தாரில்லை

மருத்துவர்கள், பொறியியலர், கல்வியாளர்
வேளாண்மை வித்தகத்தார் அரசு சார்ந்த
திருத்தமிகு பணித்துறைஞர், வணிகர் செல்வோர்
தொழிலதிபர், ஊர்தியெலாம் இயக்குகின்றோர்
நிருத்தமிடும் எழிற்கலைஞர் இசைஞர் என்றே
நேர்ந்தபல துறைதோறும் தடம்பதித்தே
செருக்களத்தே வெற்றிவீரர் போல நாளும்
சிறந்துயர்ந்தார் தமிழரெல்லாம் அயலகத்தே!

தொலைவிலெங்கோ வாழ்ந்தபோதும் அயலகத்தே
தொழில்பலவே செய்தபோதும் எழுத்தும்பேச்சும்
நிலைமாறி ஆங்கிலமாய் ஆனபோதும்,
நெஞ்சிலெலாம் நின்றதுகாண் தமிழுணர்வும்
மலைபோலும் தாய்நிலத்தின் மீதாம் பற்றும்
வற்றவில்லை வைரம்போல் நெஞ்சகத்தில்
தலைமுறைகள் எல்லாமும் உறைந்திருக்கும்;
தமிழினத்தின் தகவிதுதான் பிறப்பின் பண்பாம்.

அவ்வப்போது தாய்நிலத்தைத் தொடடுப் போவார்;
அடிநாளின் சொந்தமெலாம் கேட்டுச் செல்வார்
ஒவ்வாத புதுவழக்கம் எதுவும் கொள்ளார்
உடைவேறே உடுத்தாலும் மனம்வே றாகார்
கொவ்வையிதழ்ச் செவ்வாயின் குழந்தைக் கெல்லாம்
குளிர்தமிழைக் கற்பிக்க கற்பனைவான்
சிறகடித்தே கவிதையெலாம் புனைகின் றார்காண்!

வடபாலாம் அமெரிக்க நாட்ட கத்தே
வண்மைமிகு தமிழ்ச்சங்கம் நிறுவினார்காண்!
இடமகன்ற பெருநகரில் ஒவ்வோ ராண்டும்
எல்லாங்கூடி முந்நாளின் விழாவெடுப்பார்
வடம்பிடித்த தேர்போலத் தமிழ ரெல்லாம்
வண்தமிழை அரங்கத்தே கொலுவிருத்தி
நடமாடும் புலமையோரை அழைத்து வந்து
நாடுபுகழ் கலைநிகழ்வு நடத்துவர்காண்!

பெண்மைநலம் பேசுவாரும் தாய்மை யென்னும்
பேற்றினையே போற்றுவாரும் குழந்தை கட்கே
கண்மையினை இடுவதுபோல் கவிதை யாத்துக்
களிப்புமிகச் செய்வாரும் கதைகள் சொல்லி
உண்மையிது எனவுரைப்பார் தாமும் பல்லோர்
உவந்திடவே பலசெய்தி தொகுப்பார் தாமும்
விண்முகிலாய்ப் பொழிவார்காண் மக்க ளெல்லாம்
விருந்தென்றே அருந்துவார்கண்

கற்றோர்க்கு விருதளிப்பார்; கலைஞர்க் கெல்லாம்
காணிக்கைப் பரிசளிப்பார்; மழலைச் செல்வம்
முற்றாத இளந்தளிராம் சிறுவர்க் கெல்லாம்
முகமலர்ந்தே உச்சிமோப்பர்; வந்தோர்க் கெல்லாம்
பற்றோடும் பரிவோடும் விருந்தளிப்பார்
பாரெங்கும் இருந்துவந்தோர் இதனைப் போல
வற்றாத பேரன்புத் திருநாளெங்கும்
மலர்ந்திருக்கக் கண்டிலம்யாம் என்றுவப்பார்!

பல்லாயி ரத்தோர்வந் தார்க்கும் நல்ல
பல்சுவைசேர் உணவளித்த பாங்கென் சொல்வோம்!
வல்லபல எழுத்தாளர் வடித்தெடுத்த
மலரொன்றும் வெளியிட்டார் பக்க மெல்லாம்
சொல்லாலே ஓவியங்கள் நிழற்படங்கள்
சொலற்கரிதாம் பேரவையார் சாத னைகள்
எல்லாரும் உளங்களிக்க எடுத்த இந்த
ஏற்றமிகு விழாவிதுபோல் எங்கு மிலை!

வாழியபன் னூற்றாண்டு தமிழினத்தார்
வடவமெரிக் காவதனில் தாய்மொ ழிக்காய்
தோழமையால் நட்பதனால் உறவால் எல்லாம்
சோதரராய் ஒன்றுகூடி ஒவ்வோ ராண்டும்
ஏழ்கடலும் எண்திசையும் அறிய நந்தம்
எழிற்றமிழ்க்கே எடுக்கின்ற விழாவினுக்குத்
தாழ்த்திதலை வணங்கிநின்று வாழ்த்து வம்வா
தண்பொதிகைத் தென்றல்நீ உளமகிழ்ந்தே!

பெற்றால் தான் பெற்றோரா?

இராம. பாண்டியன், எம்.ஏ., எம்.ஏ., எம்.எட்., எம்.பில். முதுகலைப்பட்டதாரி ஆசிரியர் (ஓய்வு)

ஆசிரியர் குறிப்பு: இக்கதையில் வரும் பெயர்களும் நிகழ்வுகளும் கற்பனையே!

அமெரிக்காவில் ஒரு பிரபலமான பல்கலைக்கழகத்தில் தகவல் தொழில் நுட்பத்துறையில் பணியாற்றிக் கொண்டிருக்கும் சத்யவான் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர். நாற்பது வயதைத் தொட்டுக் கொண்டிருக்கும் நடுத்தர வயது இளைஞர்.

இராம. பாண்டியன்,

தகவல் தொழில் நுட்பப் படிப்பை முடித்த பின்பு அதே பல்கலைக்கழகத்தில் தன்னுடன் பணியாற்றிக் கொண்டிருந்த சாவித்திரியை மனதாரக் காதலித்து நல்ல புரிதலுடன் திருமணம் செய்து மனமொத்த தம்பதியாகினர். இதில் ஒரு சிறப்பு என்னவென்றால் சத்யவான் ஒரு அனாதைச் சிறுவனாய் இருந்து சென்னையிலுள்ள ஒரு தொண்டு நிறுவன இல்லத்தில் வளர்க்கப்பட்டு தன்னுடைய கல்லூரிக் கல்வியை முடித்து அமெரிக்கா வந்தவர். அவரைப் போலவே சாவித்திரியும் ஒரு இல்லத்தில் வளர்ந்த மாணவி. தாய் தந்தையர் இல்லை.

இருவரும் தகவல் தொழில்நுட்பத்துறையில் ஆராய்ச்சி செய்து பல நவீன யுக்திகளைக் கண்டுபிடித்த விஞ்ஞானிகள். அமெரிக்காவில் ஆராய்ச்சி மேற்கொண்டிருந்தாலும், அவர்கள் இருவரின் எண்ணங்களும் தாங்கள் பிறந்த தாய் நாடான இந்தியாவிற்கு வந்து அதிலும் குறிப்பாகத் தங்களை வளர்த்த தமிழ்நாட்டில் குடியேறி தமிழக விவசாயத்தின் மேம்பாட்டிற் காகவும் தங்களை அர்ப்பணிக்க வேண்டுமெனக் கருதுபவர்கள். இந்தியா ஒரு விவசாய நாடு. இந்தியாவின் முன்னேற்றம், கிராமங்களின் முன்னேற்றத்தில்தான் உள்ளது என்று கூறிய நம் தேசப் பிதாவின் வாக்கினை நன்கு உணர்ந்திருந்தனர்.

காலஞ்சென்ற தமிழ்நாடு வேளாண் விஞ்ஞானி எம். எஸ். சுவாமிநாதன் மற்றும் இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார் ஆகியோரின் கட்டுரைகளையும், புத்தகங்களையும் சிரத்தை எடுத்து வாங்கி விவசாயம் சம்மந்தமாக நிறைய விபரங்களைச் சேகரித்து வைத்திருந்தனர். காரணம் ஒரு குறிப்பிட்ட ஆண்டுகளுக்குப் பின்னர் இந்தியாவிற்கு வந்து தமது விவசாய சேவையைச் செய்ய வேண்டுமென முடிவு செய்திருந்தனர்.

இத்தம்பதியருக்கு அனுசுயா என்ற ஆறுவயது

மகளும், துருவ் என்ற நான்கு வயது மகனும் இருந்தனர். அவர்கள் இருவரும் வேலைக்குச் செல்பவர்களாக இருந்தபடியால் அவர்கள் தங்கியிருந்த அடுக்குமாடி வீட்டிற்கு அருகில் இருந்த 'கண்ட்ரி ஹோம்' எனும் பகல் நேரம் பயிலும் ஆங்கிலப்பள்ளியில் தங்களது பிள்ளைகளைப் படிக்க வைத்தனர்.

அக்குழந்தைகளுக்கு ஒரே குறை தங்களது தாத்தா, பாட்டி என்ன ஆனார்கள், அவர்கள் எங்கு உள்ளார்கள்? என்ற கேள்விதான். அனுசுயா படு சுட்டி, மிகவும் புத்திகூர்மையான சிறுமி. படிப்பு, நடனம், விளையாட்டு மற்றும் இசையில் பல பரிசுகளை வென்று வருபவள். பெரும்பாலும் அங்கு ஆசிரியர்கள் மிகுந்த கவனம் செலுத்தி சிறுவர்களிடம் அன்பு காட்டி நல்ல பழக்கவழக்கங்களை உருவாக்குவதில் முக்கியத்துவம் அளித்துவருகின்றனர். உதாரணமாக உணவு சாப்பிடும் பழக்கம், குழு உணர்வு, மற்றவர்களை மதித்தல், பொது இடங்களில் பழகுதல், போக்குவரத்து விதிகளைக் கடைபிடிக்கும் பண்பு, பிறர் செய்யும் உதவிகளுக்கு உடனடியாக நன்றி கூறும் பண்பு ஆகியவற்றை அச்சிறுவர்களுக்கு கற்பித்துவந்தனர். உதாரணமாக தீயணைப்பு வண்டியின் பயன்பாடு பற்றி பாடம் நடத்த வேண்டுமெனில், தீயணைப்புத் துறையினரையே பள்ளிக்கு அழைத்து வந்து அவர்கள் ஆற்றும் பணியை நேரடியாக மாணவர்களுக்கு செய்முறையாக செய்து காட்டுவார்கள்.

ஒவ்வொரு வியாழக்கிழமையும் களப் பயணங்களாக மாணவர்களை வெளியில் அருங்காட்சியகம், பொது நூலகம், சிறிய தொழில் கூடங்கள் மற்றும் விவாசயப் பண்ணைகள் போன்ற இடங்களுக்கு அழைத்துச் சென்றுவருவது வழக்கம்.

இப்படிப்பட்ட அறிவிப்பூர்வமான சூழலில் வளர்ந்து வரும் தங்களுடைய குழந்தைகளுக்கு குடும்ப உறவுகளின் மாண்புகளைக் கற்றுத்தருவதற்கு ஒரு தாத்தாவும், பாட்டியும் அவசியம் வேண்டுமெனக் கருதிய சத்யவான் தன்னுடைய மனைவியிடம் ஆலோசிக்கலானார். தமிழ் திரையுலக இயக்குநர் பாலு மகேந்திராவின் கடைசி திரைப்படமான 'தலைமுறை' சத்தியவானின் எண்ணங்களுக்கு உரமிட்டது.

சத்தியவான் தனது மனைவியிடம் "என் அன்பிற்குரியவளே ... நான் ரொம்ப நாளா மனசுக்குள் ஒரு ஆசையை வளர்த்துள்ளேன்".

"அது என்னங்க? சொல்லுங்க..."

"நமக்குதான் அம்மா, அப்பா இல்ல... அதற்கு நாம ஒன்றும் செய்யமுடியாது. நம்முடைய குழந்தைகளுக்கும் அன்பு, பாசத்தைப் பகிர்ந்து கொள்ள ஒரு தாத்தாவும், பாட்டியும் அவசியம் என்று நினைக்கிறேன்." என்று கூறிய சத்யவானிடம், மிக்க மகிழ்ச்சியுடன் "ஏங்க, பெரிய ஆச்சர்யம் என்னன்னா... எனக்கும் இதே ஆசை, எண்ணம் உண்டு... ஆனால் என்ன செய்வது என்றுதான் எனக்குத் தெரியவில்லை" சாவித்திரி கூறியதும்,

"ஒரு பிரச்சனையும் இல்லை... இப்போ... குழந்தை இல்லாதவர்கள் குழந்தைகளைத் தத்து எடுப்பதைப் போல, நாம் ஏன் ஒரு வயதான தம்பதியை நமக்குப் பெற்றோர்களாகவும், நம் குழந்தைகளுக்கு தாத்தா பாட்டியாகவும் தத்து எடுக்கக்கூடாது ? "

"ஆகா, அருமையான சிந்தனை. இதற்கு நாம என்ன செய்யப் செய்யலாம்? " என்று கேட்ட சாவித்திரியிடம் சத்யவான் தொடர்ந்தார்.

"நாம் ஏற்கனவே தமிழ்நாட்டில் குற்றாலத்திற்கு அருகில் வைத்திருக்கும் 20 ஏக்கர் நிலத்தில் நமது மாதிரிப் பண்ணையை அமைத்துவிடலாம். இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையே நடந்த கார்கில் போரில் தங்களுடைய இரண்டு மகன்களை இழந்த பெற்றோர் இருக்கின்றனர். அவர்கள் அடிப்படையில் விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் தற்சமயம் குற்றாலத்தில் உள்ள ஒரு முதியோர் இல்லத்தில் உள்ளனர்.

அவர்கள் தங்கியுள்ள முதியோர் இல்ல நிர்வாகியிடம் நம்முடைய திட்டம் பற்றி ஏற்கனவே பேசியுள்ளேன். நம்முடைய எண்ணத்தை வரவேற்றதுடன் அந்த முதியவர்களிடமும் இது பற்றிப் பேசவே, அவர்களும் அனாதைகளான நமக்குப் பெற்றோர்களாகவும், நம்முடைய பிள்ளைகளுக்கு பிரியமான தாத்தா பாட்டியாகவும் இருக்கச் சம்மதிப்பதாக கூறியுள்ளார்.

நாளை ஞாயிற்றுக்கிழமை விடுமுறையாக இருப்பதால் கணினித்திரையில் நேரடியாக அவர்களுடன் பேசுவதற்கு அந்த நிர்வாகி ஏற்பாடு செய்வதாகக் கூறியுள்ளார். நாம் முதலில் அவர்களுடன் பேசிவிட்டு பின்னர் நம்முடைய குழந்தைகளுக்கு அவர்களை அறிமுகப் படுத்தலாம்".

அந்த ஞாயிற்றுக் கிழமை அவர்களுடைய வாழ்வில் ஒரு முக்கிய திருப்பத்தை ஏற்படுத்தும்

நாளாக அமையவிருந்தது. குழந்தைகள் வழக்கமாக காலை ஒன்பது மணிவரை தூங்குவார்கள். இதைப் பயன்படுத்திக் கொண்டு சத்யவானும், சாவித்திரியும் அதிகாலை எழுந்து கடவுளை வணங்கி, தங்களுக்கு வரப்போகும் அப்பாவையும், அம்மாவையும் சந்தித்துப் பேசத் தயாரானார்கள். அறுபத்து ஐந்து வயதைக் கடந்த அந்த மூத்த தம்பதிகளான வாசுதேவனும், தேவகியும் கணினித் திரையில் தோன்றினார்கள். சத்யவானும், சாவித்திரியும் ஒருசேர அவர்களுக்கு வணக்கம் கூறி அப்பா, அம்மா என்று அழைத்தது அந்த முதியோர்களுக்கு மகிழ்ச்சியான அனுபவமாக இருந்தது. வறண்டுபோன அவர்கள் வாழ்வில் மீண்டும் வசந்தம் வந்ததைப் போல உணர்ந்தனர்.

அம்மா, அப்பா என்ற அந்த இனிமையான வார்த்தைகளை பல ஆயிரம் மைல்களைத் தாண்டி அமெரிக்காவிலிருந்து அழைத்ததின் பேரின்பத்தில் மூழ்கிப் போயினர். அந்த இல்ல நிர்வாகி மூலம் சத்யவான், சாவித்திரியின் குடும்பப் பின்னணி மற்றும் அவர்களுடைய குழந்தைகள் மற்றும் அவர்கள் தமிழகத்திற்குத் திரும்பி வந்து குடியேறும் திட்டம் அனைத்தையும் அறிந்திருந்ததால் அவர்களுக்குப் பெற்றோர்களாக இருக்க முழுமனதுடன் சம்மதித்தனர்.

வயதான பெற்றோரைச் சுமையாகக் கருதி முதியோர் இல்லங்களில் விட்டுச் செல்லும் இக்காலத் தலைமுறையினரில், முதியோர் இல்லத்திலிருக்கும் தங்களைத் தத்தெடுத்து தங்களுடன் வைத்துக் கொள்ளத் துடிக்கும் சத்யவான், சாவித்திரியையும் அவர்களுடைய பிள்ளைகளையும் மனதார வாழ்த்தினர்.

"மகனே எங்கய்யா எங்கள் பேரன், பேத்தி?" என்று கேட்ட அந்தப் பெற்றோரிடம் "இன்னும் அரை மணி நேரத்தில் அவர்களுடன் பேசலாம்" என்று கூறினார்கள். அனுவும் , துருவும் எழுந்து குளித்து, கடவுளை வணங்கி காலை உணவை முடித்தபின்பு,

"செல்லம்... உங்களுக்கு இன்றைக்கு ஒரு எதிர்பாராத அருமையான பரிசு தரப்போகின்றோம்" என்று கூற,

குழந்தைகள் இருவரும் தயவுசெய்து அது என்ன பரிசு என்று ... சொல்லுங்கள் அப்பா? என்று கேட்க

"அது வந்து..... அதுவந்து..... நீங்கள் எதிர்பார்த்த தாத்தாவையும், பாட்டியையும் உங்களுத் தரப் போகின்றோம்".

"உண்மையாகவா? தாத்தாவும், பாட்டியுமா? அவங்க தினம் தினம் எங்களுக்கு கதை சொல்லுவாங்களா ?" என்று கேட்ட அனுவிடம்.

"நிச்சயமாக தாத்தாவும் பாட்டியும் நெறைய கதை சொல்லுவாங்க. இன்னும் பத்து நிமிடத்தில் அவங்களை நீங்க பாக்கப் போறீங்க"

"அவங்க எங்க இருக்காங்க அப்பா ? .... நம்ம அடுக்குமாடி குடியிருப்பிலா ?

"இல்லை... அவங்க இந்தியாவில் இருக்காங்க"

"என்னப்பா சொல்றீங்க?"

"நீங்க இப்ப கணினித்திரையில் முகம் பார்த்துப் அவர்களுடன் பேசலாம்"

"அப்படியா!"

"சில நாட்களில் நாம் எல்லோரும் இந்தியா போய் அங்கேயே குடியேறிவிடலாம்."

"மிக்க மகிழ்ச்சி அப்பா" என்று கூறிய அனு சத்யவானுக்கு ஒரு முத்தம் கொடுத்தவுடன், சிறுவன் துருவும் தந்தையின் மடியில் அமர்ந்து அவருக்கு முத்தமிட்டான். "உங்களுடைய அம்மாவுக்கும் நன்றி சொல்லுங்க, அவங்க முயற்சியும் சம்மதமும்தான்

dentiSpike.ai

High ROI, High Growth!
Invest in Dental Software (SaaS)

Scan Me
For More Info

Dr. Kumar T. Vadivel, DDS, MS, MBA, FDSRCS
https://dentispike.ai

இதில் முக்கியமாக இருந்தது. சரி நீங்க உங்களுடைய தாத்தாவையும் பாட்டியையும் பார்த்து பேசலாம்" என்று கூறி கணினியை இயக்கியவுடன் அந்த அன்புத் தம்பதிகள் கணினித் திரையில் தோன்றவே அனுவும், சிறுவன் துருவும் அவனுடைய அம்மா கூறியிருந்தபடி இரு கைகளையும் கூப்பி அவர்களுக்கு வணக்கம் தெரிவித்தனர். அந்த பெற்றோர்கள் நெகிழ்ந்து போனார்கள். சிறுமியும், சிறுவனும், 'தாத்தா, பாட்டி' என்று கூறிய சொற்கள் அவர்களுடைய காதுகளில் தேனாகப் பாய்ந்தது. அவர்கள் மீண்டும் மறு பிறவி எடுத்ததைப் போன்று உணர்ந்தனர்.

குழந்தைகள் தாத்தாபாட்டிக்கு திரையில் முத்தமழை பொழிந்தனர்.

"தாத்தா நீங்க நிறைய கதை சொல்லுவீங்களா?" என்று கேட்ட அனுவிடம் "நிச்சயமா ... நெறைய கதை சொல்லுவேன் செல்லம். நீங்க சீக்கிரம் நம்மூருக்கு வாங்க. "

"கூடிய சீக்கிரம் இந்தியா வந்துவிடுவோம் தாத்தா, அப்பா சொல்லியிருக்காங்க. . பாட்டி..... பாட்டி..... உங்க பேரு என்ன" என்று கேட்க "என் பெயர் தேவகி" என்று கூற..... "அருமையான பெயர் பாட்டி. தாத்தா பேரு என்ன?" "அத நாஞ் சொல்லக்கூடாது கண்ணு".

"எனக்கு அவர் பெயர் தெரியுமே பாட்டி..... அவர் பெயரு வாசுதேவ். அப்பா சொல்லியிருக்காரு" என்று சிரிப்புடன் கூறி மகிழ்ந்தாள். பின்னர் தாங்கள் வரைந்த படங்களையும், வாங்கிய பதக்கங்களையும் காட்டி மகிழ்ந்தனர். அந்த பெரியவர்களும் மகிழ்ச்சியில் திளைத்தனர்.

அடுத்து வந்த நாட்களில் அவர்களுடைய இரவுப் பொழுதில் (அதாவது அமெரிக்காவில் இரவானால் இந்தியாவில் அதிகாலையாக இருக்கும்) அடிக்கடி கணினித் திரையில் பேசி மகிழ்ந்தனர். சத்யவான், சாவித்திரி தம்பதியர் தங்களுடைய இந்தியப் பயணத்திற்குத் தயாராகினர். தங்களைப் பெறாமலேயே, தங்களுக்கு பெற்றோர்களான அந்த பெரியவர்களின் உருவங்களில் அவர்களுடைய அம்மா, அப்பாவைக் கண்டனர். அந்த பெற்றோர் களுடன் வசிக்கும் இனிய நாளை எதிர்நோக்கிக் காத்திருந்தனர்.

- முற்றும் -

கலைஞர்

கார்த்திக்
பாலசுப்பிரமணியன்

மெய் எழுத்துக்கள் சிந்திய ஈரத்தில்
தமிழ்த்தாய் ஈன்றெடுத்த
உயிரெழுத்து எங்கள் கலைஞர்

தமிழ்க் காற்றை சுவாசித்து
வடகிழக்கு பருவ மழையாய் தமிழின் ஈரத்தை
தமிழர்களிடையே சேர்த்த மாமனிதர்

இவர் எழுதுகோல் ஒவ்வொரு முறை தலைகுனியும் போது
தமிழினமும் தமிழ்நாடும் தலைநிமிரச் செய்தவர்!

எழுத்தால் முரசொலி கொட்டி
சொல்லால் தமிழர்களைக் கட்டி
பொருளால் இல்லாதவர்க்கு ஈட்டி
யாப்பாய் தமிழ்க் கவிதைகளைச் சொட்டி
அணியாய் ஐம்பெருங்காப்பியங்கள் மாட்டி
நடமாடிய தமிழ் இலக்கணம் நீ...

தமிழில் உள்ள உயிரும் நீ மெய்யும் நீ!
தமிழர்களுக்கும் உயிர் நீ மெய்யும் நீ!!!

தமிழ், கலைஞர் – ஒரு பொருள் தரும் இரு வார்த்தைகள்
வார்த்தையால் தொடர்ந்து வராது, அதனால்
வாழ்க்கையில் தமிழோடு தொடர்ந்து வந்த
அடுக்குத்தொடரும், இரட்டைக்கிளவியும் நீ...
பிரித்துப் பார்த்தால் பொருளும் இல்லை
பிரித்து வைத்தல் நியாயம் இல்லை...

தமிழ் வாழும் வரை எங்கள் கலைஞரும் வாழ்வார்...

◆

SAKTHI®
MASALA

If you love cooking,
you will love Sakthi Masala

47 YEARS TRUST & SERVICE

Best Choice for Indian Cooking - Choose it, Use it

• Sakthi Spice Powders • Sakthi Curry Powders • Sakthi Pickles
• Sakthi Bajji Bonda Powder • Sakthi Ragi Flour • Sakthi Bengalgram Flour

SAKTHI MASALA PRIVATE LIMITED

CIN: U15499TZ1997PTC008000
No: 6, Mamarathupalayam, Erode -638004, Tamil Nadu, India.
+91 424 2533601 sakthidsanthi@gmail.com
www.sakthimasala.com

சூதாட்டம்

முத்துக்குமார் B.B.A., DTP, உத்தமபாளையம், தமிழ் நாடு

ஆசிரியர் குறிப்பு: இக்கதையில் வரும் பெயர்களும் நிகழ்வுகளும் கற்பனையே!

முத்துக்குமார்

தாமோதரன் பெரிய விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர். சாதி நாட்டாண்மை, மிகவும் பண்பாளர். தனது சமூகத்தார்களின் வீட்டில் ஏதேனும் பிரச்சனை என்றால் தன்னால் முடிந்தவரை தலையிட்டு பிரச்சனை களைப் பேசி முடித்து சுமூகமான வாழ்க்கைக்கு வழி செய்து வைப்பார். அவருக்கு மூன்று பெண்குழந்தைகள் ஒரு ஆண் மகன். அவருடன் உடன் பிறந்தவர்கள் நான்கு ஆண்கள். அவர்களில் மூத்தவர், சாதி நாட்டாண்மை பொறுப்பை தனது அப்பா காலத்திற்குப் பின்பு சிறப்பாகச் செய்து, தனது சமூகத்தாருக்குள் ஒற்றுமையை நிலைநாட்டியவர். ஒரு சில காரணங்களால் அகால மரணம் அடைந்தார். இந்நிலையில் சாதி நாட்டாண்மை பொறுப்பு, அடுத்து வயதில் மூத்தவர் என்ற முறையில் தாமோதரனுக்குக் கிடைத்தது.

தாமோதரனுக்கு ஏல விவசாயம் மற்றும் காடு, தோட்டம், வயல் என்று ஏராளமான சொத்துகள் இருந்தது. தாமோரனுக்குச் சூதாட்டப் பழக்கம் இருந்தது. இதன் காரணமாக பக்கத்து ஊரில் உள்ள மனமகிழ் மன்றத்தில் உறுப்பினராக இருந்து தனது குடும்பத்தொழிலான விவசாயம் பார்த்த நேரம் போக, காலை மாலை இரு நேரமும் பக்கத்து ஊரில் மனமகிழ் மன்றத்தில் தனது இளமைக் காலத்தில் ஒரு பகுதியைச் செலவிட்டார். இதனால்பலபெரியகுடும்பத்தார்களின் நட்பு கிட்டியது. அவர்களும் பெரிய விவசாயக்குடும்பத்தில் பிறந்தவர்கள்; காலை மாலை பொழுதுபோக்கு அவர்களுக்கும் வழக்கமானது. இதனால் தாமோதரனுக்கு பெரிய வீட்டுப் பிள்ளைகளின் தொடர்பு ஏற்பட்டது. தாமோதரனும் ஊரில் அதிக நபர்களுக்குத் தெரிந்தவராக இருந்தார். தன்னை நாடி வருவோருக்கு பெரிய இடத்துச் சிபாரிசுகளுக்கு தன்னை தயார் செய்துகொண்டார். இதனால் அவர் மேலும் ஊருக்குள் அதிக பிரபலமானார். அவருடைய வீட்டுக்கு யார் வந்தாலும் அவர்களுக்கு உபசரிப்பு நன்றாக இருக்கும்.

இவரின் மகன் பெரிய பிரபலமான கான்வென்ட் பள்ளியில் பயின்றவர். அதைத் தொடர்ந்து பெரிய முன்னணி கல்லூரியில் பயின்றவர். மற்ற 3 பெண்குழந்தைகளில் முத்த பிள்ளையைத் தவிர்த்து மற்ற இரண்டு பெண் பிள்ளைகளும் பட்டதாரிகள்.

தாமோதரன் தன் பிள்ளைகள் விசயத்தில் எதிர்கால

முன்னேற்றம் எதையும் கவனிக்காமல் தனது வாழ்க்கை மற்றும் நிகழ்கால பெயர் புகழ்களில் வாழ்க்கையை நடத்துவதில் கவனம் செலுத்தி விட்டார். இதன் விளைவாக விவசாயத்தில் பெரிய வருமான இல்லாமல் போகவே அவரின் வாழ்க்கையில் ஒரு சரிவு ஏற்படத் தொடங்கியது. ஒரு காலத்தில் விவசாயம் செய்தவர்கள் பெரிய மனிதர்களாகக் கருதப்பட்டனர். பின்வரும் நாளில் தன் குழந்தைகளை அதிகமாக படிக்க வைத்தவர்கள் மட்டுமே தன்னை காப்பாற்றிக் கொண்டார்கள் என்பதை அவரால் அறிந்து கொள்ள முடியவில்லை.

தாமோதரனுக்குப் பிடிவாதம் அதிகம். இதனால் அவர் பெற்ற பிள்ளைகள் அவரிடம் பாசமில்லாமல் சற்று தள்ளி வளர ஆரம்பித்துவிட்டனர். பிள்ளைகளின் கல்யாண காலம் வந்த போது தனது மூத்தமகள் திருமணத்திற்கு பெரிய செலவு செய்து சொந்தத்தில் முடித்து வைத்தார். மற்ற இரண்டு பெண் பிள்ளைகள் மற்றும் ஆண் பிள்ளையின் வாழ்க்கையைக் கவனிக்காமல் இருந்து விடுகிறார். பருவமழை பொய்த்த காலங்களில் விவசாயம் செய்யமுடியாமல் வீட்டுச் செலவுகளைச் சமாளிக்க முடியாமல் சில சொத்துகளை அடமானம்வைத்து கடன் பெற்று தாமோதரன் வாழ்க்கையை நடத்துகிறார். ஒரு நிலையில் தான் வாங்கிய கடன்களைக் கட்டமுடியாமல் வட்டி அதிகமாகி தனது வீட்டையும் அடமானம் வைத்துவிடுகிறார். மேலும் மேலும் கடன் ஏற அவரால் சமாளிக்க முடியாமல் அனைத்து சொத்துக்களையும் விற்றுவிட்டு பெரிய வீட்டுக் காரர்கள் விவசாயம் பார்க்க இடம் கொடுத்ததை மட்டும் வைத்து தன்னுடைய வாழ்க்கையை நடத்துகிறார். இருப்பிடத்திற்கு வாடகை வீட்டிற்கு சென்று விடுகிறார். கடைசியாக வெங்காயம் சாகுபடி செய்ததில் கொஞ்சம் பணம் வந்தது. அந்தப் பணத்தில் தான் வாங்கிய ஒரு சில கடன்களை அடைத்துவிட, அடுத்த சாகுபடிக்கு விதை வாங்கக்கூட பணம் இல்லாமல் போய்விடுகிறது. அப்போது தான் இனி விவசாயம் செய்ய இயலாது என்பதை உணருகிறார்.

அவருக்கு வயதும் அதிகம் ஆகிவிட்டதும் ஒரு காரணம். இப்போது தன் மகனை அழைத்து விவசாயத்தைப் பார்க்க சொல்லுகிறார். ஆனால் மகனோ, அப்பா விவசாயத்தைப் பார்த்துக்கொண்ட காலத்தில் மறந்தும்கூட தனது சொத்து இருக்கும் இடத்திற்குச் சென்றது கிடையாது. எனவே தன்னால் விவசாயம் பார்க்க முடியாது என்று கூறிவிடுகிறார். தாமோதரன் தன் பிள்ளை தன்னை மதிக்கவில்லை என்ற ஏக்கத்தில் தனது வயோதிக காலத்தைக் கடத்துகிறார். இப்போது பெண்களின் நிலைமை, அவர்கள் கற்றுக்கொண்ட கல்வியின் பயனாக தனியார் பள்ளிகளில் ஆசிரியைகளாக பணியாற்றுகின்றார்கள். அவர்களின் வருமானத்தில் சிலகாலங்கள் நகர்கிறது. தாமோதரனின் மனைவியோ வீட்டு வேலை பார்த்தே நொந்தவர். அவருக்கும் பெரிய உலக அனுபவம் கிடையாது. காலங்கள் கடந்து சென்ற போது இரண்டாவது மகளின் திருமணம் ஏற்பாடுகளை அவரின் அண்ணன் மகன் ஏற்பாடு செய்கின்றார். ஆனால் தாமோதரன் தன் குடும்ப வாழ்க்கையில் அண்ணன் மகன் தலையிடுவதில் விருப்பமில்லாமல் கண்டித்து விடுகிறார். ஆனாலும் அண்ணன் மகனின் உதவியால் இரண்டாவது மகளின் திருமணம் நடைபெறுகிறது.

இரண்டாவது மகளின் திருமணத்திற்குப் பின் வருமானத்திற்கு வழியில்லாமல் தாமோதரன் குடும்பம் பெரும் பிரச்சனைகளை அனுபவிக்கின்றது. இருந்த கொஞ்ச இடங்களில் விவசாயம் பார்த்ததும் முடிந்து விடுகிறது. மிகவும் மோசமான நிலைக்குத்

தள்ளப்படுகிறார். காரணம், விவசாயத்தில் பெரிய வருமானம் இல்லை என்பதைச் சிந்திக்காததால். தாமோதரனின் மனைவி நோய்வாய்ப்பட்டு இறந்து விடுகிறார். மேலும் தாமோதரனின் வருமானம் குறைந்து விடுகிறது. இப்போது மூன்றாவது மகளின் திருமணம் ஏற்பாடு நடைபெறுகிறது. அப்போதும் தாமோதரனின் அண்ணன் மகன் உதவியால் நடைபெறுகிறது. தனது இயலாமையை நினைத்து தாமோதரன் அண்ணன் மகனிடம் நேரடியாகவே தன் குடும்ப பொருளாதாரத்தை மனதில் வைத்துத் திட்டிவிடுகிறார். இப்போது தாமோதரனின் அண்ணன் மகனுக்கு தர்மசங்கடம் ஏற்பட்டு விடுகிறது. இருந்தபோதிலும் அவரின் கடுமையான முயற்சியால் மூன்றாவது மகளின் திருமணம் நடைபெறுகிறது.

தாமோதரன் தன் பொருளாதார குறைவு காரணமாகவும், தன் மகன் வேலைக்குச் செல்லாததாலும் தன் மூத்தமகளின் இருப்பிடத்தில் வசிக்க ஏற்பாடு செய்து, ஊரை விட்டுச் செல்ல நேரிடுகிறது. அவரின் மனம் அதை ஏற்கவில்லை. ஆனாலும் குடும்பச் சூழல் காரணமாக தன் மூத்த மகளின் வீட்டில் இருக்க வேண்டிய நிலையில் சென்று விடுகிறார். அவருடைய மகன் தற்போது வேலைக்குச் செல்ல ஏற்பாடாகி வேலைக்கும் சென்று விடுகிறார். மகனுக்கு தற்போது வயது அதிகம் என்பதால் திருமணம் நடைபெறாமல் வாழ்க்கை நகர்கிறது. தற்போது தனது குடும்பத்தைப் பற்றி நினைத்துப் பார்க்கிறார். இழந்தவைகள் நிறைய. சாதனை குறைவு. தன் பெற்ற பிள்ளைகளைக் கவனிக்காமல் தனது மகனையும் தவிக்க விட்டுவிட்டோமே என்கிற கவலை.

குடும்பத்தில் மூத்தவர் என்ற முறையில் உடன் பிறப்புகளையும் சரியாகக் கவனிக்காததால் அவர்களும் இவரை மதிக்காமல் கோபத்தில் கடைசித் தம்பி தன்னுடைய மகளின் திருமணத்திற்கு அழைக்காமல் விட்டுவிடுகிறார். இது மிகவும் வருத்தத்தை உண்டாக்கியது. இறுதிக் காலத்தை வருத்தத்திலும் பழைய கசப்பான நினைவுகளுடனும் தனது மூத்த மகளுக்கு இடையூறு கொடுக்கின்றோமே என்ற வருத்தத்திலும் சூதாட்டம் தன் வாழ்க்கையை இப்படி மாற்றிவிட்டதே என்று நொந்து வாழ்க்கையை நடத்துகிறார்.

எதிர்கால குடும்பச் சூழலைக் கருத்தில் கொள்ளாமல் சூதாட்டம் மற்றும் நகர்வலம் என்று தனது வாழ்கையை இழந்துவிட்டுத் தவிக்கும் தாமோதரன் போன்றவர்களின் வாழ்க்கை, நாம் எப்படி வாழக்கூடாது என்பதற்கு ஒரு உதாரணமாக அமைந்துவிட்டது.

◆

தொல்காப்பிய உரை

சங்கத்தமிழ்', 'தொல்காப்பிய உரை', 'இனியவை இருபது', 'கலைஞரின் கவிதை மழை' உட்பட 150-க்கும் மேலான நூல்களை கருணாநிதி எழுதியிருக்கிறார். தொல்காப்பியத்திற்கு விளக்க உரையாக எழுதிய நூல் தொல்காப்பியப் பூங்கா ஆகும். 'நெஞ்சுக்கு நீதி' என்ற தலைப்பில் தன் வாழ்க்கை வரலாற்றை முரசொலி மற்றும் குங்குமம் இதழில் எழுதினார் கருணாநிதி. கலைஞர் கைவண்ணத்தில் - "மதத்தில் புரட்சி செய்த மகான் - ராமானுஜர்" என்ற தொலைக்காட்சித் தொடர் ஒளிபரப்பானது.

மனோன்மணியம் சுந்தரம் பிள்ளை எழுதிய "நீராடும் கடலுடுத்த" பாடலை தமிழ்த்தாய் வாழ்த்தாக அரசு விழாக்களில் பாடும் வழக்கத்தை 1970ல் கருணாநிதி ஏற்படுத்தினார். முதன் முதலாக திரைப்பட விருது வழங்கும் விழாவில் இந்தப் பாடல் பாடப்பட்டது.

Sharing Success with **Community**

At Thriveni, inherent to our success, is the success and progress of the communities that we operate in. We recognize that working with local communities and securing their approval is an integral component of sustainable growth. Our initiatives include improving social infrastructure, upskilling individuals, creating job opportunities and providing healthcare. In short, we do whatever it takes to ensure that we are truly deserving of the goodwill that our local communities bestow upon us.

Skill Development and Employment

Thriveni offers a diverse range of training programs, encompassing security, driving, simulator-based training etc. company has established dedicated facilities, including a Security Academy for garments and footwear units

Women Empowerment

India's first team of 12 tribal women, formerly auto-rickshaw drivers, have been certified to operate 100-tonne dumper trucks at our coal mine. Additionally, women are working as security guard, drivers and inspiring others.

Healthcare

Thriveni ensures medical and health facilities around its all operations. It is currently running across 4 states and already treated more than 150 thousand patients. Separately a 100-bed modern multispecialty hospital is currently in construction.

Education

Thriveni supports Early Childhood Care & Education by attending the needs around its project site. Thriveni is also setting up a CBSE boarding school for 600 students and empowering 200 tribal women through literacy efforts.

Infrastructure Development

Thriveni has introduced various initiatives in the Infrastructure front, like providing drinking water, initiating road project activities, and building bridges.

CSR is not a choice we make;
it is a commitment we live by

www.thriveni.com

NO.1
Sangam
CHETTINAD
INDIAN CUISINE & BAR
South Indian Chettinad Restaurant
in Austin
6001 W Parmer Ln #140, Austin TX 78727
512 - 770 - 1104
www.sangamchettinad.com
SANGAM
CHETTINAD INDIAN CUISINE

இந்தியாவின் அழைப்பு

– பாரதியார்

வேண்டுகோள்!

அன்பிற் கினிய இந்தியா! அகில
மதங்கள், நாடுகள், மாந்தருக் கெல்லாம்
தாயே! எங்கள் உணர்வினைத் தூண்டிய
சேய் நெடுங் காலத்தின் முன்னே சிறந்தொளிர்
குருக்களை யளித்துக் குவலயங் காத்தனை.

திருக்கிளர் தெய்வப் பிறப்பினர் பலரை
உலகினுக் களித்தாய். உனதொளி ஞானம்
இலகிட நீயிங் கெழுந் தருளுகவே!
விடுதலை பெறநாம் வேண்டிநின் மறைவு
படுமணி முகத்தைத் திறந்தெம் பார்வைமுன்,

வருக நீ! இங்குள மானுடச் சாதிகள்
பொருகளந் தவிர்ந்தமை வுற்றிடப் புரிக நீ!
மற்றவர் பகைமையை அன்பினால் வாட்டுக!
செற்றவர் படைகளை மனையிடந் திருப்புக!
தாயே, நின்றன் பண்டைத் தநயராம்

மாயக் கண்ணன், புத்தன், வலிய சீர்
இராமனும், ஆங்கொரு மஹமது மினையுற்ற
விராவுபுகழ் வீரரை வேண்டுதும் இந்நாள்!
“தோன்றினேன்” என்று சொல்லி வந்தருளும்
சான்றோன் ஒருமுனி தருகநீ எமக்கே!

மோசே, கிறிஸ்து, நானக் முதலியோர்
மாசற வணங்கி மக்கள் போற்றிடத்
தவித்திடுந் திறத்தினர் தமைப் போலின்றொரு
பவித்திர மகனைப் பயந்தருள் புரிக நீ!
எம்முன் வந்து நீதியின் இயலைச்
செம்மையுற விளக்குமொரு சேவகனை அருளுக நீ.

உத்தரம்

கேள்! விடை கூறினள் மாதா! நம்மிடை
யாவனே யிங்கு தோன்றினன்? இவன் யார்?

உலகப் புரட்டர் தந்திர உரையெலாம்
விலகத் தாய்சொல் விதியினைக் காட்டுவான்.

மலிவு செய்யாமை; மனப்பகை யின்மை;
நலிவுறுத்தோரை நாம் எதிர்த்திடாமை;
தீச்செயல் செய்யும் அரசினைச் சேராமை;
ஆச்சரியப்பட உரைத்தனன் -- அவையெலாம்.
வருக காந்தி! ஆசியா வாழ்கவே!

தரும விதிதான் தழைத்திட உழைப்பாய்.
ஆன்மா அதனால் ஜீவனை யாண்டு
மேனெறிப் படுத்தும் விதத்தினை யருளினாய்!
பாரத நாட்டின் பழம்பெருங் கடவுளர்
வீரவாள் கொடியை விரித்துநீ நிறுத்தினாய்!

மானுடர் தம்மை வருத்திடும் தடைகள்
ஆனவை யுருகி அழிந்திடும் வண்ணம்
உளத்தினை நீ கனல் உறுத்துவாய்! எங்கள்
காந்தி மஹாத்மா! நின்பாற் கண்டனம்!
மாந்தருட் காண நாம் விரும்பிய மனிதனை!

நின்வாய்ச் சொல்லில், நீதி சேர் அன்னை
தன்வாய்ச் சொல்லினைக் கேட்கின்றனம் யாம்
தொழுந்தா யழைப்பிற் கிணங்கி வந்தோம்யாம்
எழுந்தோம்; காந்திக் கீந்தோம் எமதுயிர்.
இங்கவன் ஆவிக் கொள்கை வென்றிடவே.

அன்றைக் குணவுதான் அகப்படு மாயின்
நன்றதில் மகிழ்வோம்; விடுதலை நாடி
எய்திடுஞ் செல்வ எழுச்சியிற் களிப்போம்;
மெய்திக ழொற்றுமை மேவுவோம்; உளத்தே
கட்டின்றி வாழ்வோம்; புறத்தளைக் கட்டினை

எட்டுணை மதியா தேறுவோம்; பழம்போர்க்
கொலைத் தொழிற் கருவிகள் கொள்ளா தென்றும்
நிலைத்தன ஆகிய நீதிக் கருவியும்
அறிவும் கொண்டே அரும்போர் புரிவோம்;
வறியபுன் சிறைகளில் வாடினும்; உடலை

மடிய விதிப்பினும்; “மீட்டு நாம் வாழ்வோம்” என்று
இடியுறக் கூறி வெற்றி ஏறி,
ஓடிபடத் தளைகள், ஓங்குதும் யாமே.

பாரதியின் கடைசிக் கவிதை இதுவாகும்.
அமெரிக்கக் கவிதாயினி செய்த மூலக்கவிதை
கண்டுபிடிப்பு: முனைவர் நா. கணேசன், ஹூஸ்டன்

INDIA'S ROLL CALL

Maude Ralston Sharman

Dear India, thou Mother of nations, creeds and men,
Who gave the world religion in days beyond our ken,
Who sent thy blessed saviours to serve in every clime,
And raised up peerless Walis and Gurus for all time:
Come forth, reveal thy wisdom, unveil that hidden face
We need for our salvation, thy features we would trace,
Come forth unto the nations and settle their disputes,
With love rebuke their hatred, reclaim their war-recuits.

We need such men as Krishna, Mohammed, Buddha, Ram,
We ask, some mighty Rishi may answer: "Here I am"
Some Moses, Jesus, Nanak, men hunger to adore,
Hark! do we hear the answer, who is it in our midst
Confounding worldly councils with the simple words Thou bidst?
Who preaches non-resistance, non-violence, non-hate,
While ceasing to co-operate with a degenerate state?

Hail Gandhi! soul of Asia, who works for Dharma's rule
And calls upon a Higher Self, man's lower self to school,
Who raises high the standard of India's Avatars
That shine in matchless splendour from a galaxy of stars,
Who wakens the discernment, and sets aflame the heart
To melt and fuse those differences that keep mankind apart:
In thee, Mahatma Gandhi, we find the man we seek,
Through thee, the Mother answers, we hear "All-India" speak.

We answer to the Roll Call, arise upon our feet,
And pledge ourselves to Gandhi, his life-work to complete,
Elect to be sufficient to meet our daily needs,
And throne a reign of plenty where Independence leads;
United, free in spirit, we move despite our chains,
And wield for war's blunt weapons, fine moral force and brains:
And though we're bound in dungeons, our bodies doomed to die,
Unshackled and triumphant, "We'll live again," we cry.

வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையின் 37 ஆவது தமிழ் விழா சிறக்க வாழ்த்துகள்!

பிரகாஷ் இராசப்பன், வெற்றிச்செல்வி பிரகாஷ்
சஷாங்க் பிரகாஷ், சஹானா பிரகாஷ்

வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையின் 37 ஆவது தமிழ் விழா சிறக்க வாழ்த்துகள்!

பாலாஜி மூர்த்தி குடும்பத்தினர்

ஒரு பேரரசனின் கனவு

காஞ்சனா பக்தவத்சலம், அமெரிக்கா

காஞ்சனா பக்தவத்சலம்

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்பது திருவள்ளுவரின் வாக்கு. எல்லா உயிர்களையும் சமமாகப் பார்க்கும் குணம் தெய்வத்திற்கே உரியது. மனதளவில் இதை உணர்ந்த மனிதர்களைச் சான்றோர் என்பர். நாடு, மொழி, வாழ்க்கை முறை, தொழில் என்று பல வேறுபாடுகள் மனிதர்களிடையே இருக்கும் போதிலும், நம்மையெல்லாம் ஒருங்கிணைக்கும் சக்தி வாய்ந்த கோட்பாடு ஒன்று உண்டு. அது தான் மனித நேயம் என்னும் கோட்பாடு. இதை நமக்கு என்றும் தவறாமல் வலியுறுத்திய தமிழ்ச் சான்றோர்கள் பலர். மனித நேயத்தை அடிப்படையாகக் கொண்ட எந்த ஒரு காலச் சமூகமும் பாலின சமத்துவத்தையும் உள்ளடக்கியதாகவே தான் இருந்திருக்க வேண்டும். இதை நமக்கு நினைவுபடுத்தும் நிகழ்வுகள் தமிழர் வரலாற்றில் பல. அவற்றில் ஒன்றைப் பற்றிய வரைவு இது.

தமிழர் வரலாறானது படிப்பவர்களை மீண்டும் மீண்டும் வியப்பில் ஆழ்த்தி, அதன் செழுமையான பாரம்பரியத்தில் நம்மை மெய்மறந்து மிதக்கச் செய்யும் ஒரு மாயநதி போன்றது. தம் நாடும் காடும் செழிக்கவும், தம் மக்கள் என்றும் யாரிடமும் அடிமையாய் இருக்கக்கூடாது என்பதற்காகப் போரிட்ட பேரரசர்கள் பலர். அப்படிப்பட்ட ஒரு அரசனான, முதலாம் சடையவர்மன் சுந்தர பாண்டியன் என்னும் அரசனின் கதை இது. 12-ஆம் நூற்றாண்டின் இடைப் பட்ட காலத்தில், தமிழகத்தின் தென் பகுதியில் பாண்டிய நாட்டிற்கு அரசனாக முடிசூடினான் சுந்தர பாண்டியன். முடிசூடிய உடன் போர்த் திட்டங்கள் பல வகுத்து, பின் அவற்றை நிறைவேற்ற தன் வாழ்வில் ஒரு பயணம் மேற்கொண்டான் அரசன்.

தென்னாட்டில் போர்கள் பல வென்றான். அந்த வெற்றிகளைத் தொடர்ந்து வடதிசையை நோக்கிய பயணத்தை தனது வீரர்களுடன் மேற்கொண்டான் சுந்தரபாண்டியன். சூரியனின் கடைசி கதிரொலிகள் ஒளிர்விடும் ஒரு தாமிரக் கயிற்றால் மேகத்தின் விளிம்புகளை அலங்கரித்து வைத்தது போலிருந்தது அந்தி வானம். அந்த மாலை நேரத்திலே, சுந்தரபாண்டியனும் அவன் வீரர்களும் மான்கள் துள்ளி விளையாடும் சோலையொன்றின் வழியே வந்து கொண்டிருந்தனர். அவர்கள் முன்னே செல்லச் செல்ல, பறவைகளின் கீச்சொலியும், நீரோடையின் சலசலப்பும் அவர்கள்

காதிற்கு இனிதாய் ஒலித்தது. வீசும் காற்றில் சேர்ந்து வந்த முல்லைக்கொடி வாசத்தில் திளைத்தவண்ணம் வந்து கொண்டிருந்த வீரர்கள் விரைவில் கிருஷ்ணா நதிக்கரையை வந்தடைந்தனர்.

நதிக்கரையிலே சற்று முன் பெய்த மழையின் துளிகளைத் தாங்கி நின்ற புல்வெளியில் தன் வெற்றுப்பாதம் பதித்த மறுகணமே போரிடும் எண்ணம் மாறியிருக்கும் சுந்தரபாண்டியனுக்கு. ஆனால் அவனோ எதிரி நாட்டு அரசனைப் பற்றிய விவரங்கள் அறிந்து வர ஊருக்குள் சென்ற வீரனை எதிர்பார்த்து நதிக்கரையில் காத்திருந்தான். ஒருபுறம் நதியில் நீரருந்தும் மான் கூட்டத்தையும், மறுபுறம் நதிக்கரையில் தோகை விரித்தாடும் வெள்ளை மயிலையும் ரசித்தபடி காத்திருந்தான். நதிக்கரையில் அவன் கண்ட காட்சிகள் அவன் மனதின் கனத்தைக் குறைப்பதாக இருந்தது. பேரரசன் இந்த பயணத்தைத் தொடங்கி ஏறத்தாழ பத்து ஆண்டுகள் ஆகிவிட்ட நிலையில் இன்று இந்த நதிக்கரையில் வந்து நிற்கிறான். அவன் எண்ணமோ நிலை கொள்ளவில்லை. அரண்மனையை விட்டுப் புறப்பட்ட போது, சிறுவனாக அவன் விட்டு வந்த அவன் மகனை எண்ணி அலைபாய்ந்தது அவன் நெஞ்சம். தன் தோளுக்கு மேல் வளர்ந்திருப்பான் இளவரசன் என்று எண்ணிக் கொண்டான் அரசன். ஒரு சில நிமிடங்களில் செய்தி வந்தது. தான் போர் செய்து வெல்ல நினைத்த அரசன் இறந்து விட்டதையும், அவன் மகள் அவர்கள் நாட்டை ஆள்வதையும் அறிந்து கொள்கிறான் சுந்தர பாண்டியன். அப்போதே போரிடும் எண்ணத்தைக் கைவிட்டான் சுந்தர பாண்டியன். அச்செய்தியை ஓலையாக வடித்து, தன் தம்பி விக்கிரம பாண்டியனுக்கு அனுப்புகிறான். தன் படைகளைத் திருப்பி, தன் நாட்டை நோக்கியப் பயணத்தைத் தொடங்கினான் அரசன்.

சுந்தரபாண்டியன் தன் நாட்டை நோக்கியப் பயணத்தின் வழியில் இன்னும் சில போர்கள் மேற்கொண்டான். அவன் தன் நாட்டை வந்தடையும் முன், அவன் அனுப்பிய செய்தி விக்கிரம பாண்டியனை வந்தடைந்தது.

வெங்கண் மதயானை விக்கிரம பாண்டியனே
பொங்கி வடதிசையிற் போகாதே--யங்கிருப்பாள்
பெண்ணென்று மீண்ட பெருமாளே பேரிசையாழ்ப்
பண்ணொன்றும் வேய்வாய் பகை.

இந்த செய்தியைப் படித்த பின் விக்கிரம பாண்டியனுக்கு அவன் மகிழ்ச்சியைச் சொல்ல வார்த்தைகளே இல்லை. தன் அண்ணன் சுந்தர பாண்டியன் நாடு திரும்புகிறான் என்ற மகிழ்ச்சி ஒரு புறம் இருக்க, அவன் அனுப்பிய பாடலில் சுந்தர பாண்டியன் கூறியிருந்ததை எண்ணிப் பெருமிதம் கொண்டான். அந்த பாடலில், "சினத்தினால் சிவந்த கண்கள் கொண்ட மதம் கொண்ட யானை போன்ற பலம் கொண்ட விக்கிரம பாண்டியனே, நீ ஒரு போதும் உன் சினத்தின் காரணத்தால் வடதிசை நோக்கிச் சென்று விடாதே. அங்கு பெண் அரசாள்கிறாள். இதை ஊரறி யும் படி பாடல் ஒன்று வடித்துவிடு, பகை மட்டும் வைத்துக் கொள்ளாதே," என்கிறான் பேரரசன். இந்த செய்தியை ஊருக்குச் சொல்ல இதை விட சிறந்த பாடல் வேண்டுமோ என்று எண்ணினான் விக்கிரம பாண்டியன். இதை கல்வெட்டில் எழுதச் சொன்னான்.

போர் செய்து பகைவர்களை கட்டுக்குள் வைத்திருந்தால் தான் நாட்டின் வளங்களைப் பாதுகாக்க முடியும் என்ற காலகட்டத்தில் கூட நாம் நம் கோட்பாடுகளைக் கைவிடாமல் கட்டிக் காக்க முடியும் என்று உணர்த்தியவன் தமிழன். பெண் அரசாள்வதை ஊரறியச் செய்ய எண்ணிய பேரரசன் பாலின சமத்துவத்தைப் பாராட்டும் ஒரு சமூகத்தை வழி நடத்தும் சான்றோர்களுக்கு எல்லாம் ஒரு முன்னோடியாய் இருக்கிறான். நாம் நம் மனித நேய கோட்பாடுகளை பின்பற்றி அச்சம் தவிர்த்தால் வாழ்வு வளம் பெறும். "அச்சம் தவிர்" என்ற பாரதியின் வாக்கை மனதில் கொண்டு வாழ்வில் வளம் பெறுவோம்.

நன்றி! ◆

நினைவில் நின்றவர்கள்

கருமுத்து தி. கண்ணன் (இறப்பு: மே 23, 2023) என்பவர் மதுரையைச் சேர்ந்த தொழிலதிபரும் கல்வித்துறை முன்னோடியுமாவார்.

எஸ். நீலகண்டன் (19, திசம்பர், 1936- 19, மார்ச், 2023) என்பவர் தமிழ்நாட்டைச் சேர்ந்த வழக்கறிஞர், பொருளியல் அறிஞர், பேராசிரியர், ஆய்வாளர், எழுத்தாளர் ஆவார்.

இலக்கியவீதி இனியவன் (பிறப்பு: லட்சுமிபதி, 20 ஏப்ரல் 1942 - 2 சூலை, 2023) என்பவர் ஒரு தமிழக தமிழ் எழுத்தாளர் ஆவார். இலக்கியவீதி என்ற அமைப்பை ஏற்படுத்தி அதன் வழியாக இலக்கியக் கூட்டங்கள், புத்தக வெளியீடுகள் போன்றவற்றை செய்து இளம் படைப்பாளிகளை ஊக்குவித்து வந்தார்.

மானுட சமத்துவம் கேளீர்!

ஆசாமியை சாமீ! என்றழைத்தான் சாமிக்கண்ணு.
அத்தருணம் ஆசாமியோ, இடைச்சாமியாய் பற்றிக்கொண்டார்.
அச்சாமி உயர்குலமானார், சாமிக்கண்ணு தனியாளானான்.
அவ்வமைப்பு அச்சுறுத்தித்துரத்த சாமிக்கண்ணு சமவாய்ப்பிழந்தான்.

இடைப்பட்டவர் இன்பமாய் இருக்க, இறை/தொழிலை
இடைசொருகி, மனிதம்நோக குலசாதிபேதவர்ணமதம் வடிவமைத்தார்.
சகலகலாவேததர்மம், அரசியல்சமநீதி, இனதேசியம் எல்லாம்பேசி,
சமன்பாடற்ற அறமில்லா, சமூகமுரண் கட்டமைத்தார்.

லோகநாதன்
கணேசன்

இக்கூட்டுவலை பின்னலுக்குள், இடைவெளியில்லா இன்னலுக்குள்,
இடைச்சாமி, சாமிக்கண்ணு, இறுகப்பற்ற வழியேயில்லை.
மதசமத்துவம், இனசமத்துவம், மொழிசமத்துவம், சாதிபற்றறுத்து,
மானுடசமத்துவம் படைக்க, பாலினசமத்துவம் ஏற்போம்.

பொருளாதாரசமத்துவம் சமன்பட, கல்வி/வேலைவாய்ப்பில் சமத்துவம்,
இறையாண்மை இடையூறற்றிருக்க, கருணையில் சமத்துவம்,
உலகசமாதானம் தழைக்க, அணுகுமுறையில் சமத்துவம்,
உலகப்போர் பகையச்சம்தவிர்க்க, உழைப்பில் மகத்துவம்,

உலகமக்கள் அமைதிபெற, அறிந்துணர்ந்து, சாதிக்க,
உயிரறிவை உள்ளுணர்வாய் கற்றுத்தெளிய வேண்டும்.
உயரிய வாழ்க்கைவாழ, தனிமனித ஒழுக்கப்பங்களிப்பு,
உடனடியாய் செயல்பட்டால், சமுதாயத்தில், சமத்துவசமன்பாடு சாத்தியமே!



SAI FOODS N SNACKS

BRINGING JOY IN EVERY BITE

Snack Manufacturing and Catering Services

Our Services

- Live chaat, Dosa and Grill for Parties.
- Corporate Events.
- Thambulam Bags for any Occasion. Banquets, Wedding, Buffets, Showers, Birthday

- Personalized Approach
- Wide Variety and combo Options
- High Quality Service at all events

Contact Us : 214-223-7740, 469-778-0074

Location : 2526, Manana Dr ,104,105 Dallas, Tx-75220

Website : www.AhilUSA.com

எவரும் முன்னேறலாம்

முனைவர் அரசு செல்லையா

முன்னேற வேண்டும் என்னும் ஆசை யாருக்குத்தான் இல்லை. பணத்திலோ, பதவியிலோ, வணிகத்திலோ, உடல் நலத்திலோ, மகிழ்விலோ - போன வாரத்தை விட இந்த வாரத்தில், போன மாதத்தைவிட இந்தமாதத்தில், போன வருடத்தை விட இந்த வருடத்தில் முன்னேற்றமடைய வேண்டுமென்றுதான் எல்லோரும் விரும்புகிறோம். 2016-இல் வெளிவந்த *PEAK* என்ற புத்தகத்தில் அதன் ஆசிரியர்கள் *(Anders Ericsson, Robert Pool)*, எவரும், தாமே எதிர்பாரா வகையில் முன்னேற முடியும் என்பதற்கு பல உதாரணங்களைக் கொண்டு விளக்குகிறார்கள். சரியான இலக்கு, முறையான பயிற்சி, படிப்படியான வளர்ச்சி, சிறந்த வழிகாட்டிகள் இருந்தால், எல்லோராலும் முன்னேற முடியும் என்பதுதான் அந்தப் புத்தகத்தின் சாரம்.

முனைவர் அரசு செல்லையா

பெற்றோர்கள் பிள்ளைகளை வளர்த்து ஆளாக்குகிறார்கள். எனவே அவர்களின் தாக்கம் பிள்ளைகள் வளர்ந்து ஆளாகும்போதும், ஆளான பிறகும் தொடர, பெருமளவில் வாய்ப்பிருக்கிறது. தொடர்ந்து, ஆசிரியர்கள், சூழ்ந்திருக்கும் சமுதாய சூழல், அனுபவங்கள், தான் படிக்கும் புத்தகங்கள், சொந்தமாக முடிவெடுக்கும் திறன் இவற்றைப் பொறுத்து முன்னேற்றம் அமைய வாய்ப்பிருக்கிறது.

வாழ்வில் தானும் உயர்ந்து, சமுதாய முன்னேற்றத்திற்கும் உழைத்து, வழிகாட்டியாகவும் நிறை வாழ்வு வாழ்ந்தவர்கள் பலர் இருக்கிறார்கள். அப்படிப் பட்டவர்கள் இருவரை இக்கட்டுரையில் காண்போம். அவர்கள் என் வாழ்வின் வழிகாட்டிகளாக நேரிட்ட சூழல்களையும், அனுபவங்களையும் உங்களோடு பகிர்வதில் மகிழ்ச்சியடைகிறேன்.

1) தந்தை பெரியார் (1879 -1973)

என் அப்பா, பெரியார் வழி நாத்திகர். என் அம்மா சைவ நெறியில் இறை நம்பிக்கை உடையவர். இருவரும் ஒருவர் நம்பிக்கையை மற்றொருவர் மதித்து நடந்து கொள்வார்கள். இருவருக்குள்ளும், கடவுள் நம்பிக்கை பற்றி விவாதமோ, கசப்பான கருத்து வேறுபாடுகளோ ஒரு போதும் வந்ததில்லை. என் அப்பா அடிக்கடி பெரியார் சொன்னதாகச் சொல்லுவது "கேழ்வரகில் நெய் வடிகிறது என்றால்,

கேட்பவருக்கு மதி எங்கே போகிறது? ஏன் அதை நம்பவேண்டும்?". இந்த சொற்கள் என்னை "பேய் பிசாசு, பில்லி சூனியம், ஐந்து தலை நாகம், தலை எழுத்து, விதி" இவற்றிலெல்லாம் என் சிறு வயதிலேயே நம்பிக்கை இழக்கச் செய்துவிட்டது. ஆனாலும் கடவுள் நம்பிக்கை மட்டும் போகவில்லை. அதிலும் ஐயமூட்டும் வகையில் சம்பவம் ஒன்று நடந்தது. ஒருநாள் எங்கள் கிராமத்தில் சாமி ஊர்வலம் நடந்து கொண்டிருந்தது. அலங்கரிக்கப்பட்ட சாமி சிலையைத் தூக்கி வந்தவர்கள், எங்கள் வீடிருக்கும் பகுதியில் சாமிக்குப் படையல் வாங்கச் சற்று நேரம் நின்றார்கள். அப்போது சற்று தள்ளி நின்றுகொண்டிருந்த என் அப்பா என்னை அருகில் அழைத்து "சாமி சக்தி உள்ளதென்றுதானே எல்லோரும் சொல்கிறார்கள். அப்படியென்றால் சாமிதானே மனிதர்களைத் தூக்கிச் செல்லவேண்டும். ஏன் மனிதர்கள், சாமியைத் தூக்கிச் செல்கிறார்கள்?" என்றார். திகைத்துப் போன நான், சாமி நிச்சயம் என் அப்பா கண்ணைக் குத்தாமல் விடாது என்றே நம்பினேன். இனி அப்பாவிடம் சாமி பற்றியெல்லாம் பேசவே கூடாது, என்று முடிவெடுத்தேன். பெரியார் ஒரு பெரிய கலாட்டா பேர்வழியா இருப்பார் போலிருக்கே. அப்பாவை, எப்படியெல்லாம் மாற்றிவிட்டாரே? என்று கவலை கொள்ளத் துவங்கினேன். என் அம்மாவிடம், பெரியாரைப் பற்றி உங்களுக்குத் தெரியுமா எனக் கேட்டேன். அம்மா, பெரியார் நடத்திய மாநாடுகளுக்கு அப்பாவுடன் சென்றதாகவும், இரண்டு நாட்கள் மாநாடு என்பதால் இரவு மாநாட்டுப் பந்தலிலேயே பெண்களுக்கென்று தனியிடம் ஒதுக்கிப் பாதுகாப்பாகத் தங்கவைக்கப் பட்டதாகவும் சொன்னார். மேலும் பெரியாரே, தடியை ஊன்றி நடந்து வந்து பெண்கள் இருக்கும் பகுதியில், எல்லா வசதிகளும் செய்து தரப்பட்டதா என்பதை உறுதி செய்வார். குழந்தைகளுக்கு ஏற்ற உணவு, பால் கொடுக்கப்பட்டதா என்பதைப் பெண்களிடமே கேட்டறிவார் என்றும் என் அம்மா சொன்னபோது, பெரியார் நல்லவர் போலிருக்கிறது என்று உணரத்துவங்கினேன். பெண்கள் மாநாட்டில் அவருக்கு "பெரியார்" என்ற பட்டம் ஏன் கொடுத்தார்கள் என்று எனக்குப் புரிய ஆரம்பித்தது.

பின்னாளில் பெரியாரைப்பற்றி நான் அறிந்தது, அவர் சாதி ஒழிய பெண்ணடிமை ஒழியப் பாடுபட்டார். தமிழர்கள் தம் பெயருக்குப் பின் இருக்கும் சாதியை விட்டொழிக்க அறைகூவல் விட்டார். அதனால்தான் தமிழர்கள் பெரும்பாலும் சாதியைப் பெயரின் பின் போட்டுக்கொள்வதில்லை. 1925-இலேயே "சுயமரியாதை இயக்கம்" துவங்கினார். இதில் அதிசயம் என்னவென்றால், அமெரிக்காவில் முன்னேற்றச் சிந்தனையாளர்களில் முன்னோடி Dr. Maxwell Maltz என்பவர் 1973-இல் The search for self-respect என்ற புத்தகத்தை வெளியிட்டார். மானுட முன்னேற்றத்துக்குச் சிந்திக்கும் அறிஞர்கள் உலகின் வெவ்வேறு பகுதியில், வெவ்வேறு காலகட்டத்தில் வாழ்ந்தாலும் அவர்கள் சிந்தனையில் ஒற்றுமை இருப்பதை இது உணர்த்துகிறது.

அண்மையில் சிங்கப்பூரில் அறிவியலாளர் மயில்சாமி அண்ணாதுரை நிகழ்த்திய "பெரியாரும் அறிவியலும்" என்ற தலைப்பிலான உரை, பெரியாரின் அறிவியல் பார்வையை எல்லோருக்கும் புரியும் வண்ணம் விளக்கியது. நம் வாழ்வை நாமே தீர்மானிக்கிறோம். மந்திரம் மாயமெல்லாம் கிடையாது என்பதைப் புரிந்ததால்தான் கிராமப்புற இளைஞர்கள் நம்பிக்கையுடன் படித்து உயர் நிலை அடைகிறார்கள். சாதியில் கீழ் மேல் என்பதை மறந்து, சுயமரியாதை கொண்டு முன்னேறுகிறார்கள். பெண்கள், ஆண்களுக்குச் சமம் என்ற உணர்வு கொண்டு, ஆண்டாண்டு காலமாய் இருந்த பெண்ணடிமை நிலையை உடைத்து முன்னேறுகிறார்கள். தந்தை பெரியார் தன் வாழ்வில் பெரும் செல்வந்தராகவும், அரசியல் செல்வாக்கு மற்றும் பதவி, புகழ் பெற்றவராகவும் இருந்தார். அத்தனையையும் விட்டு விட்டு மக்கள் பகுத்தறிவு, சமத்துவம், சுயமரியாதை பெற்று வாழ, 94 வயது வரை உழைத்தார்.

நம் நட்சத்திர மண்டலத்தில் (Milky Way) நம் சூரியனுடன், 40,000 கோடி நட்சத்திரங்கள் இருப்பதாகவும்; நம் பேரண்டத்தில் (Universe) 2 லட்சம் கோடி நட்சத்திர மண்டலங்கள் இருப்பதாகவும் வான்வெளி அறிவியலாளர்கள் தெரிவிக்கிறார்கள். மேலும் நம் பேரண்டத்துக்கும் வெளியில் பல பேரண்டங்கள் இருப்பதாகக் கருதப்படுகிறது. இவற்றை இயக்குவது யார் என்பதை விட, எந்த விதிகள் என்ற கேள்வியே மேலெழுகிறது. அதனால்தான் உலகப் புகழ் பெற்ற அறிவியலாளர்களில் பெரும்பாலானோர் நாத்திகர்கள். பகுத்தறிவு, மனித நேயம் கொண்டு பேருழைப்பை நல்கி வாழும் எவரும் முன்னேற எந்த தடையும் இல்லை.

2) ஜார்ஜ் வாசிங்டன் கார்வர் – அமெரிக்க அறிவியலாளர் (1864-1943)

ஒரு அடிமை சூழலில் வளர்ந்து, அமெரிக்காவில் ஒரு சிறந்த விவசாயத்துறை அறிவியலாளராக



உருவானவர் ஜார்ஜ் வாசிங்டன் கார்வர். மிசொரி மாநிலத்தில் பிறந்தவர்தான் ஜார்ஜ். தந்தையையும் தாயையும் குழந்தையாய் இருக்கும்போதே இழந்துவிட்டார். அவர் மோசஸ், சூஸன் தம்பதியரால் வளர்க்கப்பட்டார். அருகில் உள்ள பள்ளி, வெள்ளை மாணவர்களுக்கே என்பதால், தம் 12 வயதில் வீட்டிலிருந்து பக்கத்து ஊரில் படிப்புக்காகக் குடியேறினார். அங்கு மரியா, ஆண்ட்ரூ இல்லத்தில் தங்கி வீட்டு வேலைகள் செய்து கொண்டு, கருப்பர்களை அனுமதிக்கும் பள்ளியில் பயின்றார்.

இளம் வயதிலேயே ஓவியம் வரைவதிலும், தாவரங்களைப் பராமரிப்பதிலும் மிகுந்த திறமைசாலி. அவரை அங்குள்ளோர் "plant doctor" என்றே அழைப்பார்கள். அவரிடம் மரியா அத்தை "you must learn all you can and then go out into world and give your learning back to our people" என்று சொல்வார். பிறகு ஜார்ஜ், கான்சாஸ் பகுதியில் 10 ஆண்டுக் காலம் வாழ்ந்தார். அங்கும் கருப்பர்கள் உயர் கல்வி படிக்க வாய்ப்பில்லை என அறிந்தும் ஒரு வெள்ளைக்காரப் பெண்மணி மூலம் ஓவியம் கற்கிறார். பின்னர் அயோவா வேளாண் கல்லூரியில் சேர்ந்து நன்கு படிக்கிறார். படிப்பை முடித்ததும் அங்கேயே தாவர இயல் உதவி பேராசிரியராகிறார். பின்னர் அலபாமாவில் உள்ள கருப்பர்களுக்கான Tuskagee institute இன் முதல்வர் பூக்கர் T வாசிங்டன் அழைப்பை ஏற்று அங்கு பணிக்குச் செல்கிறார். வெள்ளையர் சூழ்ந்த அயோவா கல்லூரியிலிருந்து, கருப்பர் மட்டுமே உள்ள அலபாமா Tuskagee Institute-இல் பேராசியராகிறார். அங்கு மண்வளத்தை மேம்படுத்துகிறார். அப்பகுதிக்கு, புது பயிர்களான நிலக்கடலை, சர்க்கரை வள்ளிக் கிழங்கு, சோயாபீன்ஸ் வகைகளை அறிமுகப்படுத்துகிறார். விவசாயிகள் நலம் பெற, நல்ல விளைச்சல் தரும்படி அவர் ஆய்வும், பட்டறிவும் உதவியது. ஒரு நல்ல ஆசிரியராகவும், ஆராய்ச்சியாளராகவும், புதுப் பயன்பாட்டுப் பொருள்களை (கடலை, வள்ளிக் கிழங்கு, சோயாபீன்ஸ் இவற்றிலிருந்து) உருவாக்குபவராகவும், விவசாயிகளின் பிரதிநிதியாகவும் விளங்கினார். 40 ஆண்டுகள் பணிபுரிந்த அலபாமாவில் Tuskegee Institute's George Washington Carver Museum ஒன்றைத் தனது முன்பணம் 30,000 டாலரைக்கொண்டு நிறுவினார். வியக்கத்தகு வேளாண் பயிர் வகை, மண் வகை, காளான் வகை மற்றும் அவர் வரைந்த ஓவியங்கள் அங்குக் காட்சிப்படுத்தப் படுகிறது. அவர் செல்லமாக "Peanut man" என்று அழைக்கப்பட்டார். தன் பெயரில் ஒரு அறக்கட்டளையை நிறுவி, வேளாண் துறையில் ஆராய்ச்சி செய்யும் இளம் மாணவர்களுக்கு ஆய்வுத் தொகை வழங்க ஏற்பாடு செய்தார். அவர் மறைந்த 6 மாதங்களில், அமெரிக்கக் காங்கிரஸ், George Washington Carver National Monument மிசொரியில் நிறுவத் தீர்மானித்தது. அமெரிக்கக் குடியரசுத் தலைவர் அல்லாத ஒருவருக்குத் தேசிய நினைவிடம் கட்டப்பட்டது இதுவே முதல் முறை. பல பள்ளிகள், கல்லூரிகள், நூலகங்கள், நிறுவனங்கள் அவர் பெயரை தாங்கி நிற்கின்றன.

அடிமை சூழலில் பிறந்து, அளவற்ற சோதனைகளைக் கடந்து, அரும்பெரும் சாதனைகளைச் செய்த அந்த விவசாயிகளின் நண்பர் என்றும் மக்கள் நினைவில் வாழ்வார். வாழ்வில் முன்னேற விரும்பும் எவருக்கும் அவர் வாழ்வு ஒரு முன்னுதாரணமாக விளங்கும்.

முடிவுரை:

நேரில் சந்திக்காமலேயே, என் பெற்றோர்கள் வாயிலாகவும், புத்தகங்கள் வாயிலாகவும் இந்த இரண்டு சாதனையாளர்களும் எனக்கு வழிகாட்டிகளானார்கள். எண்ணற்றோருக்கும் இப்படி வழிகாட்டிகளாகி இருப்பார்கள். அவர்களையோ அல்லது சரியான வேறு யாரையோ வழிகாட்டிகளாகக் கொண்டு, தமிழர்கள் அனைவரும் மிக உயரிய நிலையை அடைய முடியும். உயர்ந்து, தமிழ் மொழி தழைக்க உதவ முடியும்.

◆

வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையின் 37 ஆவது தமிழ் விழா சிறக்க வாழ்த்துகள்!

பால்பாண்டியன் மற்றும்குடும்பத்தினர்

INVEST N JOY CAPITAL CO

MULTIFAMILY SIMPLIFIED : INVEST SMART, LIVE JOYFULLY

CULTIVATE PROSPERITY THROUGH STRATEGIC REAL ESTATE PARTNERSHIPS

INVEST IN APARTMENTS AND CREATE PASSIVE INCOME TODAY

Thanga K. Thangavel
(972) 838-0452

Daniel Twito
(319) 830-9034

ABOUT US

InvestNJoy Capital, headquartered in Dallas, TX, USA stands as a premier destination for real estate investment services.

With a specific focus on both single and multifamily residences, we expertly own and manage properties throughout Texas, USA, offering unparalleled service and compelling real estate investment opportunities.

InvestNJoy Capital is committed to sourcing and presenting solid multifamily real estate investments to our highly valued capital partners, with the goal of achieving attractive risk-adjusted returns.

INVESTMENT STRATEGY

Our strategy is to identify and capitalize on hidden opportunities in multifamily properties.

We use our in-house management and advanced data-driven technologies to swiftly renovate, retool, and reposition these properties, aiming to maximize value and achieve superior returns.

Committed to transparency and stakeholder communication, we transform apartment communities into high-value investments, consistently delivering above-market returns.

15+ Years of Experience

1000 + Units Owned and Managed

Nearly $200 M AUM

OUR SERVICES

- Capital Mobilization
- Joint Venture Establishment
- Investor Training and Engagement

LEARN HOW TO BECOME A PARTNER TODAY

www.investnjoycapital.com

investors@investnjoycapital.com

2301 Ohio Dr. Suite 243
Plano, TX 75093

ஓ! தமிழே நீ வாழி!

திருமதி. சுவர்ணலதா மகேஷ்

ஓ! தமிழே...நீ வாழி !
ஓ! தமிழே...நீ வாழி !
ஒப்பற்ற என் தாய்மொழியே..
எம் நாவில் தவழ்ந்து,
எம் ஆவியில் கலந்த - அருந்தமிழே!
ஆருயிர் தமிழே நீ வாழி !

மணக்கும் மல்லிகை மலரும் நிலத்தில்,
புராணங்களும் புதினங்களும் கலக்கும் இடத்தில்,
இதயத்துடிப்பாய் இயங்கும் மொழியே !

ஓ! தமிழே !
சங்க இலக்கியத்தின் காலமற்ற ஓட்டத்தில்,
சரித்திர நிகழ்வுகளில் சமத்துவ உண்மைகளில்,
கடந்த கால ரகசியங்களின் தொகுப்பு மொழியே !

உன் எழுத்து ஒவ்வொன்றும், ஒரு அழகிய ஓவியம்!
நீ இயல்,இசை,நாடகம் - எனும் முத்தமிழ்க் காவியம்!
சாதி ,மத, இன பேதமற்ற சமத்துவ மொழியே !

ஓ தமிழே ! உன் மீது மையல் கொண்டு
கவிஞனாகவும் ஆனேன்.
வையகம் போற்றிட, வாழ்க என் தமிழே !
வளர்க செந்தமிழே !



கொடிகாத்த திருப்பூர் குமரன்

அனிதா கு.கிருஷ்ணமூர்த்தி

உலக வரைபடத்தில் இடம் பெற வேண்டிய மிகச்சிறந்த தொழில் நகரம் திருப்பூர். மாபெரும் இந்திய நாட்டு நகரங்களில் லட்சக் கணக்கான மக்கள் வாழும் நகரம், ஆண்டொன்றுக்கு சுமார் நாற்பதாயிரம் கோடி ருபாய் அளவில் பின்னலாடை வர்த்தகம் செய்யும் நகரம். அண்டை மாநில மக்களும் பக்கத்து மாவட்ட மக்களும் தங்கள் இரைப்பைகளுக்கு உணவு தேடி, பறவைகளைப் போல் வந்து செல்லும் உறைவிட நகரம்.

இந்த நகருக்கு மூன்று பெருமைகள். 1) உலகின் எந்த மூலையிலும் அறியப்படும் திருப்பூர் பனியன். 2) இந்திய அளவில் அறியப்படும் கதர் துணிகள். 3) விடுதலைப் போராட்ட வீரர் திருப்பூர் குமரன்.

அனிதா
கு.கிருஷ்ணமூர்த்தி

திருப்பூர் குமரன் பிறந்து பல ஆண்டுகள் ஓடிவிட்டன. இந்த வேளையில் அந்த மாவீரனை மனதில் எண்ணிப்பார்க்க வேண்டியது இந்த மண்ணில் பிறந்த நம் எல்லோருடைய கடமையாகும்.

எண்ணிப்பார்த்தால் ஏற்படும் விளைவுகள் என்ன என்கிற கூட்டல் கழித்தல் கணக்கு நமக்கு வேண்டாம். இப்போதைய தலைமுறையினரின் இதயங்களில் விடுதலை உணர்ச்சியை, நாட்டுப்பற்றை விதைக்க வேண்டும் என்பதற்காகவே குமரனை சற்றுச் சிந்திப்போமா.

குமரன் பிறந்த ஆண்டு 1904 அக்டோபர் மாதம். பிறந்த நாள் பற்றிக் குறிப்புகள் எல்லாம் எழுதி வைக்கின்ற அளவுக்கு அவரது குடும்பத்தினர் யோசிக்கவில்லை. ஆயினும் இவரது பிறந்த தேதி 04-10-1904 என்றே நிலைத்தது. குமரன் பிறந்த ஊர் சென்னிமலை. இந்த ஊருக்கு சிரகிரி என்ற பெயரும் உண்டு. சென்னிமலையில் திருப்பூர் குமரனின் பெயர் குமாரசாமி என்பதாகும். குமரனின் தந்தையார் பெயர் நாச்சிமுத்து முதலியார். தாயார் பெயர் கருப்பாயி அம்மாள்.

இந்த ஊரில் உள்ள முருகன் கோயில் அருணகிரி நாதரால் பாடல் பெற்ற திருத்தலமாகும். இது திருப்பூரிலிருந்து சுமார் 50 கி.மீ. தொலைவில் உள்ளது. விவசாயமும், நெசவும் முதன்மைத் தொழிலாகக் கொண்ட சிற்றூர் இது.

ஏற்றம் இறைக்கும் போது விவசாயிகள் தமது சோர்வு தீர இப்படிப் பாடுவர்.

சென்னிமலை மேலிருக்கு
சீரியொரு பாம்பிருக்கு

பாம்புமேலே மயிலிருக்கு
மயிலுமேலே வேலிருக்கு
வேலேந்தும் வேலவனை - கும்பிட்டா
வெனையெல்லாம் போயிடுமே.

குமரன் சென்னிமலை போர்டு பள்ளியில் ஐந்தாம் வகுப்பு வரை மட்டுமே படித்தார். பின்னர் பள்ளிப்படிப்பை நிறுத்தி விட்ட குமரன், தமது 12-ஆம் வயதில் பள்ளி பாளையத்தில் நெசவுத் தொழிலைக் கற்றார்.

1916 முதல் 1920 வரை நெசவுத் தொழில் செய்தார். 1922 -இல் திருப்பூர் வந்த குமரன், பஞ்சுத் தரகு மண்டியில் பணியில் அமர்ந்தார். தரகு மண்டியில் வேலை செய்து கொண்டே சுதந்திரப் போராட்ட உணர்வுகளை தன்னுள் வளர்த்துக் கொண்டார்.

- அப்போதே கள்ளுக்கடை மறியல் போராட்டத் திலும் கலந்து கொண்டார்.
- இதனிடையே தனது பத்தொன்பதாம் வயதில், பதினான்கு வயதுடைய இராமாயி அம்மாளை மணந்து கொண்டார்.
- தீவிரமான தேசபக்தராக விளங்கிய குமரன், காங்கிரசு கட்சியின் சேவாத் தளத் தொண்டராகவும் செயலாற்றினார்.
- இதனிடையில் 1925-இல் திருப்பூருக்கு வருகை தந்த காந்தியடிகளை பி.டி. ஆஷரின் வீட்டில் கண்டு மகிழ்ந்தார்.
- தொடர்ந்து 1932 வரை தன்னுள் சுதந்திர வேட்கையை வளர்த்துக் கொண்டார்.
- 1932- ஜனவரி 10-ஆம் நாள் திருப்பூரில் நடந்த ஊர்வலத்தில் முன்னணியில் நின்றார். கையில் கொடியுடன் திருப்பூர் குமரன் புறப்பட்டார்.

இவருடன் கீழ்க்கண்டவர்களும் கலந்துக் கொண்டனர்.

1) பி.எஸ்.சுந்தரம் 2) பொங்காளி முதலியார் 3) ராமன் நாயர் 4) விஸ்வநாத ஐயர் 5) நாச்சிமுத்துக் கவுண்டர் 6) சுப்பராயன் 7) நாச்சிமுத்து செட்டியார் 8) நாராயணன் 9) அப்புக்குட்டி.

அவனூர்வாசி நேரு, ராஜாஜி ஆகியோருடன் திருப்பூர் குமரனின் குடும்ப உறுப்பினர்கள்

இதனைப் பற்றி குமரன் அவர்களின் எள்ளுப்பேரன் திரு. கதிர்வேல் குமாரராஜா, "நமது சுதந்திரப் போராட்டத்தில் பல்வேறு சமூகங்களைச் சேர்ந்தவர்கள் எவ்வாறு ஒற்றுமையுடன் இருந்து செயல்பட்டார்கள் என்பதை எங்கள் பாட்டி எப்போதும் பெருமையுடன் பேசுவார்" என நினைவுகூர்வார். சரித்திரப் புகழ் வாய்ந்த இந்த ஊர்வலம், இப்போதைய திருப்பூர் மாநகராட்சி கட்டட சாலை யிலிருந்து தொடங்கியது. ஊர்வலம், குமரன் சாலையில் சென்ற போது பிரிட்டிஷ் அரசாங்கக் காவலர்கள் தடியடி நடத்தியபோது பலரும் அடிபட்டனர். இந்நிலையில், குமரன் தன் கையிலிருந்த கொடியை கடைசிவரை விடாமல் இறுகப்பற்றிக் கொண்டு "வந்தே மாதரம், காந்தியடிகள் வாழ்க" என்று முழக்கமிட்டபடியே இருந்தார்.

இந்த சம்பவத்தைப் பார்த்தவர்கள் என மொத்தம் 22 பேர் சாட்சிகளாகச் சேர்க்கப்பட்டனர். இதில் ஒருவர் கோவை பி.எஸ்.ஜி.கல்லூரியின் நிறுவனர் பி.எஸ்.கோவிந்தசாமி நாயுடு ஆவார். அடிபட்டு வீழ்ந்த அனைவரையும் காவல்துறை தனது வாகனத்தில் ஏற்றிக் கொண்டு மருத்துவமனைக்குச் சென்றது.

குமரனை, மருத்துவர்கள் சோதித்துப் பார்த்தனர். நவம்பர் 01, 1932 அதிகாலையில் மரணமடைந்த குமரனை, ஜம்மனை ஆற்றின் ஓரத்தில் புதைத்து விட்டனர். அவரைப் புதைத்த இடத்தை யாரும் அறிந்திருக்கவில்லை.

குமரன் இறந்த பின், வெள்ளையர்கள் அரசாங்க ரீதியாக ஒரு ஆவணம் தயார் செய்தனர். அதனடிப்படையில் பொள்ளாச்சி சப் மாஜிஸ்ட்ரேட் துரைராஜ், குமரன் குறித்து ஆய்வு செய்து ஒரு அறிக்கை தயார் செய்து கோவையில் இருந்த மாஜிஸ்ட்ரேட் எஸ்.ஏ.ஸ்லேட்டரிடம் கொடுத்தார். அவர் சி.பி.ஹெச் கன்னிங்காம் என்கிற காவல் துறைத் தலைவரிடம் வழங்கினார். அவர் பிரிட்டிஷ் மகாராணியின் செயலர் ஜி.டி.ஹெச் பிரேக்கனிடம் வழங்கினார்.

இந்தியாவிலேயே கொடிக்காக உயிர் நீத்த ஒரே தலைவர் திருப்பூர் குமரன் தான் என்பதை, மேற்கண்ட ஆவணங்களைப் படித்தால் விளங்கும். அதனால் தான், நேதாஜி, வ.உ.சிதம்பரனார், திருப்பூர் குமரன் மூவரும் இணைந்திருந்தால் சுதந்திரப் போராட்டத்தின் திசை மாறியிருக்கும் என்று பன்மொழிப் புலவர் அப்பாதுரையார் அவர்கள் ஆய்வு செய்து எழுதியுள்ளார்.

28 வயதிலேயே மரணமடைந்த குமரன், புரட்சிகரமான இளைஞராகத் திகழ்ந்தவர். விடுதலைக்காக போராடிய நமது தலைவர்களின் தியாகங்களை நமது குழந்தைகளுக்குச் சொல்லித்தரும் போது, மாவீரன் கொடிகாத்த குமரன் போன்றோரின் தியாகம் மரியாதை பெறும்!!

வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையின்
37 ஆவது தமிழ் விழா சிறக்க வாழ்த்துகள்!

Dr.கிருஷ்ணன்
மற்றும் குடும்பத்தினர்

சீறும் இயற்கை

பாலமுரளி
கோதண்டராமன்

இயற்கையன்னை அளித்திட்ட வரத்தால் தானே
நாமெல்லாம் பூமிப்பந்தின் மேலே
ஆடிப்பாடி வாழ்கின்றோம்!

வளமாய் நாமும் வாழ்வதற்கே
பொன்னும் கரியும் பலவும் வேண்டி
பூமியினுள்ளே சுரங்கம் பலவும் அமைக்கின்றோம்!

மரங்கள் வளர்த்து இயற்கையதனை
பேணிப் பாதுகாக்காமல் நீரைத்தேடி பூமிக்குள்
ஆழ்துளைகள் பலவும் இடுகின்றோம்!

எண்ணை எரிவாயு எனபல தேடி
பூமிப்பந்தின் நெஞ்சினுள் எதையும் எண்ணிப்
பாராமல், ஈட்டி கொண்டே குத்துகின்றோம்,

பூமித்தாயும் சற்றே தன்
பெருமூச்சதனை வெளியிட்டால்,
எரிமலை பலவும் வெடிக்குமே!
நெருப்புக் குழம்பும் வெளிவருமே!
வெப்பமும் ஓசோனில் ஓட்டையிடுமே!
துருவப் பனியும் உருகிடுமே!
நிலமும் அதுவும் நடுங்கிடுமே!

ஆகையால் மரங்கள் பலவும் வளர்ப்போமே,
இனி இயற்கையைப் பேணி நடப்போமே,
என்றும் வளமாய் வாழ்வோமே!!

User 360

Your one-stop automation for Simplified and Centralized User Process management

Features

Automate User Management

- User creation, Role change, and User deactivation
- Streamlined for Internal & Community users

Reuse Process Templates

- Create, freeze, deactivate User
- Add or remove Permissions, Queues & Public groups

Transfer Records

- When deactivating User, transfer owned record
- Assign to another User or Queue

Optimize License Usage

- Freeze or deactivate inactive Users
- Automate steps using Process Templates & Transfer Records

Check out our other apps on AppExchange

AGrid
Streamline Data Management with Lightning-fast Grid

Media Manager
Preview and manage all your files in one place

Salesforce App Development

We build High-impact, Secure, Scalable apps for you

Deep Expertise
Dedicated product development experts, from design to development, deployment, and maintenance

Security Review
High coding standards using tools and manual rules

DevOps Automation
Setup orgs, CI/CD, test automation scripts, and test data

App Analytics
Insights into component usage, user adoption, and more

Streamline Revenue Generation
Manage Sales, Licenses, Invoices and Payments

> "Softsquare is a great company to work with. Their deep Salesforce knowledge allows us to continually innovate across several different Salesforce packages."

Millsapps, Ballinger & Associates, Arlington, VA

Contact Us Today!

+1-703-623-6432

info@softsquare.biz

https://www.softsquare.biz

Softsquare
The Salesforce® Experts

We specialize in

AI | Data | CRM

Washington DC | Toronto | Chennai | Muscat

ACCELERATE YOUR BUSINESS WITH CUTTING-EDGE AI SOLUTIONS

Trusted By 300+ Brands across all Industries

Johnson Controls | AlphaSense | VELOCITI | Scotts | leidos

செந்தமிழே! உயிரே! நறுந்தேனே!

கவிஞர் மரு. த. சேரன், பாவேந்தர் பாரதிதாசன் பேரன், தலைவர், 'பாவேந்தர் பேரியக்கம்', புதுச்சேரி, இந்தியா

கவிஞர்
மரு. த. சேரன்

உய்வகை காட்டும் உயர் தமிழுக்கு புது நெறி காட்டியவராக, புரட்சிக் கவிஞராக, பேச்சாளராக, மொழி காப்பாளராக, மக்கள் கவிஞராக விளங்கிய பாவேந்தர் பாரதிதாசனார் என் அம்மா திருமதி வசந்தா தண்டபாணி அவர்களுடைய அப்பா, எனக்கு தாத்தா என்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். என் தாத்தாவின் வீடு அரசுடமையாக்கப்பட்ட பின்னர் என் அம்மா அங்கு நூலகராகப் பணியாற்றினார். என் அம்மா தாத்தாவைப் பற்றி நாள்தோறும் என்னிடம் பேசிக் கொண்டிருப்பார். சிறு வயது முதற்கொண்டு தாத்தாவின் பாடல்களை எனக்கு என் அம்மா சொல்லிக் கொடுப்பார். பின்பு அதனை மனப்பாடமாகச் சொல்ல சொல்லுவார்.

என்னுடைய தந்தையார் மா. தண்டபாணி. தாத்தா நடத்திய குயில் இலக்கிய இதழின் பதிப்பாசிரியராக இருந்தார். குயில் இதழை 'பழனியம்மா மின்விசை' அச்சகத்தில் அச்சடித்து ஊர் தோறும் அனுப்பினார். அதனால், நாங்கள் தாத்தாவுடனேயே இருந்து விட்டோம். இதனால், தாத்தாவைப் பற்றி அதிகமான, நுணுக்கமான பல வாழ்வியல் செய்திகளை என்னால் அறிந்து கொள்ள முடிந்தது.

பிரெஞ்சு நாட்டவர் புதுவையை ஆண்டு வந்ததால், 'பிரெஞ்ச் இந்தியா' என்று புதுச்சேரி அழைக்கப்பட்டது. புதுச்சேரியிலுள்ள பல்வேறு அரசுப் பள்ளிகளில் தாத்தா தமிழாசிரியராகப் பணி புரிந்தவர். விடுதலைப் போராட்ட பாடல்களைத் தொடர்ந்து எழுதியதால் அவர் அடிக்கடி பணியிட மாற்றம் செய்யப்பட்டார். அவர் பாடம் பயிற்றுவிக்கும் போது பள்ளியின் தலைமையாசிரியர் மற்றும் பிற ஆசிரியர்கள் அனைவரும் மறைந்திருந்து பார்ப்பார்களாம். அழகாக ஓவியம் வரையக் கூடிய பேராற்றல் கொண்டவர் தாத்தா. ஒரு நாள் கரும்பலகையில் 'கடுமையான கோடை காலத்தில் ஒருவர் நடந்து போகிறார்; அவர் பசியால் அவதியுறுகிறார்;

அவர் அருகில் உள்ள ஒரு தோட்டத்திற்குச் செல்கிறார்; அங்குள்ள மரங்கள் எந்த அளவுக்கு அவருக்கு துணை நின்றன' என்பதை ஓவியமாக வரைந்தார். அந்த ஓவியம் பாடலாக 'இசையமுது' இரண்டாம் தொகுதியில் இடம் பெற்றிருக்கிறது, 'தோட்டம்' என்ற தலைப்பில் முதலில் 'கவிதா மண்டலம்' இதழில் வெளி வந்தது.

அப்பாடல்தான் நான் மனப்பாடமாக படித்த முதல் பாடல் .

"ஊருக்குப் போய்வரும் நாளையிலே - மிக
உரைத்திடும் வெய்யில் வேளையிலே
ஆருக்கும் தாங்காத பசிகொண்டு - நான்
அங்கொரு தோட்டத்தில் புகக்கண்டு
பழங்கொடுத்தது மாமரம் - என்
பசிதொலைத்தது மாமரம்
நிழல்கொடுத்தது மாமரம் - துயர்
நீங்க வைத்தது மாமரம்
தாகம் தணித்தது தென்னைமரம் - மணம்
தந்து மலர்ந்தது புன்னைமரம் - உற்
சாகம் பிறந்தது வீடுவந்தேன் - மரம்
உதவி செய்ததை நான்நினைத்தேன்"

என்னுடைய அம்மாவின் அரவணைப்பில் தான் இறக்கும் வரையில் எங்களுடனேயே இருந்த என் பாட்டி திருமதி பழனியம்மாள் பாரதிதாசன் இந்தப் பாடலை அடிக்கடி என்னைப் பாடச் சொல்லிக் கேட்பார். அவரை 'அம்மாயி', என்று அழைக்க எங்களை தாத்தா பயிற்றுவித்தார். அம்மாயி, தாத்தாவின் 'குடும்ப விளக்கு' 'இருண்ட வீடு' போன்ற நூல்களை படிக்கச் சொல்லுவார். இதனால், தாத்தவின் கவிதைகளைப் படிக்கும் வாய்ப்பு எனக்கு உண்டானது. ஒவ்வொரு ஆண்டும் தாத்தாவின் பிறந்த நாளில் நடைபெறும் இலக்கிய நிகழ்ச்சிகளுக்கு என் அம்மா, அப்பாவுடன் தவறாமல் பங்கேற்பேன். பல அரசியல் கூட்டங்களுக்கும் செல்லவேன்.

"உன் தமிழ் தான் இருக்கையிலே, ஆங்கில பெயர் ஏனோ?" என்ற ஒரு கேள்வியோடு குயில் இதழில் 'மாணவருக்கு' என்ற தலைப்பில் பாடல் ஒன்றுண்டு. இப்பாடல் தமிழ் மொழியில் பெரிய ஆர்வத்தை எனக்கு உண்டாக்கியது. தாத்தாவின் மீது அளவிடா ஈடுபாடு கொண்ட திரு. நாவலர் நெடுஞ்செழியன் தாத்தாவின் கவிதைகளை எல்லா பொதுக் கூட்டங்களிலும் மிக அழகாகவும், உச்சரிப்பு நயத்தோடும், நகைச்சுவையோடும் சொல்வார். அவர் பேசுகின்றார் என்றால் அங்கு நான் இருப்பேன். இவை எல்லாம் தாத்தாவைப் பற்றி தெரிந்து கொள்வதில் எனக்குள் ஈடுபாட்டை உருவாக்கின.

பங்காரு பத்தர், பெரியசாமி பிள்ளை, திருப்புலி சாமி ஐயா ஆகியோரிடம் தாத்தா தமிழ் பயின்றார். அவர் தன் 17-ஆம் வயதிலேயே காரைக்காலில் நிரவி என்ற ஊரிலுள்ள ஓராசியர் பள்ளியில் தமிழாசிரியராகப் பணிபுரியச் சென்று விட்டார். அங்கு பணி புரிந்து கொண்டே அவருடைய அரசியல், இலக்கியப் பணிகளை அஞ்சாமல் செய்து கொண்டிருந்தார். தாத்தா இல்லாமல் புதுச்சேரி அரசியலே இல்லை என்று சொல்லக்கூடிய அளவிலே அவருடைய அரசியல் பணி அந்நாளில் இருந்திருக்கிறது. அந்நாளில் தமிழுக்கு எதிராகவே அரசியல் செய்தவர்கள் உண்டு. அவர்களை

"நாய் பல நாற்புறம் வாய் திறக்கினும்
தாய்மொழி தொண்டு தவறியதே இல்லை"

என்று கடுமையாக எதிர்த்தார். அரசியலில் தமிழை இழித்தும் பழித்தும் தவறாகப் பேசியவர்களை மாடு என்று குறிப்பிடும் வகையில் "மாட்டுக்கா வாய்க்கும் தமிழ்!", என்று குயில் இதழில் ஒரு வெண்பாவை எழுதினார். பல அரசியல்த் தலைவர்களே தாத்தாவை தொடர்பு கொண்டு "தயவு செய்து நீங்கள் இது போல் எழுத வேண்டாம், என்று வேண்டிக் கேட்டுக் கொண்ட செய்திகளும் உண்டு. அதையும் மீறி தாத்தா தன் கவிதைகளில் அரசியல்வாதிகளைத் திட்டுவார். இதை அவரே "அரசியல் போரில் இறங்குவேன்; இதை வையேல் என்றால் அதை விட்டு வையேன்" என்று எழுதினார்.

தாத்தா கட்டுப்பட்டார் என்றால் அது பாரதியாரிடம் தான்! தன் கவிதையால் புதிய சுவையைக் காட்டி இவரை தன் வசப்படுத்தியவர் பாரதியார். மகாகவி பாரதியாரை விட தாத்தாவுக்கு 9 வயது குறைவு. பாரதியார் புதுவைக்கு வந்த பின்னர்தான் தாத்தா அவரிடம் தமிழ் படித்தார் என்ற தவறான கருத்து உண்டு. அதற்கு முன்னரே தாத்தா பக்திப் பாடல்கள், தேச விடுதலை பாடல்கள், அரசியல் சார்ந்த பாடல்களை எழுதியுள்ளார்.

பாரதியார் புதுவையில் வாழ்ந்த காலத்தில் ஆசிரியர் பணியில் இருந்த தாத்தா, பாரதியாரை சந்தித்து அவரிடம் பேசுவதும் அவரிடம் நட்பு பாராட்டுவதுமாக இருந்தார். எப்போதும் நாட்டின் விடுதலைக்காகவும் தமிழின் வளர்ச்சிக்காகவும் மக்களின் ஒற்றுமைக்காகவும் பாரதியாரும் தாத்தாவும் விவாதித்துக் கொண்டிருப்பார்கள். நாடு விடுதலை பெற்றால் எப்படி இருக்க வேண்டும் என்று இருவருமே சிந்திப்பார்கள். அச்சிந்தனையை, ஒரு அருமையான கவிதையாக தாத்தா எழுதி இருப்பார்.

"சாதி ஒழித்திடல் ஒன்று -நல்ல
தமிழ் வளர்த்தல் மற்றொன்று

பாதியை நாடு மறந்தால் மற்ற
பாதி துலங்குவதில்லை
சாதி கலைந்திட்ட ஏரி
நல்ல தண்டமிழ் நீரினை ஏற்கும்"

பாரதியார் தன்னுடைய தராசு கட்டுரையில் தாத்தாவைப் பற்றி, "நெசவிலே நாட்டு நெசவுமேல். விலைக்கு நெய்வதைக் காட்டிலும், புகழுக்கு நெய்வதே மேல். பணம் நல்லது. ஆனால், பணத்தைக் காட்டிலும் தொழிலருமை மேல். காசிப் பட்டுப் போல பட்டு நெய்ய வேண்டும். பாட்டிலே வலிமை, தெளிவு, மேன்மை, ஆழம், நேர்மை இத்தனையும் இருக்க வேண்டும். இதற்கு மேலே நல்ல வர்ணம் சேர்த்தல் நல்லது", என்று கூறினார். அதற்கு தாத்தா "நீரே என் தலைவர்!" என மறு மொழி கூறுவது போன்று ஒரு வரியை பாரதியாரே எழுதி உள்ளார். பாரதியார் "எழுக நீ புலவன்!" என்று வாழ்த்துவது போலும் பாரதியாருடைய தராசு கட்டுரையில் வெளிவந்திருந்தது.

"பாடலில் பழமுறை பழநடை என்பதோர்
காடு முழுவதும் கண்டபின் காடைசியாய்
சுப்பிர மணிய பாரதி தோன்றியென்
பாட்டுக்கு புதுமுறை புதுநடை காட்டினார்"

என்று மிக அழகாக தாத்தா பாரதியாரைப் பற்றி எழுதியிருப்பார்

இந்திய விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு அடைக்கலம் கொடுத்தது பிரெஞ்ச் இந்தியா (புதுச்சேரி). வங்காளத்திலிருந்து அரவிந்தரும், நெல்லையிலிருந்து மகாகவி பாரதியாரும், மாடசாமியும் புதுச்சேரியில் தங்கியிருந்தார்கள். மகாகவி பாரதியாருக்கும் அரவிந்தருக்கும் மிகப்பெரிய நட்பு இருந்தது. பிரெஞ்சு மொழியில் புலமைப் பெற்றிருந்த அரவிந்தர், "பிரெஞ்சு இலக்கியங்கள் தான் உயர்ந்தது; பிரெஞ்சு இலக்கியங்களில் இருக்கக்கூடிய அழகும் சிறப்பும் நயமும் எந்த மொழியிலும் கிடையாது!" என்று பாரதியாரிடம் வாதிட்டார். உடனே பாரதியார். தாத்தாவிடம் வேகமாக வந்து "சுப்புரத்தினம்! தமிழில் ஏதும் பெரிய இலக்கியமெல்லாம் இல்லை!" என்று அரவிந்தர் கூறுவதாகக் கூறி மிகவும் வேதனைப்பட்டார். உடனடியாக தாத்தா சங்க இலக்கிய நூல்கள், ஆழ்வார் பாசுரங்கள் போன்ற அனைத்து தமிழ் இலக்கியங்களையும் ஒரு சமுக்காளத்தில் வைத்துக்கட்டி எடுத்துச் சென்று, 'தமிழில் இல்லாதது எதுவும் பிற மொழியில் இல்லை' என்று அரவிந்தரிடம் வாதிட்டார். வியந்து போன பாரதியார் தாத்தாவைப் பெரிதாக புகழ்ந்தார். இந்நிகழ்ச்சியை என்னுடைய அம்மா என்னிடத்தில் அடிக்கடி சொல்வார்கள். அதன் பொருட்டே தாத்தா பாரதியரைப் பற்றி தன் கவிதையில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

"நானும் அவருக்கே எழுத்தியல் உதவுமோர்
தொண்டினால், அவர்க்கும் புலவர்க்கும் தோன்றும்
சண்டையில் வெற்றி கண்டிடச் செய்தேன்!",

பெண்கள் துயர் துடைக்கக் கடுமையாக போராடியவர் தாத்தா. பெண்களுக்கு படை ஒன்று இருக்க வேண்டும் என்ற புரட்சிக் கருத்தினை கூறியவர் தாத்தா ஒருவரே.

"தமிழ்ப் பெண்களின் படை ஒன்று வேண்டும்:
தக்கைகள் உள்ளத்தைத் திருத்த வேண்டும்;
உமியல்ல மாதர் வலக்கை - தீயர்
உயிரை இடிக்கும் உலக்கை!"

மேலும், கைம்பெண் மறுமணத்தை வலியுறுத்தியும் பாடல்கள் பல இயற்றியுள்ளார்.

"மாலையிட்ட மணவாளன் இறந்து விட்டால்
மங்கை நல்லாள் என்ன செய்வாள்?

பொது மக்கள் நலம் நாடிப் புதுக் கருத்தை சொல்வதிலும், புரட்சி கருத்துக்களை கவிதைகளாக எழுதுவதிலும், பாடல்களிலே புதிய நெறியை புகுத்துவதிலும், நவீன இலக்கிய செயல்பாடுகளை தூய தமிழில் கொண்டு சென்றதிலும் முன்னோடியாகத் திகழ்ந்தவர் தாத்தா. அனைத்து துறைகளைப் பற்றியும் கவிதைகளை எழுதிக் குவித்தவர் தாத்தா. ஆட்சியாளர்கள் தாத்தாவின் கவிதைகளை துறைதோறும் கொண்டு சென்றால் ஒரு நல்லாட்சியை நாட்டு மக்களுக்கு வழங்கலாம் என்பதே என் எண்ணம். ஒவ்வொரு தமிழர் இல்லங்களிலும் பாவேந்தர் பாடல்கள் ஒலிக்க வேண்டும். தமிழ் வெல்க!

Best wishes from EBR foundation

Randy Katzenstein

வள்ளுவர் கண்ட சமத்துவம்

கதிரவன் கிருஷ்ணமூர்த்தி

பிறப்பின் அடிப்படையில் பேதமில்லாத சமூகப் பார்வை; உருவம் கண்டு எள்ளாமை; பொருளாதார ஏற்ற தாழ்வு கருதாத சான்றாண்மை; எல்லா உயிர்களும் சமமாகப் பகுத்துண்டு வாழும் அறன் வலியுறுத்தல் ஆகியவை வள்ளுவர் கண்ட சமத்துவத்தில் சில.

சமத்துவம் என்ற சொல்லைக் கேட்டால் என்ன பொருள் கொள்வீர்? என்று நண்பர்களிடம் கேட்டேன். அப்போது எனக்கு வந்த பதில்:- 'சம உரிமை' என்றார் ஒரன்பர். 'சமவாய்ப்பை யும் எடுத்துக்கொள்ள வேண்டும்' என்றார் இன்னொருவர். 'சமத்துவம் பேணுமிடத்தில் எல்லோரும் சமமாக நடத்தப்படவேண்டும்' என்றார் மற்றொருவர். 'சமத்துவம் என்பது பணக்காரனுக்கு இறை தரிசனம் செய்ய முதல் வரிசை அளிப்பதாகாது. அரசனுக்கும் ஆண்டிக்கும் அதே வரிசைதான். சமத்துவம் என்பது தாய் மொழியை கருவறையில் இருந்து பின்தள்ளுவதாகாது' என்று நீண்டுக் கொண்டே போனது கருத்தாடல்.



கதிரவன்
கிருஷ்ணமூர்த்தி

பொருளை விரிவாக்க ஒரு காட்சி: ஊற்றில் இருக்கும் நீர் நிரம்பி வழிந்து அருவியாகி ஆறாகி எல்லோருக்கும் உணவாவது சமத்துவம். ஒரு நிறுவனம் நீர் உற்பத்தி இடத்திற்கே போய் குடுவையில் நிரப்புகின்றது. அவ்வாறு எடுக்கப்படும் நீர் அந்த நிறுவனத்திற்கு மட்டும் பணமாகும். நெகிழிக் குடுவையில் அடைத்து விற்கப்படும் நீர், அருவி நீர்போல், ஆறாகி அது எல்லோருக்குமான உணவாகுமா?

இன்னும் ஒரு காட்சி: பத்தடி உயரத்தில் தங்கத்தை வைத்துவிட்டு ஏழடி உயரம் இருப்பவனையும் ஐந்தடி இருப்பவனையும் ஓரிடத்தில் அழைத்து வந்து போட்டி நடத்துவது சமத்துவ மாகுமா? வெல்வதுக்கான சமவாய்ப் பில்லாத இடத்தில் சமத்துவம் இருக்குமா?

நிற்க!

வள்ளுவர் சொல்லும் சமத்துவத்தை இங்கு பார்ப்போம்.

பிறப்பால் எல்லோரும் சமமே

பிறப்பால் ஏற்ற தாழ்வும் சாதியால் மேலும் கீழும் பாராட்டியே வந்தது வேத மதம். வள்ளுவர் அதைக் கண்டு, எல்லோரும் தாய்வழியாகவே பிறக்கின்றோம். பிறப்பால் வேறுபாடில்லை. அதனால் எல்லோரும் சமமே என்றார். நாம் செய்யும் தொழிலாலும் ஆற்றும் சேவையின் தரத்தாலும் சிறப்பிலும் வேறுபடலாமே ஒழிய பிறப்பாலாகாது என்ற கருத்துபட மொழிந்தார்.

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான் (972)

எல்லா உயிர்களும் பிறப்பின் அடிப்படையில் தாய்வழி வந்தவர்கள். வாய்வழியோ தோள்வழியோ இடுப்புவழியோ பாதவழியோ (மனு 1.31)[1] யாரும் தோன்றவில்லை. அதனால், பிறப்பின் அடிப்படையில் எல்லோரும் சமமே. நாம் செய்கின்ற தொழிலால் நாம் வேறுபடுகின்றோம். அதிலும் பெருமை அடைபவர்கள், செய்யும் தொழிலின் திறமை வேறுபாடுகளினால் அன்றே, வேறு எதிலும் இல்லை. இலட்சக்கணக்கான மருத்துவர்கள் இருக்கலாம். போலியோ சொட்டு மருந்து கண்டுபிடித்து, உலகுக்கே இலவசமாக கொடுத்த சோனசு சால்க்கின் பெருமை எல்லோருக்கும் வருமா? ஒரே தாயின் இரு பிள்ளைகள் கூடவே வளர்ந்து, தொழில் அடிப்படையிலும் திறமையின் அடிப்படையிலும் பெருமை அடைவதில் வேறுபாடு இருக்கத்தான் செய்கிறது.

உருவு கண்டு எள்ளாமை

பிறப்பு என்ற அடிப்படையில் சமமானாலும் நாம் வளரும்போது வேறுபாடுகள் இருக்கத்தான் செய்கின்றன. உயரமாக வளரலாம். குட்டையாக இருக்கலாம். பெரு வலுவான தசைப் பிடிப்புடன் இருக்கலாம். உடல் வாகால் வேறுபடலாம். உருவில் சிறியவரை குட்டையனே குறளனே என்று இகழாதே. அவன் திறமையாலும் அறிவாலும் பிறவல்லமையாலும் மதிப்புள்ளவனாக இருப்பான். அவனைக் குறைவாக எடைபோடாதே! என்பதைச் சொல்ல,

உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு
அச்சாணி அன்னார் உடைத்து (667)

என்று காட்சிபட விவரிக்கின்றார். உருவத்தால் சிறியவர்கள் என்பதற்காக யாரையும் கேலி செய்து அலட்சியப்படுத்தக் கூடாது. பெரிய தேர் ஓடுவதற்குக் காரணமான அச்சாணி உருவத்தால் சிறியதுதான் என்பதை உணர வேண்டும்.

எழில் நலம் பெற்றும் உயரமான ஆள் வடிவமும் கொண்டவன் பெருமை கொள்ளலாம். கல்வி கேள்விகளால் உயரலாம். அவன் தோற்றமும் கவர்ச்சியும் பலரையும் கவரலாம். வெளியே தெரியாமல் மனசாட்சிக்கு எதிரான குற்றங்கள் செய்வானாயின், அவன் தோற்றமெல்லாம் என்னாகும்? என்று கேட்கின்றார். அறவாழ்வைப் பேண வேண்டும்; புறத்தோற்றம் முக்கியமல்ல என்ற சமத்துவத்தை எல்லாருக்கும் முன்வைக்கின்றது திருக்குறள். வானுயர்ந்த தோற்றமும் பெருமையும்

தமிழ்ச்சரம்

தமிழ்ச்சரம்
உலகத் தமிழர்களின் சங்கமம்

உலகம் முழுவதிலும் உள்ள தமிழர்கள் பலர் சமூக வலைத் தளங்களைக் கடந்து இன்னமும் வலைப்பூக்கள், இணைய தளங்கள்வழியாகத் தங்கள் சிந்தனைகளை, கருத்துகளை, அனுபவங்களை, உள்நாட்டுத் தகவல்களைப் பகிர்ந்து வருகிறார்கள்.

அவ்வாறு உலகம் முழுவதிலும் இருந்து தமிழில் எழுதுபவர்களையும், வாசிப்பவர்களையும் தமிழ்ச்சரம் எனும் வலைத்திரட்டி ஒருங்கிணைக்கிறது.

"உலகத் தமிழர்களின் சங்கமம்" எனும் முன்னெடுப்புடன் தமிழுக்கு, ஆக்கமும் ஊக்கமும் தரும் வகையில் செயல்படும் தமிழ்ச்சரத்தின்

இணையதள முகவரி www.tamilcharam.com.

கொண்டவன் குற்றமெல்லாம் ஒரு நாள் அம்பலமானால் என்னாகும்?

வானுயர் தோற்றம் எவன்செய்யும் தன்னெஞ்சம்
தான்அறி குற்றப் படின் (272)

சமன் செய்து சீர்தூக்கும் நீதி

பொருட் செல்வம் மனிதனுக்கு சமூகத்தில் உயர்நிலையைத் தரலாம். நீதி வழுவாமல் இருக்க வேண்டிய மன்றங்களின் தலைவர்களே நடுநிலையில் சருக்கி கையூட்டும் பெற்று பதவியும் பொருளும் ஈட்டி வாழ்வதைக் காண்கின்றோம். வள்ளுவரோ அதை எல்லாம் தாண்டிய பெருமைமிக்க சான்றோனை இலக்கியத்தில் கண்டவர். எந்தப் பக்கமும் சாயாத இருபக்கமும் சம எடைவைக்கும்போது சீராக நிற்கும் கோல்போல் நீதி மன்றத்தில் வைக்கப்படும் ஆதாரங்களையும் சாட்சியங்களையும் ஆராய்ந்து - நட்பு, பணம், செல்வாக்கு என்றெல்லாம் பாராமல் தீர்ப்பு வழங்குதல் சான்றாண்மைக்கு அழகு என்று சொல்லுகின்றார்.

சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க் கணி (118)

சால்பு என்ற பண்பைப் பேணும்போது மனிதனுக்கு வறுமைகூட நெருங்கலாம். ஆனால், அப்படியான பொருளின்மை சான்றோருக்கு கசப்பில்லை. அவர்களின் மனவுறுதியையும் கொள்கைப்பிடிப்பையும் உயர்த்திக் காட்டுகின்றார்.

இன்மை ஒருவற்கு இனிவன்று சால்பென்னும்
திண்மைஉண் டாகப் பெறின் (988)

பகுத்துண்டு வாழ்தல்

பொதுநலன் விரும்பும் ஒப்புரவை நன்கு அறிந்தவனது செல்வம் ஊருணியில் நீர் நிறைந்தது போன்றது. பல்லுயிர்க்கும் பொருந்திய பெருங் கொடையே ஒப்புரவு என்பர். உலக உயிர்களின் நலம் விரும்பி ஒப்புரவைப் பெரிதும் அறிந்தவனிடம் உள்ள செல்வம் ஊரார் அனைவருக்கும் பயன்படும் ஊருணி நீர்நிறைந்து உள்ளது போன்றது [2].

மழைதான் மிகவும் அடிப் படையான உணவும் உணவுக்கே உணவும் என்று குறள் (12) சொல்லும் நாம் பின்பற்றும் அறநெறிகளுள் அனைத்து உயிர்களிடமும் உணவைப் பகிர்ந்துண்டு வாழும் நெறியே தலையாயது. எல்லோருக்கும் மழைதரும் நீர் அடிப்படையான தேவை என்று குறளில் சொன்ன வள்ளுவர் அந்த நீர் ஒரு பொதுவான செல்வம் என்று கருதினார் (215).

ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு (215)

அதை நினைவூட்டவே சான்றோரிடம் இருக்கும் செல்வம் எல்லோருக்கும் உணவுதரும் ஊருணிபோல் என்று சொல்கின்றார். உலகெங்கும் இயற்கை வளமான நீரை, ஊற்றுகளில் இருந்து தனியார் நிறுவனங்கள் எடுத்து பொட்டலபடுத்தி விற்கின்றனர். இதனால் உலகெங்கும் நெகிழிகளின் மாசு அதிகமாவதோடு நிலத்தடி நீரும் வற்றிப்போய் விலங்கினங்களுக்கும் மனிதருக்கும் குடி நீர்த்தட்டுப்பாடு உண்டாவதைக் காண்கின்றோம். வள்ளுவர் அன்றே பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதலை சொன்னார். செல்வமும் சரியானவரிடம் இருக்கும் இடத்தில் ஊர் நடுவே இருக்கும் குளம்போல் எல்லோருக்கும் பயன்படும் என்றார். வள்ளுவரின் சமத்துவம் இப்படி எல்லா உயிர்க்கும் அடிப்படைத் தேவையான நீரின் பகிர்தலிலும் அடங்கி இருக்கின்றது.

வாழும் கலையை நமக்குச் சொன்ன வள்ளுவர் சமத்துவக் கருத்துகளை அடிப்படையாகக் கொண்டே அறத்தை வகுத்துள்ளார். பிறப்பால் எல்லோரும் சமம் என்ற வள்ளுவன் சமவாய்ப்புக்கும் திறமைக்கும் இடமளிக்கின்றார். பகுத்துண்டு ஓம்புதலை அறமாக வகுத்து இன்றைக்கு நடக்கும் இயற்கை வளச் சுரண்டல், வள்ளுவன் சொல்லும் சமத்துவத்துக்கு எதிரானது என்றும் பார்த்தோம். பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்ற வள்ளுவனின் சமத்துவம், அவன் சொல்லும் அறத்தால் வலுவாவதை எடுத்துக்காட்டியுள்ளோம்.

[1] Manusmriti with the Commentary of Medhatithi by Ganganatha Jha, 1920, ISBN-10: 8120811550, ISBN-13: 9788120811553.

[2] தண்டபானி தேசிகர், திருக்குறள் உரைக்களஞ்சியம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், *1983.*

வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையின்
37 ஆவது தமிழ் விழா சிறக்க வாழ்த்துகள்!
சாம் கண்ணப்பன்,
மீனாட்சி அம்மாள்

யாதும் ஊரே யாவரும் கேளிர்

பேராசிரியர் சம்பந்தம் ஏகாம்பரம், கணிதத் துறைத் தலைவர் (பணி நிறைவு), கொலம்பியா கல்லூரி, கனடா

பேராசிரியர் சம்பந்தம் ஏகாம்பரம்

முன்னுரை: 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற கருத்து இன்றைய நாளில் அனைவரும் சிந்தித்துப் பார்க்க வேண்டிய ஒன்று. உலகம் முழுதும் தமிழ் கூறும் வாழ்வியலாக பல நாடுகளும் அறிந்த ஒன்றாகும். அறிவியல் வழியிலும் மெய்ப்பொருள் சிந்தனையிலும் கணிதவியல் நுட்பமொடும் சிந்தித்தால் கணியனின் கனவு மெய்ப்படும். அவனது சமன்பாடு நமக்கும் தெளிவாகப் புரியும். உலகம் = நமது ஊர், உயிரினங்கள் = நமது உறவுகள். இக்கட்டுரையின் நோக்கம் நான்கு சொற்கள் உள்ள இவ்வாசகத்தில் இருக்கும் நுட்பத்தினை ஆய்ந்துணர்ந்து வெளிப்படுத்த வேண்டும் என்ற விழைவாகும்.

பேரண்டத்தின் அடிப்படைக் கூறு:
பேரண்டம் எனப்படும் விரிந்து பரந்த அண்டங்கள் கோடியில் செங்கதிரோன் ஒரு விண்மீன். அதுவே பேரண்டத்தின் ஒரு புள்ளி. அதில் ஒரு கோளாக இருக்கும் பூமியோ மிகச்சிறிய புள்ளி. அங்கு வாழும் 750 கோடி மக்களும் மற்ற உயிரினங்களும் புள்ளிக்குள் இருக்கும் ஒரு புள்ளி. பரிணாம வளர்ச்சியில் பருப்பொருள் கட்டமைப்பின் மூலக்கூறு அணு என்று கூறினார்கள். இன்று அறிவியலும் அணுவிற்குள்ளும் ஆயிரம் நுண்மைப் பொருண்மிகள் உள்ளன என்பதைப் பகுத்துச் சொல்கின்றது. "சொல்லாத நுண்ணுணர்வே" (ஆங்கிலத்தில் Consciousness) என்று மாணிக்க வாசகர் பேரண்டத்தின் அடிப்படைக் கூறு சக்தி (energy) என்று ஆயிரம் ஆண்டுகளுக்கே முன்னரே உணர்ந்து வரையறை வரைந்தார். இன்றைய அறிவியலில் ஐன்ஸ்டீன் கூறுவதும் $e=mc^2$ அல்லது em என்பதே! (c என்பது ஒளியின் வேகமென்ற மாறிலியைக் குறிக்கும்) சுருக்கமாகச் சொன்னால் சக்தியில் இருந்துதான் (e) பருப்பொருள் (m) தன்மாற்றம் பெறுகிறது என்று பேரறிவின் விழிப்புணர்வில் கண்டறிந்தார்.

யாதும் ஊரே: கணியன் "யாதும் ஊரே" என்று முன் மொழிந்ததை இற்றைய கவிஞர் வாலி, உலகம் = நமது வீடு என்று ஒரு கணிதவியல் சமன்பாட்டை வழிமொழிகிறார். திருக்குறள் வழியாகவும் இந்த சமன்பாட்டை நிறுவலாம். எளிமையைக் கருத்தில் கொண்டு எல்லோரும் பாடும் பாடலின் மூலமாக

மனதில் படியும் என்று வாலி வழியில் சொல்கிறேன். "யாதும்" என்பது நாடுகள் அனைத்தையும் உள்ளடக்குகிறது. அதை எளிமையாக "உலகம்" என்று காட்டும் ஆடியாகத் தமிழனின் மனம் இருந்தது.

மனமே இணையமாக இருந்த கணியனின் எண்ணம் துணிக்கப்பட்டது. வான்காந்த சக்தி என்னும் அறிவியல் நுட்பம் இன்று இணையம் என்ற பெயரைப் பெற்று அறிவியல் என்ற கருவியாய், இணையத்தை சிறையாய் மனித இனம் மாற்றிவிட்டது. மனதால் உலக மக்கள் அனைவரும் இணைந்திருக்கிறோமா என்பதே கேள்வி. மனத்தில், ஆழ் மன எண்ண அலைகளில், இணையம் இல்லையே என்பதுதான் இன்றைய மனத்தின் பிணி.

உலகில் பல நாடுகளில் தமிழன் பொறியியல் நுணுக்கமுடன் இயற்கை சார்ந்து மக்களை அரவணைத்துக் கோயில்கள் பல கட்டினான். வியட்நாம், மலேசியா, மியன்மார், இந்தோனீசியா, மோரோஷியஸ், டிரினிடாட், கனடா, அமெரிக்கா போன்ற நாடுகளில் தமிழர்கள் இன்றும் தலைமுறைகள் தாண்டியும் வாழ்கிறார்கள். யாதும் ஊரே, கோயில் உள்ள ஊரே குடியிருக்கத் தகுந்த ஊர், என்று கோயில்களைக் கட்டினான். இணையம் என்ற சக்தி இதயத்தில் இருந்தது. மன அழுத்தத்தின் சன்னல் கோயிலாகச் செயல்பட்டது. மருத்துவ நாதன் இருக்குமிடம் ஆலயம் எனப்பட்டது. "மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறம்" என்பதை மறந்தோம். ஆரவாரத்தில் மழித்தல், நீட்டல் என்று நிலையில் அழுத்தப்பட்டுத் தாழ்ந்து விட்டோமே!

மண்ணாசை கொண்டு இந்த நாடு என்னுடையது என்று தமிழன் நினைக்கவும் மாட்டான். மனிதன் மண்ணை எனக்குச் சொந்தம் என்று சொல்வதா? மண் திரும்பி "மனிதனே நீதான் எனக்கு சொந்தம்" என்று சொல்லும். இந்த உடலே உயிர் தங்குவதற்காக மண் கொடுத்ததுதானே. மண் கொடுத்த உணவால் வளர்ந்தது தானே உடல். மண் கொடுத்த கடனைத் திருப்பிக் கொடுத்துவிட்டு மனிதன் உயிர்தான் திரும்ப வேண்டும், "இந்த உடல் என்னுடையது, உன்னோடு வராது" என்று மண் சொல்லாமல் சொல்லி நகைக்கும்.

யாவரும் கேளிர்: "யாதும் ஊரே" என்று சொன்ன கணியன் அடுத்து "யாவரும் கேளிர்" என்று சிந்திக்கும் இரு சொற்களைச் சொன்னான். உலகம் என்ற இடத்தில் கோடிக்கணக்கில் குடியிருக்கும் உயிரினங்கள் "தாவர சங்கமம்" என்று சொல்லப்படும். "..செல்லா அ நின்ற இத் தாவர சங்கமத்துள் எல்லாப்பிறப்பும் பிறந்திளைத்தேன்..." என்பது மறுவாசகம் இல்லாத திருவாசகம். தாவர சங்கமம் என்ற உயிரினங்கள் வழியாக நாம் வந்தோம். எனவே இவை அனைத்துமே நம் உறவுகள். நமக்கு முன்னரே இருப்பவை. இன்றும் இருப்பவை. நமது முன்னோரோடு, முன்னோர்க்கும் முன்னோரான மூத்த உயிரினங்கள் தொடர்போடு, ஆறு அறிவோடு, அண்மையில் தன்மாற்றம் பெற்று பரிணாம வளர்ச்சியுற்று ஆறறிவு மனிதம் என்று பூத்த மலரே மனிதன்! நாம் உணர்வு நிலையில் அனைத்து உயிரனங்களோடும் ஒற்றுமையாக இருக்கவேண்டும் என்பதே நமது பிறப்பின் இயல்பு. ஒன்றியிருக்க வேண்டும் என்பதே யாவரும் கேளிர் என்பதன் ஆழமான பொருள். நாம் போற்றிப் புகழும் வள்ளலார் கூட இதையே உயிரின ஒருமைப்பாடு, சீவ காருண்ய ஒழுக்கம் என்று சொல்கிறார்.

கணியனின் கணிதவியல்: அறிவியலும் தெளிவாக உறுதிசெய்வதும் இதுவே. குவியக் கோட்பாடு (QUANTUM THEORY) இன்று நம் அன்றாட வாழ்வின் அங்கமாகப் பயன்படுகிறது. சுழியம் என்ற அளவு சுழற்சியைக் கொண்ட ஒரு நுட்பி அல்லது நுண்மையினும் நுட்பமானதுகளை (QUARK) இரண்டு துகள்களாகப் பிரிக்கலாம். பல அண்டங்கள் அவைகளின் இடைவெளியாக இருக்கலாம். இருந்தாலும் அவை எதிர்- எதிர் சுழல்களைக் கொண்டிருக்கும், அதனால் அவற்றின் கூட்டுத்தொகை சுழியமாக இருக்கும். இந்த அறிவியல் கோட்பாடு விந்தையிலும் விந்தை என்பதை ஐன்ஸ்டீன் குவியத் தொடர்பு (QUANTUM ENTANGLEMENT) என்று கூறுவார். அறிவியலும் மூலமான பருப்பொருளை ஆய்ந்து பார்க்குங்கால் உலகின் மூலக் கூறுகளும் உறவோடு உணர்வோடு ஒரு சமன்பாட்டுடன் இருக்கின்றன என்று நாம் உணர வேண்டும். உயிரோடு இருப்பதற்கு இயற்கை விதிகள் நமது பின்புலமாக இருக்கிறது என்பதை நாம் மறந்தாலும் அதுவே உண்மை. பேரண்டத்தின் இயக்கமே ஒரு உயிர்த் தொடர்பில் உள்ள ஒரு வட்டம். அறிவியலில் "நான் சிந்திக்கிறேன், நான் உயிரோடு இருக்கிறேன்" என்று ரெனே டெகார்த்தே (Rene Descartes) 17 -ஆம் நூற்றாண்டில் கூறியிருக்கிறார். ஓர் அறிவு, ஈரறிவு, என்று பரிணாம வளர்ச்சியில் ஆறாவது அறிவு என்னும் ஆற்றல் களத்தில் பூத்த மலரே மனிதன். நமது தோற்றத்தின் வழித்தொடரைத் துண்டிக்கலாமா? நமது மனித குலத்தின் அழிவிற்கு நாமே காரணமாகலாமா?

உலகத்தில் மொத்தம் 195 நாடுகள் என்று 2023 புள்ளியியல் சொல்கிறது.

கடலையும் சேர்த்து 195 உலக நாடுகளையும் எல்லைக்கோடுகளையும் பிரித்துக் காட்டும் வண்ணப்படம் வரைய வேண்டும். .

எல்லையைப் பகிர்ந்து கொள்ளும் அண்டை நாடுகளுக்கு வெவ்வேறு வண்ணங்கள் இருக்க வேண்டும். அப்போதுதான் மாநிலங்களைத் தனித்தனியாகக் காட்டமுடியும்.

கேள்வி: குறைந்தது எத்தனை நிறங்கள் வேண்டும்? கணிதத்தில் இப்படி ஒரு கேள்வி 150 வருடங்களுக்கு மேல் நிரூபணம் ஆகாமல் இருந்தது.

1977-இல் உறுதியாகக் கணினியின் மென்பொருள் உதவியுடன் மெய்ப்பிக்கப்பட்டது. அப்பெல் மற்றும் ஹேக்கனால் உறுதி செய்தார்கள். அவர்கள் நான்கு வண்ணங்கள் போதுமானது என்பதற்கான ஆதாரத்தை நிரூபித்தார்கள். குறைந்தது 4 நிறங்கள் வேண்டும். மூன்று நிறங்களால் செய்ய முடியாது என்பதையும் நிரூபணம் செய்தார்கள். (கீழுள்ள படத்தில் பார்க்கவும். மஞ்சள், சிகப்பு, பச்சை நீலம்)

(Courtesy: Wikimedia Commons)

பூமியில் உள்ள அனைத்து நாடுகளையும் கடலையும் சேர்த்து நாம் நான்கு வண்ணங்களால் பிரிக்கலாம். நான்கே வண்ணங்கள் போதும். ஐந்தோ ஆறோ 195 வண்ணங்களோ தேவையில்லை. மூன்று வண்ணங்கள் போதாது என்றும் கணிதவியல் நிறுவியிருக்கிறது.

கணிதவியல் சமன்பாடு: உலகம் = நமது வீடு; உயிர்கள் = நமது உறவு என்பதற்கும் நான்கு வண்ணக் கணிதவியல் வரைபடத்தின் உண்மைக்கும் என்ன தொடர்பு? "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்பது உண்மை ஆகிறது.

முடிவுரை: தமிழனின் ஒப்புரவும் ஒற்றுமையும் தமிழனின் மனத்தோடு இணைந்திருந்தது. "அகர முதல எழுத்தெல்லாம்..." என்று சொன்ன வள்ளுவர் அனைத்து மொழிகளின் எழுத்துக்களையும் என்று சொன்னார். அனைத்து மொழிகளும் அகரம் என்ற ஓசையின் தொடக்கமே என்று ஏன் சொன்னார். அகர முதல தமிழெல்லாம் ... என்று சொன்னாலும் குறள் வெண்பாவின் தளை தட்டாது! அப்படி வள்ளுவர் சொல்லவில்லையே. மொழியை வைத்து ஒரு கோடு போட்டுப் பிரிக்கவில்லையே வள்ளுவர். தெய்வப் புலவர் என வள்ளுவரைக் கொண்டாடும் சிறப்பு இது தான். கணிதவியல் சமன்பாடுகள் இரண்டு:

1. உலகம் = நமது வீடு;
2. உயிர்கள் = நமது உறவு.

யாதும் ஊரே யாவரும் கேளிர் என்பது கணியன் சமன்பாடு. அதுவே கணிதவியல் காட்டும் காலத்தால் அழிக்க முடியாத வாழ்வியல் ஆகும். வள்ளுவனைப் போல கணியன் பூங்குன்றனாரும் உலகையே இணைக்கும் வாழ்வியல் சமன்பாடு தந்தார் என்பதை என்றும், எப்போதும் மறவாத மனநிலை பெற்று ஆன்ம நேய ஒருமைப்பாட்டுடன் வாழ்வோமாக!

ஐ. சண்முகநாதன் (19.4.1935– 3.5.2024)

'நாதன்' என்ற புனைபெயரைக் கொண்ட ஐ.சண்முகநாதன், 19.4.1935-ல் திருச்சியில் பிறந்தார். பெற்றோர்: கே.வி.ஐயன், பெருமாள் பிள்ளை - சீதா ஜானகி அம்மாள். - 19-வது வயதிலேயே 'தினத்தந்தி' யின் உதவி ஆசிரியரானார்.

42 ஆண்டு காலம் தினத்தந்தியில் பணியாற்றி ஓய்வு பெற்றார். 'நாதன்' என்ற புனைபெயரில் இவர் எழுதிய "அதோ அந்தப்பறவை", "இதய தாகம்", "ஒரு பறவையின் சரணாலயம்", "இதயம் எழுதிய கவிதை முதலிய நாவல்கள் புகழ் பெற்றவை. இவரது எழுத்துப் பணியின் சிகர நூல்களாக "ஒரு தமிழன் பார்வையில் 20-ம் நூற்றாண்டு வரலாறு", "கற்காலம் முதல் கம்ப்யூட்டர் காலம் வரை உலக வரலாறு", "தமிழ்நாடு - சங்க காலம் முதல் செம்மொழி காலம் வரை" ஆகியவற்றைக் குறிப்பிடலாம். "வரலாற்றுச் சுவடுகள்" என்ற நூல் ஒரு தகவல் களஞ்சியமாகும். 2021ஆம் ஆண்டு "கலைஞர் எழுதுகோல்" விருது வழங்கப்பட்டது.

Process Improvement

Data & Analytics
- Modern Data Platform
- Database & Migration Support
- MS Fabric

ERP Services
- SAP Business One Services
- S/4HANA Services
- QAD Services
- CRM & SharePoint Consulting
- Enterprise Application Services
- ServiceNow Offering

Cloud & AI
- Cloud Computing Services
- Web App / Mobile Development
- Claris FileMaker
- Generative AI Services

Security Assessment & Compliance
- Security & Compliance
- Cyber Strategy & Governance
- Cloud Security
- Infrastructure Assessments
- Compliance Audits

Automation & Value-Added Services
- Robotic Process Automation
- Testing Services
- Web & Email Hosting
- Infrastructure Management

eNoah
Your Trusted Partner

Drive Growth with Digital Transformation

Enhance Efficiency/Profits

Ananth Nagarajan
Chief Strategy Officer
+1 805-719-8739
ananthn@enoahisolution.com

Scan here to know more

வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையின் 37 ஆவது தமிழ் விழா சிறக்க வாழ்த்துகள்!

என்றும் எங்கள் நினைவில் வித்யா

வித்யா ஃபாருக்

குடும்பத்தினர்

அகமுகம்

நகைப்பு : பகையை வகையாய் வெல்லும்

புன்னகை : புண்ணான மனதையும் பொன்னாக்கும்

மகிழ்ச்சி : வீழ்ச்சிக்கும் இகழ்ச்சிக்கும் இடமில்லா கவர்ச்சி-மகிழ்ச்சி

சந்தோசம் : சந்தர்ப்பம் வாய்க்கும் பொழுதல்ல, சறுக்கி விழும் போதும் சமமன நிலையே சந்தோசம்

சிரிப்பு : சூழலை சிறப்பாக்கி நம் இருத்தலை இரட்டிப்பாக்கும்

வடமொழிச் சொல்லான ஹாஷ்யம் : மனதை, உடலை வலுவாக்கும் வசியம் ஹாஷ்யம்

கருமை

தோலின் நிறம் கருப்பு - கருணைக்கு இடமில்லா நிராகரிப்பு

இனிக்கும் கரும்பு கருப்பு - உள்ளே சுவையோ தேனமுது

செதுக்கிய சிலை கருப்பு - சிற்பியின் நிறமும் கருப்பு

அதனால் தானோ வாங்க மறுப்பு!

கற்சிலை அழகெனில் ரசித்து வடித்த

அதன் கலைஞனும் அழகு தானே!

ஹேமலதா சிவக்குமார்

பண்பு

கண்டவுடன் கனிவுடன் நோக்குதல் பண்பு

வந்தோரை வரவேற்று நீர் அளித்தல் பண்பு

இருப்பதனைப் பகிர்ந்தளித்தல் பண்பு

செல்லும்போது உடன்சென்று வழிஅனுப்புதல் பண்பு

பிள்ளைகளை இவ்வாறு பழக்குதல் நல்ல பண்பு!

மேன்மை

இகழ்ச்சியற்ற பேச்சு மேன்மை

எள்ளி நகையாடாமை என்றும் மேன்மை

புறந்தள்ளிப் பேசாமை மேன்மை

ஏழ்மைதனை ஏளனம் செய்யாமை மேன்மை

கலக்கத்தில் கைகொடுத்தல் மேன்மை மேன்மை!

வள்ளுவர் வழிகாட்டும் சமநிலை உலகம்

திருக்குறள் செம்மல் வெற்றிச்செழியன், பாவேந்தர் தமிழ்வழிப் பள்ளி, தமிழ் நாடு

வாழ்வியல் அறம் திருக்குறள். அது காலம் தாண்டியும் போற்றுதலுக்குரிய உயர் அற நூல். இன்று நாம் பேசுகிற சமநிலை குமுக வாழ்வை முன்நிறுத்தி அறம் பேசுவது திருக்குறளின் சிறப்பு.

நிலையான அறம் என, படிநிலையாக மக்களைப் பிரித்துத் தாழ்வு படுத்திய சனாதன தர்மம் பேசப்பட்ட காலத்தில், "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" (குறள் 972) என ஓங்கி முழங்கியது திருக்குறள். இங்கேயும், செய்தொழில் வேற்றுமையை வள்ளுவர் பேசுகிறார், என எடுத்துக்கொண்டு, சனாதனத்தை நுழைக்க முற்படுவோர் உளர். "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்", என்று சொன்ன வள்ளுவர், தொழில் அடிப்படையில் வேற்றுமை கற்பிக்க வரவில்லை. செய்கிற செயல் சரியானதாக இருக்க வேண்டும், நேரியதாக உயரியதாக மற்றவருக்குப் பயனுடையதாக இருக்க வேண்டும்; செய்கின்ற செயல் அடிப்படையில் ஒருவர் உயர்வு பெற முடியும் என்று தெளிவு படுத்துகிறார்;

மக்கள் இயந்திரங்கள் அல்லர். வாழ்வியல், வாய்ப்பு, சூழல் என பலவற்றால் மக்கள் வாழ்வில் மாறுபாடுகள், வேறுபாடுகள் எல்லாம் உள்ளன. எனவே மக்கள் வாழ்வில் அவர்களிடையே சமநிலை உருவாக பல வழிகளில் முயற்சிகள் தேவை. ஒப்புரவான குமுகமாக உருவாக, உதவியை ஒரு கருவியாக வள்ளுவர் முன்வைக்கிறார். ஒப்புரவு என ஓர் அதிகாரமே படைத்தளித்துள்ளார்.

வெற்றிச்செழியன்

"ஒத்த தறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும்" (குறள் 214)

என ஒத்ததறியாது வாழ்பவரைச் செத்தார் என ஒதுக்குகிறார் வள்ளுவர்.

முரண்பாடுகள் நிறைந்த உலகில், நடுநிலை என்பது என்னவாக இருக்க முட்டியும்?

வலிமையான – வலிமையற்ற
வளமையான – வறுமையான
கற்றோர் – கல்லாதார்
உள்ளோர் – இல்லாதார்
ஆள்வோர் – அடிமையர்,

எனப் பல நிலை முரண்பாடுகள் மிகுந்த உலகில்

இருவருக்கும் நடுவாக எப்படி நிற்க முடியும்?

யாருக்குத் துணையாக, யாருக்குச் சார்பாக நாம் நிற்க வேண்டும். யாருக்கு மருத்துவர் தேவை? நோயருக்குத்தானே. நாம் யாருக்கு உதவ வேண்டும், தேவைப்படுவோருக்குத்தானே. யாருக்கு நம் உதவி தேவையோ அவர்களுக்கு நாம் உதவ வேண்டும்.

"இன்மையின் இன்னாதது யாதெனின் இன்மையின்
இன்மையே இன்னா தது" (குறள் 1041)

அதனால் இல்லோருக்குத் துணை நிற்க வேண்டும். இன்மையை இன்மையாக்க இருப்பதைப் பகிர வேண்டும்.

பகிர்தல் எனும் அறம், உள்ளோர், இல்லாதார் எனும் ஏற்றத்தாழ்வை நீக்கி, சமநிலையை உருவாக்குவது.

"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்

தொகுத்தவற்றுள் எல்லாந் தலை" (குறள் 322)

நூலோர் தொகுத்துக் கூறிய அறங்களுள் எல்லாம் தலையாய அறம், பகுத்து உண்டு பல உயிர்களையும் காத்தல் என்கிறார் வள்ளுவப் பெருந்தகை. இங்கே ஒரு நுட்பத்தைக் கண்டு வியக்கலாம். வள்ளுவர் கொல்லாமை எனும் அதிகாரத்தில் இதைக் கூறுகிறார். பகுத்து உண்டு பல உயிர்களைக் காத்தலே கொல்லாமை; வேறு வழியில் பார்த்தால், பகிர்ந்து வழங்காமையால், இல்லாமையால் ஓர் உயிர் இறந்தாலும் அது கொலை; பகிர்ந்தளித்துக் காக்காத இக் குமுகமே அதற்குப் பொறுப்பு எனத் தெளிவுபடுத்துகிறார் திருவள்ளுவர்.

'வல்லான் வகுத்ததே வாய்க்கால்', எனச் சட்டம் வலியோரைச் சார்ந்தே நிற்கிறது.. இங்கே நாம் எப்படி இருக்க வேண்டும், சட்டத்தைத் தாண்டியது வள்ளுவரின் அறம். சட்டத்தின் அடிப்படையே உண்மைதான். வள்ளுவர் யாதொன்றும் தீமை இலாத சொல்லே வாய்மை (குறள் 291) என அந்த உண்மையை விளக்குகிறார்.

சட்டத்தைச் செயல்படுத்துகிற இடத்திலும்,

"வலியார்முன் தன்னை நினைக்கதான் தன்னின்
மெலியார்மேல் செல்லும் இடத்து" (குறள் 250)

எனத் தெளிவு படுத்துகிறார். இன்னமும்கூட,

"செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பான்" (குறள் 301) என்பதும் எளியோர் பக்கம் நின்று நியாயம் பேசுவதே.

சந்தைப் பொருளியலும் நுகர்வு வெறியும்கூட, இங்கே இல்லாத எளியோருக்கு எதிராகவே அமைந்து விடுகின்றன.. இந்தச் சூழலில்தான், வாணிகம் செய்பவர்களிடம், "பிறவும் தமபோல் செயின்" (குறள் 120) என்கிறார்.

சமநிலைக் குமுகம் மலர, மேடுகளை உடைத்துப் பள்ளத்தில் இடுவது என்பதைத் தாண்டி, கீழே இருப்பவர்களுக்குக் கை கொடுக்க வேண்டும்; கை கொடுத்து உதவி, மேலே தூக்க வேண்டும். இது தேவை.

இல்லாமை, இயலாமை எனத் துன்புறுவோருக்குத் துணை நிற்க வேண்டும். அவரின் துயர் துடைக்க வேண்டும், உரிய வாய்ப்பை ஏற்படுத்தித் தந்து உயர்த்த வேண்டும். அதுதான் அறிவின் பயன் என விளக்குகிறார் வள்ளுவர்.

"அறிவினான் ஆகுவ துண்டோ பிறிதின்நோய்
தந்நோய்போல் போற்றாக் கடை" (குறள் 315)

மற்றவரின் நோயை, துன்பத்தைத் தனதாக எண்ணி அதை நீக்குவதே அறிவின் பயன் என்று கூறுகிறார் வள்ளுவர்.

குமுக சமநிலை என்பதை ஒரு திணிப்பாக இல்லாது உள்ளத்தே, மெல்ல மலர்ந்து குமுகத்தில் எழும் மலர்ச்சியாகப் படைத்தளிக்கிறார் வள்ளுவர்.

தமிழ் சமூகத்தில் ஆண் பெண் சமத்துவ மாற்றங்கள்

வாசுகி அண்ணாமலை

ஆண், பெண் சமத்துவம் என்பது என்ன? எல்லா விஷயங்களிலும் சுதந்திரமும், உரிமைகளும் இருபாலருக்கும் ஒரே மாதிரி இருப்பது தானா?!!

ஆண் பெண் படைப்பில் உடலால் மனதால் வலிமையால் வேறுபாடுகளை இயற்கை அமைத்துவிட்டது. அதைத் தாண்டி சமத்துவத்தை சற்று அலசி பார்ப்போமா?!

வாசுகி அண்ணாமலை

ஆதிமனித வாழ்வில் ஆண், பெண் வேறுபாடு மெல்ல மெல்ல தலைதூக்கியது. சங்க காலத்தில் பெண்களுக்கு சமூகத்தில் சிறந்த மரியாதை வழங்கப்பட்டு வந்துள்ளது என்பதை சங்க இலக்கியங்கள் மூலம் நாம் அறிய முடிகிறது. சங்க காலத்தில் பெண்களுக்கு நால்வகை குணங்களும் போற்றப்பட்டது. கற்பு முக்கிய நல்லொழுக்கமாக கருதப்பட்டது. பெண்களுக்கு தன் வாழ்க்கைத் துணையை தேர்தெடுக்கும் வாய்ப்பும், உரிமையும் இருந்தது. புறநானூற்று கூற்றுப் படி அரசிகள், அரசருக்கு சமமாக ஆட்சியில் ஆலோசனை வழங்கி வந்துள்ளார்கள். அகநானூற்று கூற்றுப் படி சங்ககாலப் பெண்கள் கல்வியில் மேம்பட்டு இருந்துள்ளார்கள். நாம் கொண்டாடும் ஔவை பாட்டியைப் போல் பல ஔவைகள் இருந்துள்ளார்கள். திறமை மிக்க பாடகர்கள், நடன கலைஞர்கள் என கலைகள் அனைத்திலும் சிறந்து விளங்கியதற்கு ஆதாரமாக அவர்கள் "முடுகுரவை" என அழைக்கப்பட்டனர். கண்ணகியை இளங்கோவடிகள் முடுகுரவை என்று விளித்துள்ளார். சங்க காலப் பெண்கள் தங்கள் கணவனை மட்டும் அல்ல, தன் சின்னஞ் சிறிய மகனையும் போருக்கு அனுப்பும் மனத் திண்மை கொண்டிருந்தார்கள். அவ்வாறு போருக்கு அனுப்பபட்ட மகன், முதுகில் குத்துப்பட்டு இறந்திருந்தாலோ புறமுதுகிட்டுஓடினான்என அறிந்தாலோ தன் மார்பகத்தை அறுத்தெறிந்தாள் என சங்கப் புலவர் ஒக்கூர் மாசாத்தியார் இயம்பியுள்ளார்.

புறநானூறு இத்தகைய வீரப் பெண்களை முடின்மகள் அல்லது மறைகுடி மகளிர் என்று விவரிக்கிறது. மார்பில் காயம் பட்டு இறந்த மகனை ஆரதழுவி அழுதாலும், நெஞ்சம் நிறைந்து இறுமாந்திருந்தாள் சங்க கால வீரப் பெண்.

அதியமான், அவ்வையார் நெல்லிக்கனி பரிமாற்றத்தில், கற்ற பெண்டிருக்கு மன்னர்கள் கொடுத்த மரியாதையும், ஆண் பெண் நட்பும் நன்கு விளங்கும்.

சங்கப்பெண்டிருக்கு தங்கள் திருமண வாழ்வில் முழு சுதந்திரம் இருந்தது. காதல், கலப்பு திருமணங்கள் அங்கீகரிக்கப்பட்டன. வளர்ப்புத்தாய் அல்லது தோழியர் காதல் தூது சென்றார்கள். குழந்தை திருமணமும், பெற்றோர் அமைத்துக் கொடுத்த திருமணங்களும் நடந்தது. பெற்றோர் வலிமை மிக்க வீரனுக்கு தன் பெண்களை திருமணம் முடிக்க விரும்பினார்கள்.

பெண்களுக்கு சொத்துரிமையும் இருந்தது. ஆனால் ஆங்காங்கே அடக்குமுறைகளும், அநீதியும் பெண்கள் மீது சுமத்தப்பட்ட செய்திகளும் காணப்படுகிறது. காலம் நகர, நகர பெண் என்பவள்

இப்படிதான் இருக்க வேண்டும் என்ற அடக்குமுறைகள் மேலோங்கின. கல்வி, பொருளாதாரச் சுதந்திரம், சிந்தனைச் சுதந்திரம் பெருமளவில் மறுக்கப்பட்டது. இடைக் காலத்தில் "அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பெதற்கு?" என்ற வசனம் சொல்லி, குழந்தை பெறும் இயந்திரமாய் சமையல் அறையில் அடைக்கப்பட்டாள். இது சதி என்னும் உடன்கட்டை வரை சென்றுள்ளது.

காலம் சுழல, பெண்கள் அடிமைத் தனத்திலிருந்து வெளிவர, சிந்தித்துப் போராட ஆரம்பித்தனர். பெண்கள் மட்டும் அல்லாது, ஆண் தலைவர்கள் பலரும் போராட்டம், கவிதைகள், கூத்து, நடனம் , நாடகங்கள், திரைப்படங்கள் என பலவாக, பெண் விடுதலை, முன்னேற்றம், சுதந்திரம் எல்லாவற்றிக்கும் பாடுபட்டு சாதித்தார்கள். இந்திய அளவில் இராஜா ராம் மோகன் ராய் சதியை ஒழிக்க பெரும் பங்காற்றினார். 1860-இல் சதி ஒழிப்பு சட்டமாகியது. இந்த இடைப்பட்ட காலம் பெரும்பாலும் பெண்களின் இருண்ட காலமாக இருந்துள்ளது.

கடந்த 100-150 வருடங்களை நாம் நிகழ்காலமாக கொள்ளாலாமா?! இக்காலகட்டத்தில் இந்திய சமூகத்தில், முக்கியமாக தமிழ்ச் சமூகத்தில் பல நல்ல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளது. பெண்களுக்கு சம அளவில் கல்வி புகட்டப்பட்டது. படித்தாலும் பணிக்குச் செல்லாமலிருந்த பெண்கள், பொருளாதரத் தேவை, அல்லது தன் மனவிருப்பத்திற்கு, மனநிறைவுக்கு பணிக்குச் செல்ல ஆரம்பித்தார்கள். அதை ஏற்றுக்கொண்ட ஆண்கள் வீட்டுப் பணியில் பங்கேற்கும் சூழல் வந்தது. சமத்துவம் தலைதூக்க ஆரம்பித்தது.

ஆணுக்குதான் சொத்துரிமை எனும் மனப்போக்கு மாறியது. அரசாங்கமும் பெண்களுக்கு சொத்துரிமையை சட்டமாக்கியது. இவற்றைத் தாண்டி இன்று தமிழ்நாட்டில் கல்வியில் பெண்கள்தான் முன்னிலை வகிக்கிறார்கள். சம்பாதிக்கும் திறனும் ஆண்களை விட பெண்களிடம் அதிகரித்துவிட்டது என்பது கண்கூடு!! ஆண், பெண்களிடம் காணப்படும் சமத்துவத்தில் ஆண்களின் பங்கு மகத்தானது. ஆண் வெளியில் சென்று சம்பாதிப்பதும், பெண், குழந்தை குடும்ப பராமரிப்பு என்று இருந்த நிலை மாற ஆண்களின் உணர்தலும், ஒத்துழைப்பும் இல்லை எனில் சமத்துவம் சாத்தியமில்லை!

சமைப்பது முதல், குழந்தை வளர்த்தல், முதியோர் பராமரிப்பு என்று எல்லாவற்றிலும் ஆணும் பங்கெடுப்பதால்தான் பெண்ணுக்குச் சமத்துவம் கிட்டி உள்ளது.

ஆனால் இந்தப் புரிதலை விட்டுக்கொடுத்தலை சரிவரப் புரிந்து கொள்ளாது, இருபாலருமே தன் வாழ்க்கை, குடும்ப மற்றும் சமூகச் சூழலை பாழ்படுத்தும் நிகழ்வுகள் ஆங்காங்கே நடக்கிறது. இது எதிர்கால சந்ததினருக்கும், சமூக வளர்ச்சிக்கும் உகந்ததல்ல. எனவே இருபாலரும் அதனை சரியான முறையில் பயன்படுத்தி உயரவேண்டும். ஆண், பெண் சமத்துவம், பெண் விடுதலை இவை எல்லாம் இருபாலரது மனப் பக்குவம், விட்டுக்கொடுத்தல் இவற்றைப் பொறுத்தே அமைய முடியும்.

எனவே சங்க காலம் முதல் இன்று வரை பெண் சமத்துவம் என்பது அவ்வப்போது ஏற்ற இறக்கங்களுடன்தான் இருந்துள்ளது என்பது தெரிகிறது. ஒருகாலத்தில் வீட்டுப்படி தாண்டாத பெண்கள், இன்று கல்வி பெற தனியாக உலகை சுற்றி வருகின்றார்கள். படித்த படிப்பு பயனுறவும், பணம் சம்பாதிக்கவும் உலகைத் தாண்டி விண்வெளி வரை பவனி வருகிறார்கள். இதைவிட ஆண், பெண் சமத்துவத்திற்கு வேறு என்ன எடுத்துக்காட்டு வேண்டும்?

இனி எக்காலத்திலும் பெண் அடக்குமுறை என்பது சாத்தியமில்லை. ஆனால் இதனை இருபாலரும் உணர்ந்து, சமத்துவம், சுதந்திரம் இவற்றை தவறாக பயன்படுத்தாது , தாங்களும் சிறந்து சமூகத்தையும் சிறக்கச் செய்ய வேண்டும்.

" ஆண் பெண் சமத்துவத்தைப் போற்றுவோம்!!"

◆

வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையின்
37 ஆவது தமிழ் விழா சிறக்க வாழ்த்துகள்!

ராஜ் காத்தமுத்து
குடும்பத்தினர் மற்றும் நண்பர்கள்

சங்கத்தமிழ் காட்டும் சமத்துவம்

சாதிப் பெருமை என்றும் பேசியே
பாதி வாழ்வை வீணாய்க் கழித்திடும்
சாதி வெறியால் வன்செயல் புரிந்தே
மீதி வாழ்வை முற்றும் தொலைத்திடும்
வியாதி நிறைந்த மாந்தர் யாவரும்
ஆதி முதற்றே அருந்தமிழ் செப்பும்
சேதி யாதென சற்றே கேளீர்!

சங்கம் அமைத்து நாட்டில் அன்று
தங்கம் நிகர்த்த தமிழை வளர்த்த
சான்றோர் எல்லாம் சாதிபேதம் போக்கி
சமத்துவம் போற்றிட செய்தது என்ன?
எத்தொழில் செய்யினும் எப்பால் ஆயினும்
முத்தமிழ்ப் புலமை முழுதாய் அமைந்திடின்
பத்துப் பாட்டு எட்டுத் தொகையென
சத்து நிறைந்த வித்துக்கள் பலவும்
எவரும் விதைக்கலாம் என்றே வகுத்திட
குயத்தி யுடனே குறமகள் தானும்
உயர்தமிழ்ச் செய்யுள் இயற்றினர் நன்றே!

சங்கத் தமிழின் சாளரம் திறந்திடின்
சமத்துவத் தென்றல் தெளிவாய் வீசிடும்
சாதி வேற்றுமை வெளியே சென்றிடும்
மேதினி மக்கள் மேன்மை பெறவே
தீதேதும் இல்லாத் தேன்தமிழ்ப் பாடல்
ஏதும் அறியாப் பிள்ளைகள் எல்லாம்
ஓதிடச் செய்வோம் ஓங்கி உரைப்போம்
யாதும் ஊரே யாவரும் கேளிர்!

கிருத்திகா கிருஷ்ணமூர்த்தி
மெக்கன்னி, டெக்காஸ்

Vaan
CAPITAL
Where Vision meets Value

Best Wishes

For Capital Protection & Superior Returns

Contact:

Gopi @ 732-910-7023

Senthil @ 925-872-8448

5151 Headquarters Dr, Ste 260
Plano TX 75024

வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையின் 37 ஆவது தமிழ் விழா சிறக்க வாழ்த்துகள்!

ரஜீவ் அக்குலா குடும்பத்தினர்

வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையின்
37 ஆவது தமிழ் விழா சிறக்க வாழ்த்துகள்!
விஜய் விஜயராம்
மற்றும் குடும்பத்தினர்

பாலின பொருளாதார சமத்துவம்

மோகன கிருஷ்ணன் லட்சுமணன்

மார்ச் 12, 2024 ஊதிய சமத்துவ நாள். இன்றைய தேதியில் தமது குடும்பப் பொருளாதாரத்தைப் பெருக்க, ஊதிய பணிகளுக்குச் செல்லும் ஆண்கள் - பெண்களுக்கிடையேயான ஊதிய வேறுபாடுகளை சமப்படுத்த இன்னும் 250 ஆண்டுகளுக்கு மேலாக ஆகலாம் என்று ஐக்கிய நாடுகள் சபை தோராயமாகக் கணக்கிட்டுள்ளது.

மோகன கிருஷ்ணன் லட்சுமணன்

இந்தப் பூமியில் வளர்ந்த நாடுகளில் ஒன்றான அமெரிக்காவில், 2022-ஆம் ஆண்டு வரையில் கிடைக்கும் புள்ளி விவரங்களின் படி, ஒரு ஆண் சம்பாதிக்கும் ஒவ்வொரு டாலருக்கு, அவனுக்கு இணையான தகுதி கொண்ட ஒரு பெண் செய்யும் அதே வேலைக்கு 0.82 டாலர் மட்டுமே ஊதியமாகக் கொடுக்கப் படுகிறது. இது மருத்துவர்கள், செவிலியர்கள், வழக்கறிஞர்கள், தகவல் தொழில்நுட்ப வல்லுநர்கள் மற்றும் பொருளாதார ஆலோசகர்கள் போன்ற அறிவுசார்ந்த தொழில்களில் (White Color Jobs) மட்டுமே. இவை தவிர மற்ற தொழில்களான மளிகைக் கடை மேலாண்மை, உணவுக் கூடங்களில் பணிபுரிவோர்களுக்கு (Blue Color Jobs and Others) இந்த விகிதம் இன்னும் கீழே வருகிறது. 1982-இல் 0.65 டாலர்கள் என்ற அளவிலிருந்து மேம்பாட்டிருந்தாலும், இன்னும் சமநிலை அடையவில்லை. 2002-இல் அது 0.80 என்ற அளவிலில் இருந்து, கடந்த இரு தசாப்தங்களில் 0.02 டாலர்கள் மட்டுமே உயர்ந்திருப்பதைப் பார்த்தாலே, இந்த ஊதிய வேறுபாடு சமனாக எவ்வளவு ஆண்டுகள் பிடிக்குமென்று ஊகித்துக் கொள்ள முடியும்.

இந்த கணிப்பு அனைத்தும் தோராயமாகத்தான் என்றாலும், இது உண்மைக்கு அருகிலான எண்கள் என்று உறுதியாகச் சொல்லலாம். ஒரே தகுதி, ஒரே வேலை. அவ்வேலையை ஒரு ஆண் செய்தால் அதற்கொரு சம்பளம், அதையே ஒரு பெண் செய்தால் குறைவான சம்பளம்.

இதை கேட்பதற்கு நம் மனசாட்சிக்கே சரியாக தோன்றவில்லை அல்லவா?

எடுத்துக்காட்டாக, ஆண்களால் தயாரிக்கப்படும் ஒரு கோப்பை தேநீரின் விலை ஐந்து ரூபாய். அதே தரத்தில் பெண்களால் தயாரிக்கப்பட்ட ஒரு கோப்பை தேநீரின் விலையில் மாற்றம் இல்லை, கொழிக்கும் லாப விகிதத்திலும் மாற்றம் இல்லை. பிறகு எதற்காக பெண்களுக்கு அளிக்கப்படும் ஊதியத்தில் மட்டும் இந்த பாகுபாடு?

பொதுவாகவே நம் இந்திய நாட்டில் பெண்களை, ஆண்களைவிட ஒரு தட்டு கீழாகவே வைத்தே பழகிக் கொண்டு விட்டோம். "நீ என்னை விட யாராக, எதுவாக இருந்தாலும், நீ எனக்கு ஒரு அடிமையே..." என்ற ஆதிக்க கற்பிதங்களிலேயே ஊறித் திளைத்துப் பழகி விட்டோம். நமது வாழ்வியலின் முக்கிய ஊடகமான திரைத்துறைகளிலும் , "பொம்பளையா, ஒடுக்கமா, லட்சணமா இரு..." என்றே பெண்களை ஆதிக்கம் செய்யும் முன்னணி நட்சத்திரங்களை நாம் முன்மாதிரி நாயகர்களாக போற்றப் பழகிவிட்டோம்.

இத்தகைய ஆணாதிக்க மனோபாவங்கள் இந்தியாவில் மட்டும் தான் என்று சொல்லி விட முடியாது. வளர்ந்த நாடுகளிலும் இதுதான் பொதுவான நிலை. ஆங்கிலத்தில் "Sit like a lady" என்ற சொலவடை ஒன்று உண்டு. அதற்கு என்ன அர்த்தம்? ஆண்களைப் போல அல்லாமல் பெண்கள், பெண்களாகவே இருக்கப் பழகிக்கொள்ள வேண்டும் என்று பொருள் படும் "Sexist" வார்த்தைகள்தான் அவை. மேலே குறிப்பிடப்பட்ட ஊதிய வித்தியாசங்கள் அமெரிக்கா வின் 'PEW Research Center' என்ற அமைப்பினால் நடத்தப்பட்ட ஆராய்ச்சியின் முடிவுதான். எனவே அமெரிக்கா போன்ற நாடுகளிலும் இதே நிலைதான்.

என்ன காரணம்?

குழந்தை பிறப்புக்காகப் பெண்கள் எடுக்கும் விடுப்புகள் முக்கியமான காரணியாகக் கருதப்படுகிறது. மூன்று அல்லது ஆறு மாதங்கள் விடுப்பு எடுத்துக் கொண்ட பின்னர், வேலைக்குச் சேர்ந்தாலும், குழந்தைகளைப் பராமரிக்கும் பொறுப்பு பெரும்பாலும் பெண்களின் கடமையே என்று எழுதப்படாத வாழ்க்கை விதிகள் சமூகத்தில் விரவியிருப்பதால், குழந்தைகள் பெரியவர்களாகும் வரை, பெண்களால் தங்களின் ஆற்றலுக்கேற்ற பங்களிப்பை, தங்களது பணியிடங்களில் அர்ப்பணிக்க முடியாமல் போவதும் ஒரு முக்கிய காரணம். பொதுவாக ஆண்கள் பணிகளில் அதிக நேரம் செலவிடுவதைப் போல், பெண்களால் பொதுமைப்படுத்தப்பட்ட கருத்துக்களாலும், பணிக்கு அமர்த்தப்படும்பொழுதே, சற்று குறைவாகவே ஊதிய விகிதங்கள் நிர்ணயிக்கப்படுகிறது என்றும் சொல்லலாம். ஆனால் பெண்கள் மீது உளவியல் மற்றும் கலாச்சார ரீதியாகத் திணிக்கப்படும் குடும்ப பொறுப்புகளை வசதியாக மறந்து விடுகின்றோம்.

ஆங்கிலத்தில் "breaking the glass ceiling" என்ற சொலவடை உண்டு. கண்ணுக்குப் புலப்படாத தடைகள் அனைவருக்கும் பொது. ஆனால் அது பெண்களுக்கு மிக அதிகம். அந்த தடைகளைத்

தாண்டி வெற்றியடைவது, ஆண்களை விட பெண்களுக்குக் கடினமாக இருக்கிறது என்பதும் ஒரு காரணம்.

எப்படி இந்த பாகுபாடுகளைக் குறைப்பது?

பல ஆண்டுகளுக்கு முன்பு, தமிழக அரசால் கொண்டு வரப்பட்ட, பெண்களுக்குச் சொத்தில் சம பங்கு ஒரு முக்கியமான நடவடிக்கை. இந்தியா போன்ற நாடுகளில், திருமணத்துக்குப் பின், பெண்கள் கொண்டு வரும் சொத்து, சீதனங்கள் போன்றவைகளால், இந்தப் பொருளாதார வேறுபாடுகளைக் களைய முற்பட்டாலும், முற்றிலும் குறைத்து விட முடியவில்லை. ஏனெனில் அவ்வாறு பெறும் சொத்துக்களை நிர்வகிக்கும் சுதந்திரம் பெண்களுக்கு எளிதாகக் கிடைத்து விடுவதில்லை.

பவ்வேறு காரணங்களால் ஊதிய பணிகளுக்குச் செல்ல இயலாத பெண்களுக்கு, தமிழக அரசால் செப்டம்பர் 2023-இல் அறிமுகப்படுத்தப்பட்ட உரிமைத் தொகை வழங்கும் திட்டம், இந்த வேறுபாடு களைக் குறைக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகளில் ஒரு முக்கியமான மைல்கல் எனவும் கண்டிப்பாகச் சொல்லலாம்.

மேலே சொல்லப்பட்டவைகள் சிறு சிறு முயற்சிகளே தவிர, அவைகள் ஆண் - பெண் பொருளாதாரச் சமத்துவத்தைக் கொண்டு வந்துவிடுமென்று சொல்லி விடமுடியாது. அந்நிலை அடைவதற்கு, ஒரு சமூகப் புரட்சி உருவாக வேண்டும். அப்புரட்சியில் குடும்பங்கள், வணிக நிறுவனங்கள், அரசாங்கங்கள், பொதுமக்கள் என, சமூகத்தின் அனைத்து பங்குதாரர்களும் மனமுவந்து பணியாற்றினால் தவிர, இத்தகைய வேறுபாடுகள் தொடர்ந்து கொண்டே இருக்கும் என்பதே மறைக்கமுடியாத உண்மை!

◆

சங்க கால இலக்கியத்தில் புளிச் சோறு

டி வி ராதாகிருஷ்ணன்

பள்ளிகளுக்கு கோடை விடுமுறை விட்டாயிற்று. தாத்தா சுந்தரேசனும் பாட்டி ஜானகியும் மும்பையில் இருக்கும் தன் மகள் வீட்டிற்கு செல்ல திட்டமிட்டனர்.

அவர்களுடன், அவர்களது மகன் ராமனும் அவனது மனைவியும் இரு குழந்தைகளும் போவது என தீர்மானமானது. சுந்தரேசன் மனைவியிடம் சொன்னார் "ஜானகி, நாம் மும்பை மெயிலில் போறோம். இரண்டு இரவு, ஒரு முழு பகல். ஆகவே நாம டிரெயினில் சாப்பிட இட்லி, புளியோதரை, தயிர் சாதம் ஆகியவற்றை பொட்டலங்களாக தயார் பண்ணி வைச்சுக்கணும்" என்றார்.

அப்போ பேரனும் பேத்தியும் "ஏன் தாத்தா, நாம அங்கங்க ஸ்டேஷன்ல கிடைக்கறதை சாப்பிடலாமே?" என்றனர்.

அதற்கு தமிழ்ப் பேராசிரியராய் பணியாற்றி ஓய்வு பெற்ற தாத்தா சொன்னார் "புளியோதரையும், தயிர் சாதமும் பயணத்தில் சாப்பிட எடுத்துச் சென்றால் கெட்டும் போகாது, உடம்புக்கும் நல்லது. சங்க இலக்கியங்களில் கூட புளியோதரையின் பெருமை சொல்லப்பட்டுள்ளது. அதை சொல்றேன் கேளுங்க" என ஆரம்பித்தார்.

டி வி ராதாகிருஷ்ணன்

கோவிலில் பிரசாதமாக கொடுக்கப்படும் புளியோதரை, சுவையானது. அந்த நாட்களில் பயணம் செய்பவர்கள் வழியில் பசிக்கும் வேளையில் உண்டு பசியாற புளிச்சோற்றினை துணியில் கட்டி எடுத்துச் செல்வது வழக்கம். அதனால் அதனைப் பொதி சோறு, கட்டுச் சோறு என்றும், ஆற்றுணா என்றும் அழைத்தனர். ஆற்றுணா என்பது வழிநடை உணவு (ஆறு-வழி). கட்டுச் சோற்றின் சிறப்பு என்னவென்றால், குறைந்தது இரண்டு நாட்கள் சுவை குன்றாமல் இருக்கும்.

சங்க காலத்தில் வேங்கட நாட்டை ஆண்டு வந்த புல்லி என்னும் மன்னனின் அரசாட்சியின் கீழ் வாழ்ந்து வந்த ஆயர்கள் தம் மாடுகளை மேய்ச்சலுக்கு ஓட்டிச் செல்லும் போது தம் உணவிற்காகப் புளிச்சோற்றை மூங்கில் குழாய்களில் அடைத்து எருதுகளின் கழுத்தில் மாட்டிக் கொண்டு செல்வது வழக்கம். அத்தகைய புளிச் சோற்றினை அப்பாதை வழியாக வரும் வழிப்போக்கர்களின் களைப்புத் தீரவும்

பசியாறவும் தேக்கிலைகளில் வைத்து பகிர்ந்து அளிப்பர் என்கிறது அகநானூறு (பாடல் 311)

"வருவழி வம்பலர்ப் பேணிக் கோவலர்
மழவிடைப் பூட்டிய குழாஅய்த் தீம்புளி
செவியடை தீரத் தேக்கிலைப் பகுக்கும்
புல்லி நன்னாட் டும்பர் செல்லரும்.."

(வம்பலர்-புதியவரான வழிப்போக்கர், மழவிடை-இளமையான எருது, கோவலர்- மாடு மேய்ப்பவர், செவியடை - பசியால் காது அடைப்பது, தீம்புளி-இனிய புளிச்சோறு)

சீவக சிந்தாமணி என்னும் இலக்கியம் அறத்தை வலியுறுத்தும் பொழுது எமன்

நம் உயிரைக் கவர்ந்து செல்லும் பாதையில் அறமானது பொதி சோறு போல உதவும் என்றுரைக் கின்றது.

"கூற்றங் கொண்டோடத் தமியே
கொடுநெறிக்கண் செல்லும் போழ்தில்
ஆற்றுணாக் கொள்வீர்..(கூற்றம் -எமன், ஆற்றுணா-கட்டுச்சோறு)

நாலடியார் எனும் நீதி நூலிலும் இக்கருத்து கூறப்பட்டுள்ளது..

"ஆட்பார்த் துழலும் அருளில் கூற்றுண்மையால்
தோட்கோப்புக் காலத்திற் கொண்டுய் மின்"
விதி முடிந்த ஆளைத் தேடி பார்த்து அவர் உயிரைக் கவர்ந்து செல்லும் எமன்
வரும் நேரத்தில் தோளில் கட்டுச் சோறு போல அறம் உதவும்.

பதின்மூன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்த பொய்யாமொழிப் புலவர். சீனக்கன்

என்னும் குறுநில மன்னருடன் நட்பில் இருந்தார். அவர் ஒருமுறை புலவருக்குபுளிச் சோறு அளித்து பசியாற்ற உடன் புலவர் அதைப் பாராட்டி பாடல்

பாடல் ஒன்று பாடினார்.

"அளிதொ ளுந்தொடை யாரை சைக்குமன்
ஒளிகொள் சீனக்கன் இன்றுவந் திட்டசீர்ப்
புளியஞ் சோறுமென் புந்தியிற் செந்தமிழ்
தெளியும் பொதெலாம் தித்தியா நிற்குமே"

(அளிதொளும் தொடை-வண்டுலவும் மாலை, அரசைக்குமன்-அரசூர்ப் பகுதிக்கு அரசன்)

தவிர்த்து, சோழ மண்டல சதகம் எனும் சிற்றிலக்கியத்திலும் இச்செய்தி சொல்லப்பட்டுள்ளது.

"பொய்யா மொழியார் பசிதீரப் புளியஞ்சோறு புகழ்ந்தளித்த
செய்யார் அரசூர்ச் சீனக்கர் செய்ததெவரும் செய்தாரோ?"

வள்ளலார் இராமலிங்க அடிகளும் தாம் பேரின்ப அமுதை நாடாமல் வாய்க்கு இன்பம் தரும் சித்திரான்னங்களை நாடியதாக வருந்திப் பாடியுள்ளார்.

"உடம்பொடு வயிறாய்ச் சருக்கரை கலந்த உண்டியே உண்டனன் பலகால்
கடம்பெறு புளிச்சோ(று) உண்டுளே களித்தேன்: கட்டுநல் தயிரிலே கலந்த
தடம்பெறும் சோற்றில் தருக்கினேன்: எலுமிச் சம்பழச் சோற்றிலே தடித்தேன்
திடம்பெறு மற்றைச் சித்தரச் சோற்றில் செருக்கினேன்" என்செய்வேன்? எந்தாய்!"

சித்திரான்னங்களில் இனிப்புச் சுவை கலந்த சோறு தலையாயது. என்றாலும் அதனை வயிறார உண்டு பசி தீர்த்தல் இயலாது. ஏனென்றால் ஓரளவிற்கு மேல் அது திகட்டிடும். புளிச்சோறு வயிறார உண்டு பசி தீர்க்கத்தோதானது. தெவிட்டாதது. அவ்வளவு ஏன்? உவமைகளுக்கு பிரசித்தமான குறுந்தொகையில் கூட தயிர் சாதமும், புளிக் குழம்பும் பற்றியும் சொல்லப்பட்டுள்ளது.

திருமணம் முடித்து கணவனோடு அவன் வீட்டிற்கு வந்து இருக்கிறாள் இளம் மனைவி. சிறிய வீடுதான் சமையலுக்கு விறகு அடுப்பு தான். அவன் வெளியே போய் இருக்கிறான். மதியம் உணவுக்கு வீட்டிற்கு வருவான்.

இளம் மனைவி அல்லவா?

அவளுக்கு சமைத்து அவ்வளவு பழக்கம் இல்லை. இருந்தாலும் ஆன்பு கணவனுக்கு சுவையான உணவை சமைத்து ருசியாக உணவளிக்க வேண்டும் என ஆசைப்படுகிறாள்.

கொஞ்சம் சாதத்தை

பாத்திரத்தில் போட்டு, அதில் தயிர் விட்டு அவளுடைய காந்தள் மலர் போன்ற விரலால் பிசைகிறாள். தயிர் சாதம் தயாராகி விட்டது.

இப்போது கையில் கெட்டித்தயிரில் தயிரில் இருந்த வெண்ணெயின் பிசுபிசுப்பு. கையைத் துடைத்து கொள்ள பக்கத்தில் துணி ஏதும் இல்லை. அதனால் கையைக் கழுவி தனது சேலையில் துடைத்து கொள்கிறாள். விறகு வேறு ஈரமாய் இருக்கிறது. அதனால் ஒரே புகை. அந்தப் புகை அடித்து அவள் உடல் முழுதும் புகை வாடை வருகிறது. முந்தைய நாள் இரவில் அவன் தனக்கு புளிக் குழம்பு பிடிக்கும் என்று சொன்னது அவளுக்கு ஞாபகம் வருகிறது. எனவே புளிக் குழம்பு செய்ய ஆரம்பிக்கிறாள்.

அந்த குறுந்தொகைப் பாடல்:

முளிதயிர் பிசைந்த காந்தண் மெல்விரல்
கழுவுறு கலிங்கங் கழாஅ துடீஇக்
குவளை யுண்கண் குய்ப்புகை கமழத்
தான் றுழந் தட்ட தீம்புளிப் பாகர்
இனிதெனக் கணவ னுண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன் றொண்ணுதன் முகனே.

பொருள்:

முற்றிய தயிரை பிசைந்த, காந்தள் மலரைப் போன்ற மெல்லிய விரலை சேலையில் துடைத்து கொள்கிறாள். இப்போது குவளை மலர் போன்ற கண்களை உடைய அவள் சமையல் செய்யும் போது ஏற்பட்ட அடுப்புப் புகை உடல் முழுதும் பட்டு வாசனை எழுப்ப புளித்தண்ணீரில் உப்பு, காரம் ஆகியவை சேர்த்து கொதிக்க வைத்து புளிக்குழம்பு தயார் செய்கிறாள். வீடு வந்த கணவன் நன்றாக இருக்கிறது எனறபடி உண்ண அவள் முகத்தில் மகிழ்ச்சி ஏற்படுகிறது

(காந்தள் மலர் போன்ற விரல், குவளை மலர் கண்கள் என்ன அழகான உவமைகள்)

தாத்தா சொல்லி முடித்து விட்டு, "என்ன பசங்களா, நான் சொன்னதிலிருந்து புளியோதரை, தயிர் சாதத்தின் மகிமை தெரிந்ததா?" என்று வினவ குழந்தைகளின் மெல்லிய குறட்டை ஒலி கேட்டது.

◆

எழுத்தாளர்களின் இணையதளங்கள்

தனது இணையதளங்களின் வழியாக வாசகர்களுடன் தொடர்ச்சியாக தொடர்பில் உள்ள எழுத்தாளர்கள் பட்டியல்

#	எழுத்தாளர்	இணையதளம்
1	அகர முதல்வன்	https://akaramuthalvan.com
2	சாரு நிவேதிதா	https://charuonline.com/blog/
3	ஷோபா சக்தி	https://www.shobasakthi.com/shobasakthi/
4	ஜா.தீபா	https://jadeepa.com/
5	எஸ்.ராமகிருஷ்ணன்	https://sramakrishnan.com
6	பவா செல்லதுரை	https://bavachelladurai.blogspot.com/
7	கார்த்திக் பாலசுப்ரமணியன்	https://karthik-balasubramanian.blogspot.com/
8	ஜெயமோகன்	https://www.jeyamohan.in/
9	என்.சொக்கன்	http://nchokkan.com/
10	அபிலாஷ்	https://thiruttusavi.blogspot.com/
11	இரா.முருகன்	https://www.eramurukan.in/
12	அ.முத்துலிங்கம்	https://amuttu.net/
13	பாவண்ணன்	https://writerpaavannan.blogspot.com/
14	பா.ராகவன்	https://writerpara.com/
15	முனைவர் மு.இளங்கோவன்	https://muelangovan.blogspot.com/

அனைவரும் வாரீர்!

வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவையும் கேரொலைனா தமிழ்ச்சங்கமும் (Raleigh, NC) இணைந்து நடத்தும்



38 ஆவது பேரவைத் தமிழ் விழா 2025

ஜூலை 3, 4 & 5, 2025

38TH FETNA TAMIL CONVENTION -2025 (RALEIGH, NC)

JULY 3, 4 & 5, 2025

பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் -சங்க இலக்கியச் சான்றுகள்

ராஜி வாஞ்சி, ஹூஸ்டன்,டெக்சாஸ்

ராஜி வாஞ்சி

"உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே;

உண்டி முதற்றே உணவின் பிண்டம்;" (புற 18) என்கிறது புறநானூறு.

உணவு, உடை, உறைவிடம் என்ற அடிப்படைத் தேவைகளில், உயிரைக் காக்கக்கூடிய 'உணவு' முதலிடத்தில் நிற்கிறது. ஆகவே தான்

இக்கருத்தை முன்னிறுத்துகிறது இச்சங்கப்பாடல். தமிழ் இலக்கியங்கள் ஈகையையும், கொடையையும் கொண்டாடி பல தலைமுறைகளைக் கடந்தும் காத்து நிற்கிறது. மேலும் கலை, இலக்கியம் வழியாக உணர்த்தி மரபணுக்களின் வழியாக பரவச் செய்கிறது.

சங்க இலக்கியம் தொட்டு நவீன இலக்கியத்தின் முன்னோடி என்று கருதப்படும் பாரதி வரை இந்த நீட்சியை நாம் காண முடிகிறது. இதன் சான்றுதான், "தனி ஒரு மனிதனுக்கு உணவில்லை எனில் - இச்சகத்தினை அழித்திடுவோம்" என்ற பாரதியின் குரல். சமத்துவத்தின் தொடக்கம் ஈகையாகும். ஈகையில் சிறந்தவனை, தமிழ் இலக்கியங்கள் ஏற்றமாகப் பாடி, நிலைத்த பதிவுகளாகக் கல்வெட்டாக்கி மனித மனப்பரப்பிலும் பதியம் போட்டு வைத்துள்ளன.

வேந்தர்களும், பெருநிலக்கிழார் களும் வாரி வாரிக் கொடை அளித்தனர் என பழம்பெருமை பேசினால் பிறர் நம்மை கேலி பேச வழியுண்டு.

ஆனால் உணவுத் தட்டுப்பாடு தலைவிரித்தாடும் காலத்தில், தன் கையில் உள்ள ஒற்றை ரொட்டித் துண்டை கடும்பசியில் இருக்கும் ஒருவன், அவனை விட கொடும்பசியில் இருப்பவனுக்கு பகிர்ந்து கொடுக்கும் நொடிதான் 'ஈகை' உன்னத உயரம் தொடும் நேரம். சமத்துவத்தின் முதல் மூச்சுத் தொடங்கும் கணம்.

இத்தகைய சிறந்த சங்கப்பாடல்களை அடையாளம் காணுவோம்.

உணவில் சமத்துவம்

ஆதி குடிகள், இனக்குழுக்களாய் வேட்டையாடி வாழ்ந்து வந்தனர். நிலவுடைமை கருத்தத் தோன்றாத கனிவான காலமது. ஆநிரைகளையும், காட்டு விலங்குகளையும் வேட்டையாடி, "பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்" என்பது அன்றாட நடைமுறையில் இருந்துள்ளது. இதற்குப் பல பாடல்கள் சான்றாக உள்ளன.

குறிஞ்சித்திணையைச் சேர்ந்த கானவன் பகிர்ந்துண்ணும் பாங்கினை வெளிப்படுத்துகிறது. நற்றிணையின் 85-ஆம் பாடல். உணவு என்ற அடிப்படைத் தேவையை தன்னைச் சார்ந்த அனைத்து மக்களும் பெற வேண்டுமென்ற அவனுடைய எண்ணம் சமத்துவத்தை ஆழமாக பதிவிடுகிறது.

அவன், தான் வேட்டையாடி வந்த முன்னம்

பன்றியை, தன் மனைவியாகிய கொடிச்சியிடம் தந்து பக்குவப்படுத்தி தன் குடிகளுக்கு பகிர்ந்து உண்ணத் தரச் சொல்கிறான்.

"கானவன் எய்த முளவு மான் கொழுங் குறை,
தேம் கமழ் கதுப்பின் கொடிச்சி, கிழங்கொடு
காந்தள்அம் சிறுகுடிப் பகுக்கும்" (நற் 85)

அவள், பக்குவப்படுத்திய முள்ளம்பன்றியுடன், தான் பறித்து வந்த கிழங்குகளையும் தம் குடிகளுக்கு பகிர்ந்தளித்தாள் என்கிறது நற்றிணை.

அதியமானைப் பற்றி பேசும் போது அவ்வை,

"சிறுசோற் றானும் நனிபல கலத்தன் மன்னே;
பெருஞ்சோற்றானும் நனிபல கலத்தன் மன்னே;"
(புற 235) என்கிறார்.

சிறிதளவு சோறு இருந்தாலும்கூட அதை மிகப் பலரோடும் பகிர்ந்து உண்பான். அதிகமான அளவில் சோறு இருந்தால், அதையும் மிகப் பலரோடு பகிர்ந்து கொள்வான். அத்தகைய அன்பானவனின் மார்பைத் துளைத்த வேல், அவன் மார்பையா துளைத்தது?

அவன் மார்பைத் துளைத்த வேல், பாணர் கூட்டத்தினரின் அகன்ற பாத்திரங்களை ஊடுருவித் துளைத்தது; அவனை அண்டி இரந்தோரின் கைகளையும் துளைத்தது; அவனின் பாதுகாப்பில் தோய்ந்திருந்த சுற்றத்தின் கண்ணொளியை துளைத்தது; கூர்த்த அறிவுடன் கோர்த்த மாலையாய் சொல் படைத்த புலவர்களின் நாவைத் துளைத்தது என அவ்வையார் அரற்றுகிறார்.

இசைக்கலைஞர்களான பாணர் கூட்டமொன்று, வன்பரணர் என்ற புலவரின் தலைமையில், பல கடினமான வழிகளையும் நிலைகளையும் கடந்து காட்டில் ஒரு பலா மரத்தடியில் களைத்துப் போய் உணவிற்கு வழியின்றி தவித்துக் கொண்டிருந்தது. அப்போது அவ்வழியே வந்த கண்டீரக் கோப்பெரு நள்ளி என்ற சிறுகுடித் தலைவனுக்கு தன்னுடன் வந்த இளைஞர்கள் வழி தவறி காட்டிற்குள் அலைந்து கொண்டிருந்த நிலையில், பசித்து களைத்த மக்களை மேலும் பசியால் வாடவிடுதல் அறமல்ல என்ற எண்ணம் மேலோங்கியது. தன் உதவியாளர்களுக்காகக் காத்திருக்காமல், தானொரு சிறுகுடித் தலைவன் என்று எவ்விதப் பெருமித எண்ணமும் இல்லாமல் தானே தன் கையால், தான் வேட்டையாடிய உணவை பக்குவப்படுத்தி அளித்தான் என்பது நாம் சங்க இலக்கியம் மூலம் (புறம் 150) அறியும் செய்தி. இவ்வகை இலக்கியத் தகவல்கள் தான், 'சமத்துவம்' நம் தமிழ் மக்களின் இரத்தத்திலேயே ஊறிக் கிடக்கிறதோ என எண்ணச் செய்கிறது.

"தான்ஞெலி தீயின் விரைவனன் சுட்டு, நின்
இரும்பேர் ஒக்கலொடு தின்மெனத் தருதலின்
அமிழ்தின் மிசைந்து காய்பசி நீங்கி " (புறம் 150)

உணவும் அளித்து விட்டு, தான் யார் என்ற அடையாளத்தை கூட அறியத் தராமல் சென்றான் என்பதுதான் சிறப்பிலும் சிறப்பாகும்.

வளம் மிகுந்த காலத்தில் வாரி வழங்கிய இச்சிறுகுடித்தலைவர்கள், உணவுதட்டுப்பாட்டினால் வறுமையுற்ற காலத்திலும் தங்கள் குடிகளை காக்கும் பொறுப்பினை ஏற்றனர். தம் குடியின் பசி போக்க, விதைப்பதற்காக வைத்திருந்த தினையை மக்களுக்கு பகிர தயங்கியதில்லை என்கிறது "குரல்உணங்கு விதைத்தினை உரல்வாய்ப் பெய்து" (புற 333) என்ற சங்கப்பாடல். நெய்தல் நிலத்திலும் சமத்துவம் நிலவியதை அகநானூற்றுப் பாடல்கள் கூறுகின்றன.

அழகிய தொண்டி நாட்டில், தாங்கள் பிடித்து வரும் மீன்களை மணலில் பரப்பி ஊருக்கெல்லாம் பங்கிட்டுத் தரும் தொண்டி என 'ஈகை' என்ற பண்பையே அழகு என்று சங்க இலக்கியம் குறிப்பிடுகிறது.

"மோட்டு மணல் அடைகரைக் கோட்டுமீன் கெண்டி,
மணம் கமழ் பாக்கத்துப் பகுக்கும்
வளம் கெழு தொண்டி அன்ன இவள் நலனே". (அகம் 10)

இரும் புலாக் கமழும் சிறுகுடிப் பாக்கத்துக்
குறுங் கண் அவ் வலைப் பயம் பாராட்டி,
கொழுங் கண் அயிலை பகுக்கும் துறைவன் (அகம் 70)

அயிலை மீன் வேட்டை நன்றாகக் கிடைத்ததால், அவற்றை தம் பாக்கத்திலுள்ள மக்களுக்கெல்லாம் பகிர்ந்தளித்தனர் பரதவர் என்ற செய்தி அகநானூறு 70-இல் கூறப்படுகிறது.

முடிவுரை

தாம் வறுமையில் இருந்தாலும், பெற்ற பிள்ளைகளுக்கு எப்படியாவது உணவு தந்து விட வேண்டுமென்பதை அனைத்து உயிரினங்களும் உள்ளுணர்ச்சியாகக் கொண்டுள்ளன. அந்நிலைக் கடந்து, தம்மைச் சார்ந்த குடிமக்களும் தம் மக்களே என்ற பார்வை விரிவு ஏற்படும்போது தான் சமத்துவம் பிறக்கிறது. அன்றைய அகண்ட மனச் சூழல்தான், "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற சமத்துவச் சொற்றொடரை சங்க இலக்கியத்திற்கு சொந்தமாக்கியதோ?

◆

தொல்காப்பியக் கந்தழி

நா. மம்மது தமிழிசை ஆய்வாளரும், எழுத்தாளரும்.

கொடிநிலை, கந்தழி, வள்ளி என்ற
வடுநீங்கு சிறபபின் முதலான மூன்றும்' - தொல்காப். புறத்.33

என தொல்காப்பியம் கூறும் "கந்தழி " என்ற சொல் குறித்த சிறு ஆய்வு.

பொருள் விளக்கம் :-

"கந்தழி" என்ற இந்தச் சொல் தொல் காப்பியம், புறப் பொருள் வெண்பா மாலை. இன்னிலை, காளிதாசனின் விக்கிரம ஊர்வசியம் ஆகியவற்றில் வருகிறது

கந்து + அழி ---› கந்தழி

1. கந்து - தூண், கடவுள்; கந்து - கந்தன் கந்தன் பள்ளி கடவுளாக்கு எல்லாம் - சிலம்பு. 11:5
2. அழி = பெருகுதல்
3. கந்து - பெண் புழையின் ஒரு பகுதி
4. கந்தவாரம் - அந்தப்புரம்
5. கந்தழி - கடவுள் மீதும், விரும்பியவர் மீதும் காமம் கொளல்

'காமப் பகுதி கடவுளும் வரையார்' - தொல்காப்பியபுறத். 8.3

'காமப்பொருளாகப் பாடாண் பாட்டின் கண்' இளம் பூரணர் உரைப் பகுதி (தொல்காப்பியபுறத். இயல்பற்றி)

கருதுகோள் 1 - கந்தழி ஒரு தாவரம்

காளிதாசனின் நாடகம், விக்கிரம ஊர்வசியத்தை சான்றாகக் கொண்டு கந்தழி என்பது ஒரு தாவரத்தைக் குறிப்பதாக்கொள்ளலாம். தொல்காப்பியத்தில் உடன் வரும் "கொடிநிலை" என்ற சொல் தாவரத்தைக் குறிப்பதுவும் "வள்ளி " (கிழங்கு வகை)

நா.மம்மது

என்ற சொல்லும் தாவரத்தைக் குறிப்பதுவும் இக்கருதுகோளுக்கு வலு சேர்க்கிறது.

கருதுகோள் 2 - கந்தழி ஒரு கூத்து

தொல்காப்பியத்தில் கூத்து என்ற சொல் இல்லை. கூத்து என்பதற்கு நிலைஎன்றசொல்லைத்தொல்காப்பியர் ஆளுகின்றார்.

சான்று: துடிநிலை, கொற்றவை நிலை, கழல் நிலை, பாலை நிலை விளக்கு நிலை போன்றவை. எனவே கொடிநிலை என தொல்காப்பியம் குறிப்பது ஒரு வகை கூத்தாகவே இருக்கவேண்டும்.

வள்ளி என்ற சொல்லும் வாடா வள்ளி - வள்ளிக்கூத்து (நச்சர், அடியார்க்கு நல்லார்) என்ற ஒருவகை கூத்தைக் குறிப்பதாகக் கொள்ளலாம் .

மாண்டமார் அட்டமறவர் குழாத்திடைக்
கண்டா முருகனும் கண்களித்தான்- பண்டே
குறமகள் வள்ளிதன் கோலங் கொண்(டு) ஆடப்
பிறமகள் நோற்றாள் பெரிது.'
- சிலம்பு. (12 :7) அடியார்க்கு மேற்கோள் பாடல்

எனவே "கந்தழி" ஒரு கூத்தாகவே இருக்கவேண்டும்.

கருதுகோள் 3 - கந்து + அழி (பெருக்கம்)

கந்து என்பது காமம் சார்ந்த சொல். எனவே, காமப்பெருக்கம் குறித்த ஓர் அகநாடகமாக 'கந்தழி' முன்னாளில் ஆடப்பட்டிருக்கவேண்டும்.

கொடிநிலை, கந்தழி, வள்ளி என மூன்றையும் ஒரு சேர தொல்காப்பியம் கூறுவதால் இவை முன்நாடகங்களாகலாம்.

◆

வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையின்
37 ஆவது தமிழ் விழா சிறக்க வாழ்த்துகள்!

கதிர்வேல் குமாரராஜா
மற்றும் குடும்பத்தினர்

வள்ளலாரின் சன்மார்க்கம் (1823-1874)

சரஸ்வதி மூர்த்தி ஹூஸ்டன்,டெக்சாஸ்

வள்ளலார் என்று அழைக்கப்படும் இராமலிங்க அடிகள், ஆங்கிலேயே காலனி ஆட்சியில் வாழ்ந்தவர். ஆனால் வள்ளலாரின் வாழ்க்கையில் அரசியல் தாக்கமே இல்லை. இளமையில் சைவக் குடும்பத்தின் அடிப்படையில் இறைப்பற்றும், வாலிபத்தில் கருவிலே திருவுடையவராய் தமிழ், வடமொழி நூல்களை நன்கு படித்தவராய், நிறைய நண்பர்கள் சூழ்ந்தவராக இருந்திருக்கிறார்.

சரஸ்வதி மூர்த்தி

"அமெரிக்கா வானமா? ஐரோப்பிய வானமா?
குருதிவாடை கொப்பளிக்கும் ஈழத்து வானமா?
எதன் கீழ் உனது இரவு வருவதாயினும்
வட்ட நிலாவின் உள்ளிருந்து இரக்க ஒளியாய்
இறங்கி வருகின்றார் வடலூர் வள்ளலார்"

என்று கவிஞர் ஈரோடு தமிழன்பன் ஐயா அவர்கள் வள்ளலாரின் உயிர் இரக்க சன்மார்க்கத்தை உலகுக்கு அறிமுகப்படுத்துகிறார்.

இளமையிலேயே இவருடைய குடும்பத்தினரும் சென்னை திருவெற்றியூர் மக்களும், இவருடைய அருள் திறனை அறிந்துகொண்டனர். வாலிப வயதில் இல்லறம் துறந்து சிதம்பரம் வந்தார். சிதம்பரத்தில் தீட்சிதர்களின் வழிபாடு இவர் மனதிற்கு இசைவாக இல்லை, ஆனால் அவர் விமர்சிக்கவுமில்லை. பிறந்த ஊரான மருதூருக்கு வந்து (கடலூருக்கு பக்கத்தில்) தங்கி ஒத்த நண்பர்களுடன் சத்விசாரம் செய்வதற்காக 1865-இல் சங்கம் அமைத்தார். இளமையிலேயே பக்தி உணர்வோடு, இவருக்கு சமுதாய உணர்வு மேலோங்கி இருந்திருக்கிறது.

முருகனை வணங்கும் போதும் கூட, 'எவ்வுயிர்க்கும் உறவோங்கும் நின்பதம் என் உள்ளம் ஓங்க வேண்டும்' என்று உயிர் இரக்கத்தை முன்வைத்துதான் பாடுகிறார். உயிர் இரக்கம்தான் (சீவகாருண்யம்) வள்ளலாரின் அடிப்படை இறைவழிபாடு. அதனைத்தான் "எல்லா மதங்களிலும் உள்ள உண்மை ஒன்றே" என்பதைக் குறிக்கும் வண்ணம், இவர் தோற்றுவித்த மார்க்கத்திற்கு "சர்வ சமய சமரச சுத்த சன்மார்க்க சங்கம்" என்று பெயரிட்டார்.

உலகில் போரிடும் நாடுகள் வன்முறையை விட்டு பகைமை மறந்து உயிர் இரக்கத்துடன் நல்லபடி வாழக் கூடாதா என்றுதான் நாமும் விரும்புகின்றோம்.

பல்வேறு வகையான சுயநல கொள்கைகளுக்கும் ஊடாக, உலகில் உயிர் இரக்கத்தின் உன்னத உயிர்ப்புத் தன்மைதான் உலகப் பெரும் போர்களைத் தடுத்துக் கொண்டிருக்கின்றது.

உயிர் இரக்கம்தான் வள்ளலாரின் சன்மார்க்க நெறிக்கு அடித்தளமாகும். "தாயினும் சிறந்த தயாவான தத்துவனே" என்று மணிவாசகப்பெருமானின் அடியொற்றி, ஈன்ற தாய், காக்கும் தந்தையின் அன்பை அழகாக எடுத்துக்காட்டி சாதாரண மக்களுக்கும் "அன்பே கடவுள்" என்ற அழகான தத்துவத்தை சித்தர் திருமூலர் போல விளக்கிக் காட்டி சமரச சன்மார்க்க நெறியை வளர்த்தார்.

இளமையில் பக்தி நெறியில் பாடிய பாடல்களில் கூட தீய ஒழுக்கங்களில் ஈடுபட்டோர் அவற்றினின்று விடுபட்டு பிணியின்றி நல்வாழ்வு வாழ வேண்டுமென்று வைத்தியநாதரிடம் வேண்டுகின்ற மனிதநேயம் மனத்தை சிலிர்க்க வைக்கின்றது. இளமையில் மொட்டாக இருந்த சமுதாய சீர்திருத்தக் கருத்துக்கள், பின்னாளில் மலர்ந்து, சுகந்த மலர்களாக மணம் பரப்புகின்றன. தேவையற்ற சாதி, சமய தத்துவங்களை சாடிய புரட்சிவாதியாக ஓங்கி எழுகின்றார்.

"குலத்திலே சமயக் குழியிலே நரகக்
குழியிலே குமைந்துவீண் பொழுது போக்க வேண்டாம் "

என்று சாடுகின்றார். தமிழ்ச் சமுதாயத்தில் வேதங்களாலும், ஆகமங்களாலும் வலிந்து திணிக்கப்பட்ட ஒவ்வாத பழக்கங்களை ஒழிக்க வேண்டும் என்று கூறி புராணங்களை ஒதுக்குகின்றார்.

கடலூர் மாவட்டத்திலுள்ள வடலூர் பக்கம் கடுமையான பஞ்சம் நேர்ந்த பொழுது, கஞ்சித் தொட்டி அமைத்து தர்மசாலை தொடங்கினார். அது மக்கள் இயக்கமாக மாறி மக்கள் பல ஏக்கர் பரப்புள்ள இடத்தை வள்ளலாருக்கு வழங்கினர். அங்குதான் 1872-இல் ஞானசபை கட்டப்பட்டது. பசி பிணி நீக்குதற்கும், சீர்திருத்த முறையில் ஒளி இறைவழிபாடு செய்வதற்கும் உரிய அறிவுத்திருக்கோயில் உருப்பெற்றது.

வடவர் ஆதிக்கமுள்ள சிலை, சடங்கு, சம்பிரதாயம், திருவிழா, வணிகம் தொடர்புடைய வழிபாடின்றி ஒளி வழிபாட்டை தோற்றுவித்தார். அது மக்களைக் கவர்ந்தது. வள்ளலாரின் வளர்ச்சி கண்டு பொறாமை கொண்டு அவர் மீது எதிரிகள் பொய் வழக்கு தொடுத்தனர். அப்போதிருந்த ஐரோப்பிய நீதிபதியே வள்ளலாரின் தகைமையை உற்று உணர்ந்து, அவருடைய பாடல்களுக்கு 'திருவருட்பா' என்று பெயரிட்டது சரியே என்று தீர்ப்பளித்தார். இச்செய்தி ஆவணப்படுத்தப்பட்டுள்ளது என மா.பொ.சிவஞானம் அவர்கள் எழுதிய "வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு" என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். இந்நூல் சாகித்திய அகாடமி விருது பெற்ற பெருமையுடையது. நிறைவாக, சமூக, ஆன்ம சீர்திருத்தங்களுக்கு உரைநடையே சிறந்தது என்ற முதன்முறையாக உரைநடை எழுதத் தொடங்கியவர் வள்ளலார். இந்திரிய ஒழுக்கம், கரண ஒழுக்கம், சீவ ஒழுக்கம், ஆன்ம ஒழுக்கம் என்னும் நான்கு முறைகளில் சமரச சன்மார்க்கத்தை விளக்கி

சங்கங்கள் ஏற்படுத்தினார். இந்த நான்கு வகைகளிலும் ஒழுக்கத்தை கடைப்பிடித்தாலே "வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வமாகலாம்" என்பதுதான் சமரச சன்மார்க்கத்தின் சாரம். புலால் தவிர்க்க முடியாதவர்கள், மனித நேயத்தையாவது முற்றிலும் பேணி மனித சமுதாயத்தை பண்படுத்த வேண்டும் என்பதுதான் இப்போதைய வள்ளலார் மன்றங்களின் கொள்கையாகும். அந்த வகையிலேதான் வள்ளலாரின் அன்புச் சீடரான வேதாத்திரி மகரிஷியும் அறிவுத் திருக்கோயில் தொண்டைச் செய்தார்.

வள்ளலாரின் "மரணமிலாப் பெருவாழ்வு" பற்றி கருத்து மிக முக்கியமானது. அது சாவைத் தடுக்கும் அற்புதமன்று. வள்ளலார் காலத்திலேயே இது பெரிய வதந்தியாகி செத்த பிணங்களை வள்ளலாரிடத்துக் கொண்டு வந்தனராம். அவரே, "செத்தாரை எழுப்ப இயலாது. நம் தவறுகளால் ஏற்படும் செயற்கைச் சாவை தவிர்க்கலாம்" என்று அறிக்கை விடுத்துள்ளார்.

இப்பொழுது விஞ்ஞானத்தால் வளர்ந்துள்ள நலவாழ்வைத்தான் "மரணமில்லா பெருவாழ்வாக" வள்ளலார் விவரித்துள்ளார். மொத்தத்தில் தீயொழுக்கம் நீங்கி நல்லொழுக்கம் மேற்கொண்டால் நல வாழ்வு அமையும். வையகமும் வளமாகவும், நலமாகவும் வாழும். வள்ளலாரை அற்புதங்கள் செய்யும் சித்தராக காட்ட வேண்டியதில்லை. சிறந்த சமூக சீர்திருத்தவாதி, தேவையற்றவற்றை மறுத்து ஒதுக்கும் மனப்பான்மை உடையவர், அன்புநெறியே சிவநெறி எனக் கொண்டவர். சத்துணவு, நல்ல மருந்துகள் இவற்றை ஆராய்ந்து மக்களுக்கு அறிவுறுத்திய அன்பாளர். மக்களுக்காக ஒழுக்க நெறிகளை வழங்கிய வள்ளல் என்றினைய கருத்துக்களை நினைவில் கொண்டு வாழ்வாங்கு வாழ்வோம்.

◆

வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையின் 37 ஆவது தமிழ் விழா சிறக்க வாழ்த்துகள்!

மனோகர் வெங்கடாசலம்

மற்றும் குடும்பத்தினர்

FeTNA'S INTERNATIONAL TAMIL ENTREPRENEURS NETWORK
PRESENTS

FiTeN
FeTNA International Tamil Entrepreneur Network

GLOBAL TAMIL ENTREPRENEURS SUMMIT

SIDD AHMED

PRESIDENT AND CEO
VDART GROUP OF COMPANIES

EMPOWERING EMERGING ENTREPRENEURS, FOSTERING TECHNOLOGY AND INNOVATION

HENRY B. GONZÁLEZ CONVENTION CENTER,
SAN ANTONIO, TEXAS

04 JULY 2024

09.00 AM (CDT) [Conference Start Time]

To Register: https://register.fetna-convention.org

www.fiten.org | www.satamilsangam.org | www.fetna-convention.org | fitenchair@fetna.com

ஜப்பானிய ஹைக்குவின் வரலாறு

ச. கமலக்கண்ணன், ஆசிரியர், வரலாறு டாட் காம் (www.varalaaru.com), தோக்கியோ, ஜப்பான்

ச. கமலக்கண்ணன்

ஹொக்கு (Hokku). இதுதான் ஹைக்கூ (Haiku) என்று 19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் புலவர் மஸாவொகா ஷிகி (Masaoka Shiki) அவர்களால் பெயரிடப்பட்ட பாவகையின் மூலப்பெயர். கி.பி 1356-இல் புலவர் நிஜோ யொஷிமொதோ (Nijou Yoshimoto) என்பவர் ரெங்கா (Renga ரென் - தொடர், கா - கவிதை) எனும் தொடர் கவிதை வடிவத்தை உருவாக்கினார். ஒரு கவிதையின் ஒவ்வொரு கண்ணியையும் ஒவ்வொரு கவிஞர் எழுதும் முறை இது. அந்தாதி போல முதல் கண்ணி முடியும் சீரை வைத்து அடுத்தகண்ணிதொடங்கவேண்டும் என்ற அவசியமில்லை. பொருள் தொடர்ச்சி இருந்தால் போதும். நம் கலிப்பாவில் தரவு, தாழிசை, சுரிதகம் என்று இருப்பதுபோல இந்த ரெங்காவிலும் ஹொக்கு (Hokku), வகி (Waki), தாய்சான் (Daisan), அகேகு (Ageku), கோக்யோ (Kougyou) என அடுக்கப்பட்டிருக்கும்.

நமது சங்கப்பலகை போல ரெங்கா கூடல்களும் அக்காலத்தில் நடைபெற்றுள்ளன. பல கவிஞர்கள் சேர்ந்து ஆளுக்கொரு கண்ணியாக இயற்றியிருக்கிறார்கள். முதலில் நிஜோ அவர்கள் தொகுத்தது ஏற்கனவே இயற்றப்பட்ட பாடல்களைத்தான் பின்னர் காலப்போக்கில் விருந்துகளிலும் ஒன்றுகூடல்களிலும் விளையாட்டாகவும் போட்டியாகவும் அரங்குகளில் உடனடி ரெங்கா இயற்றும் முறை தொடங்கியது.

சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்டவர் முதல் கண்ணியான ஹொக்கூவை 5-7-5 என்ற சீர்க்கணக்கில் மூன்றடிக் கண்ணியாக இயற்றுவார். இதிலேயே பாடுபொருள் வெளிப்படுத்தப்பட்டுவிடும். நிகழ்வுக்கு அழைப்பு விடுத்தவர் இரண்டாவது கண்ணியான வகியை 7-7 என்ற ஈரடிக் கண்ணியாக இயற்றுவார். இவ்விருவர்க்கு அடுத்து வயதில் மூத்தவர் தாய்சான் எனப்படும் மூன்றாம் கண்ணியை மீண்டும் 5-7-5 என்ற சீர்க்கணக்கில் இயற்றுவார். அடுத்து வரும் அகேகுவும் கோக்யோவும் இதே சீர்க்கணக்கில்தான் அமையும்.

ஹொக்கூ, வகி, தாய்சான் ஆகியவை ஒரு ரெங்காவுக்கு ஒன்று மட்டுமே பயின்றுவரும். அகேகு மட்டும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவை அமையும். பாடலின் நீளத்தைத் தீர்மானிப்பது

இவற்றின் எண்ணிக்கைதான். இந்த அகேகுவின் இறுதிச்சீரானது அடுத்த கவிஞர் அடுத்த கண்ணியை இயற்றுவதற்கு ஏதுவாக இறந்தகால வினையெச்சமாக இருக்கவேண்டும். இதுவும் சீர்க்கணக்கும் மட்டுமே இப்பாவகையின் இலக்கணங்கள். கோக்யோ இறுதிக் கண்ணியாதலால் இதுவும் ஒன்று மட்டுமே வரும். தொடர்கவிதையை முடித்துவைக்கவேண்டும் என்பதால் இந்தக் கோக்யோவை இயற்றுவதுதான் மிகவும் கடினம் என்பார்கள்.

இப்பாவகை 14-ஆம் நூற்றாண்டிலிருந்து இலக்கியத்தில் இடம்பெற்றாலும் கி.பி 6-ஆம் நூற்றாண்டிலேயே ஹொக்கூவையும் வகியையும் உள்ளடக்கிய தான்கா (Tanka) வகைப்பாடல்கள் 5-7-5-7-7 என்ற ஐந்தடிக் கண்ணிகளாக இயற்றப்பட்டு வந்தன. மான்யோஷூ (Manyoushu பத்தாயிரம் ஏடுகளின் தொகுப்பு), ஹ்யாக்குநின் இஷ்ஷு (Hyakunin Isshu நூறு புலவர்கள் நூறு பாக்கள்) ஆகிய முற்கால இலக்கியங்களில் இவை இடம்பெற்றிருக்கின்றன. இந்தத் தான்காதான் இதுவரை இயற்றப்பட்ட மிகச்சிறிய ரெங்கா ஆகும். ரெங்கா கூடல்களுக்குச் சுவைகூட்ட வேண்டிப் பல புதுமைகளும் இதில் புகுத்தப்பட்டன. உதாரணமாக ஜப்பானிய அரிச்சுவடியின் 46 எழுத்துக்களில் தொடங்கும் 46 கண்ணிகளைக் கொண்ட ரெங்கா இயற்றும் முறையைக் கூறலாம். மிகப்பெரியதாக நூறு கண்ணிகளைக் கொண்ட ரெங்காக்கள் வரை இயற்றப்பட்டிருக்கின்றன.

இந்த ரெங்கா விளையாட்டின் பக்கவிளைவாக இன்னொரு விபரீதமும் நடந்தது. ஏற்கனவே இலக்கியங்களில் இருக்கும் ஏதோவொரு அடியை முதலடியாகக்கொண்டு அடுத்த அடியை இவர்கள் எழுதுவது. திருக்குறளில் இருக்கும் முதல் அடியை எடுத்துக்கொண்டு இரண்டாம் அடியை நாமே எழுதுவது போன்றது. இந்த அளவில் ஆபத்து ஏதுமில்லைதான். ஆனால் நகைச்சுவை என்ற பெயரில் ஆபாசத்தை அள்ளி இறைத்திருப்பதுதான் அதிர்ச்சியளிக்கிறது. உதாரணமாக "பனிக்காலத்தில் உடையின் விளிம்பு சற்றே நனைந்துள்ளது" என்ற புகழ்பெற்ற முதலடியை எடுத்துக்கொண்டு "இளவரசி சாஹோ நின்றுகொண்டே சிறுநீர் கழித்ததால்" என்று முடித்திருக்கிறார்கள். 15-ஆம் நூற்றாண்டின் சிறந்த கவிஞர்களுள் ஒருவராகப் பாராட்டப்பட்டிருக்கும் யமாசாகி சோகான் (Yamazaki Soukan) என்பவரே இப்படி எழுதியிருப்பதுதான் வேதனை. இவரது கவிதைகளைத் தொகுத்தவராவது இதுபோன்றவற்றைத் தவிர்த்திருக்கலாம். ஒருவேளை அவருக்கு அசிங்கமாகத் தெரியவில்லையா அல்லது இதுவும் கவிஞர் எழுதியதுதானே, இப்படியும் எழுதுவார் என வரலாற்றில் பதிவாகட்டும் என விட்டுவிட்டாரா எனத் தெரியவில்லை.

இங்கு நாம் நம் சங்கத்தமிழ்ப் பாவகைகள் பல சீர்களாகப் பிரிக்கப்பட்டிருப்பதை நினைவுகூர்ந்து 5-7-5 என்பதைச் சீர்க்கணக்கு என்கிறோம். ஆனால் ஜப்பானியமொழிப் பாக்களில் இதை அசையாகத்தான் கொள்கிறார்கள். அசைக்கணக்கு என்றுதான் சொல்லவேண்டும். ஐந்தசைசீர் - ஏழசைச்சீர் - ஐந்தசைச்சீர் என மூன்றே மூன்று சீர்களைக் கொண்டதுதான் ஜப்பானிய ஹைக்கூ. இச்சீர்களில் பெயர்ச்சொல் அல்லது வினைச்சொல் அல்லது பண்புத்தொகையுடன் சேர்ந்து வேற்றுமை உருபுகளும் அடங்கும்.

இந்த ரெங்காவின் முதல் கண்ணியான ஹொக்கூதான் பிற்காலத்தில் ஹைக்கூவாகப் பிரிந்து வந்தது. சிறப்பு விருந்தினர் பாடுபொருளை வெளிப்படுத்தும் விதமாக இயற்றியதால் அடுத்த பாடல்கள் இல்லாவிடினும் முழுமையான பொருள் தருவதாக இருந்ததே இதற்குக் காரணம் என்கிறார்கள். 17-ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதிவரை இது ஹொக்கூ என்ற பெயரிலேயே தொடர்ந்து வந்தது. இன்றும் ஹைக்கூவின் பிதாமகராகக் கொண்டாடப்படும் மட்சுவோ பாஷோ (Matsuo Bashou - பழைய குளத்தில் தவளை எனும் புகழ்பெற்ற ஹைக்கூவை இயற்றியவர்) இதற்கு ஹைகாய் (Haikai) எனப் பெயரிட்டார். 19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் புலவர் மஸாவொகா ஷிகி (Masaoka Shiki) அவர்களால் பெயரிடப்படும்வரை ஹைகாய் என்றே அழைக்கப்பட்டு வந்தது. மஸாவொகா ஷிகிக்குப் பின்னர் இந்த ஹைக்கூ உலகெலாம் பரவிப் புகழ்பெற்றது வரலாறு. ◆

பிரெஞ்சு கலாச்சாரத்தின் ஜன்னல் புதுச்சேரி உங்களை அழைக்கிறது

Puducherry Tourism Beckons you

Aayi Mandapam or the Park Monument built in Greco-Roman structure built by Louis Gurre in 1854. Located in the middle of the Bharathi Park. Architecture is an important attraction of the park. Bharathi Park is located in the heart of the old colonial town, The park boasts of well-maintained lush green lawns, a thick canopy to offer relief from the scorching sun, glittering flower beds, serene ponds, and a children's play area. The landscape offers a calm vibe, relieving visitors of their stress, it is the most preferred spot to click pictures and capture the beauty of the surroundings.

Promenade Beach has a shoreline concealed by black rocks. It is commonly known as Rock Beach or Promenade Beach. This scenic waterfront offers a stunning view of the Bay of Bengal. The colonial vibe of the beach adds to its serenity, making it one of the most popular beaches in Pondicherry. The 1.5 km long shoreline is flanked by the Mahatma Gandhi Statue, War Memorial, Dupleix Park, Colonial buildings, and quirky cafés.You can enjoy watching the mesmerizing hues of the sun setting over the Bay of Bengal with your loved ones.

A creek borders the Chunnambar boathouse on one side, and lush green meadows replete with waterfall backdrops that complete the exquisiteness and elegance of the place. The pristine sand and turquoise water are a relaxing experience and call for thousands of tourists and locals to enjoy a day picnic with their dear ones. The perfect blend of serenity and tranquillity, the Chunnambar boat house acts as an easy escape from the fast-paced city life. The ride aboard the Chunnambar boat house will render a different experience to you and make you cherish every moment you spend here.

Sri Aurobindo Ashram : One of the most sought-after tourist destinations to visit on your Pondicherry tour, Sri Aurobindo Ashram is a kind of place where you can seek spirituality in a laid-back atmosphere and attain inner peace by meditating in its serene aura. The magical environment of this shrine allows you to forget everything as soon as you step inside the ashram and the beautiful backdrop will leave you awe-struck, thus making the overall setting look even more spectacular. Sri Aurobindo Ashram that catches the attention of thousands of people from all over the world.

Pondy Marina Beach in Pondicherry is the new tourist attraction near the new lighthouse. It was developed under the theme-based beaches programs by the Pondicherry government, and "Pondy Marina" beach is based on a food-based theme. Unlike the rock beach, where the tourists can hardly venture into the seashores, here, as the name suggests, there is a reasonable length of sandy beach. Pondy Marina offers you a wide variety of food options, sandy beaches, river mouth sighting, Mangrove forest boating, etc.

AAYI MANDAPAM & BHARATHI PARK

GANDHI STATUE & ROCK BEACH

CHUNNAMBAR BOAT HOUSE

SRI AUROBINDO ASHRAM

VEERAMPATTINAM BEACH

ART & CRAFT VILLAGE

PONDICHERRY MUSEUM

ARIKAMEDU

PONDY MARINA

OUSTERI LAKE

PEACEFUL Puducherry

Give time a break

Department of Tourism
(Government of Puducherry)
Dr. Ambedkar Salai, (Opp: Indira Gandhi Sports Complex)
Pondicherry-605001. INDIA. Phone No.: +91-413-2358570, 73, 76
pondytourism@gmail.com / tourism.pon@nic.in I www.tourism.py.gov.in

அமெரிக்கத் தமிழ்மொழிக் கல்வி நிறுவனம்

புதிய அணுகுமுறையில் தமிழ்மொழிக் கல்வி

செ.முகைதீன், தலைவர் American Institute of Tamil Language (AITL), (A registered non-profit organization)

வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையின் முப்பத்தி ஏழாவது தமிழ் விழா ஒரு வெற்றிகரமான நிகழ்ச்சியாக நிறைவேற வாழ்த்துகள். அமெரிக்கத் தமிழ்மொழிக் கல்வி நிறுவனம் நமது தாய்மொழியை அடுத்த தலைமுறைக்கு எளிய முறையில் எடுத்துச் செல்வதற்கு புதிய அணுகுமுறையில் பாடத் திட்டங்களை அனைவரும் "வணிக நோக்கமற்ற பகிரும் உரிமத்தின்" (Creative Commons Attribution-NonCommercial-ShareAlike license) அடிப்படையில் பகிர்ந்து கொள்ள உருவாக்கிவருகிறது.

செ.முகைதீன்

உலகில் 7000-த்திற்கும் மேலான மொழிகள் பேச்சுவழக்கு மொழிகளாக உள்ளன. இந்த மொழிகளில் ஏறக்குறைய 100 மொழிகள் மட்டுமே எழுத்து வடிவம் கொண்டுள்ளன. ஒரு மொழியில் எழுத்துவடிவம் இல்லையெனில் இலக்கண, இலக்கிய நூல்கள் இருக்க இயலாது. இப்படி எழுத்து வடிவம் இல்லாமல் 6900-த்திற்கும் மேற்பட்ட மொழிகள் பயன்பாட்டில் இருப்பதற்கு ஒரே காரணம் இந்த மொழிகள் அனைத்தும் அந்தந்த சமூக மக்களால் இன்றளவிலும் தத்தம் வீடுகளில் பேசப்படும் மொழிகளாக இருப்பதால் மட்டுமே. எனவே நமது மொழியை அடுத்த தலைமுறைக்குக் கொண்டு செல்வதில் மிக முக்கியமான பங்கு இதனை நம் அன்றாட வாழ்வில் நமது வீடுகளில் பயன்படுத்தப்படும் மொழியாக இருத்தல் வேண்டும்.

எந்த ஒரு மொழியையும் கற்றுக்கொள்வதில் இரண்டு பகுதிகள் உள்ளது எனலாம். முதலாவதாக மொழியின் இலக்கணத்தைக் கற்க வேண்டும். ஆங்கில மொழியின் இலக்கணத்தைவிடத் தமிழ்மொழியின் இலக்கணம் சற்று கடினமானது. உதாரணமாக "He eats", "She eats", "Dog eats" என்ற மூன்று நிகழ்கால வாக்கியங்களிலும் "eat" என்கின்ற வினைச்சொல் ஒரே பதத்தில் வருகிறது. ஆனால் தமிழில் "அவன் சாப்பிடுகிறான்", "அவள் சாப்பிடுகிறாள்" "அது சாப்பிடுகிறது" என்று சொல்லுகின்ற பொழுது "சாப்பிடு" என்கின்ற வினைச்சொல் மூன்று வெவ்வேறு பதங்களில் வருகிறது. இதைப்போல் பெயர்ச்சொற்களும் பல வேற்றுமை உருபுகள், விகுதிகளைச் சேர்த்து வெவ்வேறு பதங்களில் வெவ்வேறு பொருளைக் குறிப்பதற்காக

மாற்றப்படுகின்றது. உதாரணமாக "சிங்கம்" என்கின்ற பெயர்ச்சொல்லை "சிங்கத்துக்கு, சிங்கத்தால், சிங்கத்தை, சிங்கத்திடமிருந்து ..." என வெவ்வேறு பொருள்கள் வருமாறு மாற்றி எழுதுவோம். ஆனால் ஆங்கிலத்தில் "to, from, in, ..." போன்ற "preposition"-களைக் கொண்டு எழுதுவோம். எனவே, சிங்கத்தைக் குறிக்கின்ற "Lion" என்கின்ற ஆங்கிலச்சொல் எங்கும் மாறாது. இந்த இலக்கண வேறுபாடுகளை எளிமையாக மாணவர்கள் புரிந்துகொள்வதற்கு ஏற்ற வகையில் அ.த.க.நி பாடத்திட்டத்தில் மழலை நிலையிலிருந்தே எளிய ஆங்கில வாக்கியங்களைத் தமிழில் மொழிபெயர்க்கச் சொல்லித்தரப்படுகிறது. இந்தப் பயிற்சியினால் உயர்நிலைகளில் பயிலும் மாணவர்களால் ஒரு பெரிய ஆங்கிலக் கட்டுரையைத் தமிழில் மொழிபெயர்த்துச் சொல்லமுடியும்.

இரண்டாவதாக, மொழியைக் கற்றுக் கொள்வதென்பது அந்த மொழியில் எத்தனை சொற்களைப் பயன்படுத்தத் தெரியும் என்பதாகும். நமது பாடத்திட்டம் சொற்களை அடிப்படையாகக் கொண்டே அமைக்கப்பட்டுள்ளது. ஆனால், நமது மொழியில் உள்ள அனைத்து சொற்களையும் நம்மால் சொல்லித் தந்துவிட முடியாது. அதிகமான வார்த்தைகளை அடுத்த தலைமுறைக்குக் கொண்டு செல்வதில் ஒரு புதிய அணுகுமுறை தேவைப்படுகிறது. உதாரணமாக "வே" என்கின்ற எழுத்து "மறைந்து" என்கின்ற ஒரு பொருளில் வருகிறது. "வேடன் - மறைந்து வேட்டையாடுபவன், வேட்டி-மறைக்கும் ஆடை, வேங்கை, வேலி, வேர்" என்று வருவதாகத் தெரிகிறது. இதேபோல் "மா" என்பது "பெரிய" என்கின்ற பொருளில் வருகின்றது. உதாரணம் மாளிகை, மாமனிதர், மாநிலம், மாநாடு.

ஒரு மொழியைக் கற்றுக்கொள்ள விரும்புபவருக்கு அந்த மொழியில் தனது சொல்வளத்தைப் பெருக்கிக் கொள்ளுதல் இன்றியமையாத ஒன்று. மேற்கூறியது போல் மொழியில் உள்ள அனைத்து சொற்களையும் சொல்லித் தர இயலாத சூழ்நிலையில் சொற்கள் எப்படிக் கட்டமைக்கப்படுகின்றன என்று சொல்லித் தருவதின் அவசியம் புலனாகிறது. ஆங்கிலத்தில் prefix, suffix, root word, homonym, antonym, homophone என பலதரப்பட்ட வகையில் சொல் உருவாக்கத்தைச் சொல்லித்தருதல் போல் தமிழிலும் சொல்லித்தர வழிவகுத்தல் வேண்டும். "Give a man a fish, and you feed him for a day; teach a man to fish and you feed him for a lifetime" என்னும் ஆங்கில சொற்றொடருக்கிணங்க, சொல்லாக்கங்களின் காரணிகளைச் சொல்லி பயிற்றுவித்தால், கற்பவர் சிக்கென காலத்துக்கும் பிடித்துக்கொள்வார் என்பதில் ஐயமில்லை.

அமெரிக்கத் தமிழ்மொழிக் கல்வி நிறுவனத்தை பற்றிய மேலதிக தகவல்களுக்கு https://americantamil.org/ Creative Commons Attribution உரிமம் கொண்ட பல்வேறு நிலைகளுக்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய: https://americantamil.org/books

◆

இலக்கியவீதி இனியவன் (1942 – 2023)

இன்று இலக்கிய உலகில் பிரபலமாக இருக்கும் பலருக்கு உந்துசக்தியாக இருந்தவர்களுள் முக்கியமானவர் இலக்கியவீதி இனியவன். இலக்கியக் கூட்டங்கள், புத்தக வெளியீடுகள் போன்றவற்றைச் செய்வதன் நோக்கமாக மதுராந்தகத்தில் இலக்கியவீதி என்ற அமைப்பை உருவாக்கினார். 250-க்கும் மேற்பட்ட சிறுகதைகள், 17 குறுநாவல்கள், 15 நாவல்கள், இரண்டு பயண இலக்கிய நூல்கள் எழுதியவர். இலக்கியவீதியைத் தொடங்கிய பின்னர் மற்ற எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் எண்ணம் மேலோங்கவே தான் எழுதுவதைக் குறைத்துக்கொண்டு பல படைப்பாளிகளை ஊக்குவித்தவர் இவர். தான் விவசாயத்தில் சம்பாதித்ததை தமிழ் இலக்கிய வளர்ச்சிக்காகச் செலவழித்து வந்தார். "வீடு தோறும் கலையின் விளக்கம்; வீதி தோறும் தமிழின் வெளிச்சம்" என்பதுதான் இலக்கியவீதியின் இலட்சியம். இதுவரை எழுத்தாளர்கள், கவிஞர்கள், ஓவியர்கள், திறனாய்வாளர்கள் எனச் சுமார் முந்நூற்றுக்கும் மேற்பட்டோரை இலக்கியவீதி அடையாளம் காட்டியிருக்கிறது.

தமிழ் சமூகத்தில் பாலின சமத்துவம் (சங்க காலம் முதல் நிகழ்காலம் வரை)

உ. சங்கரன், சென்னை

வான்புகழ் வள்ளுவனும், கம்பனும், நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்னும் மணியாரம் படைத்த இளங்கோவும் வாழ்ந்த தமிழ் திருநாடு நம் நாடு. "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்று பொதுவுடைமை தத்துவத்தை உலகிற்கு முதன் முதலில் சொன்னவன் கணியன் பூங்குன்றன் என்ற புலவன். அவன் வாழ்ந்ததும் நம் தமிழ் திருநாடே. இன்றும் இப்பாடல் உலக மறையாம் திருக்குறளுக்கு இணையாக உலக அனைத்திலும் போற்றி பேசப்படுவதும், இந்திய ஒன்றிய பிரதமர் மோடி அவர்கள் ஐக்கிய. நா. சபையின் 74வது தொடரில் (27,செப் 2019) இப்பாடலை மேற்கோளிட்டு பேசியதும் தமிழ் மொழிக்கு, தமிழருக்குச் சிறப்போ சிறப்பு உயர் சிறப்பு.

உ. சங்கரன்

முதற் தமிழ்ச் சங்கத்தில் 549 புலவர் பெருமக்கள்; இடைச் சங்கத்தில் 449 புலவர் பெருமக்கள் கடைச் சங்கத்தில் 468 புலவர் பெருமக்கள், ஆக 1466 பேர் இருந்ததாகச் சங்க வரலாறு. ஆனால் புலவர் பெருமக்களுக்குப் பொருளாதாரத்தில் சங்க காலத்தில் போதிய சமத்துவம் இல்லை. அவர் வாழ்வில் வறுமை தான் எஞ்சி நின்றது. இதற்குச் சான்று

"கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்
பெற்ற பெருவெள்ளம் பெறாஅர்க்கு அறிவுறீஇச்
சென்று பயனெதிரச் சொன்ன பக்கமும் "

என்பது தொல்காப்பியர் பகர்ந்த இலக்கணம்(தொல் 1037)

ஆனால் 12-ஆம் நூற்றாண்டில் தோன்றிய வெண்பாப்பாட்டியல் மற்றும் 14-ஆம் நூற்றாண்டில் தோன்றிய நவநீதப்பாட்டியல் இரண்டிலும் ஆற்றுப்படைக்கு இலக்கணம் கூறுமிடத்து விறலியர் பெயர் குறிப்பிட வில்லை. 18-ஆம் நூற்றாண்டில் தோன்றியதொன்னூலில்

"ஆற்றுபடை என்ப வாற்றெதிர்ப் படுத்திய
புலவர் பங்சர் பொருநர் கூத்தர்

புல புலகாவற் பாவொரு பாடல் " என்று பாணாற்றுப் படைக்கு இலக்கணம் கூறும் விடத்து ,விறலியர் பெயர் விலக்கப்பட்டுள்ளது . 12 முதல் 18 ஆம் நூற்றாண்டுகளில் சமூகத்தில் விறலியர்களுக்குப் பரிசுப்பொருள் ஈட்டும் சமத்துவம் கொடுக்கப் படவில்லை என்பது தெள்ளத் தெளிவு .இக்காலம் தொட்டு பெண்களுக்குக் கல்வியில், வேலை வாய்ப்பில் சமூகத்தில் சமத்துவம் போராடிப் பெற வேண்டியதாயிற்று.

1947-ஆம் ஆண்டு நம் நாடு விடுதலை பெற்ற பின்பும் பெண்களுக்குக் கல்வியில், வேலைவாய்ப்பில் சமத்துவம் இல்லை என்பதும் தெள்ளத் தெளிவு . பெண்களின் எழுச்சி இல்லாமல் பெரிய மாற்றங்கள் சாத்தியமில்லை என்று கார்ல் மார்க்ஸ் முழங்கினார் .அதே ஆண்டில் பெண்கள் சமூகத்தில் பெறும் சமத்துவ நிலை குறித்து ஆராய ஐ.நா.சபை,

ஆணையம் (United Nations Commission on the Status of Women) ஒன்றை நிறுவியது. அதன் நோக்கம் பெண்களுக்குக் கல்வி, வேலைவாய்ப்பு ஊதியம், நீதி போன்றவற்றில் சமத்துவத்தை உறுதி செய்வது.

நாட்டில் என்று ஒரு பெண், நடுஇரவில் நகை அணிந்து பாதுகாப்பாகச் செல்லமுடியுமோ, அப்போதுதான் நாம் சுதந்திரம் பெற்றதாக நான் கருதுவேன் என்று மகாத்மா காந்தி கூறினார் . பெண்கள் பெற்ற முன்னேற்றத்தின் அளவைக் கொண்டு ஒரு சமூகத்தின் முன்னேற்றத்தை நான் அளவிடுகிறேன் என்று டாக்டர் அம்பேத்கர் கூறினார்

இன்று பெண்கள் விழித்துக் கொண்டார்கள் என்பது நிதர்சனம். ஆயினும் பூரண சமத்துவம் பெற்று விட்டார்களா, நடு இரவில் நகை அணிந்து பாதுகாப்பாக பாலியல் வன்முறை இன்றி போய் வருகிறார்களா என்பதற்குப் பதில் இல்லை என்பதும் நிதர்சனமே. பெண்களும் , சிறுமியர்களும் பாலியல் சீண்டல்கள் பாலியல் வன்முறைகள் எதிர்கொள்கின்றனர் .

1975-ஆம் ஆண்டு உலக மகளிர் தினமாக மார்ச் 8-ஆம் தேதியை ஐ.நா. சபை அறிவித்தது. 1975 முதல் 1985 வரை 10 ஆண்டு திட்டம் கொண்டு வந்தது . 2000-ஆம் ஆண்டுக்குள், பாலின பாகுபாட்டை அகற்றுவதற்கான தேசிய சட்டங்கள் கொண்டு வர உறுப்பு நாடுகளுக்கு வலியுறுத்தப்பட்டது.

தமிழ்நாட்டில் பாரதியார் பெண்கள் சமத்துவத்திற்காகக் குரல் கொடுத்தார்.

சட்டங்கள் ஆள்வதும் பட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்
எட்டு மறிவினில் ஆணுக்கிங்கே பெண்
இளைப்பில்லை காணென்று கும்மியடி (பாரதியார்)

பாரதிதாசன் பெண்கள் விதவை மறுமணத்தை ஆதரித்தார். பெண்ணடிமை நீங்கவும் குரல் கொடுத்தார். அவர் பெண்கள் சமத்துவம் பற்றி எழுதிய கவிதைகள் பல. அவற்றுள்,

"வாடாத பூப்போன்ற மங்கை நல்லாள்
மணவாளன் இறந்தால் பின் மணத்தல் தீதோ
பாடாத தேனீக்கள் உலாவத் தென்றல்
பசியாத நல்வயிறு பார்த்த துண்டோ" என்ற

விதவைகள் மறுமணத்தை ஆதரித்து எழுதிய கவிதையும்
"பெண்ணடிமை தீரும் மட்டும் பேசும் திருநாட்டு
மண்ணடிமை தீர்தல் முயற்கொம்பே"

என்ற பெண்கள் விடுதலை வேண்டி எழுதிய கவிதையும் சிறப்பானவை.

ஈ.வே. ரா பெரியார் பெண் விடுதலைக்கு மிகவும் பாடுபட்டார். மூட நம்பிக்கைகளை அகற்றவும், மதச் சடங்குகளை அகற்றவும், அவற்றால் வரும் தீங்குகள் நீங்கவும் பாடுபட்டார். சுயமரியாதை இயக்கம் ஏற்படுத்தினார், எல்லா இனத்தவரும் கோயிலில் வழிபட வைக்கம் என்ற ஊரில் போராடினார், வெற்றி பெற்றார். வைக்கம் வீரர் என்ற பெயர் பெற்றார். பெரியார் பெண்களுக்குச் சொத்துரிமை வேண்டும் என்று போராட்டம் நடத்தினார். அதன் பயனாக 1989-ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு (கலைஞர் ஆட்சியில்) பெண்களுக்குச் சொத்துரிமை சட்டம் பிறப்பித்தது.

தவத்திருகுன்றக்குடி அடிகளார் பெண்களுக்கென்று பெண் கல்லூரி தொடங்கினார். நாளாக நாளாகப் பெண்களுக்குக் கல்வி கற்பதில், வேலைவாய்ப்பில் (சம ஊதியம்) சமத்துவம் வர வேண்டும் என்ற எண்ணம் வலுப்பெற்றது. தமிழ்நாடு சார்ந்த இந்து அறநிலையத்துறையில் பெண்களுக்குப் பள்ளிகள், கல்லூரிகள் தொடங்கப்பட்டன. நம் நாட்டில் நாடாளுமன்ற மாநில சட்டமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை அடிப்படையில் 33 விழுக்காடு பெண்களுக்கு இட ஒதுக்கீட்டிற்கான சட்ட மசோதா நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. ஆயினும் இன்னும் நடைமுறைக்கு வரவில்லை.

தமிழ்நாட்டில் திராவிட மாடல் அரசு 2021-வது ஆண்டு முதல் இன்று வரை பெண்களுக்குக் கல்வி,வேலைவாய்ப்பில், சமத்துவம் கொடுப்பதற்காக, 2021-ஆம் ஆண்டு தமிழ் நாடு அரசு அரசுப்போக்குவரத்து கழக பேருந்துகளில் பெண்களுக்கு இலவச பயணத்திட்டம், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு புதுமைப் பெண் உயர் கல்வித் திட்டம், ஏழை விதைகளின் மகள்களுக்கு ஈ.வே.ரா திருமண உதவித் திட்டம், ஆதரவற்ற பெண்களுக்காக அன்னை தெரசா திருமண உதவித் திட்டம், டாக்டர் முத்துலட்சுமி நினைவு கல்வி திருமண உதவித் திட்டம் குடும்பத் தலைவிகளுக்குத் திங்கள்தோறும் 1000 ரூபாய் வழங்கும் மகளிர் உரிமைத் திட்டம் எனப் பல திட்டங்கள் கொண்டு வந்துள்ளது. இத்திட்டங்கள் உலகம் போற்றும் திட்டங்கள். இன்று தமிழகத்தில் பெண்கள் கல்வியில் அதிக விழுக்காடு, வேலை வாய்ப்பிலும், சமுதாயத்திலும் சமத்துவமும் பெற்று நம் நாட்டின் முதல் மாநிலமாக இருப்பது நற்செய்தி.

◆

சிவகுமார் ராஜரத்தினம்
மற்றும் குடும்பத்தினர்

வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையின்
37 ஆவது தமிழ் விழா சிறக்க வாழ்த்துகள்!
மலர்செல்வன்
மற்றும் குடும்பத்தினர்

சான் ஆண்டோனியோ தமிழ்ப்பள்ளி

முனைவர் மாலினி ரூபன், தலைவர்

"கரும்புதந்த தீஞ்சாறே, கனிதந்த நறுஞ்சுளையே, கவின்செய் முல்லை அரும்புதந்த வெண்ணகையே அணிதந்த செந்தமிழே அன்பே, கட்டி இரும்புதந்த நெஞ்சுடையார் துறைதோறும் நின்னெழிலை ஈட ழித்து வரும்புதுமை நீனைக்கையிலே நெஞ்சுபதைக் கும்சொல்ல வாய் பதைக்கும்."

நமது தமிழ்நாட்டில் தமிழின் நிலையைப் பார்த்து பாரதிதாசன் வெகுண்டு பாடிய பாடல் அது. தாத்தா பாட்டி இந்தியாவிலிருந்தோ அல்லது அமெரிக்கா வரும்போதோ தங்கள் பேரக்குழந்தை களுடனும், பேரக்குழந்தைகள் தாத்தா பாட்டிகளுடனும் பிணைக்க விரும்புகிறார்கள். ஆனால் அந்த உரையாடலுக்கு மொழி ஒரு தடையாக இருக்கும்போது சில நேரங்களில் மனதை நொறுக்கும்.

"ஆங்கிலத்தைக் கற்கையிலும் அயல் மொழியைக் கற்கையிலும்
எந்த நாளும் தீங்கனியைச் செந்தமிழைத்
தென்னாட்டின் பொன்னேட்டை உயிராய்க் கொள்வீர்"

என்ற பாரதிதாசனின் வாக்கிற்கு எடுத்துக் காட்டாக டெக்சாஸ் மாநிலத்தில் உள்ள சான் ஆண்டோனியோவில் 2005-ஆம் ஆண்டு சில பெற்றோர்களால் தங்கள் குழந்தைகளுக்குத் தமிழைப் பயிற்றுவிக்க ஆரம்பிக்கப்பட்டது தான் நமது சான் ஆண்டோனியோ தமிழ்ப் பள்ளி. அமெரிக்காவில் இருப்பதால் நம் அடுத்த தலைமுறை தமிழ் மொழியை மறந்துவிடக் கூடாது என்பதே முதன்மை நோக்கமாக இருந்தது. ஆனால் தற்போது தொழில்நுட்ப முன்னேற்றங்கள் காரணமாக பெரும்பாலும் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டு ஒன்றுக்கொன்று சார்ந்திருக்கும் உலகில் நாம் வாழ்கிறோம். ஒரு புதிய மொழியைக் கற்றுக்கொள்வது ஒரு பயனுள்ள திறமையாக இருக்கும். அதுவே நம் சொந்தத் தாய் மொழியாக இருக்கும்போது கூடுதல் இன்பம். உலகின் பழமையான மொழிகளில் ஒன்றான தமிழ் மொழி இன்றும் பரவலாக பேச்சு வழக்கில் இருக்கும் மொழி. 90 மில்லியனுக்கும் அதிகமான தமிழ் பேசும் மக்கள் உலகம் முழுவதும் பரவி வாழ்கின்றனர். செம்மொழியான தமிழ்மொழி பலரும் விரும்பி கற்றுக்கொள்ளும் தகுதியைக் கொண்டது .

ஆரம்ப நாட்களில் டெக்ஸாஸ் மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக (UTHSC) நூலகத்திலும் பின்னர் ஜான் ஐகோ பொது நூலகத்திலும் வார இறுதி நாட்களில் நமது பள்ளி நடைபெற்றது. அப்போது போலவே இப்போதும் பெற்றோர்களே ஆசிரியர்களாகவும் இருந்து தாய் மொழியாம் தமிழைக் கற்பிக்கிறார்கள். தொடக்கக் காலத்தில் அவர்கள் நோக்கம் எல்லாம் எப்படியாவது குழந்தைகள் தமிழில் பேசுவதை நிறுத்தக்கூடாது என்பது தான். அதற்குத் தேவையான சரியான பாட மற்றும் பயிற்சிப் புத்தகங்கள்

இல்லாததால் பெற்றோர்களே பாடங்களை தயார் செய்து குழந்தைகளுக்குப் பயிற்றுவி த்தார்கள். சுருங்கச் சொன்னால் பண்டைய திண்ணைப் பள்ளி போலத்தான் தமிழ் பயிற்றுவிக்கப் பட்டது. ஆனால் காலப்போக்கில் தமிழை எழுதவும் படிக்கவும் தங்கள் குழந்தைகளுக்குத் தெரிய வேண்டும் என்ற ஆர்வத்தால் அன்று அவர்கள் இட்ட விதை இன்று 214 மாணவர்களுடனும் 37 ஆசிரியர்களுடனும் 19-ஆம் ஆண்டை நிறைவு செய்யும் ஆலமரமாய் விழுதுகள் விட்டு வளர்ந்து ஒரு பெரிய பள்ளி வளாகத்தில் நடைபெறுகின்றது.

சான் ஆண்டோனியோ தமிழ்ப் பள்ளியின் வளர்ச்சியும் நடைபெற்ற முன்னேற்றங்களும்:

2005 முதல் 2010 வரை பள்ளியின் கல்விக் குழுவும் ஆசிரியர்களும் ஒரு சீரான பாடத்திட்டம் என்று இல்லாமல் கிடைக்கும் புத்தகங்களைப் பயன்படுத்தி தங்களால் முடிந்த பாடங்களைச் சொல்லிக் கொடுத்தார்கள். 2010-ஆம் ஆண்டு அமெரிக்கத் தமிழ்க் கல்விக் கழகம் (American Tamil Academy - ATA) வரையறுத்த அமெரிக்க நாடுதழுவிய பாடப்புத்தகங்கள் அறிமுகப்படுத்தப்பட்டது. 2015-ஆம் ஆண்டு சான் ஆண்டோனியோ தமிழ்ப் பள்ளி இலாப நோக்கமற்ற அமைப்பாக (501(c)(3) Non-Profit organization) பதிவு செய்யப்பட்டது மட்டுமன்றி சான் ஆண்டோனியோ தமிழ்ப் பள்ளிக்கென்று ஒரு வலைத்தளமும் (https://satamilschool.org/) வடிவமைக்கப் பட்டது. இந்த நிறுவனத்தின் இயக்குனர் குழுமமாக 5 தமிழ்ப் பற்றுமிக்க சான்றோர்கள் பொறுப்பேற்றனர். அவர்கள் திரு. அருள்மணி, திரு. கண்ணன், திரு. இளங்கோவன், திருமதி. மாலினி மற்றும் திரு. சரவணன். இந்த ஆண்டின் நிர்வாகக் குழு உறுப்பினர்களாக திருமதி. மாலினி, திரு.சரவணன், திரு. பாலமுருகன், மற்றும் திருமதி. ஆர்த்தி பணி புரிகின்றனர். கல்விக் குழு தலைவர்களாக திருமதி. விமலா, திருமதி. சங்கீதா மற்றும் திருமதி. ப்ரியா தொண்டு செய்கிறார்கள். தொழில்நுட்ப ஆலோசகராக திரு. பாலாஜி சேவை செய்கிறார்.

என்னதான் முதல் தலைமுறை புலம்பெயர் பெற்றோர்களாக நாம் தமிழின் பெருமையைப் போற்றிப் பாடினாலும் இங்கு பிறந்த மற்றும் வளரும் பிள்ளைகள் தமிழை ஏன் படிக்க வேண்டும் என்று கேட்கும்போது, அவர்கள் எவ்வாறு பயனடையலாம் என்று அவர்களுக்குப் புரியும்படி எடுத்துச் சொல்ல வேண்டியுள்ளது. இதன் விளைவாக தமிழ்ப் பள்ளியில் பயிலும் மாணவர்கள் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மொழிகளில் படித்து தேர்ச்சி பெற்ற மாணவர்களின் அங்கீகாரத்தைப் (Seal of Biliteracy or Language Other Than English Credit) பெறும் வாய்ப்பையும் பின்னர் கல்லூரிக்குச் செல்லும் போது தமிழ் மொழியை ஒரு விருப்பப் பாடமாகத் தேர்ந்தெடுக்க வகை செய்யும் பொருட்டுநமது தமிழ்ப் பள்ளி 2018-ஆம் ஆண்டு மொழிக்கல்வி அங்கீகாரத்தை (AdvanceED accreditation) பெற்றது.

இந்த அங்கீகாரத்தைப் பெற 20-க்கும் மேற்பட்ட தன்னார்வம் மிக்க பள்ளி நிர்வாகக் குழு உறுப்பினர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் அன்றைய பள்ளி நிர்வாகத்தின் தலைமையில் ஓராண்டுக்கு மேலாக உழைத்து அந்த அங்கீகாரத்தைப் பெற்றனர். இது தமிழ்ப் பள்ளி யின் முக்கியமான மைல்கல் எனலாம்.

இதனைத் தொடர்ந்து பல பாடத்திட்ட, உள்கட்டமைப்பு, தொழில்நுட்பம் மற்றும் நிர்வாக முன்னேற்றங்கள் சான் ஆண்டோனியோ தமிழ்ப் பள்ளியில் செயல்படுத்தப் பட்டது. எங்கள் மாணவர்களின் வருகைப் பதிவு, வீட்டுப்பாடம், பணிகள் கண்காணிப்பு, மதிப்பீடு மற்றும் முன்னேற்ற அறிக்கை ஆகியவற்றிற்கு கூகிள் வகுப்பறையைப் (Google Classroom) பயன்படுத்துகிறோம். சான் ஆண்டோனியோ தமிழ்ப் பள்ளிப் பாடத்திட்ட ஆய்வுக் குழு 2022-2023 கோடையில் அதன் பாடத்திட்டத்தை மறுமதிப்பீடு செய்து, டெக்சாஸ் தமிழ் கல்விக்கழகத்தின் (Texas Tamil Academy-TTA) பாடத்திட்ட அமைப்பைப் பயன்படுத்த முடிவு செய்தது. இது ACTFL எனும் வெளிநாட்டு மொழிகளின் போதனைக்கான அமெரிக்கக் கவுன்சிலின் பரிந்துரையின் படி டெக்சாஸ் தமிழ் அகாடெமியால் உருவாக்கப்பட்டுள்ளது. இந்தப் பாடத்திட்டம் திறன் அடிப்படையிலான வளர்ச்சிக்கு ஏதுவாகவும், கற்போரின் தற்போதய திறன் நிலைக்கு ஏற்றவாறு இலக்குகளை நிர்ணயித்து வகுப்பறைக்கு வெளியிலும் மொழியைப் பயன்படுத்த கற்பிக்கும் வகையிலும், வடிவமைக்கப்பட்ட ஊடாடும் பாடத்திட்டமாகும். மொழியின் நான்கு கூறுகளான கேட்டல், பேசுதல், படித்தல் மற்றும் எழுதுதல் [Listening, Speaking, Reading and Writing (LSRW)] ஆகியவற்றில் கவனம் செலுத்தி மொழித்திறன் அடைவது இதன் குறிக்கோள். பாடங்களின் வடிவமைப்பும் தமிழ் மொழியின் மூலமாக மாணவர்கள் பல சமூகங்களின் தொடர்பு, கலாச்சாரங்கள், இணைப்புகள் மற்றும் ஒப்பீடுகள் செய்து கலாச்சார ரீதியாக பொருத்தமான வழிகளில் மொழியைப் பயன்படுத்தும்படி அமைந்துள்ளது. வகுப்பறையில் கற்றல் கற்பித்தல் சீரான முறையில் நிகழ்வதற்கு ஏற்றவாறு பாடத்திட்டம் அமைக்கப்பட்டுள்ளது.

மாணவர்களின் கற்கும் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் பாடம் நடத்தவும், தமிழ் மொழி கற்றலை மகிழ்ச்சியோடு பங்கேற்கும் ஒரு இனிய அனுபவமாக மாணவர்களுக்கு வழங்க வேண்டும் என்பதற்காகவும் ஆசிரியர்களுக்கு பயிற்சிகள் மேற்கொள்ளப் படுகிறது. மேலும் மாணவர் களுக்கு தமிழின் மீது தன்னார் வத்தை உண்டாக்கும் விதமாக, பாடங்களின் உள்ளடக்கம் அன்றாட வாழ்க்கையோடு தொடர்புடையதாகவும், ஒருவரோடு ஒருவர் இணைந்து குழுக்களாக செயல்படும்படியும், கருப்பொருள் அல்லது தலைப்பு அடிப்படையிலான (Theme-based) பாடத்திட்டமாக உள்ளது.

கல்விக்கு மட்டுமல்லாது மாணவர்களின் பிற திறமைகளையும் ஊக்குவிக்கும் விதமாக திருக்குறள் ஒப்புவித்தல் போட்டி, பேச்சுப் போட்டி, தமிழ்த் தேனீ போட்டி, கட்டுரைப் போட்டி, ஆவணப்போட்டி மற்றும் நாடகப்போட்டி போன்ற போட்டிகள் நடத்தப்பட்டு வெற்றியாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு பள்ளி ஆண்டு விழாவில் பரிசுகள் வழங்கப்படுகின்றது. ஆண்டு இறுதியில் வகுப்பு வாரியாக மாணவ, மாணவிகள் தங்கள் வகுப்பு ஆசிரியருடன் எடுக்கும் புகைப்படங்கள், பள்ளி நிகழ்வுகள் மற்றும் முக்கிய அறிவிப்புகள் யாவும் சான் ஆண்டோனியோ தமிழ்ப் பள்ளி வலைதளத்தில் (https://satamilschool.org/) வெளியிடப்படுகிறது.

ஒவ்வொரு ஆண்டும் மே மாதத்தில் மிகப் பெரிய அரங்கில் நமது பள்ளியின் ஆண்டு விழா மற்றும் பட்டமளிப்பு விழா இனிதே நடைபெறும். இந்த விழாவில் பெற்றோர்கள் மற்றும் உறவினர்கள் பங்கேற்று குடும்ப விழாவாக சிறப்பிப்பார்கள். பெற்றோர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள், நிர்வாகக் குழு உறுப்பினர்கள் மற்றும் தன்னார்வலர்கள் நமது தமிழ்ப் பள்ளி என்ற ஆலமரத்தின் வேராய், இலையாய், கிளையாய், விழுதாய் ஆழமாக வேரூன்றி தாங்கி வருகிறார்கள்.

"தமிழராய்ப் பிறந்ததற்கு பெருமை கொள்வோம்..!
தமிழின் பெருமையை உணர்வோம்...!
தமிழைப் போற்றி வளர்த்திடுவோம்...!
வாழ்க தமிழ் மொழி...!
வாழிய வாழியவே...!" ◆

V3 Eventz
FIRST EVER IN THE USA
KING OF GAANA
BAASHA
Tour
Mano
Anuradha Sriram
Srikanth Deva
Sabesh Murali
Theriyai Thendral
Deva
Ajay Krishna
Priya Jerson
For Tickets
SATURDAY
07 September 2024
CUTX ALLEN EVENT CENTER
Dallas
@v3eventz_usa
FOR TICKETS & BOOKINGS
SATHISH +1(515)-505-9069
@v3eventz

யாழே வீணை!

சு.சங்கரக்குமரன் பொறியாளர், மதுரை

முத்தமிழ் வேந்தரான சேர முனிவர் இளங்கோவடிகள் இயற்றிய சிலப்பதிகாரத்தில் கானல்வரியிலுள்ள இசைப்பாடல்கள் மற்றும் வேட்டுவவரி, ஆய்ச்சியர் குரவை, குன்றக்குரவை

ஆகிய பகுதிகளில் அமைந்த இசைப்பாடல்கள், நமக்குக் கிடைத்த நற்பேறேயாகும்.

ஆசிரியர் தொல்காப்பியனார் காலத்திற்கு முன்னரே இசை இலக்கண நூல்கள் இருந்துள்ளன. ஆனால் தொல்காப்பியரின் இயற்றமிழ் இலக்கணம் மட்டுமே நமக்குக் கிடைத்துள்ளது.

சு.சங்கரக்குமரன்

தொல்காப்பியத்தில் 'நரம்பின் மறை' என்ற சொற்றொடரை தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார். இத்தொடரை ஆழ்ந்து கவனித்தால் நரம்புக்கருவியான யாழினை அடிப்படையாகக் கொண்டே பண்கள் பல உருவாக்கப்பட்டன எனக்கொள்ளலாம்.

இந்த யாழே கிரேக்கர்களுடன் வணிகம் மேற்கொண்டிருந்த நம் முன்னோர்களால் கிரேக்கத்துக்கு அறிமுகப்படுத்தப் பட்டது எனலாம். யவனர் சோனகர் தொடர்பு தமிழர்களுக்குச் சங்க காலத்திற்கு முன்பே ஏற்பட்டது என்பது இங்குச் சிந்திக்கத்தக்கது. (தமிழிசை வரலாறு, பக்கம் 89)

யாழ் வேறு வீணை வேறு என்று கூறுவார், மாணிக்க வாசகர் பாடலையே சான்றாகக் காட்டுவார்.

"இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்
இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்...
திருப்பெருந்துறையுறை சிவபெருமானே!..."
(திருப்பள்ளியெழுச்சி பாடல் 4)

வீணையால் இனிமையான இசையை இசைத்துக்கொண்டிருப்பவர்கள் ஒரு பக்கமும், யாழினை மீட்டி சிவபெருமானை போற்றிப்பாடிக் கொண்டிருப்பவர்கள் மற்றொரு பக்கமும் - என்றே பொருள் கொண்டுள்ளனர். அவ்வாறெனில் யாழில் இன்னிசை பிறக்காதா? இத்தொடர் ஆய்வுக்குரியதே.

முன்னொரு காலத்தில் மிடற்றுக் கருவி என்று அழைத்துக் கொண்டிருந்தோம். தற்போது 'குரல்' என்று அழைக்கின்றோம். சாரீர வீணை என்றும் அழைத்து வந்தனர். ஆதலால் மேலுள்ள 'திருப்பள்ளியெழிச்சி' பாடலில் இன்னிசைக் குரலினர்

என்றே பொருள் கொள்ளவேண்டும்.

"விருந்தாக யாழ்பண்ணி வீணைதான் தோற்பான்.
" (சிந்தாமணி, செய் -730)

இதன் பொருள்: முதலில் இனிமைப் பெற யாழை இசைத்துப் பின்பு, தன்மிடற்றாலும் யாழாலும் பாடினான். ஆதலால், யாழும் மிடறும் சேர்ந்து ஒலித்த இசையே "வீணை" என்று வழங்கப்பட்டது.

"ஒரு தேர்ந்த கலைஞனால் கூட வீணை தனம்மாள் என அறியப்பட்ட தனம்மாள் வீணையில் வாசிக்கிறாரா, வாய்ப்பாட்டாகப் பாடுகிறாரா என்பதைப் பிரித்து அறிய முடியாது" என்று தியாகராசர் கீர்த்தனைகளைப் பதிப்பித்த 'ரெங்க ராமானுச ஐயங்கார் குறிப்பிடுகின்றார். (தமிழிசை வரலாறு, நா.மம்மது, பக்கம் 9).

"யாழ் நூல் - பாணர் கைவழி" நூலின் ஆசிரியர் அ.ஆ. வரகுணபாண்டியனின் ஆய்வின் முடிவு கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

யாழின் மறுபெயர்கள் –

தண்டு, சுள்ளாணி, போர்வை, வறுவாய், மாடகம், தகைப்பு, உந்திவணர், பத்தர் யாப்பு, கவை கடை , ஒற்று, முடுக்காணி, புரிநரப்பு , பண்மொழி நரம்பு, தந்திரிகரம்

வீணையின் மறுபெயர்கள்

தண்டு, முள்ளாணி, மூடிப்பலகை, கண் வளைவு, பானை, டகாரி, நாகபாசம், வளைவுரேக்கு, பிர்டை, சுரமெட்டு, தந்தி, காடிசக்கை

"பத்தர், வறுவாய் என்ற இரண்டு உறுப்புகள் மாத்திரமே தம் வடிவிற் சற்றே மாற்றம் அடைந்துள்ளன ." [யாழ்-நூல்-பாணர் கைவழி ப - 181]

எனவே, தற்காலத்து வீணை பழங்கால யாழின் மறுவடிவமே. ஆதலால் யாழும் வீணையும் ஒன்றே என்று துணிவுடன் கூறலாம்.

பாணர் கைவழி :

தமிழ் இலக்கியப் பாடல்களில் கருங்கோட்டுச் சீறியாழ் மட்டுமே பதிவு பெறுகிறது. கரிய நிறத்தையுடைய கோட்டால் ஆன சிறிய யாழ். இதற்குக் 'கரவீணை ' என்ற மற்றொரு பெயரும் உண்டு. கைவழி (Handy Yaz / Portable Yaz) என்றும் பெயர் வழங்கியுள்ளது.

கருங்கோட்டு இன்னியம் ...(பெ ரும்.392)
களங்கனி அன்ன கருங்கோட்டு .. (புறம்) (127:1, 145:5)
கருங்கோட்டுச் சீறியாழ்... (நெ டுநல்.70)
மருதம் பண்ணிய கருங்கோட்டு... (மலை படு.534)
அருந்துறை முற்றிய கருங்கோட்டு... (அகம் 331:10)

கருங்கோட்டுச் சீறியாழ்

கைவழி என்ற "கரவீணை ' என்பது எளிதாக வெளியே எடுத்துச் சென்று கையிலேந்தி இசைக்க ஏதுவான யாழ்.

பண்டையகாலத்தில்'யாழ்' அரங்கிசைக்கருவியாக இருந்தது. 'யாழ்' வீணை வடிவம் பெற்ற நேரம், வீணையில் பல கமகங்களைத் தெளிவாக வாசிப்பதற்குக் காலமாற்றத்தில் பல நுணுக்கங்கள் உருவானதால் யாவரும் வீணையைப் பின்பற்றலானார்கள். எனவே யாழும் வீணையும் ஒன்றே.

உசாத்துணை :

1) தமிழிசை வரலாறு - நா.மம்மது

2) "யாழ் நூல் - பாணர் கைவழி " ஆ.அ.வரகுண பாண்டியன்

நிகரென்று கொட்டு முரசே!

கவிஞர் மருதயாழினி (எ) த.ச. பிரதீபா பிரேம், அட்லாண்டா, வட அமெரிக்கா

இவ்வுலகில் மனித குலம் தோன்றி ஏறத்தாழ 7 மில்லியன் ஆண்டுகள் ஆகின்றன என்று மானுட அறிவியல் சொல்கிறது. மனித இனம் உருவான பின்னர் மனிதர்கள் படிப்படியாக மேம்பட்டு சிறு சிறு குழுக்களாக வாழத் தொடங்கினார்கள். காலம் செல்லச் செல்ல இந்தச் சிறுகுழுக்கள் ஒரு பெரும் குழுவாக மாறியது. பெரும் குழு ஊர் என்று அழைக்கப்பட்டது. பல ஊர்கள் இணைந்த பெரிய நிலப்பரப்பு மாநிலம், நாடு என்று பின் நாட்களில் வரையரை செய்யப்பட்டன.

கவிஞர் மருதயாழினி

இவ்வாறாக மக்கள் அனைவரும் ஒருவரோடு ஒருவர் இணைந்து வாழும் பொழுது அவரவர் தேவை, ஆவல், திறமையைப் பொறுத்து பல்வேறு வேலைகளைச் செய்தனர். வீரத்திலும் அறிவிலும் பண்பிலும் சிறந்து, மக்களைக் காக்கும் வல்லமை கொண்ட ஒரு நல்ல குடிமகன், தலைவன் அல்லது அரசன் என்று மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டான்.

தனது குடியாட்சிக்குக் கீழே உள்ள அனைத்து மக்களையும் காக்கும் பொறுப்பை அவன் எடுத்துக் கொண்டு மக்களை எதிரிகள், இயற்கைச் சீற்றம், மற்றும் நோய்கள் என அனைத்து வகையான இடையூறுகளில் இருந்தும் காப்பாற்றத் தலைப்பட்டான். எனவே குடிமக்கள் அரசனை மிகவும் உயரிய இடத்தில் வைத்து மதித்தனர், அரசனுக்கு அனைத்து உரிமைகளையும் கொடுத்தனர். அரசன் ஆட்சி செய்ய உதவிய, அரசனைச் சூழ்ந்து இருந்த அமைச்சர்கள், தளபதிகள், வீர்கள், பணியாட்கள் என அனைவரும் அடுத்தடுத்த நிலையில் வைத்துப் பார்க்கப்பட்டார்கள்.

அது போலவே, குடிமக்களும் வாழ்வதற்கு தேவையானவற்றை தாங்களே உருவாக்க அவர் அவர்களே வேலைகளைச் செய்யத் தொடங்கினர். பல்வேறு தொழில்களை செய்பவர்களும் அவர்கள் செய்யும் தொழிற் பெயர்களால் அழைக்கப்பட்டார்கள்.

இத்தகைய பண்பாட்டு வளர்ச்சியானது உலகம் முழுவதும் பல நாடுகளில் நிகழ்ந்ததைப் போலவே நமது தமிழ் மண்ணிலும் நடந்தது. தமிழர்கள் தங்கள் நிலங்களை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்று ஐந்து வகையாக பகுத்திருந்தனர். சங்ககாலத் தமிழர்கள் தாங்கள் செய்யும் தொழிலைப் பொறுத்தும் பெயர் சொல்லி அழைக்கப்பட்டார்கள்.

குறிஞ்சி நிலத்தில் வாழ்ந்தவர்கள் குறவன், குறத்தியர்கள் என்று அழைக்கப்பட்டு தேன் எடுத்தல், கிழங்கு அகழ்தல் போன்ற தொழில்களைச் செய்தார்கள் அங்கே வேட்டையாடும் தொழிலைச் செய்தவர்கள் வேடுவர்கள் என்று அழைக்கப் பட்டார்கள்.

முல்லைநிலத்தைச் சார்ந்த மக்கள் இடையர், இடைச்சியர், ஆயர், ஆய்ச்சியர் என்று அழைக்கப்பட்டு ஏறு தழுவுதல், ஆநிரை மேய்த்தல் போன்ற தொழில்களைச் செய்து வந்தார்கள். குறிஞ்சி நிலத்திற்கும் மருத நிலத்திற்கும் இடையில் இந்த நிலம் அமைந்திருப்பதால், இங்கே வாழ்ந்த மக்கள் இடையர்கள் என்று காரணப்பெயரால் அழைக்கப் பட்டார்கள்

மருத நிலத்தைச் சார்ந்த மக்கள் உழவர், உழத்தியர் என்று அழைக்கப்பட்டு நெல் விதைத்தல், அறுத்தல் போன்ற வேளாண் தொழில்களைச் செய்து வந்தார்கள். மேலும் இவர்கள் ஊரன், மகிழன், களமர், கடையர் என்றும் அழைக்கப்பட்டு வந்தார்கள்.

கடலும் கடலைச் சார்ந்த நெய்தல் நிலத்தைச் சார்ந்த மக்கள் பரதவர், பரத்தியர் என்று அழைக்கப்பட்டு மீன்பிடித்தல், உப்பு விளைவித்தல், சங்கு, கிளிஞ்சல் அணிகலன்கள் செய்தல் போன்ற தொழில்களைச் செய்து வந்தார்கள்.

குறிஞ்சியும், முல்லையும் திரிந்து பாழ்பட்ட நிலம் பாலையாகும், அங்கு வாழ்ந்த மக்கள் எயினர், எயிற்றியர் என்று அழைக்கப்பட்டு வழிப்பறிச் செய்வதை தொழிலாகக் கொண்டிருந்தனர்.

நிலம் வகுத்து உளம் பார்த்து வாழ்ந்த நமது தமிழ் மக்களிடையே காலம் செல்லச் செல்ல அவர்கள் செய்யும் தொழில்களைப் பொறுத்து வேற்றுமைகள் நிலவத் தொடங்கின. அத்தகைய வேற்றுமையை நம்மை ஆண்ட பிற்கால அயலக ஆட்சியாளர்கள் அவர்களின் தன்னலத்திற்காக பயன்படுத்திக் கொண்டு மக்களை பிரித்துக் கூறுபோட்டனர். அதுவரை தாயும் பிள்ளையுமாக வாழ்ந்து வந்த தமிழ் மக்களிடையே தொழில், நிற, மத, இன வேறுபாடுகளைச் சொல்லி பிரிவினைகளைக் கையாண்டனர். சாதி என்ற கோட்பாட்டை மக்களிடையே உருவாக்கி கடவுள் மற்றும் மதங்களின் பெயரால் மக்களை துண்டாடினர், இன்றளவும் துண்டாடிக் கொண்டிருக்கின்றனர்.

இத்தனை வேறுபாடுகளை நமது தமிழ்நாடு கண்டிருந்தாலும் சங்க இலக்கிய காலத்திலிருந்தே தமிழர்களின் நீதிநூல்களும், அறம் உரைக்கும் நமது தமிழ்ச் சான்றோர்களும் நம்மை சரியான பாதையில் நெறிப்படுத்தத் தவறியதேயில்லை. இத்தனைப் பெரிய பிரிவினை மற்றும் வேறுபாடுகளுக்கு இடையேயும் தமிழர்கள் உலக மக்களுடன் சமநிலையோடு இருப்பது நமக்கு நமது நீதி நூல்கள் காட்டும் வழிகாட்டுதலேயன்றி வேறு என்னவாக இருக்கவியலும்?

பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் எழுதப்பெற்ற தமிழ் நூலாம் புறநானூற்றில் கணியன் பூங்குன்றனார் எழுதிய புகழ்பெற்ற 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' பாடல், உலக அரங்கில் இன்றும் சமத்துவத்தைக் கூறும் தனிப்பாடலாக அறியப்படுகின்றது.

"யாதும் ஊரே யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா"

எல்லா ஊரும் எம் ஊர் எல்லா மக்களும் எம் உறவினரே, நன்மையும் தீமையும் அடுத்தவரால் வருவதில்லை

"மாட்சியின்
பெரியோரை வியத்தலும் இலமே,
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே. (புறம்: 192)"

ஆதலினால், பெருமையில் பெரியோரை வியந்து போற்றுவதும் தவறு அதைவிட சிறியோரை இகழ்ந்து தூற்றுவதும் மிகவும் தவறு.

இதை விட மனித வாழ்வை நாம் எப்படி வாழ வேண்டும் என்று நமக்கு யார் சொல்லித்தர இயலும்? இதனாலேயே இந்த பாடல், அமெரிக்காவின் டர்ஹாம் சிம்பொனி உள்ளிட்ட பல பன்னாட்டு இசைக் கலைஞர்களால் பாடப்பட்டு, இசையமைப் பாளர் இராஜன் சோமசுந்தரம் அவர்களால் வெளியிடப்பட்டது.

மேலும், அமேசான் நிறுவனத்தின் பன்னாட்டு இசைப்பட்டியலில் இடம்பிடித்துப் பெரும்புகழ் பெற்றது. அதனைத் தொடர்ந்து 2019 ஆம் ஆண்டு சிகாகோவில் நடைபெற்ற உலகத்தமிழ் மாநாட்டின் கீதமாக அறிவிக்கப்பட்டது. மேலும் தமிழரின் இந்த சமத்துவக் கொள்கை ஜப்பான் பல்கலைக்கழகத்தில் தமிழிலும் ஆங்கிலத்திலும் பொறிக்கப்பட்டுள்ளது.

நமது தொல்காப்பியமும், உயிர்கள் அனைத்தும் பிறப்பால் சமம் என்று வலியுறுத்துகிறது. தொல்காப்பியத்திலும் அரசர், வணிகர், வேளாளர் என்ற அனைவருமே செய்யும் தொழில்களின் அடிப் படையிலேயே வேறுபடுத்திக் காட்டப்பட்டுள்ளனர்.

திருக்குறளும், மனிதர் அனைவரும் சமமே என்றே கூறுகின்றது.

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்"

மக்கள் தாம் மேற்கொள்ளும் தொழில்களின் அடிப்படையில்தான் வேறுபடுகிறார்கள், பிறப்பால்

அனைவரும் சமம் என்பதையே மேற்சொன்னத் திருக்குறளும் வலியுறுத்த முனைகிறது!

கீழ்க்கண்ட புறநானூற்றுப் பாடல் கூறும் சமத்துவத்தை பார்க்கலாம்,

"தென்கடல் வளாகம் பொதுமை இன்றி
வெண்குடை நிழற்றிய ஒருமையோர்க்கும்
நடுநாள் யாமத்துப் பகலும் துஞ்சான்
கடுமாப் பார்க்கும் கல்லா ஒருவற்கும்,
உண்பது நாழி, உடுப்பது இரண்டு
(புறம்: 189)"

உலகம் முழுவதையும் ஒரு குடையின் கீழ் ஆட்சி செய்யும் ஓர் அரசனுக்கும், இரவும் பகலும் கண்ணுறங்காமல் கொடிய விலங்குகளை வேட்டையாடி வாழும் கல்வியற்ற ஒரு வேடுவனுக்கும் உண்கிற உணவு ஒரு நாழிதான், மேலாடை, கீழாடை என்கிற இரண்டு ஆடைகள்தான் இது அனைவருக்குமே பொதுவானது என்கிற மேற்கண்ட பாடல் வரிகள் சமத்துவத்தை பேசுகின்றன. இது தமிழர்களிடம் சமத்துவப்போக்கு தொன்று தொட்டு எப்படி ஓங்கியிருந்தது என்பதை காட்டுகிறது.

இப்படி நமது சமுதாயம் எதாவது ஒரு வகையில் சமத்துவத்தைப் போற்றிக் கொண்டிருந்தாலும், ஆண் பெண் பாலின வேற்றுமை சங்ககால மக்களிடமும் இருந்தது என்பதைத்தான் தொல்காப்பியம் முதற்கொண்டு பல்வேறு இலக்கியங்கள் சுட்டுகின்றன.

பெண்கள் ஆண்களை விட அறிவிலும் வலிமையிலும் குன்றியவர்கள் என்ற எண்ணப்போக்கும், நாளடைவில் அவர்களை கற்பு என்ற புனைவில் ஆழ்த்தியும், பெண்கள் என்றால் இல்லறத்தை மட்டுமே பேணக்கூடியவர்கள் என்ற போக்கும் அதிகரித்தது என்பதையும் நமது சங்ககால இலக்கியங்கள் மூலம் அறிய முடிகிறது.

பெண்களுக்கென்று சில வரையறைகள் சங்ககால மக்களிடமும் இருந்தன. ஆனால் பெண்ணடிமை சங்ககால மக்களிடம் இல்லை. அது மற்ற இனத்தவரின் அதிகாரத்தாலும், செல்வாக்காலும் தமிழ்நாட்டுக்குள் மிகுதியாக புகுத்தப்பட்டது.

சங்ககாலத்திலே பெண்கள் போர்க்களத்திற்கு தனது வீட்டில் அறுதியும் இறுதியுமாக இருந்த மகனையே அனுப்பும் வீரமிக்கவர்களாகவும், மொழிப் புலமை பெற்று அரசர்களுக்குக் கூட அறிவுரை வழங்கும் புலவர்களாகவும், விருந்தோம்பல் என்ற தமிழரின் தலையாயப் பண்பை பெற்றவர்களாகவும் இருந்தனர்.

சங்ககாலத்தில் காமக்கிளத்தி, பரத்தை என்ற பிரிவினரும் வாழ்ந்து வந்துள்ளனர். பெண்கள் வாழுகின்ற இடம் அல்லது சூழ்நிலையைக் கொண்டே அவள் சமூகத்தில் மதிப்பிடப்பட்டாள்.

பெண்கள் பிற்காலத்தில் அடிமைப்படுத்தப்பட்டு, கல்வி கேள்விகள் மறுக்கப்பட்ட நிலைக்குத் தள்ளப்பட்டிருந்தார்கள், சில நூற்றாண்டுகளுக்கு முன்னர் நடந்த கொடுமைகளுக்கெல்லாம் எதிராக ஒரு குரல் தமிழகத்தில் உரத்து கேட்டதென்றால் அது நமது மகாகவி பாரதியாரின் குரல் என்போம்.

"மாதர் தம்மை இழிவு செய்யும்
மடமையைக் கொளுத்துவோம்
வைய வாழ்வு தன்னில்
எந்த வகையினும் நமக்குள்ளே
தாதர் என்ற நிலைமை மாறி
ஆண்களோடு பெண்களும்
சரிநிகர் சமானமாக
வாழ்வம் இந்த நாட்டிலே"

-மகாக்கவி பாரதியார்

என்று ஆண் பெண் சமத்துவத்தை முழங்குகிறார், அவருக்குப் பிறகு வந்த புரட்சிக்கவிஞர் பாரதிதாசனும், தந்தை பெரியாரும் ஆண் பெண் சமத்துவத்தை தமிழகத்தில் நிலை நாட்டியவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர்.

இப்படி எல்லாவகையிலும் பல்வேறு ஆண்டுகளாக நாம் கண்ட தடைகளைத் தாண்டி சமத்துவத்தை தமது தனித்துவமாக கொண்டு நமது தமிழர்கள் உலகெங்கிலும் கோலோச்சுகிறார்கள். தமிழர்களின் அறமும், கல்வியும், பண்பும், அவர்களுக்கு சென்றவிடமெங்கும் பெரும் வரவேற்பை உலக அரங்கில் பெற்றுத்தந்துள்ளது என்று சொன்னால் அது மிகையல்ல.

தமிழர்களாகிய நாம் கிடைத்தற்கரிய தமிழ் இலக்கியங்களையும் அவை கூறும் அறக்கோட்பாடுகளையும் உயிராய்க் கொண்டு வாழ்வில் மேன்மையடைவோம். சமநிலையே தமிழரின் தனி நிலை என்று முரசறைவோம்.

◆

வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையின்
37 ஆவது தமிழ் விழா சிறக்க வாழ்த்துகள்!
மாலா கோபால் மற்றும் குடும்பத்தினர்

வரலாற்றுப் படிமங்களில் தமிழ்த் தன்மை

ஓவியர் டிராட்ஸ்கி மருது

எப்போதும் அனைத்திலும் தென் பகுதியே முதலில் செயல் படுகிறது. காலனிய ஆதிக்கம் இருந்த போது எதிர்ப்பு தென் பகுதியிலிருந்தே தொடங்குகிறது. எதிரிக்கு எதிரி என்ற நிலையில் பிரென்ச்சுகாரர்களுடன் தொடர்பு கொண்டு செயல்பட நினைத்து, நெப்போலியனுடன் தொடர்பு கொள்ள நினைத்து செயல் பட்டுதூதுக்குழுவை நெப்போலியனைச் சந்திக்க அனுப்புகிறார் திப்பு. அந்த குழு அவர் புறப்பட்டுவிட்டதால் மெக்காவின் இமாமிடம் கடிதத்தைக் கொடுத்து அவரிடம் சேர்த்துவிட வழி செய்து திரும்புகிறது. வழியில் இந்தியா திரும்பும் அவர்களின் முயற்சியை அறிந்து மிக வேகமாக திப்புவை முடிக்கிற கும்பனியர், நடுநாயமாக இருந்த திப்புவுக்குப் பின் அவரைத் தொடர்ந்து தென்னாட்டுப்புரட்சியாளர்களை எல்லாம் ஒவ்வொருவராக இரண்டு ஆண்டுகளில் முடித்துவிடுகிறது.

ஓவியர் டிராட்ஸ்கி மருது

இந்தியாவில் எங்கும் இந்த எதிர்க்குரல் வராத போது தென் பகுதியிலிருந்துதான் ஒலிக்கத்துவங்கு கிறது. அதனை மக்களின் எழுச்சியாகக் கட்டமைக்கிறார்கள் தென்னாட்டுப் புரட்சியாளர்கள். கான்சாஹிப், கோபால் நாயக்கர், வேலு நாச்சியார், கட்டபொம்மன், ஊமைத்துரை, மருது சகோதரர்கள், தீரன் சின்னமலை என்று முன்னணியில் நின்று நடத்துகிறார்கள். சாதி, மத, மொழி, உணர்வைத் தாண்டி இப்புரட்சியைக் கட்டமைக்கிறார்கள். ஏற்றத்தாழ்வு களைத் துறந்து ஒரு மாபெரும் மக்கள் சக்தியைக் உருவாக்கி போராடச் செய்தது தென் பகுதியே.

இளம் தலைமுறை ஒரு பகுதியை மட்டும் பார்க்காமல் தமிழ்ச் சமூகம் தொடர்ந்து மாபெரும் கலாச்சார பின்னணியுடனும் அரசியல் தெளிவுடனும் தொடர்ந்து நடந்து இன்றைய இடத்திற்கு வந்துள்ளதை மொத்தமாகப் படிக்கும் படி மேலும் இச்சமூகத்திற்குத் தேவையான முன்னெடுப்பைச் செய்வதில் தொடர்ந்து செயல்பட வழி செய்ய வேண்டும். வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் நானும் என்னோடுசிலஇளம்கலைஞர்களும்செயல்பட்டோம் என்பதில் எனக்கு மகிழ்ச்சி. அவற்றில் ஒன்றான இத்தென்னாட்டுப் புரட்சியாளர்கள் குறித்த ஓவியம்



பொது வெளியில் பொதுப் படிமமாக இருக்கவேண்டும் என்று வரைந்தேன்.

அந்த ஓவியங்களை புரட்சிகர மார்க்சிஸ்ட் இயக்கம் முதலில் பயன்படுத்தியது. பின், 2010-இல் உலகத் தமிழ் மாநாடு ஊர்தியில் "சாதி மறுத்த தென்னாட்டுப் புரட்சி" என்ற தலைப்பில் காட்சிப்படுத்தப்பட்டது. அன்றைய முதலமைச்சர் கலைஞர் கொண்டாடியதுடன் என்னையும் என் குழுவையும் பெரிதும் பாராட்டினார். தொடர்ந்து "கொடி காத்த குமரன்" டில்லிக்குச் செல்ல வேண்டும் என்று போராடினோம். இன்னும் தமிழின் சாதி, மொழி கடந்த, தமிழ்ச் சமூகத்தைக் கட்டமைக்க உலக சமூகத்திற்கு அறியத் தரவேண்டும் என்று விரும்புகிறேன்.

இதன் தொடர்ச்சியாகத்தான் கடந்த 30 வருடங்களாக வடப் பகுதியிலிருந்து ஊடக வளர்ச்சியின் வழியில் நமக்கு கற்பிக்கப்பட்ட படிமங்களிலிருந்து விடுபட்டு மூலத் தமிழ்த் தன்மை கொண்ட வரலாற்றுப் படிமங்களை மறு உருவாக்கம் செய்யவேண்டும் என்றும் மராட்டிய திரைத்துறை வழி வந்தவற்றை ஒதுக்கி அடிப்படை தமிழர் வாழ்வு முறையை நவீனக் காலத்தில் கண்டடைய வரும் சமூகத்தையும் ஊக்குவிக்க எண்ணி விரும்பித் தொடர்ந்து செய்கிறேன். உலகத் தமிழ்ச் சமூகம் அதைச் சிறப்பாக உலக சமூகத்திற்கு எடுத்து வைக்கும் என்றும் நம்புகிறேன்.

◆



வணக்கம் வட அமெரிக்கா-கலை

விக்டர் லூயிஸ், இயக்குநர், மெட்ரோப்ளெக்ஸ் தமிழ்ச்சங்கம்

அன்பார்ந்த தமிழ் உறவுகளே! நமது வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவை, அமெரிக்காவில் வாழும் அடுத்த தலைமுறைக்கான கீழ்க்காணும் போட்டிகளை ஒவ்வொரு வருடமும் நடத்துகிறது.

போட்டியில் பங்குபெறப் பதிவுசெய்யும் அனைவருக்கும் அந்தந்த கலையின் வல்லுநர்களைக்கொண்டு பயிற்சிப்பட்டறையும் நடத்துகிறது. இதன்மூலம் நமது கலை மற்றும் பண்பாடு குறித்த விழிப்புணர்வையும், திறமைகளை வெளிக்கொணரும் வாய்ப்பினையும் புலம்பெயர் தேசங்களில் நமது குழந்தைகளுக்கு ஏற்படுத்தித் தரமுடியும்.

ஒவ்வொரு கலைப் போட்டியிலும் அனைத்து வயதினரும் பங்கேற்கும் வகையில், ஊற்று (5 முதல் 8 வயது), அருவி (9 முதல் 12 வயது), பொய்கை (13 முதல் 17 வயது) மற்றும் மணற்கேணி (18 வயது & மேற்பட்டோர்) என நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

அனைவரும் தத்தமது வயதிற்கேற்ற பிரிவில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கலைப்போட்டிகளில் தனிநபராகவோ, குழுவாகவோ பங்கேற்கலாம்.

கலைப்போட்டிகள்:

ஆடல் - மரபு நடனம் (Classical Dance), திரையிசை நடனம் (Non-Classical Dance), நாட்டுப்புற நடனம் (Folk Dance) பாடல் - மரபுப்பாடல் (Classical Songs), திரையிசைப்பாடல் (Non-Classical Songs)

இசைக்கருவிகள் - காற்றிசைக்கருவிகள் (Percussion), இதர இசைக்கருவிகள் (Any other)

குழு நாடகம் (Tamil Drama)

குறும்படப் போட்டிகள் (Short Films)

இதனுடன், தனி நபராக விளையாடும் வகையில் சதுரங்கப் போட்டிகளும் நடத்தப்படும்.

மேற்கண்ட போட்டிகளை ஒருங்கிணைத்து நடத்தித்தர ஒவ்வொரு வருடமும் தன்னார்வலர் குழுக்கள் அமைக்கப்பட்டு வருகிறது.

இந்த நல்ல வாய்ப்பினை தாங்கள் அறிந்த தமிழ்க்குடும்பங்களுங்குப் பகிருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம். ◆

MEDDITOUR

Mobilizing Healthcare beyond Borders

One-Stop
Soultion provider for
All your Medical
Tourism Requirements

World's First AI Powered Digital market Place for Medical Value Tourism

Contact Us
+91 99020 08275 / +91 98658 23829
info@medditour.com
2201, Co-oerative way, #600, Herndon, VA 20171, United States
For more details visit www.medditour.com

MEDDITOUR

சங்க இலக்கியத்தில் இயற்கை

வைதேகி ஹெர்பர்ட்

பண்டைத் தமிழர்கள் இயற்கையுடன் ஒன்றி வாழ்ந்தார்கள் என்பதை நாம் சங்கப் பாடல்கள் மூலம் நன்கு அறியலாம். எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆகிய பதினெட்டு சங்க நூல்களில் நாம் காண்பன காதல், இயற்கை, வரலாறு, கொடை, மறம், நட்பு, அன்பு, கலைகள், பல்வேறு தொழில்கள், மக்கள் உண்ட உணவு, ஊர்கள், மலைகள் போன்ற பல. இவற்றால் அன்றைய தமிழரின் வாழ்க்கை முறையை நாம் தெளிவாக அறிகின்றோம். இயற்கையை நம் மூதாதையர் எவ்வாறு போற்றியுள்ளனர் என்பதை நாம் பாடல்கள் மூலம் உணர்கின்றோம்.

சங்கப்பாடல்கள் அகம் புறம் என இரண்டு பிரிவுகளைக் கொண்டது. அகப்பாடல்கள் தலைவன் தலைவி உறவையும் அதன் சூழ்நிலைகளையும் பற்றியவை. புறப்பாடல்கள் மன்னர், பாணர், புலவர், நட்பு, மறம், கொடை போன்ற பிறவற்றைக் கொண்டவை.

அக நூல்களான அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு ஆகியவற்றில் தலைவி, அவளுடைய தோழி, தலைவன், தலைவியின் தாய், தலைவியின் செவிலித்தாய் ஆகியர்கள் கூறுவதாகவே பெரும்பான்மையான பாடல்கள் உள்ளன. தலைவனின் தோழன், தலைவனின் தேரோட்டி, தலைவனையும் தலைவியையும் கண்டவர்கள் ஆகியவர்கள் கூற்றாகச் சில உள்ளன. அக நூலான கலித்தொகையில் மட்டுமே பாடல்களில் உரையாடல்கள் உள்ளன. புற நூல்களின் பாடல்கள் யாவும் புலவர்களின் கூற்றாகவே உள்ளன.

இயற்கையை உவமைகளுக்கும் உள்ளுறைகளுக்கும் பயன்படுத்தியுள்ளனர் சங்கப்புலவர்கள். மரம், செடி, கொடி, மலர்கள், பறவைகள், விலங்குகள், வண்டினம், கடல், மலைகள், ஆறுகள், காடுகள், மழை, முகில்கள் போன்றவை அகப்பாடல்களில் வரும்பொழுது, அவை உள்ளுறையாக ஏதாவது ஒரு செய்தியை அறிவிக்கும். நம் அறிஞர்களின் சங்கநூல் உரைகளின் மூலம் இவற்றை நாம் இவற்றை அறியலாம்.

அகப்பாடல்களில் உள்ள ஐந்திணைக்குரிய (ஐந்து நிலங்களுக்குரிய) இயற்கை அங்கங்களை, நம் புலவர்கள் தங்கள் பாடல்களில் மிகவும் அருமையாகப் பயன்படுத்தியுள்ளனர். மலை நாடான குறிஞ்சித் திணையில் மலைகள், முகில், காடுகள், அருவிகள், யானைகள், குரங்குகள், புலிகள், சந்தன மரம், வேங்கை மரம், தினைப்புனம், கிளிகள் போன்றவற்றை நாம் காணலாம். கடலையும் கடற்கரையையும் கொண்ட நெய்தல் திணையில் நாம் கடலில் உள்ள மீன்கள், கரையில் உள்ள நண்டுகள், அங்கு வாழும் பறவைகள், கடற்கரைக் குளங்களில் உள்ள நெய்தல் மலர்கள் ஆகியவற்றை நாம் காணலாம். வயல்களையும் குளங்களையும் கொண்ட மருத நிலத்தில் வயல்கள், வேளாண்மை, குளங்கள், எருமை மாடுகள், முதலைகள், மா மரங்கள், தாமரை மலர்கள் ஆகியற்றை நாம்

காணலாம். முல்லை நிலத்தில் சிறு காடுகள், அங்கு வாழும் மான்கள் மற்றும் முயல்கள், காயா மலர்கள், கொன்றை மலர்கள் போன்றவற்றை நாம் காணலாம். பாலைத்திணையில் கோடைக்காலத்தில் உலர்ந்த (குறிஞ்சி நிலமும் முல்லை நிலமும் உலர்ந்த) இடத்தில் உள்ள வற்றின குளங்கள், நீர் வற்றிய அருவிகள், நீர் இன்றித் தவிக்கும் யானைகள், மான்கள், காட்டுத்தீ ஆகியவற்றை நாம் காணலாம்.

நாம் இரு எளிய பாடல்களின் மூலம், சங்க இலக்கியத்தில் இயற்கை அங்கங்கள் எவ்வாறு பயன்பட்டுள்ளன என்பதைப் பார்க்கலாம்.

ஐங்குறுநூறு 307, ஓதலாந்தையார், பாலைத் திணை - தலைவியின் தோழி தலைவனிடம் சொன்னது

ஞெலி கழை முழங்கு அழல் வயமா வெரூஉம்,
குன்று உடை அருஞ்சுரம் செல அயர்ந்தனையே,
நன்று இல் கொண்க, நின் பொருளே,
பாவை அன்ன நின் துணை பிரிந்து வருமே.

பாடல் பின்னணி - பொருள் ஈட்டுவதற்குச் செல்ல விரும்பும் தலைவனைத் தடுக்கும்பொருட்டுத் தலைவியின் தோழி கூறுகின்றாள்.

பொருளுரை - ஒன்றோடு ஒன்று உரசிய மூங்கிலில் பிறந்த ஒலிக்கின்ற நெருப்பினை வலிமையுடைய புலிகள் அஞ்சி ஓடும் மலைகள் பொருந்திய அரிய காட்டைக் கடந்து செல்லுதலை மேற்கொள்ள விரும்பினாய் நீ. பாவையைப் போன்றுள்ள உன் துணைவியை நீங்கி நீ ஈட்ட விரும்பும் பொருள் நல்லது இல்லை தலைவா!

